பேராசிரியரின் நூல்கள்

ஒரு திறனாய்வு

முதுகலைப்பட்ட மாணாக்கர்கள் (2017-2019)
திராவிடப் பல்கலைக் கழகம்

EBOOK
மின்நூல்

அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம் - ஒரு திறனாய்வு
சுப்பு ரெட்டியார் காட்டும் அநுமன்
பரணிப்பொழிவுகள் ஒரு பொதுப்பார்வை
கம்பனில் மக்கள் குரல்
அறிமுக நோக்கில் இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்





ந சுப்பு ரெட்டியார்100

Centenary Committee Publications

ISBN: 978-81-939835-5-3

பேராசிரியரின் நூல்கள்

ஒரு திறனாய்வு

முதுகலைப்பட்ட மாணாக்கர்கள் (2017-2019)

திராவிடப் பல்கலைக் கழகம்

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியரின் நூல்களை ஆதாரமாகக் கொண்டு படைக்கப்பெற்ற ஆய்வேடுகள்:

அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம் , சமயம், தத்துவம் – ஒரு திறனாய்வு
சுப்பு ரெட்டியார் காட்டும் அநுமன்
பரணிப்பொழிவுகள் ஒரு பொதுப்பார்வை
கம்பனில் மக்கள் குரல்
அறிமுக நோக்கில் இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939835-5-3

eBOOK ~ மின் நூல்

பேராசிரியரின் நூல்கள்

ஒரு திறனாய்வு

முதுகலைப்பட்ட மாணாக்கர்கள் (2017-2019)

திராவிடப் பல்கலைக் கழகம்

தொகுப்பு

நூற்றாண்டுக்குழு

ந சுப்பு ரெட்டியார்100

Centenary Committee Publications

பேராசிரியரின் நூல்கள் ~ ஒரு திறனாய்வு

All rights are reserved. No part of the publication may be reproduced,
stored in a retrieval system(including but not limited to computers,
disks, external drives, electronic or digital devices, e-readers, websites),
or transmitted in any form or by any means(including but not limited to
cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical,
recording, electronic, digital versions) without the prior written permission of the publisher,
not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is
published and without a similar condition being imposed on the subsequent purchase.

முதல் பதிப்பு — ஜூலை 2019

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

NA SUBBU REDDIAR 100 EDUCATIONAL TRUST
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939835-5-3

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

பதிப்புரை

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார் அவர்கள் எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று, ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர். பல பல்கலைக்கழகங்களில் சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி, நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர். பல ஆய்வாளர்களை உருவாக்கியவர். வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர். 136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015 – 2016) 108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும் மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியரின் நூற்றாண்டில் (2015-2016) நூற்றாண்டுக்குழு தமிழகமெங்கும் நடத்திய 108 நிகழ்வுகள் அகில இந்திய சாதனையாக அங்கீகரிக்கப் பெற்றுள்ளன. நூற்றாண்டில் பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் வெளிக்கொணரும் பொருட்டு பன்னிரெண்டு நூட்கள் வெளியிட்டப்பெற்றன. அவரது 100 நூல்கள், இந்திய அரசு நல்கிய ISBN எண்களுடன், மின் நூல்களாக மாற்றுப்பெற்று http://tinyurla.com/y7n2z8pe என்ற இணைதளத்தில் அனைவரும் பதிவிறக்கம் செய்யும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

பேராசிரியரின் படைப்பான ***"கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் – ஒரு மதிப்பீடு"*** எனும் நூலை பேராசிரியரின் நூற்றாண்டிற்குப் பின்பும் (102வது), இராமாநுஜரின் ஆயிரமாண்டிற்குப் பின்பும் (1002வது) நூற்றாண்டுக்குழு 2018ல் வெளியிட்டது.

பேராசிரியரின் நூட்களை அடித்தளமாக்கொண்டு சுமார் 15 முதுகலைப்பட்ட மாணாக்கர்கள், ஆய்வியல் நிறைஞர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

திராவிடப் பல்கலைக் கழகத்தின் தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை பரிந்துரைத்த ஐந்து முதுகலைப்பட்ட மாணாக்கர்கட்கு ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை **NSR100 Kamatchi Ammal Fellowship** வழங்கியது. அதன்கீழ், பேராசிரியரின் ஏதேனும் ஒரு நூலை ஆய்வுக்குரிய மையக்கருத்தாக தேர்ந்தெடுத்து திறனாய்வு செய்யும் முதுகலைப்பட்ட மாணாக்கர்கட்கு உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப் பெற்ற நூலும் வழங்கப்பெற்றன.

<u>திறனாய்வு செய்த மாணாக்கர்கள்</u>:

ஞா ச ஞான ஓவியா , து சரவணன், மு கோவிந்தன், ப வெண்ணிலா மற்றும் வெ மஞ்சுளா

<u>ஆய்வேட்டின் தலைப்புகள்</u>:

அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம் – ஒரு திறனாய்வு

சுப்புரெட்டியார் காட்டும் அநுமன்

பரணிப்பொழிவுகள் ஒரு பொதுப் பார்வை

கம்பனில் மக்கள் குரல்

அறிமுக நோக்கில் இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்

<u>தெரிவு செய்யப்பெற்ற பேராசிரியரின் நூல்கள்</u>:

அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்

அண்ணல் அநுமன்

பரணிப்பொழிவுகள்

கம்பனில் மக்கள் குரல்

இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்

இவ்வாறு சமர்ப்பிக்கப்பெற்ற ஆய்வேடுகள் தொகுக்கப்பெற்று

பேராசிரியரின் நூல்கள்
ஒரு திறனாய்வு

முதுகலைப்பட்ட மாணாக்கர்கள் (2017 – 2019)
திராவிடப் பல்கலைக் கழகம்

எனும் நூலாக வெளியிடப் பெறுகின்றது. நூலின் ஒரு படி ஒவ்வொரு மாணாக்கர்கட்கும், 5 படிகள் திராவிடப் பல்கலைக் கழகத்திற்கும் வழங்கப்பெறுகின்றன.

நூற்றாண்டுக்குழு

பொருளடக்கம்

திராவிடப் பல்கலைக் கழக முதுகலைப்பட்ட மாணாக்கர்களின் (2017-2019) ஆய்வேடு

Compilation of Project Reports submitted by the Recipients of '**NSR100 Kamatchi Ammal Fellowship**' provided by **Na Subbu Reddiar 100 Educational Trust** in the Department of Tamil & Translation Studies of Dravidian University, Kuppam, Andhra Pradesh

வ.எண்	மாணாக்கர், ஆய்வேடு, பேராசிரியரின் நூல்
01	ஞா ச ஞான ஓவியா **அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம் ~ ஒரு திறனாய்வு** ***அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்***
02	து சரவணன் **சுப்புரெட்டியார் காட்டும் அநுமன்** ***அண்ணல் அநுமன்***
03	மு கோவிந்தன் **பரணிப்பொழிவுகள் ஒரு பொதுப் பார்வை** ***பரணிப்பொழிவுகள்***
04	ப வெண்ணிலா **கம்பனில் மக்கள் குரல்** ***கம்பனில் மக்கள் குரல்***
05	வெ மஞ்சுளா **அறிமுக நோக்கில் இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்** ***இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்***

அறிவியல் நோக்கில்

இலக்கியம், சமயம், தத்துவம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

அறிவியல் தோற்றமும் வளர்ச்சியும், சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும், அறிவியல் நோக்கில் சமயம் தத்துவம் எனும் மூன்று தலைப்புகளில் அடங்கியுள்ள மிகவும் இன்றியமையாத பல்வேறு உட்பிரிவுகளைக் குறித்து மிகத்தெளிவாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939835-4-6

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை

அறிவியல் நோக்கில்

இலக்கியம், சமயம், தத்துவம்

2001

வழங்கியோர்:

நீதியரசர் NK கிருஷ்ணசாமி ரெட்டி



Justice N.K. KRISHNASWAMY REDDY (Retd.) Ph : 6211044
AD-47, Anna Nagar
Chennai - 40

12-6-2000

அணிந்துரை

பேராசிரியர் பெரும்புலவர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் பல்லாண்டுகளாகத் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் ஆற்றியுள்ள பணி மகத்தானது. பல துறைகளிலே பல நூல்கள் எழுதிப் பல பரிசுகளும் பட்டங்களும் விருதுகளும் பெற்றிருக் கிறார்கள். இத்துணை புகழ் பெற்றும் செருக்கின்றி, ஆரவார ஆடம்பர வாழ்க்கையை அறவே ஒதுக்கி, எளிமையான வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு ஒழுக்க சீலராய் வாழ்கின்றார்கள்.

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு" (424)

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க டாக்டர் ரெட்டியார் அவர்கள் மிகவும் கடினமான மறைபொருள்களையும் எளிமை யாக மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் எழுதுவதில் வல்லுநர் இவர்தம் தமிழ்ப்பணியில் அறிவியல் வாடை - ஒளி வெகுவாக இருக்கும்; ஆதிக்கம் பெற்றிருக்கும்.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் நிமிஷகவி திரு.கே. சுப்பைய நாயுடு அறக்கட்டளையின் ஆதரவில் **"அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம்"** என்ற பொருளில் 1996-97ஆம் ஆண்டிற்குரியனவாய், சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய இரண்டு சொற்பொழிவுகளே இன்று நூல் வடிவம் பெற்றுள்ளன.

"அறிவியல் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் தலைப்பில் ஆதிமனிதன் அநுபவத்தில் படிப்படியாய்க் கூட்டுவாழ்க்கை, சமுதாய வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உண்டி, உடை, உறையுள், பாதுகாப்பு இவைகளை வேளாண்மை மூலமாய் நிறைவு செய்துகொண்டான் என்பதையும், அறிவியல் போக்கில் உயிரியல், மருத்துவம், கணிதம், வானியல், போக்கு வரத்து முறைகள் எப்படிப் படிப்படியாய் வளர்ந்தன என்பதையும் தெளிவாய் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

"சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் தலைப்பில் பல்வேறு சமயங்களைக் குறிப்பிட்டுப் பஞ்சபூதங்களாலாகியது இந்த உலகத்தின் தோற்றம் என்பதைச் சுட்டி, வைதிகச் சமயங் களாகிய வைணவம், சைவம் ஆகியவைபற்றியும் புறச்சமயங்க ளான சார்வாகம், சமணம், பௌத்தம் முதலியவைபற்றியும் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளார்கள். வைதிகச் சமயங்கள் யாவும் இறைவன் படைப்பிற்கு இறைவனையே நிமித்த காரணமாய்க் கொள்வதையும், புறச்சமயங்கள் யாவும் அணுக்களிலிருந்துதான் உலகம் தோன்றியது என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

'அறிவியல் நோக்கில் சமயம் த்த்துவம்' என்னும் தலைப்பில் அண்டங்களின் அமைப்பையும் அணுவின் அமைப்பையும் ஒப்பிட்டு விளக்கி, 'ஆதவனே ஆற்றலின் மூலம்' என்பதையும், அவ்வாற்றலை ஆருயிர்கள் பல்வேறு பொருள் வடிவங்களின் மூலம் நுகர்கின்றன என்பதையும், இதற்கு அறிகுறியாகத்தான் பொங்கல் திருநாளை உழவர்கள் "தமிழர் திருநாளாகக்" கொண் டாடுகிறார்கள் என்பதையும் விளக்கமாய்த் தெளிவாக்கி யுள்ளார்கள்.

அணுவாற்றலே சக்தி தத்துவமாய் உருவெடுத்தது என்றும், அறிவியல் யுகத்தில் தோன்றிய பாரதியார் அறிவியல் அடிப்படையில் தம் பாடல்களைப் படைத்துள்ளார் என்றும் பெருமையுடன் சுட்டியுள்ளார்கள்.

இந்த அருமையான, அறிவியல் நோக்கில் - போக்கில் - அமைந்த பனுவலை உலகத் தத்துவ மேதை டாக்டர் **T.M.P. மகாதேவன்** அவர்கட்கு அன்புப்படையலாக்கியிருப்பது மேலும் இதற்குப் பெருமை சேர்ப்பதாய் அமைகின்றது. இச்சீரிய நூலைத் தமிழ்ப்பெருமக்கள் படித்துப் பயன்பெறவேண்டும் என்பது என் விழைவு.

டாக்டர் ரெட்டியார் அவர்கள் மேலும் மேலும் தமிழ் மக்கட்குப் பயன்படுமாறு அறிவியல் சார்ந்த நூல்களை **எழுதிக் கொண்டே** பல்லாண்டுகள் மனவளமுடனும் உடல் நலத்துடனும் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக் கின்றேன்.

- என். கிருட்டிணசாமி ரெட்டி

NSR100
KAMATCHI AMMAL FELLOWSHIP

MA Students in Tamil

AWARDED TO :

ஞா ச ஞான ஒவியா

(பதிவு எண்: 11700117001)

(பேராசிரியரின் ஒரு நூலை மையக்கருத்தாகக் கொண்டு ஆய்வு செய்த முதுகலைப்பட்ட மாணாக்கர்)

உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப்பெற்ற நூலும் வழங்கப்பெற்றன.

ஆய்வேட்டின் தலைப்பு: அறிவியல் நோக்கில் தமிழ்இலக்கியம், சமயம், தத்துவம் – ஒரு திறனாய்வு

பேராசிரியரின் நூல்: *அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்*

துறை: தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை திராவிடப் பல்கலைக்கழகம், ஆந்திர மாநிலம்

நெறியாளர்: முனைவர் த விஷ்ணுகுமாரன்

www.nasubbureddiar100.in

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்.

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

அறிவியல் நோக்கில், தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம் ~ ஒரு திறனாய்வு

ARIVIYAL NOKKIL THAMIZH ILAKKIYAM, SAMAYAM, THATHUVAM – ORU THIRANAIYU

திராவிடப் பல்கலைக் கழக முதுகலைப் பட்டத்தின்
ஒரு பகுதியாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

**A project report submitted to Dravidian University
in partial fulfilment for the award of M.A. Degree**

ஆய்வாளர்
செல்வி ஞா ச ஞான ஓவியா
பதிவு எண்: 11700117001

Submitted by
GS Gnana Oviya
Reg. No. 11700117001

நெறியாளர்
முனைவர் த விஷ்ணுகுமாரன்
உதவிப்பேராசிரியர்

Under the guidance of
Dr T Vishnukumaran
Assistant Professor

தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக் கழகம்
குப்பம் - 517 426, ஆந்திரப்பிரதேசம்

**Department of Tamil Language & Translation Studies
Dravidian University, Kuppam – 517 426 (AP)**

May 2019

நன்றியுரை

முதுகலைப்பட்டம் பெறுவதற்காக "அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம் – ஒரு திறனாய்வு" எனும் தலைப்பில் ஆய்வு செய்வதற்கு வாய்ப்பளித்த திராவிடப் பல்கலைக் கழகத்திற்கும், இத்தலைப்பை தேர்ந்தெடுக்க துணை செய்த முன்னாள் துறைத்தலைவர் முனைவர். இராக. விவேகானந்த கோபால் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

திராவிடப் பல்கலைக் கழக தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை மாணவர்கள் தொடர்ந்து உயர்கல்விப் பெறுவதற்கானப் பொருளாதார உதவியைத் தவறாமல் அளித்து வரும் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

ஆய்வின் வழி முறைகளை எடுத்துக் காட்டி, எவ்வித தொய்வும் இல்லாமல் செய்து முடிக்கவும், பிழைகளை சுட்டிக்காட்டி திருத்திக் கொடுத்து உதவியவருமான தற்போதைய துறை தலைவர் மற்றும் நெறியாளர் பேராசிரியர். த.விஷ்ணுகுமாரன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

மேலும், ஐயங்களை தெளிவு செய்யும் நோக்கில் உதவி புரிந்த தமிழ் துறை உதவிப் பேராசிரியர்களான, முனைவர். கு.பத்மநாபன், முனைவர். பொருநை. க. மாரியப்பன் ஆகியோருக்கும் என் நன்றியை உரிதாக்குகிறேன்.

என் வாழ்க்கையில் என் மீது அக்கறைக் காட்டும் பெற்றோர், தி.ஞான சங்கர் – ச.சிவகாமி ஆகியோருக்கும், என் பாசமிகு அக்கா: திருமதி. ஞா.ச.ஞான வீணா, மாமா: பெ. வினோத் குமார் மற்றும் என் அன்பு தம்பி, ஞா.ச.பூவின் ஞானன் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

ஆய்வு பணி மட்டுமல்லாது மற்ற அனைத்து முன்னேற்றப் பணிகளுக்கும் எனக்கு ஆதரவாகவும் ஊக்கமளித்தும் வரும் அறை தோழி ப.காயத்ரி, தமிழ் துறை ஆய்வு மாணவரான ச.விமல் குமார் அவர்களுக்கும், என் துறை, வகுப்பு தோழர்கள் மற்றும் துறை சார்ந்த மற்ற அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக பல்துறைகளையும் சார்ந்து இவ்வாறான தலைப்புக்கு ஆதாரமாக இருந்த 'அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்' எனும் ஆய்வு நூலின் ஆசிரியர் பேராசிரியர். ந. சுப்புரெட்டியார் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

பொருளடக்கம்

இயல் எண்	தலைப்பு	பக்கம்
	முன்னுரை	1
1	அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம்	5
2	அறிவியல் நோக்கில் சமயம்	14
3	அறிவியல் நோக்கில் தத்துவம்	25
	முடிவுரை	39
	துணைநூற் பட்டியல்	40

முன்னுரை

தமிழின் தொன்மையையும், வளர்ச்சியையும் நிரூபிக்க இலக்கியங்கள் உறுதுணையாய் உள்ளன. அத்துடன் தொல்லியல் பொருட்களும், அகழ்வாய்வுச் சின்னங்களும் தமிழின் தொன்மையையும், பண்பாட்டையும் அறிவதற்குப் பெரிதும் உதவுகின்றன. இலக்கியமோ அல்லது பண்பாட்டு நாகரீகச் சின்னங்கள் எதுவாக இருந்தாலும் அறிவியல் சிந்தனைகள் என்பது ஒரு சமூகத்தின் அறிவு முதிர்ச்சியைக் காட்டுவதோடு அதன் பெருமையையும் பறைசாற்றி நிற்கும். எந்த சமூகம் அறிவியல் சிந்தனைகளை உள்வாங்கி நிற்கின்றதோ அது தான் என்றைக்கும் நீடித்து நிற்கும். அவ்வகையில் அறிவியல் இன்றைய உலகில் வாழும் பல்வேறு இனக்குழு அல்லது சமூகங்களில் இன்றியமையா இடத்தைப் பெற்றுள்ளதுடன், அவர்களது சிந்தனை வளர்ச்சிக்கும் உறுதுணையாகிறது என்பது பெறப்படுகிறது. இப்பின்னணியில் தான் தமிழ் சமூகத்தைப் பொருத்த வரையில் பண்டையக் காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கியது என்பதைக் கண்டறிவது காலத்தின் தேவையாகிறது. பண்டையத் தமிழர்களது அறிவியல் சிந்தனைகளை நமக்குத் தற்போதும் தரவுகளாகத் தந்துக் கொண்டிருப்பவை இலக்கியங்களாகும். இந்த இலக்கியங்கள் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் நிலவிய அறிவியல் சிந்தனைகளைப் பிரதிபலிக்கின்றன.

சமயம் என்பது வழிப்பாட்டோடு நெருங்கியத் தொடர்புடையது. எந்த சமூகம் ஒரு சிறப்பான வழிபாட்டு முறையைக் கொண்டிருக்கிறதோ அது அறிவில் மேம்பட்டதாக விளங்கும். வழிப்பாட்டு முறை பல வேளைகளிலும் அறிவியலோடு ஏதோவொரு வகையில் தொடர்புக் கொண்டதாக இருக்கும். இந்த பின்னணியில் தமிழர் சமய முறையை அறிவியல் முறையில் ஆராய்வது காலத்தின் தேவையாகிறது.

தத்துவமும் சமூகத்தின் பண்பாட்டு நாகரீகத்தின் உன்னத நிலைக்கு தன் பங்கை அளிக்கிறது. சிறந்தத் தத்துவ சிந்தனையுள்ள சமூகம் தான் பண்பாட்டு ஒழுக்கத்துடன் வாழ முடியும். அந்த் தத்துவம் என்பது அறிவியல் சிந்தனைக்கும் இயைந்ததாக இருக்க வேண்டும். அவ்வகையில் பண்டைத் தமிழர்கள் கொண்டிருந்த தத்துவங்கள் அறிவியலுக்கேற்ப இயைந்துள்ளதா என்பதை சீர்தூக்கி ஆராய்வது காலத்தின் கட்டாயமாகும்.

மேற்கூறிய மூன்று தளங்களும், ந.சுப்புரெட்டியார் அவர்களால் திறம்படக் கையாளப்பெற்றுள்ளது. ஆயினும், அவரது அறிவியல் அணுகுமுறைகள் இந்தளவிற்கு பொருத்தமாக அமைந்துள்ளது என்பதை திறனாய்வு செய்யப்பட வேண்டியதாகும்.

ஆய்வுத் தலைப்பு:

இதுவரை பேசப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு அறிவியலின் வழி இலக்கியம், சமயம், தத்துவம் எனும் களங்களில் ந.சுப்புரெட்டியாரின், அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம் என்ற நூல் ***அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம் – ஒரு திறனாய்வு*** எனும் தலைப்பில் இவண் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

கருதுகோள்:

இலக்கியம், சமயம், தத்துவம் எனும் ஒன்றுடன் ஒன்றுத் தொடர்புடைய மூன்று துறைகளையும், மேலை நாட்டார் மரபாக கருதிய அறிவியல் எனும் துறையின் வழி ஆராய்கின்ற ந.சுப்புரெட்டியாரின் நூல் சரியாக எல்லோரும் ஏற்கும்படி அமைந்துள்ளது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு நோக்கம்:

மேற்படி நூலில் பேசப்படும் பொருண்மைகளான, "அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்" எனும் புத்தகத்தின் சிறப்பினை வெளிக்கொணர்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வின் வரையறை:

தமிழில் தொன்று தொட்டு வழங்கப்படும் இலக்கியங்கள் மற்றும் அது பேசுகின்ற சமயக் கொள்கையுடன், அதன் பின் தோன்றிய தத்துவ நெறிகளையும்ளூ அறிவியல் முறையில் ஆராயும் இந்நூல் முழுவதும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

ஆய்வுக்கான முன்னோடி நூல்கள்:

இந்நூல் இதுவரை எம்,ஏ ஆய்வு திட்டத்திற்காக எடுத்துக் கொள்ளப்படவில்லை. முதன் முதலாக இவ்வாய்வு திட்டம் தான் அதனை மேற்கொள்கிறது. ஆயினும், புகழ்பெற்ற நூல்களான கம்பராமாயணம், பெரியபுராணம், அது போல நாவல்கள் திறனாய்வு போன்றவற்றை இவ்வாய்வு முன்மாதிரியாகக் கொள்கிறது. இந்த நூல்களில் பேசப்படும் செய்திகள், பேசபடும் பாம்பு போன்றவை திறனாய்வு செய்யப்பட்டு அவற்றின் சிறப்பு வெளிக்கொணரப்படுகின்றன. அவ்வகையில் மூன்று ஆய்வு நூல்களை இவண் சுட்டிக் காட்டுவது சிறப்பாக இருக்கும்.

1. தலைப்பு: நற்றிணைப் பாடல்கள் – ஓர் உள்ளடக்கப் பகுப்பாய்வு, முனைவர் பட்ட ஆய்வேடு.

ஆய்வாளர்: ப.வெங்கடேசன் – சென்னைப் பல்கலைக் கழகம்,சென்னை – 2012.

2. தலைப்பு: வாஸந்திப் புதினங்களில் கதைக்கருவும், சமுதாயக் கருத்தியல் வளமும். முனைவர் பட்ட ஆய்வேடு,

ஆய்வாளர்: ம.உமா – பெரியார் பல்கலைக் கழகம், சேலம் – 2016.

3. தலைப்பு: தேவன் மனிதன் லூசி∴பர் ஒரு பார்வை – முதுகலை பட்ட ஆய்வேடு,

ஆய்வாளர்: கோ.ராஜேந்திரன் – தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக் கழகம், குப்பம் – 2017.

ஆய்வு முறை:

இந்த ஆய்வானது விளக்கவியல் மற்றும் திறனாய்வு முறையை பயன்படுத்தியுள்ளது.

இயல் பகுப்பு:

இந்த ஆய்வேடானது "அறிவியலின் தோற்றத்துக்கு இலக்கியம், சமயம், தத்துவம் எனும் துறைகளின் வழிகாட்டல்கள்" எனும் பொருண்மையின் அடிப்படையில் முன்னுரை, முடிவுரை நீங்கலாக மூன்று இயல்களைக் கொண்டுள்ளது.

அவை –

இயல் 1: "அறிவியல் நோக்கில் – தமிழ் இலக்கியம்"

இயல் 2: "அறிவியல் நோக்கில் – சமயம்"

இயல் 3: "அறிவியல் நோக்கில் – தத்துவம்"

இயல் – ஒன்று:

அறிவியல் நோக்கில் – தமிழ் இலக்கியம்

இவ்வியலில் உலகில் "கல் தோன்றி, மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி" ஆகக் கருதப்படும் தமிழ் சமூகத்தில் எழுந்துள்ள இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள உண்மைகளை (அக்காலத்து பதிவுகளாக,...) விளக்கி, ஆய்வு நூலின் ஆசிரியரான முனைவர் ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் அறிவியலின் வழி இலக்கியங்கள் எனும் கருத்து திறனாய்வு செய்யப்பட்டுள்ளது.

இயல் – இரண்டு:

அறிவியல் நோக்கில் – சமயம்

தமிழ் இலக்கியங்களின் வழி வெளிப்படும் சமயம் எனும் கூறின் தொடக்க நிலை முதல் வளர்ச்சி நிலை வரை விளக்கி, சமயத்தின் அடிப்படைக் கூறான இறைவன், ஆன்மா, உலகம் என்பதன் அடிப்படையில் ஆராய்ந்துள்ளதுடன் சமயம் அறிவியலுடன் கொண்டுள்ள தொடர்பும், அவை தொடர்பான சுப்புரெட்டியாரின் கருத்தும் இவ்வியலில் திறனாய்வு செய்யப்படுகின்றன.

இயல் – மூன்று:

அறிவியல் நோக்கில் – தத்துவம்

இலக்கியத்தின் உச்சமாகவும், அறிவியலின் தொடக்கமாவும் விளங்கும் தத்துவத்தின் வகைமையுடன், அவற்றிற்கான விளக்கங்களையும் அளித்து, அதன் முக்கோட்பாட்டினை விரித்து, அளவைகளின் நிலையை சுட்டி, விளக்கும் சுப்புரெட்டியாரின் திறன் இவண் ஆராயப்படுகிறது..

முடிவுரை:

ஒவ்வொரு ஆய்வின் முடிவிலும் கண்டறியப்பட்ட செய்திகள் தொகுத்தளிக்கப்படுகின்றன.

அடிகுறிப்புகள்:

ந.சுப்புரெட்டியாரின் 'அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்' எனும் நூலில் கூறப்பட்டக் கருத்துக்களின் தரவினை காணும் பிற நூல்களின் கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

துணைநூற்பட்டியல்:

துணைமைத் தரவுகளான நூல்கள் நூலாசிரியரின் பெயரின் படி அகர வரிசையிலும் தொகுத்து அளிக்கப்படுப்படுகிறன்றன.

இயல் -1

அறிவியல் நோக்கில் - தமிழ் இலக்கியம்

அறிவியலும், இலக்கியமும் வெவ்வேறு துறைகளாக வேறுபட்டுக் காணப்பட்டாலும் ஒன்றிற்கொன்று தொடர்புடையதாகவே இருக்கின்றன. முந்தையக் காலக்கட்டங்களில் நிலவியிருந்த அறிவியல் சிந்தனைகள் எவ்வாறு காணப்பட்டன எனும் கருத்தை மட்டுமல்லாமல், அவ்வாறு தோன்றிய அறிவியலினை மையமாகக் கொண்டு மக்கள் பின்பற்றி வந்த வழக்கத்தினை உலக இலக்கியங்கள் பதிவு செய்துள்ளதைப் போல தமிழ் இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன. அக்கருத்தினைச் சான்றாதாரங்களுடன் மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார் ந.சுப்புரெட்டியார்.. இலக்கியங்களில் குறிப்பாகச் சங்க இலக்கியங்களில் அறிவியல் கருத்துக்கள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை ஆராய்ந்து அறியும் போக்கு மிகவும் குறைவாகவே இருந்த காலத்திலேயே அறிவியலை இலக்கியத்தில் காணும் முறையினை அறிமுகம் செய்ததில் ந.சுப்புரெட்டியார் முதன்மையானவர் என்பது இந்நூல் வழி நிரூபணமாகிறது..

அறிவியல் நோக்கில் இலக்கியத்தைக் காண்பது என்பதில் பண்டையக் காலத்தில் நிலவிய அறிவியல் சிந்தனைகள் தற்கால அறிவியல் சிந்தனைகளுடன் ஒத்துப்போகிறதா, இல்லையா என்பதை அனைவராலும் கூற முடியாது எனும் மிகவும் பெரியதொரு சிக்கல் இருக்க நவீனக் கால அறிவியலில் தேர்ச்சி பெற்றவர்களால் மட்டுமே இது போன்ற ஆராய்ச்சியில் ஒரு தீர்வினைக் கண்டுபிடிக்க இயலும். அந்த வகையில் ந.சுப்புரெட்டியார் இலக்கியவாதியாக இருந்தாலும் கூட நவீன கால அறிவியல் துறையிலிலும் தேர்ச்சிப்பெற்று விளங்கியுள்ளார். அதன் வழி பண்டையக் கால இலக்கியங்கள் கூறும் அறிவியல் செய்திகள் சரியானவை தான் என்பதைக் கண்டறிவதோடு நிறுத்திவிடாமல், அவ்விலக்கியக் கருத்துக்கள் நவீன அறிவியலுடன் எந்தளவிற்கு இயைந்து செல்கிறது என்று ஆசிரியர் இந்நூலின் வழி விளக்கியுள்ளார் என்பதை நிறுவுகிறது இக்கட்டுரை.

உதாரணமாக, அறிவியலில் காணப்படும் தாவரவியல், விலங்கியல் எனும் துறைகள், பண்டையக் காலத்திலேயே கருப்பொருட்கள் எனும் பிரிவினுள் தாவரங்கள், பறவைகள், விலங்குகள் என அமைக்கபட்டுவிட்டன. மேலும், சங்க இலக்கியங்களில் காணப்படும் உவமைகளில் பெரும்பாலான தாவர, விலங்குகளின் உறுப்புகள் இன்றைய அறிவியலறிஞர்கள் கூறும் தன்மையுடையதாக இருப்பது பண்டைய

மக்களின் நுட்பத்தை விளக்குகிறது. மேலும், பூச்சி, விலங்கு, பறவைகளை பற்றிய வருணனைகள் மூலம் அக்கால புலவர்கள் விவரிப்பது, தற்கால அறிவியலாளர்களுக்கு இணையாக உள்ளதாகக் காட்டுகிறார் நூலாசிரியர்..

பேராசிரியர் முனைவர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் இந்நூலில் பண்டைய இலக்கியங்கள் காட்டும் அறிஞர்களைப் பற்றி விளக்கி, அவர்களின் பெருமைகளை பறைசாற்றியதுடன்,

1. வானநூலறிவு,
2. பொறியியல் அறிவு,
3. உயிரியல் அறிவு,
4. வானவியல் அறிவு,
5. மருத்துவியல் அறிவு,
6. கணிதவியல் அறிவு,
7. வானொலி, தொலைக்காட்சி அறிவு

என வகைப்படுத்திஅறிவியலின் வளர்ச்சி நிலையைத் தொகுத்துள்ளார். இக்கருத்துக்களை வெளிபடுத்தும் விதமாக இவ்வாய்வின் முதல் இயல் அமைக்கப்படுகிறது.

1. வான நூலறிவு :

வான நூலறிவு எனும் துறை இக்காலத்தில் அனைவராலும் அடையாளம் காணப்பட்டு இன்றளவு வரை சிறந்து காணப்படினும், இத்துறை பற்றிய முழு அறிவைப் பெற்றிராத பண்டையக் காலத்தவர்களும் வானவியல் அறிவில் சிறந்து விளங்கினர் என்பதை புறநூனூறு போன்ற சங்க இலக்கியங்களின் வழி நூலாசிரியர் விளக்கியுள்ளார். அண்டவெளியில் உள்ள கிரகங்களில் ஈர்ப்பு விசையுடன் விளங்கும் நம் புவிக் கோளமே உயிர் வாழ ஏதுவான இடமாக இருக்க, இப்புவியை சூழ்ந்துள்ள ஒசோன் மண்டலத்தை அடுத்து காணப்படும் துணைக்கோளான நிலவு, நட்சத்திரங்கள் என அனைத்தும் அதன் பாதையிலிருந்து மாறுபடுவதால் நிகழும் வேறுபாடுகளால் தோன்றும் கால சூழல் மனித வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் எனும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, இன்று அறிவியல் கூறும் மாற்றங்களே, பண்டைய மக்களின் சோதிடம் எனும் நம்பிக்கையின் பாங்கில் காணப்பட்ட நியதியாகும். இவ்வாறாக, வானவியலினைக் குறித்த அறிவை இன்றைய அறிவியலின் பார்வையில் காணும் விதத்தையும் விளக்கியுள்ளார்.

வானவியலாளர்கள் கிரகங்களைப் பார்த்து அவற்றின் நிலை மாற்றத்தினால் உலக உயிர்களுக்கு ஏற்படும் விளைவுகளைக் கண்டறிவதைப் போல் பண்டைய மக்களின்

துன்பக் காலத்தை சோதிடம் (நிமித்தம்) எனும் பெயரில் அமைத்து அறிவியலின் தொடக்கத்தைக் கண்டுள்ளனர் (1) எனலாம்.

உலகப்பொதுமறையான திருக்குறளில்,

"நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்."

எனும் குறளின் மூலம் உலகைச் சுற்றி வரும் நிலவு மற்றும் நட்சத்திரங்கள் கடக்கும் பாதையின் மாற்றத்தினால், காலத்தை மையமாக்கி பிரிக்கப்பட்ட இராசிகளின் (ஜென்ம லக்னம்) நிலையிலிருந்து மாறுதலடைந்து நட்சத்திரங்களின் தன்மைக்கேற்ப பலன்களை அளிப்பதாக உணரப்பட்ட கருத்தினை விளக்குகிறது.

அகிலம்:

கோடிக்கணக்கான விண்மீன்களுடன், வால் மீன்கள், விண் கற்கள் என அனைத்தும் கதிரவனை சுற்றி வலம் வருவதன் காரணமாக, உலகில் பிறப்பு, மூப்பு, இறப்பு எனும் மூன்று நிகழ்வுகள் நிகழ்கிறது எனும் கருத்தினை வானவியல் அறிஞர்கள் கண்டறிந்துக் கூறியுள்ளதைப் போல மாணிக்கவாசகப் பெருமான் அவர்கள்,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கென்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட்ட விரிந்தன."

எனும் பாடல் வழி இக்கருத்தை அக்காலத்திலேயே கூறியுள்ளார் என்பதை நிமித்த கவியின் நூல் மூலம் விளங்கிக் கொள்ள இயலுகிறது.

உதாரணமாக, அகிலத்தின் அமைப்பினை விளக்கும் வானவியல் கண்டுபிடிப்பாளரான பேராசிரியர் ஐன்ஸ்டைன் உருண்டை வடிவமாக இருக்கும் உலகம் விரிந்துக் கொண்டே போவதாகக் கூறியதை ஒத்து, "ஐம்பூதங்களுள் ஆகாயம் அடங்கியுள்ளன" எனும் பண்டைய மக்களின் கருத்தை ஒத்துள்ளது எனும் கருத்தினை கூறியுள்ளமை நூலாசிரியரின் புத்திக் கூர்மையை விளக்குவதாக உள்ளது.

சோதிடம்:

சோதிடம் என்பது “கோள்களின் நகர்வினால் ஏற்படும் மாற்றத்தைக் கொண்டு எதிர்காலத்தைக் கணிக்க முடியும்” என்று பண்டையக் காலத்திலிருந்தே இருந்து வரும் நம்பிக்கையாகும்.இந்நம்பிக்கையின் பிரதி பலனாக இலக்கியங்களிலும் கணி பார்ப்பவர்களாக கதாப்பாத்திரங்களாக அமைக்கப்பட்டனர். இச்செய்திகள் அறிவியல் முறையிலும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வானவியல் துறையினால் தக்க ஆதாரத்துடன் நிருபிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாராய்ச்சியினால், உலகில் வாழும் மக்கள் வரவிருக்கும் ஆபத்தை முன்பே அறியும் விஞ்ஞானத்தை தன்னகத்தேக் கொண்டுள்ளனர் எனும் செய்தி இவ்வாய்வின் வழி எடுத்துரைத்துள்ளார்.

சோதிடத்தில் உள்ள பாகப்பிரிவுகளாகப் பன்னிரு ராசிகளும், அவற்றுள் இராசி ஒன்றிற்கு இரண்டரை பாகை எனும் அளவில் அமைந்துள்ள நட்சத்திரங்கள் மக்களின் வாழ்க்கையை எடுத்துக் கூறப் பயன்படுகிறது. (2)

2.பொறியியல் அறிவு

பொறியியல் என்பது அறிவியலுடன் பிண்ணிப் பிணைந்து மனித வாழ்க்கைக்கு ஊன்றுகோலாக இருக்கும் ஒரு துறையாகும். இவ்வறிவு அறிவியலின் பகுதியாக இருப்பினும், அவை பண்டையத் தமிழ் மக்களின் பெயரிடப்படா துறையாக விளங்கி வந்தமை அனைவரும் அறிந்திட்டதொரு செய்தியாகும்.

பண்டையத் தமிழ் மக்கள் கட்டிடக்கலையில் பெற்றிருந்த பொறியியல் அறிவினை மிகவும் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார். கட்டிடக்கலையைப் பண்டைய மக்கள் அவர்தம் இலக்கியத்தின் வழி எடுத்துக் கூறியமையைக்காட்டிலும், அது இன்றளவிலும் மேன்மையுற்ற சிறப்பினைப் பெற்று விளங்கும் சிறப்பிற்குரியதாகும்.

தஞ்சைப் பெரியக் கோவிலின் கட்டிட அமைப்பும், அதினினும் நுணுக்கமான அதன் சிற்பக்கலையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தஞ்சைப் பெரியக்கோவிலின் சிற்பக் கலையின் இரகசியம் இன்றளவும் நுண்ணியல் அறிஞர்களால் ஆராயப்பட்டு கண்டு பிடிக்க இயலா அற்புதமாக அமைந்துள்ளது. மேலும், அக்காலத்திய கட்டிட சிறப்பான குடைவரைக் கோவில்கள் அதன் இயல்புக் கெடாமல் தன் நிலையிலிருந்து தரம் தாழ்ந்து விடாமல் செவ்வனே அதன் அமைப்புத் தொடர்கிறது.

அன்றைய இலக்கியங்களில் (கம்பராமாயணம், மகாபாரதம், ...) காட்டபட்ட மாட மாளிகைகள், இராஜ கோபுரங்கள், அரண்மனைகள் போன்றவை இன்றைய மாநகரங்களின் முன் மாதிரிகளாயின என்பதை இவ்வாய்வின் வழி உறுதியிட்டுக் கூற இயலும் என்கிறார் இந்நூலாசிரியர்.

அவதாரங்கள்:

அன்றைய சூழலில் ஆதி மூலங்களாக விளங்கி வந்த கடவுளர்கள் அவர்தம் அருளை உலக மக்களுக்கு வழங்க வேண்டி, மக்களுடன் ஒன்று கலந்திட மக்களுள் மக்களாக தம் அவதார நிலையை மேற்கொண்டதாக மூதாதையர்களின் இலக்கியங்களின் வழி கண்டிருப்பினும், இன்றைய அறிவியலில் அந்த அவதாரங்களை கொள்கை, கோட்பாட்டு உருவங்களாகக் கொண்டு அதற்கும் பதிலளிக்கின்றனர்.

3. உயிரியல்

அறிவியலின் ஒரு பிரிவான உயிரியலில் சார்லஸ் டார்வினின் பரிணாமக் கொள்கையானது மனித உருவாக்கத்தின் சிறந்த கூறாகும், இக்கூறினை விளக்கப் பண்டையக் காலந்தொட்டே எழுதப்பட்டிருந்த இலக்கியங்களின் மூலம் உயிரியலின் ஒரு சிறு அமைப்பு அங்கு தென்படுவதைக் கண்டிட இயலும்.

இலக்கியங்களில் அன்றுத் தொட்டே குழந்தை பிறப்பதற்கான கூறுகள் இயற்கையின் உதவியினால் கேட்டல், அறிதல், உணர்தல் மூலம் மக்களிடையே நிலவி வந்தது எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், இன்றைய அறிவியலின் உதவியுடன் அறிஞர் தம் ஆராய்ச்சியை மேற்கொண்டு பரிணாமக் கொள்கையைக் கூறியிருப்பர் என்பது இன்றைய சூழலில் பொருத்தமான ஒன்றாக அமைகிறது. மேலும், இலக்கியத்தில் இடம்பெறும் “இரட்டையர்” எனும் கருத்தாக்கம் அக்காலத்திலேயே கூறப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

உதாரணமாக, சமீபத்தில் ஆஸ்திரிய பெண்மணி நான்கு முறை - நான்கு குழந்தைகளையும், ஏழு முறை - ஏழுக் குழந்தைகளையும் ஒவ்வொரு பிரசவத்திலும் பெற்றெடுத்தாள். (3) இது போன்ற உண்மை சம்பவங்களை மனதில் கொண்டுதான், ஆசிரியர் அன்றைய இலக்கியத்தில் இடம்பெறும் புராண சுசிலையின் 27 குழந்தைகளை எனும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

தமிழ் மரபில் பிரபலமான கதை கண்ணனின் கதை. இக்கதையில் கண்ணனின் - சகோதரனானபலராமனை அவனது அம்மா தேவகி கம்சனுக்கு பயந்து, வசுதேவனின் மனைவியாகிய ரோகிணிக்குக் கருவிலேயே மாற்றிக் கொடுத்த செய்தி, இன்றைய அறிவியலில் குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு கருத்தரிப்பு நிகழ்த்திய முறையை உணர்த்தி வந்தமையால் அறிவியல் தமிழுடன் கொண்டிருந்த தொடர்பை அறிந்திடலாம். மேலும், அன்றைய இலக்கியங்களில் ஆணாய் பிறந்திட்ட சிசு தன் பூப்படையும் வயதில் பெண்ணாக மாறுவது, இக்கால அறிவியலின் அமைப்பிலும் கூறப்படுகிறது.

4. வானியல் அறிவு

உலகில் நிகழும் இயற்கை மாற்றத்தை அன்றைய இலக்கியத்தில் கற்பனையாக அமைத்துக் காட்டி உணர்த்தி வந்தனர்

உதாரணமாக, பூமியிலிருந்து மேல்நோக்கி உயரம் செல்ல செல்ல காற்றின் அளவுக் குறைவினால் தடுமாற்றம் நிகழ்வதை, இராமாயணத்தில் இலங்கையில் உள்ள இராவணனதுக் கோட்டை சுவரை தழுவும் தென்றல் காற்று மேல்நோக்கி செல்லாது என நயம்படக் கூறப்பட்டுள்ளது.

5. மருத்துவ இயல்

பண்டையக் காலத்தில் மருத்துவம் என்பது இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு மருந்து உருவாக்குவதாகும். உலகில் தோன்றிய ஒவ்வொரு பொருளும், ஏதேனுமொரு காரணத்திற்காகத் தான் தோன்றியுள்ளது என்பதை நிரூபிக்க அன்றைய இயற்கை மருத்துவம் காட்டுகிறது. இதை புலவர்களின் கூற்று மூலம் நிறுவுகிறார் ந.சுப்புரெட்டியார்.

அதற்கு எடுத்துக்காட்டாக, தாமோதரன் எனும் புலவரின் பாடல் வரிகளை சுட்டுகிறார்.

> ‘‘அரும்பிணி உறுநர்க்கு வேட்டவை கொடாஅது
> மருந்து ஆய்ந்துக்கொடுக்கும் அறபோன்”

எனும் பாடலின் வழி அன்றைய காலத்திலேயே பிணி பற்றிய அறிகுறிகளையும், அவற்றைத் தீர்க்கும் மருந்துகளையும், வராமல் தடுக்கும் வழி முறையினையும் மருத்துவ முறை கொண்டிருந்தது என்பது புலனாகிறது. இந்த வரிகள் பண்டையக் காலப் புலவர்களில் பலரும் மருத்துவராக இருந்தனர் என்பதையும் காட்டுகின்றன.

“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.”

எனும் திருக்குறள் வரிகளின் மூலம் நாடு சிறந்து விளங்க பசியும், நோயும், பகையும் இன்றி இருத்தல் வேண்டும் என்கிறார்.

சித்தர்களும் இயற்கையைக் கொண்டு, உருவாக்கிய மருத்துவ முறையை அவர்கள் தம் பொதுப் பெயரான சித்த மருத்துவம் எனும் பெயரினால் அமைக்கப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. (4)

சித்தர்கள் கண்ட இயற்கை பொருட்களை ஆய்ந்து இன்னின்ன பொருட்களால் இன்னின்ன மருந்துப் பொருட்கள் தோன்றும் எனும் படி ரசவாதம் எனும் கொள்கையை பின்பற்றி வந்தனர். இந்த ரசவாத முறையே இன்றைய மருத்துவத்தில்அறிவியல் வளர்ச்சிக்கு வித்திட்டன.தமிழில் வழங்கப்படும் பன்னிரு சித்தர்களின் நூல் மற்றும் இயற்கை தத்துவத்தின் அடிப்படையில் இன்றைய விஞ்ஞான மருத்துவம் விளக்குகிறது.

6. கணிதவியல்

மக்களின் இரு கண்களாகக் கருதப்படும் எண் மற்றும் எழுத்து எனும் இரு பெரும் பிரிவுகள் உலகில் உள்ள அனைத்தையும் குறித்திடும் வண்ணம் அமைந்து வருவது குறிப்பிடத்தக்கது. கணிதம் எனும் துறையின் தனித்துவத்தை வெகு காலம் முன்பாகவே தமிழின் சிறந்த உலகப் பொதுமறையாகக் கருதப்படும் திருக்குறளின் வழி அறிகிறோம். எடுத்துக்காட்டாக,

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு”

திருவள்ளுவர் மொழியின் படி, எழுத்தின் துவக்கத்திலிருந்தும் எண்ணின் துவக்கத்திலிருந்தும் மனித வாழ்வு தொடங்குகின்றது எனும் கருத்து பெறப்படுகின்றது. தமிழில் கணிதத்தின் அடிப்படைக் கூறான எண்கள் அக்காலத்திலிருந்தே தமிழின் எழுத்துருவினைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக,

தமிழ் எண்கள் : 1 - க,

2 - உ,

7 - எ,

8 - அ.

கணிதத்தின் வளர்ச்சி பிற்காலத் தமிழ் மரபுக் கவிதையில் ஒரு புதிய அமைப்பினை உருவாக்கிக் கொடுத்தது. அதாவது உலக இயக்கத்திற்குச் சாராம்சமாக விளங்கிய கணிதம் தமிழின் கவிதை வடிவத்திற்கு புதியதொரு இலக்கிய வடிவத்தைக் கொடுத்தது. எவ்வாறென்றால், பாடலின் அடி வரையறையின் வழி எண்ணிக்கையை உருவமைத்து புதிய கவிதை வடிவங்களை உருவாக்கியது.

கவிதை கணிதத்தின் அமைப்பினைப் பெறாது, அதன் உண்மைநிலையினை மறைமுகமாக எடுத்திரைப்பதாக அமைந்து வரும், கவிதை தன் கற்பனைத் தன்மையுடன் இணைந்து எண்ணிக்கையின் அடிப்படையிலான செய்திகளை எடுத்துரைப்பவையாகும். கணிதத்தில் கூறப்படும் விடை சரியாக இருப்பதைப் போல, கவிதையில் கற்பனையுடன் கூறப்படுபவையும் வாழ்க்கைக்குச் சரியான அர்த்தத்தைக் கொடுக்கவல்லது எனும் அட்சன் எனும் திறனாய்வாளரின் கூற்று சிறப்பிற்குரியது என்கிறார் நூலாசிரியர். மேலும், எண்ணின் அதிநிலையினைக் குறிக்கும் தமிழ் சொற்களும் அக்கால வழக்கில் இருந்து வந்துள்ளமை (பின்கலந்தை நிகண்டில்) இவ்வாய்வின் வழி எடுத்துரைக்கிறார்.

7. வானொலி மற்றும் தொலைக்காட்சி அறிவு:

அறிவியலில் தமிழின் ஆதரவையும், நிலைப்பாட்டினையும் வெளிப்படுத்தும் இவ்வாய்வின் மூலம் , இன்றைய அறிவியலின் வளர்ச்சி நிலையில் உள்ள வானொலி மற்றும் தொலைக்காட்சி அன்றைய இலக்கியங்களிலும் காணப்படுகிறது (5) எனும் கருத்து குறிப்பிட வேண்டியது அவசியமாகும். மேலும், தமிழின் சிறந்த இலக்கியங்களிலும் இன்றைய காட்சிபடுத்துதல் இயற்கையாக வெளிப்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளனர்.

உதாரணமாக, இராமாயணம் போன்ற சில இலக்கியங்களில் ஒருவர் இருக்கும் இடத்தையும், அவர்களின் செயலினையும் கண்டறிய வெற்றிலையைப் பயன்படுத்தியுள்ளனர். இதன் வழி இன்றைய தொலைக்காட்சியினால் உலகிலுள்ள செய்திகளை அறியும் நவீன முறையையும் ஒப்பிடுதல் பொருத்தமாகும்.

அக்கால செய்தி தெரிவிப்பிற்காக பயன்படுத்திய தூதுப் பொருட்களுக்கு பதிலாக இன்றைய தொலைப்பேசியும், தொலைக்காட்சியின் தொடக்க நிலையான (இரட்டை சகோதரிகள் என சிறப்பிக்கபடும்) வானொலியும் சிறந்த அறிவியல் வளர்ச்சி கலங்களாகும்.

இவ்வாறுஅறிவியல் நோக்கில் இலக்கியங்கள் பேசும் கருத்துக்களை ஆராய்ந்து விளக்கியுள்ளார் பேரா. ந. சுப்புரெட்டியார்.

இயல் – 2

அறிவியல் நோக்கில் – சமயம்

அறிவியல் சிந்தனையுடன் தமிழர் கொண்டிருந்த தொடர்பு சமயம் சார்ந்த எண்ணங்களையும் உள்ளடக்கியதேயாகும். "சமயங்கள் என்பன நம்பிக்கையின் அடிப்படையில் வளர்ந்தவை என்றும், இதன் அடிப்படையிலேயே மேலைநாட்டவர்களால் அறிவியலாக வளர்ச்சியுற்றது" எனும் உரையினால் அறிவியலுக்கும் சமயத்துக்குமான தொடர்பை சுப்புரெட்டியார் எடுத்துரைத்துள்ளார். இருப்பினும், "மதம், மார்க்கத்தின் உள்ளார்ந்த வடிவமே,..." எனும் சமயத்தின் உள்ளார்ந்த கருத்தை எடுத்துரைத்துள்ளமையும் குறிக்கத்தக்கது. இது தவிர பேராசிரியர் ந . சுப்புரெட்டியார் சமயத்துடனான அறிவியல் குறித்து எடுத்துரைத்த பல கருத்துக்கள் இவ்வியலில் எடுத்துரைக்கப்படுகின்றன.

கருத்து –1

சமயம் என்பது பழங்காலத்திலிருந்து வழங்கப்பட்டு வரும் சொற்றொடராக இருப்பினும், காலப்போக்கில் அதனுள் காணப்பட்ட அறக் கூறுகளை இழந்துவிட்டது. இன்றைய காலகட்டத்தில் மதம் எனும் பெயரில் மக்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வு மற்றும் மன வெறுப்புக்களையும் வளர்த்து வருகிறது. ஆனால் மதம் என்பது அறத்தினை சரிபடுத்தும் அமைப்பு என்பதையும், அறத்தைக் கடவுளின் அடிப்படையிலான அமைப்பு என்பதையும் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

சமயம் என்று நாம் எண்ணி வணங்கும் மத அடிப்படையிலான தெய்வங்கள் என்றென்றும் அதி பலசாலிகளாகக் கருதப்படுவதனை ஏற்பர் அறிவியலாளர்கள், ஆனால் அவர்கள் அதை சமயம் சார்ந்து ஏற்றுக் கொள்வதில்லை. அறிவியலில் முன்னேற்றங் கண்ட ஒருவராகவோ அல்லது இயற்கையின் வெளிப்பாடாகவோ இருத்தலாக இருக்கும் என்று கூறுகின்றனர். இதன் வழி, அறிவியல் என்பது சமயத்தின் வழிதோன்றியதாக இருக்கும் என்பது சுப்புரெட்டியாரின் கருத்து ஆகும்.

கருத்து -2

தொன்று தொட்டு தமிழ் சமூகத்தில் சமயம் என்ற ஒரு நம்பிக்கை ஒவ்வொருக் காலக்கட்டத்திலும் நிலவி வந்துள்ளமையைச் சுட்டி, சமயத்தின் வளர்ச்சி நிலையான அறிவியலின் வழி எடுத்துக்காட்டியுள்ளார் நூலாசிரியர் சுப்புரெட்டியார்.

சமயம் என்பது நாகரீகம் தொடங்கிய சிந்து சமவெளி மக்கள் முதலே தொடங்கியுள்ளது. சமயம் எனும் அமைப்பு மக்களின் நம்பிக்கை சார்ந்ததாக இருந்து வந்துள்ளது. இதன் வழி மக்களின் நம்பிக்கைக்கான அறக் கருத்துக்களினைத் திரட்டி அதற்கான உருவ அமைப்பினை அமைத்து உருவ வழிபாடு எனும் தன்மை நிலவி வரத் தொடங்கியது.

கருத்து –3

தத்துவம் சமயத்துடன் நெருங்கியத் தன்மையைக் கொண்டிருப்பினும், இரண்டும் வெவ்வேறு நிலைபாடுகளைக் (நூலிழைப் போல,) கொண்டமைந்தவைகளாகும். ஆயினும் சமயமும் தத்துவமும் சில அடிப்படைக் கருத்துகளை ஒன்று போலவே கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 1. கடவுள், 2. ஆன்மா எனும் இரு கருத்துக்களைச் சுட்டலாம்.

இவ்விரு கருத்தாக்கங்கள் சமயத்தில் மாறுபாடு ஏற்படுத்தியதுடன் புதிய வடிவிலான வழிபாட்டுமுறையை உருவாக்கின .

கருத்து –4

உலகின் பிறபகுதிகளில் நாகரீகம் தோன்றுவதற்கு முன்பே நாகரீகம் வளர்ந்துவிட்டதாக நிரூபிக்கபட்ட ஹரப்பா, மொகஞ்சதாராப் நாகரீக ஆய்வுகள் மூலம் சில கேள்விகள் தவிர்க்க முடியாதாகி விட்டது. அவற்றுள் ஒன்றுதான் தமிழர் சமயம் எது? எனும் கேள்வி. இந்த கேள்வையையே தலைப்பாகக் கொண்டு "தமிழர் சமயம் எது?" எனும் தலைப்பில் ந.சி.கந்தையா எழுதிய நூலில் சில செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

அக்கருத்தை ஆய்விற்கு எடுக்கப்பட்டுள்ள சுப்புரெட்டியாரின் நூலுடன் இணைத்து பார்க்கும் போது புதிய செய்திகள் புலனாகின்றன.

இந்த ஆய்வு நூலின் ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் சமயம் என்பது மக்களின் நம்பிக்கையினால் தோன்றியது என்றும், தமிழர் சமயம் என்பது இறப்பினைக் கண்டு

பயமுற்ற மக்கள் கல்லறையின் மேல் நட்டு வைத்த கல்லினை வணங்கி வந்த வழக்கம் என்றும் , அக்கல்லையே காலப்போக்கில் இறந்தவர்களின் உருவச் சிலையாக வடித்து வணங்கி வர தலைபட்டனர் என்றும் எடுத்துரைக்கிறார்.

கருத்து –5

<u>சிந்து சமவெளி கால சமயம்</u>

ஹரப்பா, மொகஞ்சதாராவை அடுத்து நாகரீகம் வளர்ச்சி பெற்றத் தொடக்க காலமான சிந்து சமவெளி காலத்தில் சமயம் குறித்த நம்பிக்கை அம்மை, அப்பன் வழிப்பாட்டு முறையாகத் தொடங்கியுள்ளது.

சிந்து சமவெளிக் காலத்தில் நாகரீகம் வளர்ச்சி பெற்று தாய், தந்தை என குடும்ப வாழ்க்கை துவங்கியதிலிருந்து இந்த அம்மையப்பன் வழிபாடு தொடங்கி இருக்கலாம் என, சமய வாழ்வில் வடக்கும், தெற்கும் எனும் நூலின் ஆசிரியர் கூறியுள்ளார். இதனடிப்படையில் ஆராயப்படினும், இவ்வாய்வு நூலின் ஆசிரியர் கூறிய சமய வளர்ச்சி நிலை எடுத்துக்காட்டப் படலாகின்றது.

உலகில் நிலவிய தாய், தந்தையின் பதிலியாகவே அம்மையப்பன் வழிபாடு தோன்றியது. எவ்வாறு இவர்கள் மக்கள் பிறப்பிற்குக் காரணமாகிறார்களோ அவ்வாறே இயற்கை சக்திகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து வினை புரிவதால் மாற்றம் தோன்றலாகும். இதுவே உலகின் இயக்கம் என்பது அறிவியலாளர்களின் கூற்று. எனவே ஆராயும் போது இயற்கை எவ்வாறு செயல்படுகிறதோ அது போன்றே அம்மையப்பன் செயல்படுகின்றனர். எனவே அம்மையப்பனை வணங்குதல் என்பது இயற்கை சக்தியைக் குறியீடாக வைத்து வணங்குதல் ஆகும்.

கருத்து – 6

<u>இயற்கை வழிபாடு</u>

அம்மை அப்பன் வழிபாட்டினைத் தொடர்ந்து இயற்கையின் செயல்பாட்டின் மாற்றங்களுக்குக் காரணம் இறைவன் எனும் சக்தி மூலமே எனக் கருதி மக்கள் இயற்கையை வழிபடலாயினர். இதனால், இறைவன் "தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்" எனும் சமய நெறிமுறைகளும் தோன்றலாயின. இதன் காரணமாகவே, இயற்கையாக உருவான மரம் விதை விழுந்து, செடி முளைத்து, வளர்ந்து மரமாக மாறி, பூ பூத்து, காய் காய்த்து, பழம் தோன்றுவதாகவும் இயற்கையின் ஆற்றலான

காற்றையும் வழங்குகிறது என்பன போன்றக் கருத்துக்களை முன் வைத்து சமய நெறிகள் வளரலாயின.

இந்நிலையினைத் தொடர்ந்தே, சமய சார்பற்ற ஒரு சிலரின் செய்கையால் உலகில் முதலில் தோன்றிய வளம் எதுவென வேறுபட்ட விவாதங்கள் தோன்றி, சமயப்பிரிவுகள் உருவாகியுள்ளன. இதன் வழியே இயற்கையின் ஐம்பிரிவுகளான, நெருப்பு, நீர், காற்று, நிலம், ஆகாயம் என்பவற்றிற்கு ஐந்து தலைவர்களை உருவாக்கி மக்கள் அவர்களை வழிபடத் தொடங்கினர்.

இந்நிலையிலும், இயற்கை தன் நிலையிலிருந்து மாற்றம் பெற எடுத்துக் கொண்ட கால இடைவெளியில், இயற்கையின் ஐந்து ஆற்றலில் எதிலிருந்து எது தோன்றலாயிற்று எனும் கருத்து இன்றளவும் விஞ்ஞானிகளிடம் புதிராக இருப்பதைக் காண முடிகிறது.

கருத்து –7

சமய வழிபாடு

வழிபடும் முறைகள் வேறுபட்ட நிலையில் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்ததால் மாறுபட்ட கருத்துக்களுக்கேற்ப தெய்வங்கள் வணங்கப்பட்டன. இதனால், பல வகையான சமய நெறிகள் தோன்றி அதற்கேற்ப இறைவனெனும் மீசக்தி வழிப்பாட்டை வெவ்வேறு விதங்களில் நிகழ்த்தியிருக்கின்றனர்.

மேலும், சமயங்களை இரு பிரிவுகளாகப் பிரித்த சமயவாதிகள் இறை சார்ந்த சமயம், இறை சாரா சமயம் என்றும் குறிப்பிடுகின்றனர், இது பற்றி சைவசித்தாந்தம்

1. அக சமயம்,(வைதீக சமயம்)
2. புற சமயம் (அவைதீக சமயம)

என்று கருத்துரைக்கின்றது.

அக சமயங்களாவன, கடவுளை மையமிட்டு மக்கள் கொண்ட நம்பிக்கையின் பேரில் தோன்றியவை. இவை பெரும்பாலும் வேதத்தினைச் சாரமாகக் கொண்டு இறை நம்பிக்கையில் ஈடுபாடுக் கொண்டவர்களால் பின்பற்றப்படுபவை ஆகும்.. அக சமயத்தவர்கள்தான் சிவன், திருமால், முருகன், கலைமகள், திருமகள், விநாயகர் என பல்வேறு உருவ வழிபாடுகளைப் பேணி வருகின்றனர் என்பது குறிக்கதக்கது. இந்த அக சமயங்களை, 1. சைவம், 2. வைணவம் 3.காணாதிபத்யம் 4. கௌமாரம் 5. சாக்தம் 6. சௌமராம் என பிரித்துள்ளனர். இவற்றுள், அழித்தல் கடவுளான

சிவப்பெருமானைச் சார்ந்து சைவமும் காத்தல் கடவுளான திருமாலினைச் சார்ந்து – வைணவமும், இயங்கி வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

<u>அ. சைவம்</u>

பண்டையத் தமிழ் உலகிலிருந்து பாராட்டப்பெற்று வரும் சைவ சமயம் இன்றளவும் எவ்வித மாற்றத்தையும் எட்டவில்லை. காரணம், சிந்து சமவெளிக் காலத்திலிருந்து போற்றப்பட்டு வரும் அம்மை – அப்பன் வழிப்பாட்டினை தொடர்ந்து வளர்ந்து வந்ததே சிவப்பெருமானின் (அப்பன்) வழிப்பாடாகும். ரிக் வேத ஆரியர்களால் அஞ்சதக்க தெய்வமாகக் கருதப்பட்ட ருத்திரன், அதன் முன்கால அப்பன் வழிபாட்டுடன் இணைக்கப்பட்டு யஜீர் வேத காலத்தில் மகாதேவனாக அவதாரமுற்றார். இந்த அவதாரத்தில் சிவபெருமானின் சாந்த சொரூபத்தைக் கண்ட மக்கள் அவர் தம் புகழைப் பாடியதுடன், அவருக்காகத் தவத்தில் ஆழ்ந்து அவர் அருளைப் பெற்றதோடு, சிவ பக்தியுடன் கூடிய குரு பக்தியும் கொண்டிருத்தல் அவசியம் என்றிருந்தனர்.

சிவப்பெருமான் என்பவர் பழங்காலத்திலிருந்து வழங்கப்பட்டு வரும் தெய்வம் என்பதையும் கடந்து, பழங்கால மக்களிடம் சூரிய பகவானின் வடிவமாகக் கருதி வழிப்பட்டமைக் குறிப்பிடத்தக்கது. இதிலும் முற்கால மக்கள் ஒவ்வொரு மாதத்தையும் ஒவ்வொரு கடவுளுக்குரியதாகக் கருதி சிவன் குறிப்பிட்ட பத்து கருத்துக்களையே தொகுத்து சிவனின் மாதங்கள் என சினாய் மலையினின்று வெளியிட்டார்

உலகின் பல நாடுகளிலும் வழிபடப்பட்டு வரும் சிவப்பெருமானின் வழிபாடு நிலத்திற்கும் மக்களுக்கும் ஏற்றாற் போல் பல வடிவங்களில், பல பெயர்களிலும் காணப்படுகின்றது. இதனைச் சார்ந்து தமிழ்நாட்டு மக்கள் சிவப்பெருமானை எவ்வடிவில் வழிபட்டார்களோ, அவ்வடிவிலேயே ஆசிய மைனர் மக்களும், மேற்கு ஆசிய மக்களும் வழிபடுகின்றனர் என்பது இவ்வாய்வில் தொகுத்தளிக்கப்படுகிறது.

சைவ சமய இறைவனான சிவப்பெருமான் பல இடங்களில், பல வடிவங்களில் வைத்து வணங்கப்படினும் அவரது முக்கோலங்களே குறிப்பிட்டுக் கூறத்தக்கன. அவையாவன, 1. அருவம், 2. உருவம், 3. அருவுருவம்.

1. அருவமானது, கண்ணில் புலப்படாத நிழலாகும். இதனடிப்படையில் இறைவன் மூல சக்தியாகக் காட்சியளிக்கிறார். இதனை மக்கள் "இறைவன் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார்" எனும் வாக்கியத்தால் அடையாளப்படுத்துகின்றனர். மேலும், சோதி வடிவமாகவும் காட்சியளிப்பார் எனக் கருதப்பட்டு வருகிறது.

2. உருவமானது, இயல்பாக கண்ணில் புலப்படும் அக்கால கல் வழிபாடு முதல் இக்கால சிற்பம், சிலை வழிபாடு வரையினதாகும்.

3. அருவுருவம்: இறைவனை கண்டும் காணவியலா நிலையினது. கண்ணால் காண முடிந்த லிங்கத்தை தகுந்ததொரு வடிவமென கூறுதல் இயலாதவென்றாகும்.

இவ்வாறாக இன்றளவு தொடர்ந்து வரும் இறை வழிபாட்டின் அம்சமான சைவ சமயம் நம்பிக்கை, வழிபபாடு எனும் முறைகளின் அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. அது ஏதோ ஒரு வகையில் அறிவியல் கருத்துக்களுடன் இணைந்தே காணப்படுகிறது.

கருத்து –8

சிவ வழிபாடு பிற்காலத்தில் இயற்கையின் செயலோடு இணைத்துப் பார்க்கப்பட்டது. அதாவது எல்லா இடங்களிலும் இயற்கையானது கண்ணுக்குப் புலனாகாமல் நின்று வேகமாக இயங்கி வருகிறது. அறிவியலாளர்கள் கூட அசையாமல் கிடக்கும் பொருள்களுக்குள் இயக்கம் நிகழ்வதாகக் கூறுகின்றனர். அதையே சிவபெருமான் எல்லா இடங்களிலும் உறைந்திருப்பதாகச் சொல்லி சிவப்பெருமான் தாண்டவ நடனம் ஆடுவதாகச் சொல்கின்றனர். அவ்வகையில் சிவப்பெருமானின் தாண்டவங்களின் அடிப்படையில் சிறப்பு பெற்ற இடங்களாகக் கருதப்படும் கோவில்கள் பின்வருமாறு 1. தில்லை– சிதம்பரம், 2. திருவாரூர் – அசபா தாண்டவம், 3. மதுரை – ஞான சுந்தர தாண்டவம், 4. அவிநாசி – ஊர்த்தவ தாண்டவம், 5. திருமுருகன் பூண்டி – பிரம தாண்டவம்

இக்கோவில்களுக்கு மன்றங்கள் அமைத்து போற்றப்படும் முகமாக சிதம்பரத்தில் பொன் மன்றம், திருவாலங்காட்டில் மணி மன்றம், மதுரையில் வெள்ளி மன்றம், திருநெல்வேலியில் செப்பு மன்றம், திருக்குற்றாலத்தில் ஓவிய மன்றம் போன்றவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

<u>ஆ. வைணவம்</u>

சமயத்தின் வளர்ச்சியில் இயற்கை வழிப்பாட்டைத் தொடர்ந்து எழுந்த கருத்துகளின் அடிப்படையில் பிறத்தல், காத்தல், அழித்தல் எனும் இயற்கை நிகழ்வுக்கென தனிதனி கடவுளர்கள் அமைக்கப்பட்டு வழிபடலாயினர். அதனடிப்படையில் தோன்றியது தான் இந்த மால் வழிப்பாடான வைணவ சமயம். வைணவ சமயமானது திருமாலினை முதன்மைக் கடவுளாகக் கொண்டு வணங்கும் சமய நெறியாகும்.

சைவமும், வைணவமும் தோற்றம் பெற்றது ஒரே காலம் என்பது "எல்" எனும் இறை வழிப்பாட்டால் உணர்த்தப்படுகிறது. அதாவது எல் என்பது எல்லப்பன், எல்லம்மை என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். இதுவே காலப்போக்கில் மாஎல் என இணைந்து மால் வழிபாடு என அழைக்கப்பட்டது.(தமிழர்சமயம்)

சைவத்தின் ஞாயிற்று வழிப்பாட்டுடன், பாம்பு, சங்கு முத்து, தாமரை போன்ற இயற்கைப் பொருளின் அம்சமாக விளங்கிய மால் வழிபாடு தொடர்பு கொண்டிருந்தது. திருமால் வழிபாடு முல்லை மக்களுக்குரியதாக தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் காணக்கிடக்கிறது. மேலும், பிற்காலத்தில் பூமியில் தோன்றிய திருமாலின் அவதாரங்களாகக் கருதப்படும் விஷ்ணு, கண்ணன், ராமன் போன்ற பெயர்களில் அமைந்த வழிபாடுகளும் ஏறக்குறைய ஒரே அமைப்பினவே என்பது அறிஞர்கள் சிலரால் அடையாளப்படுத்தப்படுகிறது.

இராமனை வழிபடுதல் என்பது, இராமன் திருமாலின் அவதாரமென்பதால் வைணவத்திலேயே இணைக்கப்பட்டது. சிலப்பதிகாரத்தில் திருமால் வழிபாடு கண்ணன் வழிபாடாகவும் கூறப்படுகிறது. இதிலும் குறிப்பாக, எகிப்து மக்களின் ஞாயிற்றின் சின்னமாகக் கருதப்படும் பருந்து திருமாலின் ஊர்தியென அடையாளப்படுத்தப்படுகிறது.

இன்றளவும் கூறப்பட்டு வரும் திருமாலின் பத்து அவதாரங்கள் 108 திவ்ய தேசங்களாக அமையப்பெற்று அதனைக் குறித்து பன்னிரு ஆழ்வார்களின் நாலாயிர திவ்விய பிரபந்தம் எனும் நூலின் வழி அடையாளம் காட்டப்படுகிறது. வடகலை மரபினர்கள் "பஞ்சாந்திரம ஆகமங்கள்" ஐ பின்பற்றியும், தென்கலை மரபினர்கள் நாலாயிர திவ்ய பிரபந்தத்தை பின்பற்றியும் வைணவ வழிப்பாட்டைத் தொடர்கின்றனர்.

இவ்வாறு சைவ வைணவ சமயங்கள் அறிவியலுடன் ஏதோ ஒரு விதத்தில் இணைக்கப்பட்டுள்ளன. அவை தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றன . இக்கருத்தை ந.சுப்புரெட்டியார் தமது நூலில் சுட்டுகிறார்.

கருத்து 9

அறிவியலின் பார்வை

உலகின் மாற்ற நிகழ்வைக் கூர்ந்து கவனித்து அவற்றைப் புனிதமாக அடையாளப்படுத்தும் நெறிமுறைகளுக்குச் சமயம் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்திட்ட மக்கள், இவ்வியற்கையிலிருந்து மாற்றம் பெற்று செயற்கைக்கு வழி அமைத்துக் கொடுத்த நிலையில் அம்மாற்றங்களுக்குப் பெயர் சூட்டிக் கொடுத்த தலைவனையே

கடவுளென எண்ணுகின்றனர். இதனையே, கடவுள் எனக் கொண்டு வழிபாடுகளின் வழி மன ஆனந்தம் கொள்கின்றனர் மக்கள்.

கருத்து 10

புற சமயங்களாவன, அ. சமணம், ஆ. பௌத்தம் ஆகியனவும் அறிவியலுடன் பெருமளவு தொடர்பு கொண்டுள்ளன

அ. சமணம்

பெயர் காரணம்

க்ஷச்ரமண என்ற வடமொழிச் சொல்லின் திரிபே சமணம் ஆகும். இதற்கு தன்னை வருத்துகை எனும் பொருள்படும். 12 – ம் நூற்றாண்டிற்கு பின் சமணம் எனும் சொல் இலக்கியங்களில் இடம்பெறுவதற்கு ஏதுவாக ஜைனம் எனும் பொருள்பட அமைந்து வரும். இருப்பினும், இச்சமயத்தைச் சார்ந்தவர்கள் சாவகர், அருகர், ஆசீவகர் என அழைக்கப்பட்டு வந்தனர் என்பதைத் தமிழ் நிகண்டுகள் வழி அறிதலாயிற்று. இவர்களைத் தொடர்ந்து வந்த மற்ற ஆசிரியர்கள் பௌத்தம், அஞ்ஞானம், வேதாந்தம் என்பனவற்றையும் சமணம் எனும் பெயரைக் கொண்டே அடையாளப்படுத்தியுள்ளனர்.

கி.பி.8 – ஆம் நூற்றாண்டில் திவாகர முனிவரால் இயற்றப்பட்ட திவாகர நிகண்டு ஜைனர் என்றழைக்கப்பட்ட அருகர்களை – சமணரின் ஒரு பிரிவாக இணைத்தார். இவரைத் தொடர்ந்து, இவரது மாணாக்கர் பிங்கல முனிவரும் அவரது பிங்கல நிகண்டில் அருகர்களை சமணர்களாகவே பறைசாற்றியுள்ளார் என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

சமண சமயம் – விளக்கம்

அவைதீக சமயமாகக் கருதப்படும் சமணம் இறைவன் எனும் படி நிலையை ஏற்காத ஒன்றாகும். இக்கொள்கை மக்களின் திடத்தினையும், தைரியத்தையும் தன்னுள் உள்ள ஆத்மாவின் வெளிப்பாடாக எடுத்துரைக்கும் நிலையில் சமயமாக உருவெடுத்தது. இச்சமயத்திற்கு இறைவன் என்று ஒருவன் இல்லையெனினும், தீர்த்தங்கரர்கள் என்றழைக்கப்பட்ட 24 தலைவர்களின் நற்சொற்களின் வாயிலாகத் தோன்றிய அறக் கருத்துக்களை முன் நிறுத்தியது. இந்த இருபத்து நால்வரில் இறுதியில் தோன்றிய மகாவீரரே சமண சமத்தைத் தோற்றுவித்தார் என்பதை பல நூல்களின் வழி கண்டறியலாம். தமிழ் சங்கங்களைப் போல் சமண சமயமும் அவைகள் அமைத்து

வளர்க்கப்பட்டு பரப்பப்பட்டன என்பது கல்வெட்டு மற்றும் நிகண்டுகள் வழி நாம் அறியலாகும் உண்மையாகும்.

இந்த சமணமானது அணு கொள்கை பற்றி பேசுகிறது. அணுவைப் பற்றி அறிவியலும் பேசுகிறது. எனவே சமணமதம் அறிவியல் சிந்தனையுடன் தொடர்புடையது என்பது போதரும்.

ஆ. பௌத்தம்

பெயர் காரணம்

பௌத்த சமயம் கௌதம புத்தரின் போதனைகளின் அடிப்படையிலான அறக் கருத்துக்களைக் கொண்டவொரு அவைதீக சமயமாகும். பௌத்த மரபின் படி கி.மு.4 – 6 –ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டக் காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த சிறப்பிற்குரிய பெரியவர். இவர் மக்கள் அன்றாட வாழ்வில் பின்பற்ற வேண்டிய நியதிகளைத் தொகுத்து சமயக் கருத்துகளுக்குள் புகுத்தி, ஒரு புரட்சி செய்துள்ளார் என்று கூறினும் மறுப்பதற்கில்லை. இக்கொள்கை கடவுளை மறுத்து மனித ஆன்ம பலமே அனைத்திற்கும் அஸ்திவாரமென கூறி மக்களை விழிப்புற செய்தது. மேலும், கடவுளன்றி தலைவன் எனும் நிலையில் புத்தர் தன் சீடர்களுக்கு அருள்பாளிக்கிறார்.

பௌத்தத்தின் நான்கு உண்மைகள்

1. துன்பம்,
2. ஆசை அல்லது பற்று,
3. துன்பம் நீக்கல்,
4. எட்டு நெறிகள்.

பௌத்த நெறிமுறைகள்

1. நற்காட்சி,
2. நல்லெண்ணம்,
3. நன்மொழி,
4. நற்செய்கை,
5. நல்வாழ்க்கை,
6. நன்முயற்சி,
7. நன்கடைப்பிடி,
8. நற்தியானம்

முதலிய எட்டு நெறிமுறைகளைகப் பின்பற்றுவதன் மூலம் ஆன்மாவிற்கு வலு சேர்க்கும் உடலை என்பதை விளித்துரைக்கிறது.

இவ்வாறாக பௌத்தம் கௌதம புத்தரின் பொதுவான நான்கு உண்மைகளாயும், எட்டு நெறிமுறைகளை ஏற்றுக் கொண்டாலும், அவை தம் மக்களின் பிரிவினால் 1. மகாயான பௌத்தம்,2. தேரவாத பௌத்தம், 3. வச்சிரயான பௌத்தம் எனும் முப்பிரிவுகளுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

இ. உலகாயதம்

பெயர் காரணம்

முதன்முதலாக கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் எனும் நூலில் தான் உலகாயதம் எனும் சொல்லாடலுடன், யோகம், சாங்கியம் என்பனவும் கிடைக்கலாயின. இம்மூன்றும் தத்துவமாக மாறியிருப்பதற்கு அவற்றிற்குள் காணப்பட்ட தர்க்கவியல் கூறுகளே காரணம் என்பது இவண் நினைவுக் கூறத்தக்கது.

உலகாயத சமயம்

இந்தியாவில் தோற்றம் பெற்ற மெய்யியல் கோட்பாடே, காலப்போக்கில் உலகாயதம் என்றழைக்கப்பட்டது. இக்கொள்கையை இதற்கு முன் சாவகம் எனும் பெயர் கொண்டு அழைத்து வந்துள்ளனர். இக்கொள்கையின் அடிப்படையாக அமையப்பெறுவது இரு வாத முறைகளில் ஒன்றான பொருள் முதல் வாதக் கருத்தாகும். இக்கருத்தாக்கம் தத்துவ துறையில் ஒரு மைல் கல்லாகக் கருதுவதற்கு இடமுண்டு. இதனை, பிறகு விரிவாகக் காண்போம். அதன் முன் துவக்கத்தில் உலகாயதக் கொள்கை சமயத்தின் சார் நிலையாக கூறபட்ட நிலையினை எடுத்துரைக்கலாம்.

உலகாயதக் கொள்கையினர் அவைதீக சமயங்களில் ஒன்றாகும். இச்சமயத்தினரின் பொதுவான செயல்பாடுகளைப் போலவே, இவர்களும் கடவுள் ஏற்கா கொள்கையை முன் நிறுத்துகின்றனர். இவர்கள் தம் பார்வையில், கடவுள், ஆன்மா எனும் இரு பொருட்களையும் தவிர்த்து உலகில் உள்ளப் பொருட்களை நிலையானதென்றும், உடல் எனும் பொருளின் துணையினாலே ஆன்மா இயங்குகிறது எனும் கருத்துடன், கடவுள் எனக் கருதப்பட வேண்டிய இயற்கையும் உலகில் உள்ள பொருட்களாலேயே இயக்கமுறுகின்றது எனும் கருத்தினையும் வெளிப்படுத்துகின்றனர்.

சமயங்களுக்கென பொதுவாகக் கூறப்படும் கடவுள், மாயை, பிறவி சுழற்சி, ஆன்மா போன்ற கருத்தாக்கங்களையும், மீ இயற்கை விளக்கங்களையும் இது முற்றிலும் மறுக்கிறது. ஆனால், உலக நம்பிக்கைகளையும், உடன்பாட்டு சிந்தனையையும்

கொண்டு, வீடு பேற்றை விட, உலக வாழ்வின் இன்பத்தை முதன்மைப்படுத்துகிறது. இச்சார்வாகர்கள் பருப்பொருள்வாதிகளாகவும் கருதப்படுகின்றனர்.

அறிவியல் – பார்வை

அறிவியலின் கருத்துக்களைத் தன்னகத்தைக் கொண்டு மக்களின் மனக் கருத்துக்களால் சமயத்திற்குள் அடைந்துக் கிடக்கும் ஒருவித கருத்துக் கோட்பாடுகளென கருதப்படும் நிலையில் இந்த அவைதீக சமயங்கள் உள்ளன. மேலும், இச்சமயங்களின் கருத்துருவாக்கங்கள் அனைத்தும் பெரும்பாலும் அறிவியல் கோட்பாடுகளை சார்ந்தவையே என்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

இதுவரை சமயங்கள் அறிவியலுடன் கொண்டிருந்த தொடர்பு பற்றி சுப்புரெட்டியார் பேசும் நோக்கில் இருந்து விளக்கப்பட்டது. இனி மதம் பற்றி சிறிது விளக்கலாம்

மதம்

சமயத்தின் வளர்ச்சி நிலையில் மதம் என பெயர் மாற்றத்துடன் கூடிய அமைப்புத் தோன்றலாயிற்று. இந்த உருவாக்கத்தினால் மக்களிடத்தில் வேறுபாடு தோன்றி, ஒற்றுமை, வேற்றுமைகள் ஏற்படலாயின. மேலும், மநுதர்மம் அடிப்படையில்,

1. பார்ப்பனர்,
2. சத்திரியர்,
3. வைசியர்,
4. சூத்திரர்

எனும் பிரிவினுள் மக்களை பிரித்து மக்களின் சமநிலையைக் குலைத்ததுடன், மக்களிடையில் வேறுபாட்டினைத் தோற்றுவித்தனர். மேலும், பார்பனர்களைக் கடவுளுக்கு நிகராக வணங்கும் நிலையைக் கொண்டு வந்ததுடன், சத்திரியர்கள், வைசீயர்கள் என வரிசைப்படுத்தி அவர்களினும் தாழ் இனமான சூத்திரர்களை அடிமையாகக் கையாண்டனர். மேலும் முதல் மூன்று பிரிவினரின் அடிமையாக சூத்திரர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இவ்வாறாக சமயத்தின் தொடர்ச்சியாக வளர்ச்சியுற்ற மதம் இன்றளவில் மதவாதிகளால் கைக்கொள்ளப்பட்டு மதக்கருத்துகளில் மாற்றம் தோன்றியுள்ளது.

அறிவியல் வளர்ச்சியை அறிந்திட்ட மக்கள் தன்னுள்ளும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு தெளிவுற்ற மக்கள் அறியாமையை கொண்ட மக்களின் பால் காட்டிய ஆதிக்க செயல்களே இத்தகு மதக் கலவரங்களாகும். இதன் மூலம் உலகில் உள்ள அனைவரும் கலவரத்தை எதிர்த்து மேலும் முன்னேற்ற நிலையை அடையலாயினர் என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

இயல் – 3

அறிவியல் நோக்கில் – தத்துவம்

அறிவியலும் தத்துவமும் வேறுபட்டுக் காணப்படினும் அடிப்படையில் சில விசயங்களில் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அறிவியல் என்பது உலகப் பொருட்களின் இயற்கையை முறை பற்றிய அறிவு மட்டுமல்லாது இயற்கையை மனிதர்கள் தம் வசதிக்கேற்ப மாற்றும் அறிவும் ஆகும். அறிவியல் வளர்ச்சியடையும்.

தத்துவமும் உலகப் பொருள்களின் இயல்பை ஆராயும். ஆனால் ஒவ்வொரு பொருளையும் எடுத்து ஆராயாது. அறிவியலின் நோக்கில் தத்துவத்தை ஆராய்வது எளிமையான ஒன்றாகும். உலகில் காணப்படும் தத்துவங்கள் அனைத்தும் தம் நிலையில் மாறுபட்டிருந்தாலும் அறிவியலைப் போன்றே அவை சமூகத்தில் பயனை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டவையாகும். இது குறித்து பேராசிரியர் சுப்புரெட்டியார் அறிவியல் நோக்கில் தத்துவம் எனும் கருத்தைப் பேசுவதை இவ்வியலில் ஆராயலாம்.

பேராசிரியரின் கருத்துப்படி தத்துவம் என்பது மக்கள் அனைவரும் நினைப்பதைப் போல, எளிமையாக கூறப்படும் சொல்லாடல்கள் மட்டும் அன்றி பெரும்பாலும் சிறந்த நெறிமுறையினாலான கருத்துக்களைக் கொண்ட அமைப்பு முறையைச் சார்ந்ததாகும். தத்துவத்தில் கூறப்படும் கருத்துக்கள் என்றளவும் தன் நிலையிலிருந்து மாறுபடா தன்மைத்தது என்பது மடுமல்லாது காலத்தால் நிலைத்திருக்கக் கூடியதாகும் என்பார் பேராசிரியர்.

தத்துவத்தில் கூறப்படும் செய்திகளே அறிவியல் முறையில் ஆராயப்பட்டு இன்றளவும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. தெளிவாகிறது. தத்துவம் என்ற சொல் மேலைநாட்டிலிருந்து பரவி வந்த ஒரு அறிவியல் முறையாகும்.

தத்துவம் என்ற அறிவு முறையே அறிவியலின் துவக்கமாக இருந்து வந்துள்ளமையை வரலாற்றில் பார்க்கமுடிகிறது.. மேலும், அறிவியலைப் போலவே தத்துவமும் மக்களின் மூட நம்பிக்கையை தவிர்ப்பதாக மட்டுமல்லாமல், மக்களின் அறியாமை எனும் இருளினை அகற்றும் சுடர் விளக்காகவும் விளங்குகிறது என்று அறிவியலுக்கும் தத்துவத்துக்கும் இடையேயான பொதுமையை அழகாகச் சித்தரிக்கிறார் பேராசிரியர்.

தத்துவத் துறையினர் 1 இறைவன் 2. ஆன்மா 3.உலகம் எனும் மூன்று அடிப்படைப் பொருள்களின் உண்மையைத் தேடல்களின் வழி தத்துவத்தை கண்டறிந்தனர். இந்தியாவைப் பொறுத்தவரை

இந்த உண்மைகளின் தேடல்களது விளைவாய் சாங்கியம்,யோகம், வைசேடிகம், நியாயம்,மீமாம்சகம், வேதாந்தம், சைவ சித்தாந்தம் பௌத்தம், சமணம், உலகாயுதம் எனும் பலவித தத்துவங்ள் தோன்றின.

இந்த தத்துவங்கள் உலகம், இறைவன்,ஆன்மா எனும் மூன்று பொருட்களை ஆராயுமிடத்து, அதற்கான அளவைகளையும் உருவாக்கியுள்ளனர் . அந்த அளவைமுறைகள் அறிவியல் கருத்துக்கு உடன்பாடானது என்பது பேராசிரியர் கருத்து. மேலும் இந்த தத்துவங்கள் எவ்வாறு அறிவியல் கருத்துக்களுடன் தொடர்புடையன என்பதைப் பின்வருமாறு விளக்கிக் காட்டுகிறார். இந்த செய்திகள் அனைத்துமே அறிவியல் தன்மை கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது.

1. சாங்கியம்:

பெயர் விளக்கம்

ஒசங்க்யா என்ற தாதுவிலிருந்து தோன்றியதே சாங்கியம் என்ற சொல். இத்தாதுவிற்குப் பகுத்தறிதல், எண்ணுதல் எனப்பல பொருள் உண்டு என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. இத்தத்துவம் மனதை பொருளாகக் கொண்டு காண்பதால் இதனை ஒபொருள் முதல்வாதம் என்பர். பிரகிருதியாகிய ஒரே மூலத்தினின்று உலகம் இயல்பாகவே பரிணாமம் எய்தியது என்றுக் கருதியதால், ஒபரிணாமவாதம் அல்லது சுபாவ வாதம் எனும் பெயர் பெற்றது. மேலும், கபிலரால் தோற்றுவிக்கப்பட்டதால் ஒகபில தரிசனம் என்றும், ஒதுவைதம் என்றும், உலகம் பிராக்ருதியாகிய உட்பொருளிலிருந்து தோன்றியது எனக் கூறுவதால் ஒசத் காரியவாதம் என்ற பெயரும் உண்டு.

சாங்கியத் தத்துவம்

வேதத்தை அடிப்படையாகக் கொண்ட மிகப் பழமையானது சாங்கியம் எனும் தத்துவமாகும். சாங்கியம் என்றால் பூரண அறிவு எனப் பொருள்படும். இத்தத்துவத்தை உருவாக்கியவர் கபிலர் .

பேரறிஞர். ஜான்டேவிஸ் – "பகுத்தறிவின் அடிப்படையில் உலகத் தோற்றம், இயற்கையும் மனித உறவுகளும், மனிதனை எதிர் நோக்கும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட முடிபுகள் போன்ற மறைப்பொருள் வினாக்களுக்கு விடை கர முற்பட்ட காலப்பழமை வாய்ந்த முயற்சியாக சாங்கியம் திகழ்கிறது" எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. .no.13 in indiya thaththuva kalanjiyam . இரா.கிருட்டிணப்பர் "சிந்தனை வரலாற்றில் எந்தவொரு தத்துவமும், தனி ஒருவனது படைப்பினால் தோற்றம் பெற்றிடாது என்றும், கருத்துக்கள் வளர்ந்து சிந்தனையாளர்களால் ஆராய்ந்து சிதறப்பட்ட சிதறலாகவே இருக்கும்" எனும் கருத்தை முன்வைக்கிறார். இது பொதுவாக தத்துவங்களில் காணப்படும் அம்மூன்றுப் பொருட்களை மையமாகக் கொண்டே உலாவுகிறது.,

சாங்கியம் – பகுப்புகள்

இயல்பாகத் தத்துவங்களில் தோன்றக் கூடிய முப்பிரிவுகளுக்கு முன்பு இதன் இரு மூலப்பொருள் மட்டுமே உள்ளது சிறப்பு மிக்கதாக அமைந்துள்ளது. அவையாவன: 1. பிரகிருதி, 2. புருடன் என்பதாகும்.

1. பிரகிருதி என்பது உயிரற்ற மற்றும் இயக்கமில்லாத அனைத்துப் பொருள்களும் அடக்குவர். இக்கருத்துடன் உலகின் இயக்கத்திற்கு மூலமாக அமைவதே இப்பகுப்பு எனுவும் விளக்குவர்.

2. புருடன் என்பது உயிருள்ள மற்றும் இயக்கமுடையப் பொருட்களை மையமிட்டு கூறுவர். இப்பொருள் இயக்கத்திலிருப்பினும் பிரகிருதியின்றி செயல்பட்டும் பயனில்லை என்றும் கூறுவர்.

உயிருற்று உலகின் இயக்கமாக உள்ள, பிரகிருதி முக்குணங்களின் அடிப்படையில் அமையப்பெறும். ஆவையாவன: 1. சத்துவம், 2.ராஸசம், 3.தாமசம்.

1. சத்துவம்

சிறந்த, வலிமையுடைய இயல்பான நிலையினையுடைய பிரிவாகும்.

2. ராஸசம்

வீரியம் மிக்க, துல்லியம் கொண்டவர்களான நிலையினையுடைய பிரிவாகும். இக்குணங்களைக் கொண்டவர்கள் அதிக அளவில் மன வருத்தமடைபவர்களாகவும், எளிதில் கோபமடையக் கூடியவர்களாகவும் இருப்பர்.

3. தாமசம்

இயல்பினும் குறைவான, சோம்பேறித்தனத்தை இயல்பாகக் கொண்ட நிலையினதாகும். இக்குணம் கொண்டவர்கள் பெரும்பாலும் சோம்பேறித்தனம் மிக்கவர்களாகவே இருந்திடுவர். புருடனின் நிலைபாடுகளை கூறுவது என்பது கடினத்திற்குரியது என்கின்றனர். அவர்களதுக் கருத்துப் படி, புருடன் எனும் ஆன்மா பல நிலைப்பாடுகளையுடையது என்பதை மனிதர்களின் இயக்க நிலையினை மையமிட்டுக் கூறுகின்றனர். அதன்படி, உலகில் புருடன் ஆற்றல் மிக்குக் காணப்படினும், பிரகிருதி இன்றி இயங்க இயலாது என்றும் கூறுகின்றனர்.

மேலும், புருடன் ஒரே நிலையைப் பெற்றிருப்பின் உலகிலுள்ள மக்கள், பறவை, விலங்கு போன்ற பல உயிர்கள் தன் நிலையில் மாறுப்பாடுக் காண முடியா நிலை நேர்ந்திருக்கும் என்பதோடு, இவ்வுயிரிகளின் குணம், பண்பு நலன்களிலும் மாறுபாடு தோன்றியிருக்குமென்பதைச் சாற்றியுள்ளனர்.

1. யோகம்

பெயர் காரணம்

யோகம் எனும் சொல் புணர்ப்பு, சேர்தல் அல்லது இணைதல் எனும் பொருள்பட அமைந்து நிற்கும். சீவனும் (ஆன்மா), பரம்பொருளும் (இறைவன்) இணையும் ஆன்மீகப் புணர்ப்பினை யோகம் என்ற சொல்லால் குறிப்பர். மேலும், இதனை மிகப்பெரிய துன்பத்தாலும், சோதனையாலும் சிறிதும் அசைக்க முடியாததையும் உயர்வற உயர் நிலையாக உள்ள பரம்பொருளில் ஊன்றிய மன ஒருமையினையும் யோகம் குறிக்கும் எனும் கருத்தை பகவத் கீதையின் வழி அறியலாகிறது.

யோகத் தத்துவத்தின் தொன்மை

சிந்து சமவெளி என்றழைக்கப்படும் நாகரீகத்தின் தொடக்கக் காலத்திலேயே யோக நெறி இருந்து வந்துள்ளமை அப்பகுதி ஆய்வில் கண்டறியப்பட்ட உயிர்களுக்கு முதல்வனாகக் கருதப்படும் இறைவனின் யோக நிலை சார்ந்த சான்றுகளைக் கொண்டு

அறிந்துக் கொள்ளலாம். இதன் வழி யோகமே அனைத்து தத்துவங்களுக்கும் முன்னோடியாக இருந்திருக்க வாய்ப்புண்டு எனக் கருதலாகிறது. இந்நெறிக்கு முதல்வராகக் கருதப்படும் பதஞ்சலியின் பெயராலும் யோகத் தத்துவம் அழைக்கப்படுகிறது.

யோக சூத்திரம் 1. அறியாமை, 2.அசுமிதா, 3.இராகம், 4.வெறுப்பு, 5.பற்றும் பயமும் எனும் ஐவகைத் துன்பங்களை அடையாளப்படுத்தி அதனை நீக்கும் வழிமுறையினையும் விவரிக்கிறது.

யோக சாத்திரங்கள்

திருமந்திரத்தின் மூன்றாம் தந்திரமே யோக சாத்திரமாகப் பாடப்பெற்றுள்ளது. இதன் வழி யோகத்தின் நெறிகளான 1. இமயம், 2. நியமம், 3. ஆசனம், 4. பிரணயாயம், 5. பிரத்தியாகாரம், 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி போன்றவை விவரிக்கப்பட்டுள்ளது.

2. வைசேடிகம்

பெயர் காரணம்

வைசேடிகர்கள் முன் வைக்கும் அறுப் பொருட்களில் ஒன்றான விசேடம் எனும் பொருளின் பெயரின் அடியாகத் தோன்றியதே இந்த வைசேடிக தத்துவமாகும். இத்தத்துவம் பொருள்களில் உள்ள விசேஷத் தன்மையை மையமாகக் கொண்டு காண முற்படுவதால் இப்பெயர் பெற்றது எனக் கொள்ளலாம்.

பொருள் விளக்கம்

உலகில் உள்ள பொருட்களின் விசேஷத் தன்மையை ஆய்வதே இதன் பொருள விளக்கமாகும். இந்நிலையால் உலகிலுள்ள பொருட்கள் அனைத்தும் தன்னுள் கொண்டுள்ள விசேஷ மற்றும் தனிப்பட்டதொரு சிறப்பினைக் குறிப்பிடுவதால் ஏற்படுகிறது என்பதையும் விளக்கிக் கொள்ளலாம்.

வைசேடிகத் தத்துவம்

உலகின் உண்மையினை அறிவதை முதல் நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்ட இத்தத்துவம், வாழ்வில் உண்டாகும் துன்பச் சுமையினை எடுத்தெறியும் நோக்கத்துடன் இணைந்த சீடர் குழு ஒன்று முதல் நிலையாக ஆசாரியார்களை கண்டு ஆன்மாவின்

உண்மை நிலையினை அறிந்த பின், கணாதரைக் கண்டு விசாரித்த போது இயற்கையின் உண்மை நிலை பேசும வைசேடிக சூத்திரதை அறிந்துக் கொண்டனர்.

இந்நூல் வீடுபேற்றிற்குரிய வழியை எடுத்துரைத்ததால் மோட்ச சாத்திரம் என்றும், மோட்ச சாதனமாகத் தன்னறியும் மெய்யுணர்வும் கற்பித்தலின் அத்தியாச்சுமடாத்திரம் என்றும் பெயர் பெற்றுள்ளமை இவண் குறிப்பிடத்தக்கது.

ஐம்பொறிகளாலும், மனத்தாலும் அறியப்படும் பொருட்களின் உண்மை நிலையினை வைசேடிகம் ஏற்றுக் கொண்டதால், இதனைப் பொருள் முதல்வாதம் என்பர்.

<u>அறுவகை பாகுபாடுகள்</u>

பொருள்,குணம்,கருமம், சாமானியம், விசேடம்,சமவாயம் என்பன அறுவகை பாகுபாடுகள் ஆகும்.

<u>பொருள்</u>

குணங்களுக்கும், செயல்களுக்கும் ஆதாரமாகவும், தொகுதியாகவுள்ள எவ்வகைப் பொருளுக்கும் ஏதுவாகவும் இருப்பது தான் திரவியம் அல்லது பொருள் எனப்படும்.

இத்திரவியம், 1. நிலம், 2. நீர், 3. தீ, 4. வளி, 5. வான், 6. காலம், 7. திசை, 8. ஆன்மா, 9. மனம் எனும் ஒன்பது வகையினுள் அடக்கப்படுகிறது.

உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்கள் அனைத்தும் தன்னுள் தாங்கி நிற்கும் தத்துவத்தினைத் திரவியம் அல்லது பொருள் என்று கண்டனர். எனவே, இவ்வொன்பது வகைப் பொருட்களால் பிரபஞ்சம் படைக்கப்பட்டுள்ளது எனலாம்.

<u>குணம்</u>

உடற்சார்பிலான, மன சார்பிலானவையென கண்ட 1.வண்ணம், 2.சுவை,

3.மணம், 4.ஊறு, 5.எண், 6.பரிமாணம் சம்யோகம், 7. விபாகம், 8.அறிவு, 9.இன்பம், 10.துன்பம், 11.வன்மை, 12.நீர்த்தன்மை, 13.தருமம், 14.அதருமம், 15.ஓசை, 16.கலைத்திறன், 17.ஒட்டுறவு எனும் பதினேழினையும் உள்ளடக்கியவையாகும்.

கருமம்

கருமம் என்பது உடல் இயக்கத்தை வலியுறுத்துகிறது. இக்கருமம்திரவியங்களின் தற்காலிகக் கூறாக உள்ளது. கருமம் என்றழைக்கப்படும் இத்தொழில் ஐந்து வகைப்படும்.

அவையாவன,

1. மேல்நோக்கி செல்லுதல்,
2. கீழ் நோக்கி செல்லுதல்,
3. சுருங்குதல்,
4. விரிதல்,
5. பொதுவியக்கம் அல்லது புடை பெயர்ச்சி என்தாகும்.

சாமானியம்

ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களிடமும் காணப்படும் பொதுத்தன்மை சாமானியம் எனப்படுகிறது. பொருட்கள் வேறுபாடுகளுடன் அமைந்திருப்பினும் அவற்றுள் காணப்படும் ஓரிரு பொதுத்தன்மையும் சாமானியம் எனக் கொள்ளப்படும்.

விசேடம்

பொருள்கள் ஒன்றினின்றி ஒன்று வேறுபடுதற்குரிய சிறப்பியல்பு விசேடம் எனப்படும். அணு வேறுபடுவதினாலே பொருட்கள் வேறுபடுகின்றன எனும் கருத்தினை முற்படுத்தியும் பொருட்களின் விசேடத்தினை பறைசாற்றலாம்.

சமவாயம்

காரணம், காரியம் என இரண்டிற்குமுள்ள மிக நெருங்கிய உறவு சமவாயம் எனப்படுகிறது. அதாவது, குணத்திற்கும் குணத்தை உடைய திரவியத்திற்கும், தொழிலிற்கும் தொழிலையுடைய திரவியத்திற்கும் ஏற்பட்டுள்ள அந்நோந்ய சம்பந்தம் சமவாயம் என நீலகேசியின் கருத்தின் வழி அறிகிறோம்.

3. நியாயம்

பெயர் காரணம்

பொருள் உள்ள உண்மைத்தன்மையினை விளக்கிக் கொள்ள இருசார் அறிஞர்கள் சொற்போர் பிரிந்து நிலை நாட்டும் வாதக் கலையினை வாதவித்தை என்றழைத்து வந்தனர். காலப்போக்கில் இந்நெறியினுள் தத்துவ நிலையினைக் கண்டதனால் அத்தததுவங்கள் நியாயத் தத்துவமாக உருப்பெறலாயின.

நியாயத்தினை மேலும் ஏதுவித்தை எனும் பெயர் கொண்டும் அழைக்கலாயினர். ஒரு பொருளின் உண்மையினை ஆராயும் பொழுது காரணம் எனப்படும் சான்று வலிமை உடையது . இவ்விடத்தில் வரும் காரணத்தின் இன்னொரு பெயர் தான் ஏது.

பிரமாணங்களை மிகவும் விரிவாக ஆராய்ந்து, பொருள் உண்மை காண்பதற்கு அவை பயன்படும் பாங்கினை நிலைநாட்டிய சாத்திரம் என்பதால் பிரமாண சாத்திரம் எனும் பெயரையும் பெற்று விளங்கிற்று எனலாம்.

நியாய சாத்திரப் பொருண்மை

நியாய தத்துவத்தினை 1. அறிவுக் கோட்பாட்டில், 2. உலக கோட்பாட்டியல், 3. உயிர் கோட்பாடும், வீடுபேறும், 4. இறைக் கோட்பாடு எனும் நான்கினுள் அடக்கி, அக்கபாதரின் நியாய சூத்திரத்தில் உள்ள பதினாறு வகைப் பொருட்கள் பற்றிய பொருட்களை 1. பிரமாணம், 2. பிரமேயம், 3. வாதம், 4. அவயவம், 5. அன்னிய மதப்பரீட்சை எனும் தலைப்புகளின் கீழ் வைத்து பதினாறு வகைப் பொருட்களாயும் விளக்கியுள்ளார்.

அப்பதினாறு வகைப் பொருட்களாவன,

1. பிரமாணம்,
2. பிரமேயம்,
3. சம்சயம்,
4. பிரயேசனம்,
5. திட்டாந்தம்,
6. சித்தாந்தம்,
7. அவயவம்,
8. தருக்கம்,
9. நிர்ணயம்,
10. வாதம்,
11. சல்பை,
12. விதண்டை,
13. ஏதுவாபாசம்,

14. சலம்,
15. சாதி,
16. நிர்க்கிரகத்தானம்.

இவ்வாறாகக் கூறப்படும் பதினொருப் பொருட்களில் காணப்படும் உண்மை நிலையினை மையமிட்டு நியாயத் தத்துவ நெறி அமையலாகிறது..

வேதாந்தம்

பெயர் காரணம்

வேதங்களின் அந்தமாகிய உபநிடதங்களில் அமையப்பெற்றுள்ள தத்துவக் கூறுகளை மையமிட்டு விளக்குவதால் வேதங்களின் அந்தம் என்பதாலும், வேதங்களின் அந்தத்திலுள்ள தத்துவம் என்பதாலும் இப்பெயர் பெற்றது எனலாம்.

பொருள் விளக்கம்

வேதாந்தம் எனும் தத்துவக் கோட்பாட்டை வேதாந்திகள் அனைவரும் விளக்கியிருப்பினும், ஒரு சீரான ஆய்வினைக் கொண்டமையவில்லை. அதனை தொடர்ந்து பாதராயணர் எனும் வேதாந்தியினால் எழுதப்பட்ட வேதாந்த சூத்திரம் அல்லது பிரம்ம சூத்திரம் எனும் நூலே இக்கோட்பாட்டை விளக்கத் தோன்றிய முரண்பாடற்ற நூலாக அமைந்தது. இதன் விளைவாக தோன்றிய இந்நூலின் கோட்பாட்டினையே வேதாந்திகளின் வேறுபட்ட கருத்துகளுக்கு இன்றளவும் பதிலளிக்கின்றனர் என்றால் மிகையாகாது.

வேதாந்தத்தின் வகைகள்

வேதாந்தம் என்பது வேதத்தின் அந்தமாக இருப்பினும், அவற்றிலுள்ள தத்தவத்தின் அடிப்படையில்,

1. அத்வைதம் – ஆதிசங்கரர்,
2. விசிட்டாத்வைதம் – இராமானுஜர்,
3. துவைதம் – மத்துவாச்சாரியார்

எனும் மூன்று வகைகளுக்குள் அடக்கி விளக்கியுள்ளனர். அவர்கள் தம் நூல்களின் வழி நம் தத்துவத்தின் அடிப்படையிலான மூன்றுக் கூறுகளை மையமிட்டு விளக்குதல் சிறப்பிற்குரியது.

1. அத்வைதம்

பிரம்மம் என்பது இரண்டல்ல எனும் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டதே இத்தத்துவமாகும். ஆதி சங்கரர் அவர் தம் ஆற்றலின் உதவியினாலும், இறை பக்தியினாலும் இந்த தத்துவத்தை வகுத்துள்ளார். இத்தத்துவத்தின்படி, ஆதி மூலமான இறைவனும், இவ்வுலகில் பிறப்பெடுத்து வாழும் மனிதர்களின் ஆன்மாவும் ஒன்றே எனும் நிலையினை உணர்த்தும் தத்துவமாகும். மேலும் பல காரணங்களை எடுத்துக் கூறி விளக்கவும் முற்படுகின்றனர்.

2. விசிட்டாத்வைதம்

பிரம்மமும், ஆன்மாவும் ஒன்றுக்கொன்று இணைந்தே செயல்படினும், அவை ஒன்றுக்கொன்று வேறுப்பட்டவையே என்பது இத்தத்துவத்தின் கோட்பாடாகும். இதனடிப்படையில் விளக்கினால் ஆன்மா வேறாக இருப்பினும் பிரம்மத்தினது என்றும், பிரம்மத்தை சாராதது எனவும் பொருள்பட்டு நிற்கும்.

3. துவைதம்

இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றது எனும் பொருள்பட அமைந்து வரும் வேதாந்த தத்துவமாகும். இத்தத்துவத்தின்படி பிரம்மமும், ஆன்மாவும் இரு வேறு நிலைகளில் அமைந்து வரும் நிலைக் களன்களாகும்.

4. மீமாம்சம்

பெயர் விளக்கம்

எவையேனும் ஒரு சிக்கலுக்கு ஆழ்ந்த சிந்தனையாலும், பகுத்தறியும் ஆய்வினாலும் தீர்வுக் காணுதல் மீமாம்சம் எனும் சொல்லின் வேர் பொருள் ஆகும். இதனை மதிப்புறு சிந்தனை என்றும் விளக்கம் கூறுவர் ஒரு சாரார். மீமாம்சமும், வேதாந்தமும் கொண்டிருந்த உறவினைக் கண்ட சிலர் இரண்டையும் இணைத்து கர்மஞான சமுச்சயவாதம் என்றும் பெயர் சூட்டினார்.

மீமாம்சக மையக் கொள்கைகள்

காட்சி, கருதல், ஆகமம் எனும் மூன்று அளவைகளேப் பொருள் உண்மையினை அறிவதற்கு போதியவை என ஜைமினி என்பார் உரைத்தார். அவர் நூலிற்குப் பேருரைக் கண்ட உபவருஷர் எனப்படும் விருத்திக்காரரும், குமாரிலப்பட்டரும் இம்மூன்றோடு

உவமை, அருத்தாபத்தி, அபாவம் எனும் மூன்றையும் இணைத்து ஆறாக எடுத்துரைத்துள்ளனர்.

வேதம் என்பது கடவுளால் அல்லது மனிதர்களால் உண்டாக்கப்படாதது என்பதால் சுயம்பு அல்லது அபௌருஷேயம் என்று கூறினர். சப்தம்நித்தியம் என்று மீமாம்சகர் கூறுவதற்கு வேதம் நித்தியம் என்பதே உண்மைப் பொருளாக விளங்கிற்று.

வகைகள்

மீமாம்சகர்கள் தன்னுள் இறை வழிப்பாட்டினை மையமாகக் கொண்டு,

1. பூர்வ மீமாம்சம் அல்லது கர்ம மீமாம்சம்,

2. உத்திர மீமாம்சம் அல்லது ஞான மீமாம்சை.

பூர்வ மீமாம்சகர்கள் கடவுள் உண்மையை ஏற்றுக் கொள்ளவில்லை.

கடவுளே உலகினைப் படைத்தார் எனும் கேட்பாட்டினை மீமாம்சகர் மறுத்தனர். இவர்கள் வேதத்தையே அன்றி கடவுளை வணங்குவாரில்லை. இந்நிலையில் வேதத்தினைக் கடவுளுக்கு நிகராக வணங்குவதால் ஆத்தீகவாதிகளாகக் கருதப்படினும், கடவுளை மறுப்பதல் நாத்தீகவாதிகளாகவே பொருள் கொள்ளப்படுகின்றனர்.

வேதங்களை ஏற்றுக் கொண்டு அதன் வழி செயல்படும் இந்த மீமாம்சங்கள் வேதங்களில் உள்ள மந்திர தந்திரங்களை மட்டுமே கூறுகிறது ஒழிய, அதன் ஈறான உபநிடதங்களைக் கூறுவதோ எடுத்துக் கொள்வதோ இல்லை. இவ்வாறாக, வேதாந்த மீமாம்சம் என்றழைக்கப்படும் இத்தத்துவங்கள் வேறுபாட்டுடன் விலகிக் காணப்படுகின்றன.

அவைதீக தத்துவங்கள்:

அ. உலகாயதம்

பெயர் காரணம்

உலகம் எனும் ஒரு பொருளினை மட்டும் ஏற்பவர்களாக இருக்கும் காரணத்தினால் உலகாயதர் என்றும், இக்கொள்கையைக் கண்டறிந்தவர் சர்வாகர் எனும் தத்துவ ஞானி என்பதால் சார்வாகம் என்றும் அழைக்கப்படலாயிற்று.

உலகாயதத்தின் நோக்கம்

கண்ணால் காண்பதை மட்டுமே ஏற்றுக் கொள்ளும் இத்தத்துவத்தின் சாராம்சம் இன்றளவும் அனைத்து தத்துவங்களிடமிருந்தும் விலகியே உள்ளது. கண்ணால் காண்பது எனக் கூறும் போது, உலகமும், உடலும் தவிர்த்து இறைவனும், ஆன்மாவும் கண்களால் காண முடியாததாக இருப்பதால் அதனையும் ஏற்றாரில்லை.

கண்ணால் கண்டு தீர்வு கண்டுபிடிக்க உதவும் அளவையான பிரத்தியட்சத்தின் வழி, இத்கொள்கையின் தீர்வாகக் காண்கின்றனர். இருப்பினும் தத்துவத் துறையில் உள்ள அனுமானம், உரை எனும் அளவைகளைக் காட்டிலும் இப்பிரதியட்சம் உண்மையை விளக்கப்போவதில்லை. கண்களால் காணும் பொருள்கள் நொடி நேரத்தில் மாற்றத்தை அடையவும் வாய்ப்புள்ளது.

உலகாயதத்தின் வழி உலக உற்பத்தி

உலகமானது, நிலம், நீர், காற்று, தீ எனும் நான்கு காட்சிப் பொருள்களுடன், அநுமானத்தால் உணரப்படும் ஆகாயத்தினால் இயங்குகிறது. அநுமானத்தை ஏற்காத உலகாயதர், ஆகாயத்தை ஏற்றுக் கொள்வதில்லை. மற்ற நான்கு பொருட்களுமே வேறு வேறு விதங்களில் சேர்ந்து தன் நிலை மாற்றத்தினால், உலகம் தோன்றிற்று என்பர்.

உயிர் உண்டாகும் விதம்

உடலினைத் தவிர்த்து உயிர் என்றொரு பொருளை நாம் யாரும் இதுவரைக் கண்டதில்லை. ஆனால், உயிரினை அநுமானம் எனும் அளவையின் கண்டிடல் சாத்தியமே என்றிருப்பினும், அநுமானத்தை ஏற்காதக் காரணத்தினால் உடலின் வழியே உயிர் என வேறுபடுத்தாமல் காண்கின்றனர். இதன்படி, காட்சிக்குப் புலனாகாத ஆன்மா முற்பிறவியில் செய்த கர்ம வினையினால் அடுத்தப் பிறவியில் தோன்றும் இன்ப துன்பங்களைக் கூறுவது வேடிக்கையானது என்றுக் கூறுகின்றனர் உலகாயதர்.

ஆ. ஆசீவகம்

பெயர் காரணம்

பண்டைய மக்கள் சாதி, சமயப் பாகுப்பாடுகள் இன்னதென்று தெரிய வந்த காலத்தில் அதனைக் குறித்து தெளிவுபடுத்திக் கொள்ளும் நோக்கில், அச்சமயம் வாழ்ந்து வந்த அறிஞர்கள் படுக்கும் கற்படுக்கை ஈவகம் (ஈவு அகம்) எனப்பெயர் பெற்றது. அவர்கள் தூய உள்ளம் படைத்தவர்கள் என்பதால் ஆசு (குற்றம்) நீங்கியவர்கள் எனும் பொருண்மையில், ஆசீவகர்கள் என்றழைக்கப்பட்டனர்.

<u>ஆசீவக தத்துவம்</u>

ஆசீவகம் என்பது ஒரு இந்திய மெய்யியல் கொள்கையும், துறவு இயக்கமுமாகும். முல் பொத்த மற்றும் சமணர்களை ஒத்த கி.மு. 500 – 250 எனும் காலப்பகுதியில் வாழ்ந்து வந்ததாக தெரிய வருகிறது. இக்கொள்கையும் சமணம், பௌத்தம் போன்று முழுவதுமாக கடவுளை புறக்கணித்த மெய்யியல் கொள்கையாகும். தனியாக வளர்ந்ததொரு நூலாக விளங்காவிடினும், சமணம் மற்றும் பௌத்தத்தின் நூல்களில் இடம் பெற்றிருக்கும் சில செய்திகளைக் கொண்டு அறியலாம்.

<u>வேறு பெயர்கள்</u>

ஆசீவகர்கள் அவர்கள் தம் பல்வேறுபட்ட பணிகளை முன் நிறுத்தி வேறு பல புனைப்பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளனர்.

அவையாவன,

1. ஆசீவகர்,
2. மற்கலியர்,
3. ஏகாந்தவாதி,
4. சித்தர் அல்லது ஆசீவக சித்தர்,
5. அண்ணர் அல்லது அண்ணல்,
6. போதி சத்துவர்,
7. தீர்த்தங்கரர்,
8. தீர்த்தவிடங்கர்,
9. போதி சத்துவர்,
10. மாசங்கி,
11. தீர்த்தவிடங்கர் என்பனவாகும்.

இதன் ஒவ்வொரு நிலையிலும்,

ஆசீவகர்கள் அவர் தம் செயல்களை சிறப்புற செய்துக் காட்டியுள்ளமை சிறப்பிற்குரியது.

<u>இ. சமணம்</u>

<u>பெயர் காரணம்</u>

சமணம் என்ற சொல்லை ச்ரமண என்ற வடமொழி சொல்லின் சிதைவு கொள்ளலாம். ச்ரவண என்றால், தன்னை வருத்துகை என்பதே பொருள். கி.பி. 12 –ம் நூற்றாண்டில் நடந்த சில குழப் பங்களால், சமணம் என்ற சொல்லே ஜைணத்தை மட்டும் குறிக்க தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டது. ஆனால், தமிழ் மொழி நிகண்டுகளில் ஆசீவகர், சாவகர், அருகர் எனும் மூவரும் சமணர்கள் எனும் பிரிவினருள் அடக்கிக்காட்டியுள்ளனர்.

<u>சமணத் தத்துவம்</u>

சமணம் எனும் தத்துவமானது அதற்கான தகுந்த நெறியினுள் அடங்கி, முப்பொருளான இறைவன், ஆன்மா, உலகம் எனும் உண்மைகளை விளக்கும் ஒன்றாகும். அவ்வாறாக விவரிக்கும் போது கடவுளினை ஏற்றுக் கொள்ளாத அவைதீக தத்துவமாக விளங்குகின்றது.

உலகம் உண்மையென்பதை ஏற்றுக் கொண்ட சமணர்கள், உலகில் வாழும் மக்களின் ஆன்மா எனும் கருத்தையும் ஏற்றுக் கொள்கின்றனர். இவர்கள் தம் பார்வையில் உலகத்தில் உள்ள பொருட்கள் அனைத்தும் நான் எனும் தன்மையைக் கொண்டவையாக மட்டுமே இருக்கிறது. இதனால் காணும் பொருட்கள் அனைத்தும் நான் எனும் தன்மையிலேயே விவரிக்கின்றனர்.

உலகத்தினை இரு வகைகளுக்குள் அடக்கி சீவகர்கள் உயிருள்ளவர்கள் (ஆன்மா) என்றும், அசீகம் என்றால் உயிரற்றப்பொருட்கள் (உலகம்) என்றும் பொருள் கொள்கின்றனர்.

ஆக இதுவரை விளக்கப்பட்ட எல்லா தத்துவங்களுமே ஏதோ ஒரு வகையில் அறிவியலுடன் தொடர்பு கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக சமணம் எனும் போது அணுகொள்கையையும் நியாயம் எனும் போது தர்க்க வாத முறையையும், வேதாந்தம் எனும் போது ஒரு பொருள் இன்னொன்றாகக் காட்சியளிப்பதையும் விளக்குவதாக உள்ளன. இவ்வாறு பேரா. சுப்புரெட்டியார் அறிவியல் நோக்கில் தத்துவத்தை விளக்கிச் செல்கிறார்.

முடிவுரை

இதுவரை மூன்று இயல்களில் தனித்தனியே இயலின் தலைப்பிற்கு ஏற்ப விரிவாக ஆய்ந்து அறிந்த முடிவுகள் சுருக்கமாக தரப்படுகின்றன.

<u>இயல் – 1</u>

அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம் எனும் இயலில், பேரா. நா.சுப்புரெட்டியார் அவர்களது இலக்கியம் குறித்த அறிவியல் நோக்கிலான கருத்துகள் திறனாய்வு செய்யப்பட்டுள்ளது. அவர் , இலக்கியங்கள் பேசும் பல கருத்துக்கள் அறிவியலுக்கு உகந்தவை என்று செப்பமுற எடுத்துரைப்பதுடன், பண்டையக் காலத்தில் மக்களின் நிலைக்கண்ணாடியாக திகழ்ந்த இலக்கியங்கள் இன்றும் அதே கம்பீரத்துடன் அக்கால மக்களின் வாழ்க்கை முறையை உணர்த்தி, தற்காலத்திற்கும் பொருந்தும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன என எடுத்துக்காட்டியுள்ளார். அது குறித்து இவ்வியலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

<u>இயல் –2</u>

அறிவியல் நோக்கில் சமயம் எனும் இயலில், சமயத்தில் உள்ள பல பிரிவுகளும், அதனைச் சார்ந்த பல அறக்கருத்துகளும் பேரா. சுப்புரெட்டியார் ஆய்ந்து கூறிய அறிவியல் கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன. சமயமும் அறிவியல் கருத்துக்களைக் கொண்டுள்ளது என்பதை அவர் நிறுவும் பாங்கு விளக்கப்பட்டுள்ளது.

<u>இயல் – 3</u>

அறிவியல் நோக்கில் தத்துவம் எனும் இயல், தமிழர் வாழ்வில் அறிவியலின் வழி சமயத்தின் உதவியுடன் உட்நுழைந்த தத்துவம் பற்றியும் அதன் வகைகள் பற்றியும், அது மக்களின் வாழ்வில் இடம் பெற்றிருக்கும் முக்கியத்துவம் பற்றியும் பேராசிரியர் விளக்கியுள்ளமை ஆராயப்பட்டுள்ளது. மேலும் இன்றளவிலும் மக்களிடம் உள்ள ஒழுகலாறுகளையும் விளக்கி, அறிவியலுடன் கொண்டுள்ள தொடர்பையும் விளக்கிக் காட்டுகிறது இந்த இயல்.

மேலும், தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம் எனும் மூன்று துறைகளும் அறிவியல் எனும் துறையுடன் கொண்டிருக்கும் தொடர்பினை மட்டும் எடுத்துரைக்காது, மூன்றுத்

துறைகளும் அறிவியலுக்கு முன்னோடியாக அமைந்திருப்பதை இவ்வாய்வு திட்டவட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

துணை நூற்பட்டியல்

1. இராகவன் (தமிழில்), இந்திய தத்துவ இயல் ஓர் எளிய அறிமுகம், அலைகள் வெளியீட்டகம், சென்னை – 600024. முதற்பதிப்பு – 2007.

2. ஈ.வே.ரா.பெரியார், தத்துவ விளக்கம், சுயமரியாதை பிரச்சார நிறுவனம்,சென்னை.

3. கந்தையா. ந. சி. தமிழர் சமயம் எது? திரட்டு 8 அமிழ்தம் பதிப்பகம், தியாகராயர் நகர், சென்னை – 17. இரண்டாம் பதிப்பு – 2009.

4. கிருஷ்ணன் ஓ.ரா.ந. பௌத்த அறவியல்,(ஆங்கில மொழிப்பெயர்ப்பு நூல்), மெத்தா பதிப்பகம், அண்ணாநகர் –சென்னை – 600040. முதலாம் பதிப்பு – 2012.

5. சுப்புரெட்டியார்.ந அறிவியல் நோக்கில்தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம், நூற்றாண்டு குழு வெளியீடு, அண்ணாநகர், சென்னை – 600040.

6. சுப்புரெட்டியார். ந வட நாட்டு திருப்பதிகள்,பாரி நிலையம்,பிராட்வே, சென்னை – 600108. இரண்டாம் பதிப்பு – 1991.

7. சுப்பு ரெட்டியார். ந வைணவ உரை நலம், பாரி நிலையம், பிராட்வே, சென்னை –600108. முதற்பதிப்பு –1985

8. நடராசன். தி. சு. திறனாய்வுக் கலை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், அம்பத்தூர், சென்னை – 600098. பத்தாம் பதிப்பு – 2016.

9. பாக்யமேரி, வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு,பூவேந்தன் பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை – 600004.

10. பால சுப்பிரமணியன். சி தமிழ் இலக்கிய வரலாறு,பாவை பப்ளிகேஷன்ஸ், இராயப்பேட்டை, சென்னை – 600014.மூன்றாம் பதிப்பு – 2014.

11.ராமகிருஷ்ணன், சமய வாழ்வில் வடக்கும், தெற்கும்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 600098.

12. லக்ஷ்மணன்.கி இந்திய தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்ஸ்,சென்னை – 600014. பதினோராம் பதிப்பு – 2013.

அண்ணல் அநுமன்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூலில் காணப்பெறும் ஒவ்வோர் இயலும், ஒவ்வொரு கோணத்தில்
அநுமனை முழுவதுமாய்க் காட்டிடும் புதிய பார்வை வீச்சுகள்;
முழுப்பார்வை முயற்சிகள்; பேருருவ தரிசனங்கள். அநுமனின்
மனோ பலத்தையும், அநுமனின் வாக்கு பலத்தையும்,
அநுமனின் காய பலத்தையும், மொத்தத்தில் அநுமனின்
பேருருவைக் கண்ட மகிழ்ச்சியை நம்முள் உண்டாக்குவன.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939430-5-2

eBOOK ~ *மின் நூல்*

அணிந்துரை

அண்ணல் அநுமன்

2003

வழங்கியோர்:

கம்பன் அடிசூடி

பழ பழநியப்பன்



அணிந்துரை

கம்பன் அடிசூடி பழ. பழநியப்பன்

“ கம்பருக்கு அடிமையென்று
கைச்சாத்து செய்துவிட்டேன்;
இம்பர்வேறு ஒன்றற்கு
இடமுண்டோ?”

என்னும் சொ. முருகப்பாவின் பாடல் அடிகளே என் உச்சிமேற் கொண் டொழுகத் தக்கன என்றாலும், கலி காலம் நிரம்பவும் பொல்லாதது ! இல்லாவிட்டால் ஆசிரியப்பிரான் ஒருவர் தம் மாணாக்கனையே தம் நூலொன்றுக்கு அணிந்துரை எழுதச் சொல்வாரா, என்ன?

அதுவும் யாரைப்பற்றி? “வேத நன்னூல் உய்த்துள காலமெல்லாம் புகழொடும் ஒக்க நிற்கும்” அநுமனைப்பற்றி! மனமாசுகளை எல்லாம் ஆசு இரியும் பிரானல்லவா? காரணத்தோடுதான் செய்துள்ளார்கள். “போர் உதவிய திண்தோளால் பொருந்துறப் புல்லுக!” என்று இராமபிரானே தன் தொண்டனாம் அநுமனைத் தன்னை வந்து மார்புறத் தழுவிக்கொள்ளப் பணித்தானே, அதே போன்று, அந்த அநுமனைப்பற்றி ஐம்பது ஆண்டுகட்கும் மேலாகத் தம் கருவில் உருக்கொண்டிருந்து வெளிவரும் நூற்குழந்தையை முதலில் அவர்தம் மாணாக்கத் தொண்டனாம் இச்சிறியவனிடம் தந்து சீராட்டச் சொல்வது சாலப் பொருத்தந்தானே? அதுதானே, அந்த இராம நாமத்தை அல்லும் பகலும் அனவரதமும் நினைந்து நினைந்து நெகிழ்ந்துருகித் துதி செய்து மகிழும் ‘ஸ்ரீ சடகோபன் பொன்னடி’யாம் பேராசிரியர் சுப்பு ரெட்டியாரவர்களுக்கு உகந்த கைங்கர்யம்!

இன்னுமொன்று : தன்னை வணங்குவோரையும் தான் வணங்கி மகிழும் ஒரே கடவுள் அநுமனே! எந்தச் சந்நிதியிலும் இல்லாது, அநுமன் சந்நிதியில் மட்டுமே ‘அஞ்சலி ஹஸ்தனாய்’க் கூப்பிய கைகளுடன் கூடின இறையைக் ‘கண்கள் கொள’

முடியும். 'அருங்கலைக் கோனும்' அங்ஙனமே தம் மருங்கணைந்த சீடனிடம் சீராட்டப் பணித்தார் கொல்லோ?

'தமிழ்ச்செம்மல்' ரெட்டியாரவர்களின் 121ஆவது நூலாக, மூன்றாயிரம் ஆண்டுத் தொடக்கத்தில் அவர்தம் முதல் நூலாக இந்நூல் வெளிவருவதும் 'இம்மையே, எழுமை நோய்க்கும் மருந்தாம்', 'இராமன் என்னும் செம்மைசேர் நாமம்' தன்னைத் தாரக மந்திரமாகக்கொண்ட அநுமனைப்பற்றியதாக வருவதும் காலங்கருதிய செயல்; காலத்தினாற் போற்றப்பெற வேண்டிய தொன்றுமாகும். அதிகாரம், ஆணவம், தலைமை வேட்கை, சுய நலம், பண வெறி என்றிப்படிப் பலவும் மனிதர்களைப் பிடித்தாட்டி ஆட்கொண்டுள்ள இக்காலத்திற்குத் தேவை யானதாம். எப்படி?

பரம்பொருளாம் இராமனே 'போர் உதவிய திண்தோளால் பொருந்துறப் புல்லுக' என்று தொண்டனை அன்போ டழைத்துத் தலைவனைத் தழுவிக்கொள்ளச் சொல்லியும், அடிக்கீழ் இருந்து 'அரியணை தாங்கும்' தொண்டே போதும் என்று நிறைந்த அநுமனின் தொண்டுள்ளமே இன்றைய சூழலில் பின்பற்ற வேண்டியதொன்றாகும்; முன்மாதிரியுமாகும். தலைவன் விரும்பித் தந்தாலும் பணிவுடனே அடித்தொண்டனாகி வாழ்ந்து காட்டிய அநுமனே, இன்றைக்கு - தலைவன் அயரும் நேரம் பார்த்துத் தானே தலைவனாகிவிடத் துணிவோர் நிறைந்த இன்றைக்கு - தலைவர்களும் தொண்டர்களை அனுசரித்து அடங்கிப்போக வேண்டிய தொண்டர் நிறைந்த இன்றைக்கு - இளைய தலைமுறைக்கு, விதை நெல்லுக்கு முன்மாதிரியாய், வழிகாட்டியாய் விளங்க முடியும்.

கம்பன் 'பாத்திரம் சுவைசெய் பாவலன்' ஆவான். பெரும் பாத்திரமோ, சிறிய ஒன்றோ, ஒரு காட்சியில் தோன்றி மறையும் பாத்திரமோ, எதனையும் சுவை குன்றாது ஒரே விதமான கலையழகுடன் படைக்கவல்ல கவிதைத் தச்சன். சீதா பிராட்டியை எவ்விதம் 'காந்தையருக்கு அணி' எனக் காட்டினானோ அவ்விதம், அதற்கு ஒரு மாற்றும் குறையாது அவள் தோழியாய் ஒரே ஓரிடத்தில் வந்து போகும் நீலமாலையை யும் 'சுந்தரி'யாய்க் காட்டவல்ல ஓவியக் கவிஞன். அப்படிப்பட்ட கவிச்சக்கரவர்த்தி அநுமனைப் படைத்துக் காட்டும் விதம் ஒப்பற்றது. உடலாற்றல் நிறைந்த ஒருவன் அறிவாற்றலும் நிரம்பி யிருத்தல் உலக வழக்கில் அதிசயமே. கம்பன் அநுமனைப் பேரறிஞனாகவும், அதே சமயம் பெருவீரனாகவும் காட்டுகிறான். 'வீங்கிய வீரன்', 'வீரருள் வீரன்', 'வெந்திறல் வீரன்' என்றெல்லாம்

அவன் ஆற்றலைப் பாடும் கம்பன், இராமன் கூற்றாகப் 'பேரறிவாளன்' என்று புகழ் பாடிடுவான். வீடணனை ஏற்றுக் கொள்ளலாமா என்று தன் துணைவரையெல்லாம் கேட்ட இராமன் அநுமனிடம் கேட்பதை இதோ, கம்பன் வாயிலாய்க் காண்போம் :

"உறுபொருள் யாவரும் ஒன்றக் கூறினார்
செறிபெருங் கேள்வியாய்! கருத்து என்? செப்புஎன,
நெறிதரு மாருதி என்னும் நேர்இலா
அறிவனை நோக்கினான், அறிவின் மேல்உளான்."

(யு.கா.6448)

நெறிதரு மாருதியாம், நல்வழி காட்டும் அநுமனைச் 'செறிபெருங் கேள்வியாய் !' என இராமன் விளிக்கிறான். இறுதி அடியில் உள்ளது முத்தாய்ப்பு! "அறிவனை நோக்கினான் அறிவின் மேல்உளான்"; அதுவும் நேர்இலா அறிவன்; அநுமனுக்கு நிகர் அவனேயாம். அப்படிப்பட்ட அறிவனை நோக்கியவன் யார்? 'அறிவின் மேல்உளான்' ஆகிய இராமன். அறிவின்மேல் உளனாகியவனே கருத்துக் கேட்கும் அளவுக்கு, 'செறிபெருங் கேள்வியன்' என்னுமளவுக்கு, 'நேர் இலா அறிவன்' அநுமன் ஆவான் என்றால், 'பேரறிவாளன் அநுமன்' என்பதில் ஐயமுண்டோ? பேராசிரியர் ரெட்டியாரவர்கள் அப்படி மாருதி நுணங்கிய கேள்வியனாய் வடித்துச் சொல்லும் 18 காரணங்களை மிக அழகாகத் தொகுத்துச் சொல்கிறார்கள், 'குணக்குன்றன்' என்ற கடைசிப்பகுதியில் 'சமயோசித புத்தி' என்ற தலைப்பில்.

'கவிக்கு நாயகன்' என்ற தலைப்புடைய முதல் இயலில் 'இராகவன் புகழினைத் திருத்தும்' என்ற தொடருக்குப் பேராசிரியரவர்கள் விளக்கம், செவிக்குத் தேனாய்த் தித்திக்கின்றது. இராமகாதை மங்களகரமாய் முடியக் காரணனாய் அமைந்தவன் என்பது எப்படி என்ற பேராசிரியரின் ஆய்வு, சிந்தைக்கும் தேனாய் இனிக்கின்றது.

'விழையும் உருவினன்' என்ற நான்காவது பகுதி, இதுவரை அநுமனைப்பற்றி யாரும் சிந்தித்திராத முயற்சி. எங்கெல்லாம் அநுமன் பேருருவம் எடுக்கிறான், அதன் நயம் என்ன என்று பட்டியலிட்டுக் காட்டியுள்ளது 'அருங்கலைக்கோன்' அவர் கட்கே உரித்தான அரிய ஆய்வு.

இப்படியெல்லாம் அநுமனை ஒவ்வொரு புதுக் கோணத்திலும், யாரும் கண்டு காட்டியிராத முயற்சியிலும் ஈடுபடுவதுதான் பேராசிரியர் ரெட்டியாரவர்கட்கே கைவந்த

கலை. இந்நூலில் காணப்பெறும் ஒவ்வோர் இயலும், ஒவ்வொரு கோணத்தில் அநுமனை முழுவதுமாய்க் காட்டிடும் புதிய பார்வை வீச்சுகள்; முழுப்பார்வை முயற்சிகள்; பேருருவ தரிசனங்கள். 'கவிக்கு நாயகன்', 'சிந்தனைச் செம்மல்', 'இராம பக்தன்' என்னும் பகுதிகள் அநுமனின் மனோ பலத்தையும், 'சொல்லின் செல்வன்', 'இராம தூதன்', 'குணக்குன்றன்' என்னும் பகுதிகள் அநுமனின் வாக்கு பலத்தையும், 'அஞ்சா நெஞ்சன்', 'விழையும் உருவினன்' என்பன அநுமனின் காய பலத்தையும், மொத்தத்தில் அநுமனின் பேருருவைக் கண்ட மகிழ்ச்சியை நம்முள் உண்டாக்குவன.

நூன்முகத்தில் ஆசிரியரே சொல்லுவது போல, இராம பக்தனாகிய அநுமனைப்பற்றி எழுதிய இந்நூலும் எட்டெழுத்து மந்திரம் போல, எட்டுப் பகுதியாய் அநுமனின் எண்குணங்களை விரித்துச் சொல்கிறாற்போல அமைந்ததுவும் அவன் திருவுளமேயாம்.

'சுப்பு ரெட்டியாரா, சுறுசுறுப்பு ரெட்டியாரா?' என்று எண்பத்து ஏழாண்டான வயதில் இவர்கள் உழைப்பும் முயற்சியும் நம்மை வியக்க வைக்கின்றன. அவர் வணங்கும் அந்த வேங்கடவனை, வேண்டுவார்க்கு வேண்டுவன ஈந்து நலந்தரும் நாராயண நாமத்தானை, அவர் நூற்றாண்டு கண்டு, இன்னுமொரு நூறு நூல்கள் தமிழ் இலக்கிய உலகிற்கு விருந்தாகச் செய்தளிக்கப் பிரார்த்திப்பது அல்லால், வேறென் செய்ய வல்லோம்?

"அடியார்கள் வாழ! அரங்கநகர் வாழ!
சடகோபன் தண்தமிழ்நூல் வாழ! - கடல்சூழ்ந்த
மண்உல கம்வாழ! 'வேங்கடம்' உறைரெட்டியே!
இன்னும்ஒரு நூற்றாண்டு இரும்!

இனிய தமிழ்ப்பிழிவாய் உன்னிலிருந்து
இன்னும் ஒருநூறு நூல்கள்வரும்!

- கம்பன் அடிசூடி

'சரணம்'
வி 110/1, அண்ணா நகர்,
சென்னை - 600 040.

NSR100
KAMATCHI AMMAL
FELLOWSHIP

MA Students in Tamil

Awarded to :

து சரவணன்

(பதிவு எண்: 11700117007)

(பேராசிரியரின் ஒரு நூலை மையக்கருத்தாகக் கொண்டு ஆய்வு செய்த முதுகலைப்பட்ட மாணாக்கர்)

உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப்பெற்ற நூலும் வழங்கப்பெற்றன.

ஆய்வேட்டின் தலைப்பு: சுப்புரெட்டியார் காட்டும் அநுமன்

பேராசிரியரின் நூல்: *அண்ணல் அநுமன்*

துறை: தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக்கழகம், ஆந்திர மாநிலம்

நெறியாளர்: முனைவர் க மாரியப்பன்

வருடம்: மே 2019

www.nasubbureddiar100.in

அண்ணல் அநுமன்

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

"சுப்புரெட்டியார் காட்டும் அநுமன்"

SUBBUREDDIAR KATTUM ANUMAN

திராவிடப் பல்கலைக் கழக முதுகலைப் பட்டத்தின்
ஒரு பகுதியாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

A project report submitted to Dravidian University
in partial fulfillment for the award of M.A. Degree

ஆய்வாளர்

து. சரவணன்

பதிவு எண்: **11700117007**

Submitted by

D. SARAVANAN

Reg. No.: **11700117007**

நெறியாளர்

முனைவர். க. மாரியப்பன்

உதவிப் பேராசிரியர்

Under the guidance of

Dr. G. Mariappan

Assistant Professor

தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக் கழகம்
குப்பம் - 517 426, ஆந்திரபிரதேசம்

Department of Tamil Language & Translation Studies
Dravidian University, Kuppam - 517 426 (AP)

May 2019

நன்றியுரை

தமிழ் முதுகலைப்பட்டம் பெறுவதற்காக "சுப்புரெட்டியார் காட்டும் அநுமன்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்வதற்கு வாய்ப்பளித்த திராவிடப் பல்கலைக்கழகத்திற்கும் தமிழ்த் துறையின் மேனாள், இன்னாள் துறைத் தலைவர்கள் முறையே முனைவர் இராக. விவேகானந்த கோபால் அவர்களுக்கும் முனைவர் த. விஷ்ணுகுமாரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

ஆய்வேட்டினை அளிக்க அறிவுறுத்தி, மேற்பார்வை செய்த தமிழ்த் துறை உதவிப்பேராசியரும் நெறியாளருமான முனைவர் க. மாரியப்பன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

இவ்வாய்வை நெறிப்படுத்திய தமிழ்த் துறை உதவிப்பேராசிரியர்கள் திரு கு. பத்மநாபன் அவர்களுக்கும் முனைவர் பூ. சு. கணேஷ்மூர்த்தி அவர்களுக்கும், துறையின் ஆராய்ச்சி இணை அலுவலரான முனைவர் ப. முனுசாமி அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

ஆய்வை சிறப்பான முறையில் முடிக்க உதவிய முனைவர்பட்ட ஆய்வாளர்களுக்கும் மு. கோவிந்தன், சி. ஜெகதீசன், மா. சின்னசாமி உள்ளிட்ட வகுப்புத் தோழர்களுக்கும் முதலாமாண்டு மாணவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

எனக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் பெற்றோர் துரைசாமி - சின்னபாப்பா ஆகியோருக்கும் என் அண்ணனுக்கும் ஏனைய நண்பர்களுக்கும் நூலகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நன்றியுடன்
து. சரவணன்

பொருளடக்கம்

இயல் எண்	தலைப்பு	பக்க எண்
	ஆய்வு அறிமுகம்	1
1	சுப்புரெட்டியார் வாழ்வும் பணியும்	3
2	தமிழ் இலக்கியங்களில் அநுமன்	16
3	சுப்புரெட்டியார் காட்டும் அநுமன்	28
4	மொழிநடையும் உத்தியும்	53
	ஆய்வு முடிவுகள்	64
	துணைநூற்பட்டியல்	67

ஆய்வு அறிமுகம்

ஆய்வுத் தலைப்பு:

“சுப்புரெட்டியார் காட்டும் அநுமன்” என்பதே இவ்வாய்வின் தலைப்பு ஆகும்.

ஆய்வு நோக்கம்:

சான்றோரான சுப்புரெட்டியார் தனது கட்டுரைகளில் அநுமனை எவ்வாறு காட்டுகிறார் என்பதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

ஆய்வு எல்லை:

இருநூற்றிற்கும் மேற்பட்ட சுப்புரெட்டியாரின் அனைத்து நூல்களையும் எடுத்துக்கொள்ளாமல் அவருடைய “அண்ணல் அநுமன்” என்ற நூலை மட்டும் இங்கு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வு அணுகுமுறை:

விளக்கவியல் அணுகுமுறை இந்த ஆய்வேட்டில் பின்பற்றப்பட்டுள்ளது.

ஆய்வு அமைப்பு:

“சுப்புரெட்டியார் காட்டும் அநுமன்” என்பதே இவ்வாய்வின் தலைப்பில் அமைந்த இவ்வாய்வேடானது ஆய்வு அறிமுகம், ஆய்வு முடிவுகள் நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுப்பட்டுள்ளது.

1. “**சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும்**” என்பதே இவ்வாய்வின் முதல் இயல் ஆகும். இவ்வியலில் சுப்புரெட்டியாரின் பிறப்பு, கல்வி அனுபவங்கள் பொன்றவை விவரிக்கப்பட்டுள்ளன.

2. ஆய்வேட்டின் இரண்டாவது இயல் ”**தமிழ் இலக்கியங்களில் அநுமன்**” என்பதாகும். இவ்வியலில் அநுமன் தமிழ் இலக்கியங்களான இராமாயணம், மகாபாரதம் போன்ற பெருநூல்களில் இடம்பெறுவது குறித்தும், அபிதான சிந்தாமணியில் இடம்பெறுவது குறித்தும் விளக்கப்பட்டுள்ளன.

3. ஆய்வேட்டின் மூன்றாவது இயல் “**சுப்புரெட்டியார் காட்டும் அநுமன்**” என்பதாகும். இந்த இயலில் சுப்புரெட்டியாரின் ‘அண்ணல் அநுமன்’ என்ற நூலில் இடம்பெற்றுள்ள எட்டு கட்டுரைகளில் இடம்பெறும் அநுமன் பற்றிய சிந்தனைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

4. “**மொழிநடையும் உத்தியும்**” என்பது இவ்வாய்வேட்டின் நான்காவது இயலாகும் இதில் சுப்புரெட்டியார் கட்டுரைகளில் வழி வெளிப்படும் அவருடைய மொழிநடை மற்றும் அவர் எவ்வாறு உத்திகளைக் கையாண்டுள்ளார் என்பதை விளக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதியாக அமைந்த ஆய்வு முடிவுகள் என்ற தலைப்பின் கீழ் ஆய்வின் முடிவாக கிடைத்தவை தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

ஆய்வுக்கு துணைநின்ற மூல நூல், துணை நூல்கள் அகர வரிசையில் துணை நூற்பட்டியலாக தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இயல் - 1

சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும்

பேராசிரியர் டாக்டர் சுப்புரெட்டியார் வாழ்க்கை வரலாறும் அவரின் சிறப்புகளும் இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் சீரிய தமிழ்ப்பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டதாகும். அறிவியல் பேராசிரியராக வளர்ந்து பின்னர் தமிழ்ப் பேராசிரியராக வந்தவர். இவர்தம் தமிழ்ப்பணி ஈடு எடுப்புமற்றது. இந்நூற்றாண்டில் இணையற்ற எழுத்தாளராகத் திகழ்ந்தவர் ஆவார்.

பிறப்பு:

திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டம் பெரகம்பி என்னும் சிற்றூரில் தம் தாய்மாமன் பண்ணையார் இல்லத்தில் 27.08.1916 இல் செல்லப்பிள்ளையாகப் பிறந்தார். செல்வமாகவும் வளர்க்கப் பெற்றார். பெற்றோர் இட்ட பெயர் சுப்புரெட்டி (பாட்டன் பெயர்). இரண்டு வயதில் தந்தையை இழந்தார்.

பெற்றோர்:

தந்தையார் ஞானி நல்லப்ப ரெட்டியார், திருச்சி மாவட்டம், முசிறி வட்டம் கோட்டாத்தூர் என்ற சிற்றூரைச் சேர்ந்தவர். அன்னையார் காமாட்சி அம்மாள் பெரகம்பி என்ற சிற்றூர். 1926 வரை பெரகம்பியில் வளர்ந்து, கோட்டாத்தூருக்கு வந்தவர்.

குடும்பம்:

1936 இல் தம் தந்தை வழி ஒன்றுவிட்ட அத்தைமகள் செல்லபாப்பா அம்மையாரை மணந்தார். பல்லாண்டுகள் மக்கட்பேறு இன்றி 1949 இல் இராமலிங்கமும், 1953 இல் இராமகிருஷ்ணனும், மக்களாகப் பிறந்தனர். இராமலிங்கத்திற்கு மிருணாளினி, அனுபமா என்ற பெண் மக்கள் இருவர். அண்மையில் மிருணாலினிக்குத் திருமணமாகி கணவன் அரவிந்த விஷ்ணுராமனுடன் அமெரிக்காவில் உயர் பதவிகளில் ஒரே நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர். சொந்த இல்லத்தில் வாழ்கின்றனர். அனுபமாவுக்கு பதவி கிடைத்து நியூஜெர்சியில் வாழ்கின்றனர்.

கல்வி:

பெரகம்பியில் (1921-26) திண்ணை பள்ளியில் பயின்றார். இலிங்கச் செட்டியர் (கோமுட்டி) இவர்தம் சிறந்த ஆசிரியர். (1927-30)வரை கோட்டத்தூரில் தொடக்கக் கல்வி கற்றார். இவருக்கு ஆசிரியராக அமைந்த சந்திர சேகரய்யர் (இலிங்காயத்து) என்பாரிடம் மூதுரை, நல்வழி,நன்னெறி, அரிச்சந்திர புராணம் முதலிய நூல்களைக் கற்றார். மற்றோர் ஆசிரியராக அமைந்த வி.கே அரங்கநாத அய்யர் (பார்ப்பனர்) என்பாரிடம் ஆங்கிலம் வரலாறு, அறிவியல், தரைஇயல் முதலியவற்றைக் கற்றார். இவரே துறையூர் பெருநிலக்கிழவர் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் (1930) சேர்ந்தார். அங்கு இக்கால முறைப்படி கல்விபெற வாய்ப்பு ஏற்பட்டது. இப்பெருமகனாரே அடுத்த ஆண்டு (1931) முசிறி உயர்நிலைப் பள்ளியில் 4 ஆவது பாரத்தில் சேர்ந்தார். (1931-34) இல் உயர்நிலைப் பள்ளிக் கல்வி சிறப்பாக

நிறைவேறியது. தொடர்ந்து 1934-1939 திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் வேதியியல் (சிறப்பு), இயற்பியல், கணிதம் (துணைப்பாடங்கள்) பயின்று 1936 இல் பி.எஸ்ஸி., தேர்வில் கல்லூரியில் முதல் மாணவனாகவும், மாநிலத்தில் மூன்றாவது மாணவனாகவும், தேர்ச்சி பெற்றார். (39-40) பதவி வாய்க்கவில்லை. 1940-41 சென்னை சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயின்று எல்.டி., பட்டம் பெற்றார்.

அலுவல்:

எல்.டி பட்டம் பெற்ற ஆண்டே துறையூர் பெருநிலக் கிழவர் நடுநிலைப் பள்ளி தொடங்கப் பெற்றதால் (1941) ஜீன் முதல் அதன் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார். கடினமாக உழைத்து தம் திறமைகளையெல்லாம் காட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக வளர்த்தார் (1945).

அலுவல் காலத்தில்:

தனியாகப் பயின்று தமிழ் வித்துவான் பட்டம் பெற்றார். (1945). எம்.ஏ. பயில சட்டம் இடம்தரவில்லை. தம் பேராசிரியர் ஜெரோம் டி சௌசா(பாதிரியார்) ஆசிரியர் உதவியால் சட்டம் தளர்த்தப்பெற்றது. பி.ஏ., தேர்வு எழுதி (1947) பட்டம் பெற்றார். எம்.ஏ (தமிழ்) பயின்று கொண்டிருந்தபோது

1. காரைக்குடி அழகப்பா ஆசிரியர்க் கல்லூரி தொடங்கப் பெற்று அதில் தமிழ்ப் பேராசிரியர் பணி கிடைத்தது. 1951இல் தமிழ் எம.ஏ. பட்டம் பெற்றார். காரைக்குடியில் பத்து ஆண்டுகள் பல்லோர் வியக்கத்தக்க

முறையில் பணியாற்றி நான்கு பயின்று முறை நூல்களை வெளியிட்டவர்.

2. 1960 முதல் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவியில் அமர்ந்தார். கடினமாக உழைத்து 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்,நம்மாழ்வார் தத்துவம்' பற்றி ஆராய்ந்து பிஎச்.டி. பட்டம் பெற்றார். இக்காலத்தில்,
   1) பல அறிவியல் நூல்களை எழுதி வெளியிட்டவர்.
   2) இரண்டு பேராசிரியர்களின் துணை கொண்டு தாவரவியல்,விலங்கியல், உடற் கூற்றியல் போன்ற உயிரியல் துறைகளை ஆழ்ந்து கற்று அவற்றில் அடிப்படையான அறிவு பெற்றார்.
   3) சுமார் 9 ஆண்டுகள் சென்னை அரசுடன் போராடி தமிழ் வளர்ச்சிக்கான மானியம் பெற்று தமிழ் எம்.ஏ ஆய்வுத் துறைகள் நிறுவினார். சுமார் எட்டு ஆண்டுகள் கடுமையாக உழைத்து தமிழகம் மெச்சும் வண்ணம் துறையைப் புகழோங்கச் செய்தார்.
   4) திருப்பதியில் பன்னாட்டுக் கழகம், பாக்காலா, சித்தூர், புத்தூர், நகரி ஆகிய இடங்களில் தமிழ்ச் சங்கங்கள் நிறுவி தமிழ் நடையாடும் பகுதிகளை ஒன்று சேர்த்து அங்கெல்லாம் தமிழ் இலக்கியக் கூட்டங்கள் நடைபெறச் செய்தார்.
   5) துறை ஆண்டுவிழாக்களில் தமிழக அமைச்சர் வருவதைப் பங்கு பெறச் செய்தார். தவிர திரு. ஜி.டி. நாயுடு,குன்றக்குடி அடிகள், சரித்திர அறிஞர் மு. அருணாசலம், கம்பன் அடிப்பெடி சா. கணேசன், முதுபெரும் புலவர், கி. வேங்கடசாமி ரெட்டியார், தமிழ்க்கடல் எஸ்.கே ராமராசன்,சிந்தாமணிச் செம்மல்

மு. இராமசாமி போன்ற அறிஞர்களையும் கருத்தரங்குகளில் பங்குபெறச் செய்து நிகழ்ச்சிகட்குப் பொலிவும் பெருமையும் சேர்த்தார். அமைச்சர் குழு முதலியோர்க்கு திருப்பதி பொதுமக்கள் சார்பாக வரவேற்புகள் நல்கவும் விருந்துச் செலவுக்கு திருப்பதியில் புகழ் பெற்ற உணவு விடுதி அதிபர் திரு. வேங்கடாசலம் அய்யரை (கேரளம்) அணுகி அப்பெருமானாரைச் செலவினை ஏற்கச் செய்தார்.

இவர் பங்கேற்ற துறைகள்:

1. **துறையூர்:**

- தலைவர்,டவுன் கோவப்பரேட்டில் சொசைட்டி.
- செயலாளர், மாவட்ட உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் சங்கம்.
- நிறுவனர், தலைவர் மாவட்ட தமிழாசிரியர் கழகம்.
- தலைவர், துறையூர் வட்ட தொடக்க நிலைப் பள்ளி ஆசிரியர் இணையம்.

2.திருப்பதி:

- தலைவர் திருப்பதி கலாச்சாரக் கழகம்.
- பாக்காலா, சித்தூர், புத்தூர் நகரி ஆகிய நான்கு இடங்களில் தமிழ்ச் சங்கங்கள் நிறுவி பல்வேறு இலக்கியக் கூட்டங்கள் நடைபெறச் செய்தார்.

ஓய்வுக்குப் பின்னர்:

1. தலைமைப் பதப்பாசிரியர், தமிழ்க் கலைக்களஞ்சியம் (தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை- 600 005.)-15 மாதங்கள்.
2. விருந்துப் பேராசிரியர் திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி – 517 502 (3 மாதங்கள்).
3. மதிப்பியல் பேராசிரியர் (தகைஞர்) காஞ்சி தத்துவ மையம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்(18 மாதங்கள்).
4. இயக்குநர், தெற்கு – தென்கிழக்கு ஆசிய மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம் (செ.ப.க. கட்டடம்) 6 ஆண்டுகள்.
5. வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்,தமிழ் இலக்கியத் துறை, மெரினா வளாகம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை -600 005. மூன்று பிஎச்.டி மாணவர்க்கு வழிகாட்டும் தகுதி பெற்றார். ஒருவர் பிஎச்.டி பட்டம் பெற்றார்.

பல்கலைக் கழகங்கள்:

1. கல்வி இயல் ஆலோசனைக் குழு- சென்னைப் பல்கலைக் கழகம் (1953-56) திருவேங்கடவன் பல்கலைக்கழகம் (பதவிப் பொறுப்பில்), மதுரை காமராஜர் பல்கலை கழகம் (வாழ்நாள்)
2. பேரவை- செ.ப.க.(53-56)- திருவேங்கடவன் பல்கலைக் கழகம் (பதவிப் பொறுப்பில்)
3. பாடத்திட்டக்குழு- திருவேங்கடவன், மைசூர்,பெங்களூர்,கேரளப் பல்கலைக் கழகங்கள்.
4. பேராசிரியர் நியமனக் குழு- சென்னை,மதுரை- காமராசர், திருவேங்கடவன் பல்கலைக் கழகங்கள்.

5. தேர்வாளர்- சென்னை, மதுரை- காமராசர்,திருவேங்கடவன் பல்கலைக் கழகங்கள்.
6. ஓர் உறுப்பினர் ஆணையம்- திருவேங்கடவன் பல்கலைக் கழகம் கல்லூரிகளில் உயர்நிலைத் தமிழ் தொடங்குவதற்கு பரிந்துரைத்தல்.

அரசு:

1. தமிழக அரசின் எழுத்துச் சீர்திருத்தக் குழு.
2. தமிழக அரசு நிதிஉதவி அளிப்பதற்குச் சிறந்த நூல்களை தேர்ந்தெடுக்கும் வல்லுநர் குழு.
3. அகவை முதிர்ந்த தமிழறிஞர்கட்கு ஊதியம் அளிப்பதற்காகப் பரிந்துரைக் குழு.
4. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மன்றம் உயர் மட்ட குழு.
5. அயல் மாநிலங்களிலும் அயல் நாடுகளிலும் தமிழ் பரப்புவதுபற்றித் திட்டம் வகுக்கும் குழு(அரசு அமைத்தது).
6. தமிழை அனைத்து நிலைகளிலும் கட்டாயம் ஆக்குவதற்கான வழிவகைகள் பற்றி ஆராய்ந்து பரிந்துரைக்கும் வல்லுநர் குழு.
7. திருமலை திருப்பதி தேவஸ்தானம்- நிதி உதவி அளிப்பதற்காகச் சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுக்கும் வல்லுநர் குழு.

அறக்கட்டளைப் பொழிவுகள்:

தம் வாழ்நாளில் இதுகாறும் 14 அறக்கட்டளைப் பொழிவுகள்(பல்கலைக் கழகங்களில்) நிகழ்த்தி அனைத்தையும் நூல் வடிவமாக்கிய ஒரே ஒரு பேராசிரியர் இவர்.

டாக்டர் பட்ட ஆய்வுகள்:

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் இவர்தம் அறிவியல் நூல்களை ஆய்ந்து ஒருவர் எம்.ஃபில் பட்டமும், சென்னை பல்கலைக் கழகத்தில் (உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் மூலம்) இவர்தம் அனைத்து நூல்களையும் ஆய்ந்து ஒருவர் பிஎச்.டி பட்டமும் பெற்றுள்ளனர்.

பெற்ற விருதுகள்:

1. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் அருங்கலைக்கோன்-1969.
2. பண்ருட்டி வைணவ சபை - ஸ்ரீ சடகோபன் பொன்னடி -1993.
3. மதுரை – காமராசர் பல்கலைக் கழகம் - தமழ்ப் பேரவைச் செம்மல் -1993 – வாழ்நாள் உறுப்பினர்- கல்வி ஆலோசனைக் கழகம்.
4. தமிழக அரசு – திரு.வி.க விருது -1995-ரூ. 10000.
5. இராசா சர் முத்தையய வேள் விருது – 1994 -ரூ. 50000.
6. சென்னை ஆழ்வார் ஆய்வு மையம்- இராமானுசர் விருது – 1996- ரூ. 25000.
7. சென்னைக் கம்பன் கழகம் - பேராசிரியர் இராதாகிருஷ்ணன் விருது – 1996- ரூ. 1000
8. மதுரை- காமராசர் பல்கலைக் கழகம் டி.லிட்., கௌரவப் பட்டம் - 1999.
9. தமிழக அரசு- கலைமாமணி – 1999 - மூன்று சவரன் தங்கப் பதக்கம்.
10. காஞ்சிப் பெரியவர் நூற்றாண்டு விழாக் குழு – சேவாரத்னா – 1999- ரூ.1000.
11. துறையூர் நகராண்மைக் கழகம் இவர் தம் பணியைப் பாராட்டி சிறப்பு வரவேற்பு – 2000 ஆண்டில்.
12. சி.பி. ஆதித்தனார் விருது -2001 - ரூ. 100000.

13. ஆய்வுத் தமிழகரசு- 2001- திருப்பெருந்திரு சோமசுந்தரா் குருவருள் அருட்பணி மன்றம்,சென்னை -ரூ.3000.
14. பொதுமறைச் செம்மல் -2002 – குருபழநி ஆதினம், திருக்குறள் பீடம், குருகுலம் மதுராந்தகம் - ரூ. 2000.
15. தமிழ்வாகைச் செம்மல் - 2003 – சேலம் தமிழ்ச் சங்கம் -ரூ. 10000.

புலமை:

தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, வடமொழி(சிறிதளவு) அறிவியல் - (7 துறைகளில்) எம்.எஸ்ஸி (தரத்தில்).

வெளிநாட்டுப் பயணம்:

1. 2002 ஏப்ரல், மே, சூன் அமெரிக்கா செல்லல். 4 மாநிலங்களைச் சுற்றிப் பார்த்தல், இரண்டு இடங்களில் பொழிவு.
2. 2003 –மே 1 – 15. இலங்கை செல்லல் - பெரும்பாலான இடங்கள் சுற்றிப் பார்த்தல்.
3. 2005 ஜீன் மலேசியா சிங்கப்பூர் செல்லல். சில இடங்களைச் சுற்றிப் பார்க்கத் திட்டம்.

தனிப் பண்புகள்:

1939 முதல் திருக்குறள் தோய்வு – ‘மனத்துக்கண் மாசிலனாதல்’ என்ற வாழ்வு. மனம், மொழி, மெய், இவற்றால; பிறர்க்குத் தீங்கு செய்யாத வாழ்வு.

எதற்கும் கவலைப்படாத நெஞ்சம். கவலையால் பிரச்சனைகள் தீரா என்ற உறுதி. செய்வன திருந்தச் செய்தல் இவர் கோட்பாடு. கடமைகளை மறவாது செய்பவர். காலத்தைப் பொன்போல் போற்றுபவர். துறையூர், காரைக்குடி, திருப்பதி, சென்னை ஆகிய இடங்களில் இவரால் பயன் பெற்றவர்கள் பலர்.

போற்றிய பெருமக்கள்:

இவரால் போற்றப்பட்ட பெருமக்கள் காந்தியடிகள், திரு.வி.க., சித்பவானந்த அடிகள், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, தந்தைப் பெரியார், இராமாநுசர், தாயுமான அடிகள் ,இராமலிங்க அடிகள், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்த அடிகள், சைவ குரவர்கள் நால்வர், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பட்டினத்தடிகள், கவிஞர் தாகூர், பெர்னாட்ஷா முதலியோர் ஆவர்.

அவர் படைத்த நூல்கள்:

1. அகத்திணைக் கொள்கைகள்
2. அண்ணல் அனுமன்
3. அணுக்கரு பௌதிகம்
4. அணுவின் ஆக்கம்
5. அதிசய மின்னணு
6. அம்புலிப் பயணம்
7. அர்த்த பஞ்சகம்
8. அறிவியல் தமிழ்
9. அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்
10. அறிவியல் பயிற்றும் முறை
11. அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல் (மொழிபெயர்ப்பு)
12. அறிவியல் விருந்து
13. அறிவுக்கு விருந்து
14. ஆழ்வார்களின் ஆரா அமுது
15. இராக்கெட்டுகள்
16. இராமலிங்க அடிகள்
17. இல்லற நெறி
18. இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்
19. இளைஞர் தொலைக்காட்சி
20. இளைஞர் வானொலி

21. என் அமெரிக்கப் பயணம்
22. கண்ணன் பாட்டுத்திறன்
23. கம்பனின் மக்கள் குரல்
24. கல்வி உளவியல்
25. கல்வி உளவியல் கோட்பாடுகள்
26. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
27. கலியன்குரல்
28. கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி-ஒரு மதிப்பீடு
29. கவிஞன் உள்ளம்
30. கவிதை பயிற்றும் முறை
31. கவிமணியின் தமிழ்ப்பணி-ஒரு மதிப்பீடு
32. காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்
33. காலமும் கவிஞர்களும்
34. குயில் பாட்டு – ஒரு மதிப்பீடு
35. சடகோபன் செந்தமிழ்
36. சி.ஆர்.ரெட்டி(மொழிபெயர்ப்பு)
37. சைவ சமய விளக்கு
38. சைவ சித்தாந்தம்-ஓர் அறிமுகம்
39. சைவமும் தமிழும்
40. சோழ நாட்டுத் திருப்பதிகள்-1
41. சோழ நாட்டுத் திருப்பதிகள்-2
42. ஞானசம்பந்தர்
43. தந்தை பெரியார் சிந்தனைகள்
44. தம்பிரான் தோழர்
45. தமிழ் இலக்கியத்தில் அறம், நீதி, முறைமை
46. தமிழ் பயிற்றும் முறை
47. தமிழ்க்கடல் இராய.சொ.
48. தமிழில் அறிவியல் செல்வம்
49. தமிழில் அறிவியல்-அன்றும் இன்றும்
50. தாயுமானவர்
51. திருக்குறள் தெளிவு – உரைநூல்
52. திருவேங்கடமும் தமிழிலக்கியமும்

53. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
54. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
55. தொலை உலகச் செலவு
56. நமது உடல்
57. நவவித சம்பந்தம்
58. நாவுக்கரசர்
59. நினைவுக் குமிழிகள்-பாகம்-1
60. நினைவுக் குமிழிகள்-பாகம்-2
61. நினைவுக் குமிழிகள்-பாகம்-3
62. நினைவுக் குமிழிகள்-பாகம்-4
63. நீங்காத நினைவுகள்-1
64. நீங்காத நினைவுகள்-2
65. பட்டினத்தடிகள்
66. பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்
67. பரகாலன் பைந்தமிழ்
68. பரணிப் பொழிவுகள்
69. பல்சுவை விருந்து
70. பாஞ்சாலி சபதம்-ஒரு நோக்கு
71. பாட்டுத்திறன்
72. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
73. பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பீடு
74. பாரதீயம்
75. பாவேந்தரின் பாட்டுத்திறன்
76. புதுவை(மை)க் கவிஞர் பாரதியார்-ஒரு கண்ணோட்டம்
77. மலரும் நினைவுகள்
78. மலைநாட்டுத் திருப்பதிகள்
79. மாணிக்கவாசகர்
80. மானிட உடல்
81. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்
82. முத்தொள்ளாயிர விளக்கம்
83. மூவர் தேவாரம்-புதிய பார்வை
84. வடநாட்டுத் திருப்பதிகள்

85. வடவேங்கடமும் திருவேங்கடமும்
86. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்
87. வாய்மொழியும் வாசகமும்
88. வாழும் கவிஞர்கள்
89. வாழையடி வாழை
90. விட்டிணுசித்தன் விரித்த தமிழ்
91. வேமனர் (மொழிபெயர்ப்பு)
92. வைணவமும் தமிழும்
93. வைணவ உரைவளம்
94. வைணவ புராணங்கள .

போன்ற நூல்கள் இவர் படைப்புகள் ஆகும். இதுவரை கூறப்பட்டவை அவரது வாழ்க்கை வரலாறு மற்றும் அவர் எழுதிய நூல்கள் ஆகும்.

பிறப்பு: ஆகஸ்டு – 27- 1916.

இறப்பு: மே- 1- 2006.

இயல் 2

தமிழ் இலக்கியங்களில் அநுமன்

இரண்டாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்தது தமிழ் இலக்கியம் ஆகும். அதில் உள்ள இலக்கியங்கள் ஏராளம். அவ்இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள அநுமன் குறித்து எடுத்துக்காட்டுவதே இவ் இயலின் நோக்கம் ஆகும்.

தொன்மவியலின் அடிப்படையில் இறைவன் இராமனின் பக்தனும் இந்துக்களின் கடவுளும் ஆவார். இராமாயணத்தில் இராமனின் மிக முக்கியமானதொரு பாத்திரமாக வாரைப் படையில் இடம்பெறுகிறார். அனுமனுக்கு மாருதி, ஆஞ்சிநேயன் போன்ற பெயர்களும் வழங்கப்படுகின்றன. அனுமனின் தாய் ஆஞ்சனாதேவி, தந்தையின் நாமம் கேசரீ. இவர் வாரைத் தலைவர் ஆவார். இவர்களின் குல தெய்வம் பஞ்ச பூதங்களில் ஒன்றான வாயு. வாயுவானவரே அனுமனுக்குத் தந்தையாகவும், குருவாகவும் இருந்து வழி நடத்தியதால் அநுமன் வாயு புத்திரர் என்றும் அழைக்கப்படுகிறார். இராமாயணம் தவிர மகாபாரதம் பெருங்காவியத்திலும் இன்னபிற புராணங்களிலும் அனுமனைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. அனுமன் இராமன் மீது கொண்ட அளவற்ற பக்தியினால் இராமனின் தொண்டனாக விளங்குகிறார். அநுமன் வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சாரியத்தைக் கடைபிடித்தவர். பிற்காலத்தில் வட இந்தியாவில் அநுமனை சிவனின் அவதாரமாகவும் கருபவர்கள் உண்டு.

வைணவக் கோயில்களில் அனுமாருக்குத் தனி கோவில் உண்டு. அநுமாரை வைணவர்கள் திருமாலின் சிறிய திருவடி என்று போற்றுகின்றனர்.

2.2. பெயர்க் காரணம்:

சமஸ்கிருதத்தில் "ஹனு" என்றபதற்கு "தாடை" என்றும், "மன்" என்பதற்கு "பெரிதானது" என்றும் பொருள். ஆக, "ஹனுமன்" என்பதற்குப் பெரிய தாடை உடையவன் என்று பொருளாகிறது. இன்னொரு வழக்கில், "ஹன்" என்பதற்குக் "கொன்றவன்" என்றும், "மானம்" என்பதற்கு "தற்பெருமை" என்றும் பொருள் வருகிறது. ஆக, இவ்வழக்கப்படி "ஹன்"மான் என்றால் தற்பெருமையைக் கொன்றவன் என்று பொருள் பெறப்படுகிறது. ஆண்மந்தி என்பதுதான் அநுமன் என்றும் அதிலிருந்துதான் ஹனுமன் என்ற சமஸ்கிருதச் சொல் மருவி வழங்கப்பட்டதாகவும் சிலர் அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும் சிலர் அஞ்சனை மகன் என்பதால் அநுமன் என்ற வழப்பட்டதாகக் கூறுவர்.

2.3. இராமாயணத்தில் அநுமன்:

சுந்தர காண்டம் எனப்படும் இராமாயணப் பகுதியில் அனுமனின் பலவாறான வீரதீரச் செயல்கள் பேசப்படுகின்றன. அநுமன் இராமனைப் பிரிந்து தவிக்கும் சீதையைக் காண வான் மார்க்கமாக கடல் கடந்து இலங்கைக்குச் சென்றதாக இராமாயணம் கூறுகின்றது. சீதையை அசோக வனத்தில் சந்தித்து, இராமன் சீதையை அசோக வனத்தில் சந்தித்து, இராமன் சீதையைத் தேடி வந்துகொண்டிருக்கிறார் என்ற செய்தியையும் இராமனின் அடையாளமாக அவரது கணையாழியையும் அநுமன் தருகிறார். பின்னர் சீதையைச் சிறைபிடித்து வைத்திருக்கும் இலங்கை வேந்தன் இராவணனை

அவனது அரசவையில் சந்தித்து, சீதையை விடுவிக்குமாறும் இல்லாவிட்டால் இராமன் போர் தொடுக்க வேண்டியிருக்கும் என்பதனையும் தூதுவனாகத் தெரிவிக்கின்றனர். தூதுவனை மதியாத இராவணன், அநுமனின் வாலில் தீ வைக்க, அங்கிருந்து தப்பிய அநுமன் இலங்கைத் தலை நகரத்தையே தன் வாலில் இருந்த தீயால் சாம்பலாகும்படி செய்துவிட்டுத் திரும்புகிறார். இலங்கையில் இருந்து திரும்பியவுடன் இராமனைச் சந்தித்து, "கண்டேன் சீதையை" என்கிற நற்செய்தியையும், இராவணன் சமாதானத்திற்கு உடன்படாததையும் தெரிவிக்கிறார். அநுமன் "சொல்லின் செல்வன்" எனவும் அழைக்கப்படுகிறார். பின்னர் போர் மூள்கிறார். போரில் சஞ்சீவினி மலையையே தனது கரத்தால் தூக்கி வந்து போரில் மயக்கமுற்றவர்கள் நினைவு திரும்பிட வழி வகுத்ததாகவும் இராமாயணம் சொல்கிறது.

2.4. அநுமன் - இராமன் முதற் சந்திப்பு:

இராமனும் இலக்குவனும் சுக்ரீவனின் இருப்பிடத்திற்கு அருகாமையில் வந்து கொண்டிருக்கையில் அவர்கள் உண்மையில் யாரெனெக் கண்டுகொள்ள, சுக்ரீவன் அனுமனை அனுப்புகிறான். அநுமன் அந்தண வேடத்தில் இராம இலக்குவனை அடைந்து அவர்கள் யாரென வினவுகிறான். இராமன் தாங்கள் யாரெனக் கூறத் தொடங்கியதுமே, அநுமன் என அறிவிக்க இராமன் அநுமனைக் கட்டித் தழுவிக் கொள்கிறார். அப்போது தொடங்கும் இராமன் - அநுமன் நட்பு எப்போதும் ஒளிவீசித் திகழ்கிறார்.

2.5. அனுமனது உருமாறும் திறன்:

இராமாயணத்தில் பல இடங்களில் அனுமன் தனது உருவினை மாற்றிக்கொள்ளும் திறன் படைத்தவராக சொல்லப்படுகிறார். இராவணனின் மாளிகையில் சீதையைத் தேடும் கால் பூனை வடிவினில் தனது வடிவினை மாற்றிக் கொள்கிறார். பின்னர் சீதையைக் கண்டபின் ஒரு பெரிய மலைபோல் தன் உருவினை மாற்றித் தனது திறனை சீதைக்குக் காட்டுகிறார். இதுபோன்று உருவினை மாற்றிக்கொள்ளும் சித்திகளை அனுமன் தனது இளமைப் பிராயத்தில் சூரியக் கடவுளிடம் இருந்து பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

2.6. அநுமன் சஞ்சீவினி மலையைக் கொணர்ந்தது:

போரில் இராமனது தம்பி இலக்குவன் காயங்களுடன் மூர்ச்சை அடைய, இலக்குவனைக் காப்பாற்ற சஞ்சீவினி மலையில் இருந்து மூலிகை மருந்தினைக் கொண்டு வருவதற்காக அனுப்பப்படுகிறார். இதை அறிந்த இராவணன் அனுமனுக்கு பல்வேறு தடைகளை ஏற்படுத்துகிறான். அநுமன் அவற்றைக் கடந்து சஞ்சீவினி மலையை அடைந்தார். ஆனால் அங்கு குறிப்பிட்ட மூலிகையினை அவரால் அடையாளம் கண்டுகொள்ள இயல்வில்லை. அன்றைய தினம் முடிவடையும் முன் மூலிகையினைக் கொணர்ந்தால்தான் இலக்குவனைக் காப்பாற்ற இயலும் என்கிற தறுவாயில், அநுமன் அப்படியே அடியோடு பெயர்த்துத்தெடுத்து, வானத்தில் பறந்த போர்க்களத்தினை வந்தடைகிறார். பின்னர் மலையில் இருந்து மூலிகை

மருந்து இலக்குவனுக்குத் தரப்பட, இலக்குவன் உயிர் பிழைக்க, இராமன் பெருமகிழ்ச்சிகொண்டு அனுமனை கட்டித் தழுவுகிறார். அநுமனைத் தனது தம்பிகளில் ஒருவராக அன்பொடு அறிவிக்கிறார்.

அநுமன் சஞ்சீவினி மலையைத் தூக்கிக்கொண்டு அயோத்தி வழியே வானத்தில் பறந்து வருகையில் இராமனது தம்பி பரதன் யாரோ அரக்கன் ஒருவன் அயோத்தியைத் தாக்க வருகிறான் என்று நினைத்துக்கொண்டு அனுமனை நோக்கி அம்பினைத் தொடுக்கிறார். அம்பினில் இராமன் பெயர் இருப்பதைக் கண்டு, அநுமன் சும்மா இருக்க அவ்அம்பு அனுமனது காலைத் துளைக்கிறது. உடனே வானத்தில் இருந்து கீழிறங்கி, பரதனிடம் அவன் தமையன் இலக்குவனைக் காக்கவே மலையைத் தூக்கிச் செல்வதாகச் சொன்னதைக் கேட்டதும் பரதன் தன் தவறை நினைத்து வருந்துகிறார். பதிலுக்குப் பரதன் தான் ஒரு அம்பினை இலங்கை நோக்கிச் செலுத்தினால் அதில் அநுமன் அமர்ந்து எளிதாக இலங்கையை அடையலாமே என்கிறார். அநுமனோ அதை மறுத்துவிட்டு, அடிப்பட்ட காலுடனேயே இலங்கையை நோக்கி விரைகிறார்.

2.7. அநுமன் தனது இதயத்தைத் திறந்து காட்டுதல்:

இராவண வதம் முடித்து இராமன் முதலானோர் அயோத்தி திரும்பி இராமன் முடிசூட்டியபின், தனக்கு உதவி செய்தவர்களுக்குத் தக்க பரிசுகளை வழங்கிக் கொண்டிருந்தார். அப்போது இராமன் அருகே யாதொரு பரிசினையும் எதிர்பாராத அநுமன் வர, இராமன் அநுமனை ஆரத் தழுவிக் கொண்டு, அநுமன் செய்த உதவிகளை எப்பரிசினாலும் ஈடுகட்ட முடியாது எனப் புகழ்கிறார். அக்கணம் சீதையோ ஏதாவது ஒரு பரிசினை தங்கள்

நினைவாக அநுமனுக்குத் தரவேண்டுமென விழைந்து, தன் கழுத்தில் அணிந்திருந்த இரத்தினங்கள் பதித்த விலை உயர்ந்த மாலையைப் பரிசளிக்கிறார். அதை பெற்றுக்கொண்ட அநுமன், அந்த மாலையில் பதித்திருந்த இரத்தினங்களை வெளியே எடுத்து அதில் இராமர் - சீதை தெரிகிறார்களா எனப்பார்க்கிறார். ஏனெனில் இராமர் சீதையை விட அவருக்கு உயர்வானது வேறொன்றுமில்லை. இதை அறியாத ஒரு சிலர் அனுமனைப் பார்த்து நகைக்க அனுமனோ அனைவரும் அறியும் வண்ணம் தனது மார்பினைத் திறந்து அதில் இராமர்யும் சீதையும் வீற்றிருப்பதைக் காட்டுகிறார்.

2.8. மகாபாரதத்தில் அநுமன்:

இராமாயணத்தைப் போல மகாபாரத்தத்தில் அநுமன் முக்கிய கதாபாத்திரம் கிடையாது. ஆனால் பாண்டவர்களில் ஒருவனான பீமனுக்கு ஒரு வகையில் அண்ணன் உறவு வருகிறது.

பாண்டவர்கள் வனவாசத்தில் இருக்கும்போது, காட்டு வழியே பீமன் பயணிக்கும்போது, அங்கே வயோதிக குரங்கு ஒன்று படுத்துக்கொண்டிருக்க அதன் வாலோ நீண்டு பீமன் நடந்து செல்லும் பாதையை அடைத்துக் கொண்டிருந்தது. பீமன் அதன் வாலை தள்ளி வைத்துவிட்டு செல்லலாம் என எண்ணி, வாலைத் தூக்க எத்தனித்தான். ஆனால் பலசாலி எனப்பெயர் பெற்ற பீமனாலேயே அந்த வாலை அப்புறப்படுத்த இயலவில்லை. பின்னர் பீமன் அது சாதாரணக் குரங்கு இல்லை என உணர்ந்து, அக்குரங்கிடம் மிகுந்த மரியாதையுடன் யாரென வினவ, அநுமன்தான் யாரென்பதை பீமனிடம் அறியச் செய்கிறார். குருசேத்திரப் போரில், அர்ஜுனனின் தேரில்

பறக்கவிடப்பட்டிருந்த கொடியில் அனுமனின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. இது மானசீகமான தேரின் பலத்தினைக் கூட்டியதாகச் சொல்வார்கள். கண்ணன் போர்க்களத்தில் பகவத் கீதையினை அர்ஜுனனுக்கு உபதேசித்த போது அநுமனும் கொடி வழியாக கேட்டதாகச் சொல்லப்படுகிறது. போர் நிறைவடைந்து, அர்ஜுனனும் கண்ணனும் தேரில் இருந்து கீழே இறங்கிய பின் கண்ணன் அனுமனிடம் இவரை தேரின் கொடியாக இருந்தமைக்கு நன்றி சொல்லிட, உடனே அநுமன் தன் உருவினைக் காட்டி, கண்ணனை வணங்கிவிட்டு, கொடியில் இருந்து மறைந்துவிடுகிறார். அநுமன் மறைந்தவுடனேயே, தேர் எரிந்து சாம்பலாகிவிடுகிறது. இதைக்கண்டு அதிர்ச்சியுற்ற அர்ஜுனனைப் பார்த்து கண்ணன் “அர்ஜினா, இதுவரை போரினில், இத்தேரின் மேல் வீசப்பட்ட அனைத்துக் கொடிய பாணங்களையும் தாங்கி நின்றது என்றால், அதற்கு நானும் அனுமனும் இத்தேரினில் இருந்ததுவே காரணம். இல்லாவிட்டால், இத்தேர் எப்போதோ அப்பாணங்களின் சக்தியினால் எரிந்து போயிருக்கும் என்றார்.

2.9. அநுமன் உருவங்கள்:

அநுமன் உருவச் சிலைகள் பல்வேறு வடிவங்களில் வணங்கப்படுகிறார். வீரகோலம், நின்றகோலம், யோகக் கோலம் போன்ற உருவங்களில் அநுமன் சிலைகள் வைக்கப்படுகின்றன.

2.10. அநுமன் கோவில்கள்:

இந்து சமயக் கோயில்களில் அனுமனுக்குத் தனிச் சன்னதிகளும், சிற்பங்களும் அமைந்துள்ளன. வைணவக் கோயில்களில் இராமர் சன்னதி முன்பு வணங்கியபடி இவரது உருவச் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தனிக்கோவில்கள் பெருமளவு அனுமனுக்காக உருவாக்கப்பட்டுள்ளன. இவர் இராமாயணத்தில் விஸ்வ ரூபம் எடுத்தமையால், பல கோவில்களில் பெரிய சிலைகள் வைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் நாமக்கல்லில் இருக்கும் 18 அடி உயர அநுமன் சிலை மிகவும் புகழ்பெற்றது. காசியிலும் அனுமனுக்குத் தனியான கோவில் உண்டு. ஆந்திர மாநிலம் ஹைதராபாத்திலும் பெரிய அளவிலான சிலை உள்ளது. இதன் உயரம் 135 அடி ஆகும்.[1]

2.11. அபிதான சிந்தாமணியில் அநுமன்:

அபிதான சிந்தாமணியில் இடம்பெற்றுள்ள அநுமன் குறித்து இங்கு காணலாம்.

புஞ்சிகஸ்தை யென்னும் அப்சரஸ் சாபத்தால் அஞ்சனை யென்னும் வாநர ஸ்திரீயாகி கேசரி யென்பவனை மனந்திருந்தனள். ஒருநாள் வாயு, இவளது நிஜ உருவம்கண்டு கூட, அவனது அம்சத்தால் பிறந்தவர். இவர் பிறந்து வளர்க்கையில் சூரியனை இராகு பற்ற அவனைப் பழமெனக்கண்டு கவரப்போகையில், இராகு இந்திரனுடைய இந்திரன் தனது வச்சிராயுதத்தால் அடிக்க அநுமுரியப் பெற்றவர். இவரை இந்திரன் எறிந்ததனால் வாயு கோபித்துத் தம்பித் திருக்கப், பிரமன் முதலிய தேவர்கள் வந்து அநுமுரிந்ததால் அநுமன் எனப் பெயரிட்டுப் பிரமாத்திரத்தாலும் தேவாத்திரத்தாலும் சாவில்லா வரந் தந்தனர். இளமையில் சூரியன் இரதத்திற்கு முன் சென்று நவ வியாகரணங் கற்றவர். வீமனுடன் நட்புக் கொண்டவர். அருச்சுணன் இரத்தத்திற் கொடியாயிருந்தவர். இவர் சுக்கிரீவனென்னும் வாநரனுக்கு நண்பனாகத் திரிந்து கொண்டு இருடிகள்

ஆச்சரிமத்திற் சென்று அவர்களுக்கு மனவருத்தத்தைத் தருங்காரியத்தைச் செய்து கொண்டிருந்தனர். அதனால் இருடிகள் கோபித்து உனக்கு உன்னைப் புகழுங்காலந்தவிர மற்ற காலங்களில் இராமன் உன்னைக் காணுமளவும் உன் பலம் உனக்குத் தோன்றாதிருக்கவெனச் சபித்தனர். இவ்வாறு தன்பலந் தோன்றாது திரிந்துகொண்டிருக்கையில் இராமன் வனவாசம் வருங்காலத்து மரத்தின் மீதிருந்து இராம லக்குமணனைக் கண்டு தந்தை சொற்படி திருமாலவதார மெனத் தேறிப் பிராமணவுருக் கொண்டு வந்து பணிந்தனர்.

இராம லக்குமணர் இவரைக் கண்டு புகழ அவர்களைத் தம் நண்பன் சுக்கிரீவனுக்கு நட்புச் செய்வித்து இராமபிரான் சொற்படி திருவாழிபெற்று ஜாநகியைத் தேடச்சென்று ஒரு பாலைவனத்தின் அழலுக்குச் சகிக்காது சாம்பனுடன் ஒரு பிலத்திற் புகுந்து வழிதெரியாமல் திகைக்கையில் பின் தொடர்ந்த வாநரர்களைத் தம் வாலைப் பிடித்துக்கொள்ளக் கட்டளையிட்டுப் பிலத்தினுள் புகுந்து, சுவயம்பிரபைக் கண்டு அவள் சாபத்தைப் போக்கி அவளைச் சுவர்கத்திற்கனுப்பினவர். அங்கிருந்து நீங்கிச் சம்பாதியைக் கண்டு வழியறிந்து மகேந்திர மேறித் தாவி வழியில் மறித்தமை நாகத்தைத் தலைகீழாகத் தள்ளி அநுக்கிரகித்து, சுரசையென்பவள் வாயுட்புகுந்து வெளிவந்து, வழிமறித்து அங்கார தாரை, சாயாக்கிரகி யென்னும் அரக்கியைக் கொன்று தாண்டி இலங்கையிலுள்ள பவள மலை சென்று சேர்ந்து இலங்கணியை யறைந்து அவளாலுளவறிந்து இலங்கை மாநகரஞ் சென்று தேடுகையில் கும்பகர்ணன் உறங்கும் பெருமூச்சிற்பட்டுத் திரும்பி, அசோக வனஞ் சென்று சீதையைக் கண்டு பணிந்து திருவாழீ தந்து தேற்றித்தன் குறுகிய உருவத்தை விட்டுப் பெரிய உருவத்தைக் காட்டிச் சில அடையாளங்களையும், சூடாமணியையும் சிரஞ்சீவித்வமும் அவளிடம் பெற்று

அசோகவனத்தை அழிக்கையில் எதிர்த்த கிங்கரரை வதைத்துச் சம்புமாலி, பஞ்சசேநாபதிகள், அக்ஷ குமாரன் முதலியோரைக் கொன்று இந்திர சித்தாற் பிரமாத்திரத்தால் கட்டுண்டு இராவணன் எதிரில் தன் வாலை ஆசனமாகக் கொண்டிருந்து, அவன் வாலில் தீயிடுவிக்க அத்தீயைக் கொண்டு இலங்கையை யெரித்து மீள்கையில் ஜானகியைக் கண்டு விடைபெற்று மைநாக மடைந்து கடலைக் கடந்து மகேந்திரஞ் சென்று வரவு பார்த்திருந்த அங்கதன் முதலான வருடன் சீதையைக் கண்ட செய்தி கூறிக்களித்து இராமமூர்த்தியைக் கண்டு சுபசெய்தியை அறிவித்துச் சீதைதந்த அடையாளங்களையும் சூடாமணியையும் கொடுத்தவர் இராம மூர்த்தியுடன் இலங்கைக்கு யுத்தத்திற்கு வந்து துன்முகனைக் கொன்று இலக்குமணருக்கு அக்ஷ்யத்தூணி அறுந்த காலத்து இராவணன் மத்தியில் இருந்து தன்னையொரு குத்துக்குத்தென்று இராவணனைக் கேட்டு அவன் குத்த அதனால் சற்றுச் சலித்துச் சகித்து அவனைத் தாம் குத்திமுன் திக்குயானைகளால் அவன் தேகத்திற் புதையுண்ட தந்தங்கள் உதிர்ந்து இராவணன் சாயக் கண்டு களித்தவர்.

முதனாள் யுத்தத்தில் இராவணன் வேலினால் மூர்ச்சித்த இலக்குமணரைக் குட்டி போல் தூக்கிச் சென்றவர். இராமமூர்த்திக்கு வாகனமாயிருந்தவர். கும்பகர்ணன் மீது மலைகளை யெறிந்து அவனது அஞ்சா நிலை கண்டு சலித்தவர் சுக்கிரீவன் மீது கும்பகர்ணன் எறிந்த வேலைத் துண்டுகளாக்கி அதிகாயன் யுத்தத்தில் தேவந்தகனையும் திரிசிரனையுங் கொன்று பிறகு நிகும்பன், தூமாக்ஷன், வச்சிரதந்தன், அகம்பன் என்னும் துஷ்டர்களாகிய அசுரர் முதலியோரை வதைத்து இலக்குமணர் முதலியோர் மூர்ச்சையடைந்த காலத்து

சாம்பவந்தராலேவப்பட்டுச் சஞ்சீவிமலை சென்று சஞ்சீவி கொண்டு வந்து அவர்களைப் பிழைப்பித்தவர் இராவணன் வஞ்சகமாகக் கொலை செய்வித்த மாயா சீதையைக் கண்டு புலம்பி இராமருக்குச் செய்தி கூறியவர். இராவணன் மூல பலத்துடன் யுத்தத்திற்கு வந்து விபீஷணர்மீது ஏவிய வேலை இலக்குமணர் தாங்கி மூர்ச்சையடைந்த போது, மீண்டும் சஞ்சீவி கொண்டு வந்து மூர்ச்சை தெளிவித்தவர். இராமபிரான் கட்டளையால் சீதாபிராட்டியை மீட்க விபீஷணருடன் சென்று கொண்டு வந்து இராமமூர்த்தியங் காட்டியவர். குகனுக்கும் பரதனுக்கும் ஸ்ரீராம மூர்த்தியின் வரவறிவத்து முத்திரை மோதிரங்காட்டித் தீயில் விழாது தடுத்து மீண்டு இராம மூர்த்தியை யடைந்து சிரஞ்சீவி பெற்றவர். விபீஷணர், இவர் இலங்கையில் செய்த வீரத்தை இராமமூர்த்திக்குக் கூறிய போது இராமமூர்த்தி களித்துப் பிரமபதம்பெற வரமளிக்கப் பெற்றவர். பஞ்ச பூதங்களால் அழியாதவர், பெண்புணர்ச்சியற்றவர் இவருக்கு மாருதி, ஆஞ்சினேயன், கேசரிபுத்திரன், வாயுபுத்திரன் எனவும் பெயர், இராமமூர்த்திக்குச் சிவபூஜையின் பொருட்டுக் காசியினின்றும் சிவ லிங்கங் கொணர்ந்து தாபித்தவர். ஒருமுறை இராமமூர்த்தி சிவபூஜைக்குக் கங்காதீர்த்தம் அநுமான் கொண்டு வந்தனன். அவ்வநுமான் வருவதற்குமுன் இராமர் சிவபூஜை முடித்தனர். அதனால் அநுமான் அத்தீர்த்தக்குடத்தை யெறிய அதில் ஒரு நதி உண்டாகிப் பெண்ணை நதியில் கலந்தது. இவர் சஞ்சீவியின் பொருட்டு உத்திர திசை செல்கையில் தான்யமாலியின் சாபம் போக்கினவர் அந்தக்காலத்துக் கபடமாகத் தவஞ்செய்து கொண்டிருந்த காலநேமியை வதைத்தவர்.

சஞ்சீவிகொண்டு வருகையில் எதிர்த்த மாய்யவந்தானைக் கடலில் எறிந்தவர். மயில் ராவணனைக் கொன்றவர். கந்தமாதனனைச் சத்திய

உலகஞ் சென்று அழைத்துவந்தவர், சககண்டராவணனாலுதையுண்ட சுக்ரீவ விபீஷணர்களை வாற்பாலத்தால் வருவித்தவர், சதகண்டன் உதிரத்தில் பிறந்த சதகண்டர்களை வதைக்கக் குரங்கு, நரசிங்கம், கருடன், வராகம், குதிரை ஆகிய பஞ்சமுக ஆஞ்சிநேயராக உருக்கொண்டு அரக்கனை வதைத்து இராமனிடம் ரத்னமாலை பெற்றவர். இராம பணி முடித்துக் கந்தமாதனமடைந்து கதலி வனத்தில் தவம்புரிந்தவர். கருடனது கர்வத்தை வாலையசைத்து அவனை த்வாரகையில் தள்ளிக் கர்வமடைக்கினவர். ருக்மணியைச் சீதையாகவும் கண்ணனை இராமனாகவுங்கண்டு சத்தியபாமையின் கர்வபங்கம் செய்தவர். நாரதவீணையில் கானம்பாடிக் கல்லை உருவகச் செய்து அதில் தாளத்தையிட்டு இருகச் செய்து மீண்டும் கல்லுருகப்பாடுக என அவர்கள் பாடாதது கண்டு கர்வமடக்கினவர். புஷ்பயாத்திரை சென்ற வீமனது கர்வத்தை வாலைத் தூக்கச் செய்து அடக்கினவர் (இராமாயணம்).[2]

அடிக்குறிப்புகள்

1. விக்கிபீடியா

2. அபிதாண சிந்தாமணி பக். 56 - 57

இயல் - 3

சுப்புரெட்டியார் கட்டுரைகளில் அநுமன்

தமிழுலகம் நன்கறிந்த அறிஞர் சுப்புரெட்டியார் ஆவார். அவரது பொழிவுகள் ஏராளம். இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நூலான “அண்ணல் அநுமன்” நூலில் இடம்பெறும் அநுமன் குறித்த பதிவுகளைக் குறித்து நோக்குவதே இவ் இயலின் குறிக்கோள் ஆகும்.

3.1. கட்டுரைகளின் அமைப்பு:

சுப்புரெட்டியாரின் இருநூற்றுக்கும் மேற்பட்ட நுல்களில் ஒன்று ‘அண்ணல் அநுமன்’ நூல் ஆகும். இதனை வெளியிட்டவர்கள் ந சுப்புரெட்டியார் நூற்றாண்டு கமிட்டி பதிப்பகத்தார் ஆவர். இந்நூலானது அன்புப்படையல், பதிப்புரை, அணிந்துரை, நூல் முகம் ஆகியவை நீங்கலாக மொத்தம் எட்டு கட்டுரைகளை உடையது. மேலும், பின்னிணைப்பாக பயன்பட்ட நூல்களும் நூலரிசரியர்பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. உட்தலைப்புகளாவன:

1. கவிக்கு நாயகன்
2. சொல்லின் செல்வன்
3. சிந்தனைச் செம்மல்
4. விழையும் உருவினன்
5. அஞ்சா நெஞ்சன்
6. இராமதூதன்
7. இராமபக்தன்
8. குணக்குன்றன்

ஆகியவை ஆகும்.

இத்தலைப்புகளை ஒட்டி ரெட்டியார் அநுமனின் புகழை பல்வேறு எடுத்துக்காட்டுக் காட்டுகளுடன் எடுத்துரைக்கிறார். இனி இது குறித்து:

3.2. கவிக்கு நாயகன்

முதல் கட்டுரையில் ரெட்டியார் கவிக்கு நாயகனாக அநுமனைக் கூறுகின்றார். அவர் கீழ்காணும் செய்யுளைச் சுட்டுகிறார்.

"செவிக்குத் தேனென இராகவன்
புகழினைத் திருத்தும்
கவிக்கு நாயகன் அனையவன்
உறையுளைக் கடந்தான்"

இந்த செய்யுளில் வரும் கவிக்கு நாயகன் என்பது கம்பரைக் குறிக்கிறது என்கிறார். அதேசமயம் அது வானரத் தலைவனான அநுமனையும் குறிக்கும் என்கிறார். இதற்கான அவருடைய விளக்கம் பின்வருமாறு:

வான்மீகத்திலுள்ள இராம சரித்திரத்தில் தேவையான இடங்களில் மாற்றி - திருந்தச் செய்து கேட்போர் செவிக்கு இனிமையாக இருக்குமாறு - தேனாக இருக்குமாறு செய்த கவிக்கு நாயகன் - கவிகளுக்கெல்லாம் தலைவன் - கவிச் சக்ரவர்த்தி - கம்பநாடன்' என்பது ஒன்று.

1. 'இராம பிரானது புகழ் அமிழ்தம் கேட்பவர் செவிகளுக்கு இனிமை தரும் தேனாக இனிக்கும். இராம பிரானது புகழைத் தனது செவிகளுக்குத் தேனாக அழகியதாகக் கொள்ளும் கவிக்கு நாயகன் - வானரத் தலைவன் என்பது இரண்டு
2. இராமசரிதம் நடைபெறுகிற முறையில் அமைந்துவிட்டால் (அநுமன் இல்லாவிட்டால்) அது துன்பநிலையில் முடிவதாக அமைந்திருக்கும்

கவிக்கு நாயகனான அநுமனை அதில் நடைபெற்ற கோணல்களை நிமிர்த்தி (திருத்தி என்பதற்குத் திருந்தச்செய்து என்று பொருள் கொள்ள வேண்டும்) கதை மங்களகரமாக முடியக் காரணமாக இருந்தவன் என்பது மூன்று[1]

பிறகு இந்த மூன்றாவது கருத்தை விரிவாக எழுதுகிறார். அவை சுருக்கமாக:

இராம - சுக்ரீவ நட்பு: இராமகாதையில் இ்து உயிராய ஏற்பாடு. இந்த ஏற்பாட்டை மிக்க சாமர்த்தியமாக செய்தவன் அநுமன். இவன் வாலியின் ஏவலால்கள் வருகின்றவர்கள் அல்லர்; தளர்கின்ற நிலையையுடையவர்கள்: என்பதைத் தனது ஞானத்தால் ஆலோசித்து அறிந்து, மலை முழையில் பதுங்கியிருந்த சுக்கிரீவனுக்கு தேறுதல் கூறுகிறான். பின்னர், இருவர்களிடையும் நேசத்தையும் பாசத்தையும் உண்டாக்கி விடுகின்றான். இ்து அநுமனின் செயற்கருஞ்செயல்! இதனால் இராமகாதை இனிதாக நடைபெற வழி அமைகின்றது.

அடுத்து, இராமனிடம் வாலியைக் குறித்துக் கீழ்கண்டவாறு கூறி இராமகாதை இனிதாக நடைபெற வழி அமைக்கிறான். அந்தப் பாடல்:

உருமை யென்றுஇவற்கு
உரிய தாரமாம்
அரும ருந்தையும்
அவன்வி ரும்பினான்
இருமை யுந்துறந்து
இவன்இ ருந்தனன்"

அடுத்து அனுமன் வான் வழியாகச் சென்று இலங்கையில் அசோக வனத்தில் பிராட்டியைக் கண்டு அவளிடம் “சூளாமணி” பெற்றுப் பல்வேறு போர்கள் செய்து வெற்றி வாகையுடன் இராமனை அடைகின்றான். சீதையைக் கண்டதாக விரிவாகக் கூறும் கவிதைகள் யாவும் உள்ளத்தை உருக்குபவை. அவறிறிலுள்ளவை.

உன்பெருந் தேவி என்ற
　　உரிமைக்கும்
உன்குலம் உன்ன தாக்கி
....
என்குலம் எனக்குத் தந்தாள்
இற்பிறப்பு என்ப தொன்றும்
　　இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
　　களிநடம் புரியக் கண்டேன்.

இவ்வாறு அநுமன் பிராட்டியைக் கண்டு செய்தியை இராமகவனுக்குச் சொல்லியிராவிட்டால், இராம காதை அவலத்தில் முடிய ஏதுவாகயிருந்திருக்கும்.

அடுத்து, மருத்துமலைக் கொணர்தல்:

இருமுறை அநுமனால் மருத்துமலை கொணரப்பெறுகின்றது. இந்நிகழ்ச்சிகள் நடைபெறாமல் போயிருப்பின் இராமகாதை செவிக்குத் தேனென இனித்திராது. துன்பக் கதையாக முடிந்திருக்கும்.

இவற்றையெல்லாம் கருதியே கம்பநாடன், 'செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்' என்று அநுமனைக் குறித்தனன் என்று கருதலாமல்லவா? அதனால்தான் பிறிதோர் இடத்திலும் கவிஞன்,

"மாலையாம் வேடம் தாங்கி
    மலர்அயற்கு அறிவு மாண்டோர்
ஆணியாய் உலகுக்கு எல்லாம்
    அறம்பொருள் நிரப்பும் அண்ணல்"

என்று கூறினனோ என்றுகூட நம்மைச் சிந்திக்க வைக்கின்றது (பக். 21) என்று கவிக்கு நாயகன் கட்டுரையில் அநுமனைக் கவிக்கு நாயகனாக நிறுவுகிறார் சுப்புரெட்டியார்.

3.2. சொல்லின் செல்வன்

சொல்லின் செல்வன் என்றால் என்ன என்று கூறமுற்படும் பொழுது சுப்புரெட்டியார். சொல்லடுக்கு என்பது சொல்லை அடுக்காக நயத்துடன் பேசுவது அல்ல. மாறாக நயமாக பேசப்படுவதே என்று பொருள்படும்படி பின் வருமாறு கூறுகிறார். "சந்தர்ப்பத்திற்கு ஒவ்வாத அழகுக்காகவும், அணி நயத்திற்காகவும், கேட்போர் கைதட்டலுக்காகவும், அணி நயத்திற்காகவும், கேட்போர் கைதட்டலுக்காகவும், அணி சொற்களை அடுக்கிச் 'சொல்லெடுக்குகளாகப்'பேசி உதிர்க்கும் சொல் திறமை உடையவன் என்று பொருள் அன்று. நயமாக விநயமாக, நாநயம்படப் பேசப்பெறும் சொற்கள் பேச்சே அது.[2]

மேலும் இவ்வாறான திறமையை அனுமன் இயல்பிலேயே வாய்க்கப்பெற்றவன் அனுமன் என்று கூறும் சுப்புரெட்டியார். தொடர்ந்து அதற்கான உதாரணங்களையும் கூறுகிறார்.

மாணியாம் படிவன் அன்று
மாற்றுஇவன் வடிவம் மைந்த!
ஆணிஇவ் வுலகுக்கு எல்லாம்
என்னலாம் ஆற்றிற்கு ஏற்ற
சேணயர் பெருமை தன்னைச்
சிக்கறத் தெளிந்தேன்."

என்ற பாடலில் இராமனுடனான தன்னுடைய முதல் சந்திப்பிலேயே அவனைக் கவர்ந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். மேலும், ராமன் அனுமனை 'சொல்லின் செல்வன்' என்று கூறியதாகச் சுட்டுகிறார். பாடல்,

"இல்லாத உலகத்து எங்கும்
ஈங்குஇவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்று அன்றே
யார்கொல்இச் சொல்லின் செல்வன்.

இதுபோல் இருபதிற்கு மேற்பட்ட பாடல்களை மேற்கோள் காட்டி தொடர்ந்து, அனுமன் சொல்லின் செல்வன் என்பதை ரெட்டியார் நிறுவுகிறார்.

இராமனிடம் அனுமன் கூறிய முகமன், சுக்கிரீவனிடம் இராமனின் சிறப்பைக் கூறுதல், ஏழுகாவியங்களால் இராமனின் பெருமையை எடுத்துக்காட்டல், இராமனுக்கு வாலியைப் பற்றிக் கூறுதல் என பல தலைப்புகளில் இவை பேசப்படுகின்றன.

3.3.1. நாகரீகப்பேச்சு:

சுக்கிரீவனைக் காட்டுமாறு கேட்டபோது, தானும் தன் தம்பியும் கவிக்குலத்திறைவன் சுக்கிரீவனைக் காண்பதற்காகவே அவண் வந்ததாகக் கூறி, 'நீ இன்று சொன்ன, செவ்வழி உள்ளதானைக் காட்டுதி தெரிய' என்று வினவுகிறான், இராமன். அதற்குக் கோதில் சிந்தை கூறிய முகமன் என நான்கு உதாரணங்களைச் சொல்கிறார்.

1. 'ஐயன்மீர், தங்களைப் போன்ற புனிதர் யாருளர்? இங்ஙனம் ஒப்பவரில்லாத நீங்கள் எங்குலத் தலைவன் இடத்தில் அன்பு பாராட்டி அவனைக் காண்டற்கு அணுகினீர் என்னின், அதனால் அப்பெருமகன் செய்த தவமே ஆகும்.
2. ஆதவன் புதல்வன் ஆகிய சுக்கிரீவனை, தமையனான இந்திரன் புதல்வனான வாலி என்பவன் சிறிதும் இரக்கமின்றித் துறத்திவிட்டதனால் துன்பத்தை அநுபவைத்தற்குத் தனியனாய் என்னுடன் ஒளிந்திருக்கின்றான். அவனிடம் செல்வம் வருவது போன்ற குறிப்பில் நீங்கள் வந்துள்ளீர்கள்.
3. பலவகைப்பட்ட அறங்கள், வேள்விகள், தவங்கள் முதலியவை யாவற்றையும்விட புகழடைந்தோர்க்கு அஞ்சற்க என்று அபயம் அளித்தலே பேரறம் என்பது பெரியோர் கருத்து.
4. நீர் எல்லாம் எல்லா உலகங்களையும் காக்கும் முழுமுதற்கடவுளின் அமிசம் ஆதலின், நீரே எமக்கு புகல்; உம்மைச் சரணம் அடைவதே எமக்கு எல்லா நன்மைகளையும் விளைக்கும். ஆகவே யாம் உம்மைச் சரணம் அடைவோம். (பக். 24)

இதன்வழி இராமனின் சொரூபத்தை நன்கு அறிந்துள்ளதால் இவ்வாறு அநுமன் கூறுகிறான் எனக் கூறும் ரெட்டியார், அநுமன் நாகரீகமாகப் பேசக்கூடியவன் என்பதை கூறுகிறார்.

இப்பேச்சில் வாலி வதத்திற்கு அடிப்படை அமைதலையும் காணமுடிகிறத. இவ்வாறு பீடகைப் போட்டுப் மாருதி மிக நாகரிமாக,

"யாரென விளம்பு கேன்நான்

எங்குலத் தலைவிற்கு உம்மை

வீரநீர் பணித்திர்'

என்று விநயமாக, வினவுகின்றான், 'மெய்ம்மையின் வேல் போன்ற' அநுமன், இக்குறிப்பே அஞ்சனைச் சிறுவனைச் 'சொல்லின் செல்வனாக அறிமுகப் படுத்திவிடுகின்றது என்று கூறுகிறார் ரெட்டியார்.

இவ்வாறே பல இடங்களில் அநுமன் சொல்லின் செல்வனாக வெளிப்படுவதைக் காட்டும் ரெட்டியார், ஓரிடத்தில் அநுமன் திறனை குறளோடு ஒப்பிட்டும் சொல்கிறார்.

இலக்குவன் சீற்றம் தணிந்தபின் அநுமன் அருகில் வரல்: தாரை சமாதானம் கூறியபின், இலக்குவனின் சீற்றம் தணிக்கின்றது. மாருதி இலக்குவன் அருகில் வருகின்றான்.

வன்துணை வயிரத் திண்தோள்

மாருதி மருங்கின் வந்தான்

இலக்குவன்,

வந்தடி வணங்கி நின்ற
மாருதி வதனம் நோக்கி
அந்தமில் கேள்வி நீயும்
அயர்த்தனை யாகும் அன்றே
முந்தின செய்கை

என்று அநுமனை நோக்கிச் சொல்ல, ‘இயம்ப வல்லான்’ (பேசுதலில் வல்லவனான அநுமன்) கூறிய மறுமொழி ஆறுகவிகளில் நடைபெறுகின்றது. இங்கும் வள்ளுவர் கூறும் ‘சொலல் வல்லவன்’ (குறள் 647) சொல்லின் செல்வனைக் காணமுடிகின்றது.[3]

இங்ஙனம் இங்கு கூறப்பெற்ற நிகழ்ச்சிகளிலெல்லாம் அநுமனின் சொற்றிறத்தையும் அவன் நிகழ்ச்சிகளைச் சுமுகமாக - பலர் வியப்பெய்தும் வண்ணம் - தீர்த்துவைக்கும் பெற்றியையும் காண்கிறோம் என்று தனது கட்டுரையை முடிக்கிறார் ரெட்டியார்.

3.4. சிந்தனைச் செம்மல்

இக்கட்டுரையில் தொடக்கத்தில் ரெட்டியார் சிந்தனைச் செம்மல் என்றால் என்ன என்பதை விளக்கி பிறகு அதை நிறுவ அநுமனின் ஐந்து சிந்தனைகளை எடுத்துக்காட்டுகிறார்.

3.4.1. சிந்தனைச் செம்மல் விளக்கம்:

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு”[4]

நன்றாக எண்ணிய பிறகு ஒரு செயலைத் துணிந்து தொடங்க வேண்டும். ‘துணிந்தபின் எண்ணுவோம்’ என்று கருதுவது குற்றமாகும். சிந்திக்கும் ஆற்றல் மனிதன் ஒருவனுக்கே இறைவனால் வழங்கப்பெற்ற ஓர் அற்புத ஆற்றல். அதனை வளர்த்துக்கொண்டு அதனைச் செயற்படுத்துவது ஒவ்வொருவரின் கடமையாகும். பொறுப்பும் ஆகும்.

3.4.2. **அநுமன் ஒரு சிந்தனைச் செம்மல்:**

கவிநாயகனான அநுமனிடம் இவ்வாற்றல் அற்புதமாகச் செயற்பட்டுத் திகழ்வதை இராமகாதையில் தெளிவாகக் காணலாம் என்று கூறும் ரெட்டியார். அதனை ஈண்டு காட்ட முயல்வேன் என்று ஐந்து சிந்தனைப்பற்றி கூறுகிறார்.

சிந்தனை 1: பார்ப்பன வடிவத்தை மேற்கொள்ளுதல்:

எந்த ஒரு செயலையும் தந்திரமாக முடிக்கவேண்டுமெனில், பார்ப்பன வடிவத்தை மேற்கொண்டு செயலில் இறங்குவதைக் காணலாம். மாவலியிடம் மூவடி மண் பெறுவதற்குத் திருமால் ஒரு வாமன மாணியாச் சென்றதையும், கன்னனுடைய தருமத்தையெல்லாம் பெறுவதற்குக் கண்ணன் பார்ப்பனக் கோலத்தில் சென்றதையும் இதிகாசங்களில் காண்கின்றோம். இங்ஙனமே இராமக்குமணரைக் கண்ட சுக்கிரீவன் முதலிய வானரர்கள் அவரை வாலியைச் சேர்ந்தவர் என அஞ்சியோடி மலைக்குகைகளில் புகுந்து ஒளிந்துகொள்ள முயல, அநுமன் அவர்களைத் தேற்றியபின், தான் ஒரு பார்ப்பன பிரம்மச்சாரி கோலங்கொண்டு அவர்களை ஆராயமுற்படுகின்றான். இவ்வாறு அவன் வடிவங்கொண்டு செயல்படும் போது அவனுடைய சிந்தனைத் திறம் வெளிப்படுவதை ரெட்டியார் காட்டுகிறார்.

அநுமனின் சிந்தனை ஓட்டத்திற்கு எடுத்துக்காட்டாக ரெட்டியார் குறிப்பிடும் பாடல்:

"செவ்வழி உள்ளத் தானும்
        தெரிவுற எதிர்சென்று எய்திக்
கவ்வையின்று ஆக நுங்கள்
        வரவெனக் கருணை யோனும்
எவ்வழி நீங்கி யோய்நீ?
        யார்? என வினவல் உற்றான்.

சிந்தனை 2: கும்பகர்ணன், இராவணன் முதலியானோர் குறித்து அறிதல்

பிராட்டியைத் தேடிக்கொண்டு 'அணுவின் மேருவின் ஆழியான் எனச் செலும் அநுமன் இலங்கை நகர் முழுவதும் தேடிக்கொண்டு வருகின்றான். கும்பகர்ணன், வீடணன், இந்திரசித்து, மண்டோதரி, இராவணன் முதலியவர்களைக் காணும்போது, அநுமன் நமக்கு ஒரு சிந்தனைச் செம்மலாகக் காட்சி தருகின்றான் என்கிறார் ரெட்டியார்

பிறகு இதனை தனித்தனியாக விளக்குகிறார். இராவணை அநுமன் காணும்போது அனுமன் பலவகைகளில் சிந்திப்பதை ரெட்டியார் எடுத்துக்காட்டுகிறார்.

திண்தலை பத்தும் தோள்கள்
        இருபதும் தெரிய நோக்கித்
கண்டனன்

இவன்தான் இராவணன் என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளுகின்றான்; கோபம் தலைக்கேறுகின்றது; அநுமன் சிந்திக்கின்றான். ஆனால் இங்ஙனம் சினத்தினால் பேசும் அநுமன் நான் இராவணனையும் இலங்கையையும் அழிப்பது சாகுந்தனின் கட்டளையன்று என்றெல்லாம் சிந்தித்துத் தனக்குள் சொல்லிக்கொள்கிறான்.

"மகளிர் எவரும் இராவணனுடன் படுத்து உறங்கவில்லை; இவன் நிலையும் புல் நிலைய காமத்தால் தவிக்கின்ற நிலையாக உள்ளது. பிராட்டியும் இவனுக்கு இணங்காமல் நல்ல நிலையில் உள்ளாள் என்ற நற்செய்தியும் எனக்குச் சொல்வதாக உள்ளது" என்று ஊகத்தால் உணர்ந்து கொள்ளுகின்றான்.

சிந்தனை 3: பிராட்டியைக் காணுதல்:

மலர்வனத்தில் பிராட்டியைக் காண்பேனாயின் என் துன்பம் தீரும்; இங்கும் கண்டிலேன் எனின், செய்யத் தக்கது ஒன்றும் இல்லை; இலங்காபுரியைப் பெயர்த்தெடுத்து, இத்திரிகூட மலையிலே வீசி எறிந்து நாசப்படுத்தி யானும் உயிர் விடுவேன் என்று அநுமன் சிந்திப்பதாகக் கூறுகிறார் ரெட்டியார்.[5]

பிறகு, பிராட்டியைக் கண்டபின்,

ஆடினன் பாடினன்
ஆண்டு மீண்டும் பாய்ந்து
ஓடினன் உலாவினன்
உவகைத் தேன்உண்டான்

மகிழ்ச்சியடைந்தான் என்று காட்டுகிறார்.

சிந்தனை 4: பகைவர் மதிக்குமாறு பெருங்காரியத்தை செய்தல்

அனுமன் பிராட்டியைக் கண்டு பேசிய இச்சிறு செயலோடு திரும்புதல் தனது ஆண்மைக்கு இழுக்காகும்; தனது ஆண்மையைப் பகைவர் மதிக்குமாறு பெருங்காரியத்தைச் செய்து போதலே தகுதி என எண்ணுகின்றான். அதேசமயம் பழிக்குப் பழி வாங்குமாறு இராவணனைச் சிறை வைத்தல் அல்லது வெல்லுதலைத் தான் செய்வதும் மாவீரனான இராமபிரானது பெருமையைக் குறைவு தருவதேயாகும்; அதுவும் கிடக்கும் என்று சிந்திக்கிறான். இராவணனைக் காண சோலையை அழிக்க முயற்சிக்கிறான். அப்போது சிந்தனைச் செம்மலாகக் காண முடிகின்றது என்கிறார். (பக். 60)

சிந்தனை 5: இராவணின் வலிமையைக் குறித்து எண்ணுதல்:

வருங்காலத்தில் இவண் வலிமைக் காகுத்தன் ஒருவனாலேயே வெல்லுதல் கூடும் மற்றையோர் எவரும் இவனை வெல்லமுடியாது. மேலும் இவனுடன் பல நாள்கள் கழிந்துவிடும். ஆகவே, நெருங்குதற்கரிய போர்த்தொழிலைத் தொடங்குவது நல்லது அன்று" என்றெல்லாம் அனுமன் சிந்திப்பதாக ரெட்டியார் எடுத்துக்காட்டுகிறார்.

3.5. விழையும் உருவினன்:

விழையும் உருவினன் என்ற தலைப்பில் ரெட்டியார். அனுமன் மேற்கொள்ளும் பன்னிரெண்டு உருவமாற்றங்கள் குறித்து விளக்கி அவனை விழையும் உருவினனாக விளக்குகிறார்.

2.5.1. முதல் உருவமாற்றம்:

ஒருசமயம், காற்றின் வேந்தன் தன் மகன் அநுமனை நோக்கி "நீ திருமாலுக்கு அடிமைசெய்' என்றான். அப்பொழுது மாருதி 'யான் திருமாலை எங்ஙனம் அறிவது? என்று வினவ, வாயுதேவன், 'எவரைக் கண்ட மாத்திரத்தில் காரணமின்றி உனக்கு அளவற்ற பேரன்பு உண்டாகின்றதோ அவரையே திருமால் என்பதாக அறிக என்று சொல்லியிருந்தான். அதனைச் சிந்திக்கின்றான்; மாணியாக உருமாற்றிக் கொண்டது, முதல் உருவ மாற்றம் ஆகும் (பக். 65)

2.5.2. இரண்டாவது பேருருவம்:

இராமலக்குமணர்கள் அதிசயமடையும்படி எடுத்த பெரிய உருவம் இரண்டாவது பேருருவம் ஆகும்.

2.5.3. மூன்றாவது பேருருவம்:

சுயம்பிரபையைச் சந்தித்தபோது பிலம் முதல் ஆகாயம் வரையில் ஒரே வழியாகத் திறக்குமாறு தனது கைகளைத் தூக்கிக்கொண்டு பேருருவம் கொள்ளுதல் மூன்றாவது பேருருவம் ஆகும்.

2.5.4. நான்காவது பேருருவம்:

பிராட்டியைத் தேடுவதற்காகத் தென்திசை வந்த வானரக் கூட்டம் மகேந்திர மலையின் அடிவாரத்தில் தங்குகின்றது. அப்போது உச்சிக்கு ஏகும் அநுமன் எடுத்த வடிவம் நான்காவது பேருருவம் ஆகும்.

2.5.5. ஐந்தாவது பேருருவம்:

சுரசை என்ற அரக்கி தனக்கு ஏற்ற உணவுப் பொருள் நீ என வாயைத் திறந்து நின்றபோது திக்கு ஆர் அவள் வாய் சிறிதாம் வகை சேணில் நீண்டான் என வடிவம் கொண்டது ஐந்தாவது பேருருவம் ஆகும்.

2.5.6. ஆறாவது பேருருவம்:

பிராட்டியைக் காண வந்த இராவணனுக்கு இராமனின் பலத்தைப் புலப்படுத்த விழைகிறான். இவ்வாறு அவன் கொண்ட பேருருவமே ஆறாவது பேருருவம் ஆகும் என ரெட்டியார் விளக்குகிறார்.

2.5.7. ஏழாவது பேருருவம்:

பஞ்சசேனாபதிகள் படையைத் திரட்டி வரும்போது மீயுயர் விசும்பையும் கடக்க வீங்கி எடுத்த பேருருவம் ஏழாவது பேருருவம் ஆகும்.

2.5.8. எட்டாவது பேருருவம்:

இந்திரசித்தன் அநுமன் மீது அம்புகளைப் பொழிந்தபோது நெடுஞ்சினங்கொண்ட அநுமன் கொண்ட பேருருவம் இது. இதுவே எட்டாவது பேருருவம் ஆகும்.

2.5.9. ஒன்பதாவது பேருருவம்:

இராவணனுக்கும் இலக்குவனுக்கும் முதற்போர் மூண்டபோது "இம்மாய்ப் போரைத் தவிர்; பின் போர்கள் உள்ளன" என்று கூறியவண்ணம் பெருருவம் கொண்டது ஒன்பதாவது பேருருவம் ஆகும். இதில்

இராவணனுக்கும் அநுமனுக்கும் இடையில் குத்துச் சண்டை பற்றிய சவால்கள் நடைபெற்றன.

2.5.10. பத்தாவது பேருருவம்:

அநுமன் சஞ்சீவி கொணர வேண்டி ஒருப்பட்டு ஆயத்தனாகிப் பேருருவம் கொள்ளுகிறான். அதுவே பத்தாவது பேருருவம் ஆகும்.

2.5.11. பதினொன்றாவது பேருருவம்:

இலக்குவனும் இந்திரசித்திற்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. அப்போது ‘நெடுமாருதி’ ஆன அனுமன் தேர் அளவிற்கு ஓங்கி வளர்ந்தமையே பதினொன்றாவது பேருருவம் என்று ரெட்டியார் தெளிவுபடுத்துகிறார்.

2.5.12. பன்னிரெண்டாவது பேருருவம்:

இது பரதன் நீ யார் எனக் கேட்டபோது கொண்ட வடிவம் பற்றியது. அநுமன் மானிட உருவத்தை நீக்கித் தனது முடித்தலம் வானத்திலுள்ளவர்களின் கண்களில் எதிர்ப்பட வளர்பவனானான். அதனைக் கண்டவர் அதிசயமும் அச்சமும் கொள்ளலாயினர். பின்னர், பரதனது வேண்டுகோட்கினங்கிப் பெருவடிவத்தைச் சுருக்கிக் கொள்ளுகிறான். இஃது அநுமன் கொண்ட பன்னிரெண்டாவது பேருருவம்.

3.6. அஞ்சா நெஞ்சன்:

அநுமன் அஞ்சா நெஞ்சனாக பல்வேறு நிலைகளில் நின்றமையை இக்கட்டுரையில் காணலாம். இதனை கடலைத் தாவும் இராம - இராவணப்போர் நிகழ்ந்தபோது ஈராக ஒன்பது உட்தலைப்புகளில் ரெட்டியார் பேசுகிறார். அவற்றை நிரல்பட காணலாம்.

3.6.1. கடல் தாவும் போது:

மூன்று முறை கடல் தாவும் போது அநுமன் அஞ்சா நெஞ்சனாக நின்றான் என்கிறார் ரெட்டியார். அவை, மைந்நாகம் மலை உயர்ந்த நின்றபோது, தன் மார்ப்பினால் தள்ளிவிட்டமை, சுரசை தன்னுடைய பசிக்கு உணவு நீ என்றபோது அஞ்சாமல் வடிவம் கொண்டமை, அதேபோல் அங்காரதாரை அரக்கியின் வாயில் புகுந்து வயிற்றைக் கிழித்துக்கொண்டு வந்தமை ஆகியவை ஆகும்.

3.6.2 தூதனாய்ச் சென்றபோது:

அநுமன் தூதாகச் சென்றபோது அஞ்சா நெஞ்சனாக விளங்கியமை இதில் கூறுகிறார் ரெட்டியார்.

3.6.3. கிங்கரர் வதையின்போது:

பல்வேறு ஆயுதங்கள் தாங்கிய வண்ணம்ன் அநுமனை கிங்கரர் எதிர்க்க, அவன் ஒரு மரத்தைக்கொண்டு அவர்கள் ஆயுதங்கள் அனைத்தையும் அவர்களையும் பலபடியாக அழித்தொழிக்கின்றான். அநுமனது பராக்கிரமத்தை ஈண்டும் காண முடிகின்றது.

3.6.4 சம்புமாலி வதை:

இராவணின் கட்டளைப்படி அநுமனை உயிரோடு பிடித்துவரச் சம்புமாலி சதுரங்கச் சேனையுடன் புறப்பட்டு வருகின்றான். அப்போது அநுமன் அஞ்சா நெஞ்சனாக செயல்பட்டு போர் புரிகிறான். இதனை ரெட்டியார் கூறுகிறார்.

3.6.5. பஞ்சசேனாதிபதிகள் வதை:

சம்புமாலி மாண்ட செய்தியை அறிந்த இராவணன் பெருஞ்சினம் கொண்டு தானே புறப்பட, சேனாதிபதிகள் அவனை விலக்கி, இசைவு பெற்றுப் பெருஞ்சேனையுடன் புறப்படுகின்றனர். அநுமன் பேருருவம் கொண்டு, சதுரங்க சேனை அடங்கிய சேனைகள் அழிந்ததும் சேனாதிபதிகள் மாருதியை நெருங்குகின்றனர். அவர்கட்கும் இவனுக்கும் நடைபெறும் கடும் போரில் ஐவரும் ஒருவர்பின் ஒருவராக மாளுகின்றனர். இங்கு அநுமன் அஞ்சா நெஞ்சனாக செயல்பட்டு போர் புரிகிறான். இதனை ரெட்டியார் எடுத்துரைக்கின்றார்.

3.6.6. அக்ககுமாரன் வதை:

பஞ்சசேனாதிபதிகள் மாண்டபிறகு திரும்பவும் இராவணன் போர் செல்ல முயற்சி செய்கிறான். அதற்கு அக்ககுமாரன் தானே செல்கிறேன் என்கிறான். பிறகு அக்ககுமாரனுக்கும் அனுமனுக்கும் இடையில் போர் நடக்கிறது. இதில் அக்ககுமாரன் அநுமனின் வாலால் பிணிக்கப்படுகிறான். இதில் அநுமனின் அஞ்சா நெஞ்சம் வெளிப்படுவதாக ரெட்டியார் கூறுகிறார்.

3.6.7. இந்திரசித்தின் பிரவேசம்:

இந்திரசித்திற்கும் அநுமனுக்கும் இடையில் போர் மூண்டபோது எப்படி அநுமன் அஞ்சா நெஞ்சனாக இருந்தான் என்று இதில் ரெட்டியார் கூறுகிறார்.

3.6.8. வாலில் தீக்கொளுவப்பட்டபோது:

வாலில் தீ கொளுத்தப்பட்டபோதும் அநுமன் அஞ்சாது இலங்கையே அழித்ததை இதில் கூறுகிறார் ரெட்டியார்.

3.6.9. இராம - இராவணப்போர் நிகழ்ந்தபோது:

இதில் குத்துப் பரிமாற்றம் நடந்தபோது, இலக்குவன் உடலைத் தூக்க முயன்றபோது, அநுமன் வாகனமாக அமைதல், அதிகாயன் தலையீட்டின் போது, இந்திரஜித்துடன் மோதும் போது வெளிப்பட்ட அநுமன் அஞ்சா நெஞ்சை ரெட்டியார் இதில் விளக்குகிறார்.

3.7. இராம தூதன்:

'அநுமன்' என்றாலேயே அது இராமனைத்தான் குறிக்கும். இராவணன் அநுமனை யார் என வினவும்போது அவன் மறுமொழியில் அவன் வாக்காக,

அல்லியங் கமலமே
  அனைய செங்கண்ஓர்
வில்லிதன் தூதன்யான்

என்று தன்னை 'இராமதூதன் என்றும்,

பின்னர்,

"......
தன்மகன் அவன்தன் தூதன்
  வந்தனென்"

என்றும் கூறுவதில் தூதனாக அநுமன் அறிமுகம் செய்துகொள்ளும் இடத்திலும், வீடணன் தூதனைக் கொல்லலாகாது என்று கூறுமிடத்தும் அநுமன் தூதன் என்ற நிலைமைகளை அடைவதாக ரெட்டியார் கூறுகின்றார்.

அடுத்து, வள்ளுவர் கூறும் தூதனிற்குரிய தகுதிகள் கொண்டவனாக அநுமன் இருப்பதை நிரூபிக்கிறார். அதற்கான சில சான்றுகள்.

வள்ளுவப் பெருமான் ஒரு தூதனுக்கு வேண்டிய தகுதிகளாக உள்ளவற்றை

அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு

என்று காட்டுவார். இதுகாறும் நாம் அநுமனைப் பற்றி அறிந்தவற்றால் அவனுக்கு இயற்கை அறிவு நன்றாக அமைந்துள்ளது என்பதை அறிவோம். அவனது அளுமை மிக நன்றாகவே - எடுப்பாகவே - அமைந்துள்ளது என்பதையும் அறிவோம். அன்றியும்,

"காதல்நான் முகனாலும் கணிப்பரிய
கலையனைத்தும் கதிரோன் முன்சென்று
ஓதினான் ஓதநீர் கடந்துபகை
கடிந்துஉலகை உய்யச் செய்தான்"

என்பதால் அவன் சூரியனிடமிருந்து கல்வி கற்றது பெறப்படுவதால் அவன் சிறந்த கல்வி அறிஞன் என்பதும் தெளிவாகின்றது இவை மூன்றும் அவனிடம் பொருந்தி இருத்தலால் அவன் சிறந்த தூதனாகின்றான்.

சிறந்த தூதனிடம் அஞ்சாமையும் துணிவுடைமையும் தனக்கு வரும் ஏதத்திற்கு அஞ்சாமையும் இன்றியமையாதனவாக அமைந்திருக்க வேண்டும் என்பது பொய்யாமொழி தூதனாக வந்து இந்நகரத்தினுள் புகுந்தபின் நீ அரக்கர்களைக் கொன்றது என்ன காரணத்தால் என்று வினவ, அதற்கு அநுமன் சிறிதும் அஞ்சாது,

"காட்டுவார் இன்மை யால்கடி காவி
வாட்டி னேன்என்னைக் கொல்லவந் தார்களை
வீட்டி னேன்பின்னை மென்மையி னால்உன்றன்
மாட்டு வந்தது காணும் மதியினால்"

என்று மறுமாற்றம் உரைக்கின்றான்.

சிறந்த தூதனிடம் இருக்க வேண்டியவற்றை,

அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று

என்ற குறலால் வற்புறுத்துவார், வள்ளுவப் பெருந்தகை. இராவணன் விடுத்த வினாக்களுக்கு அநுமன் விடையறுத்த பாங்கினால் இவற்றை அறியலாம். என பல்வேறு நிலைகளில் அநுமன் தூதிற்குரிய இலக்கணத்தோடு செயல்படுவதை ரெட்டியார் கூறுகிறார்.[6]

பிறகு, இராம தூதனாகச் சென்ற அநுமன் பிராட்டி தூதனாகத் திரும்பிய நிலையில் தான் கண்டவற்றை இவ்வாறு கூறுவான் என பல செய்திகளைக் கூறும் ரெட்டியார், முடிவாக இதுகாறும் கூறியவற்றால் 'உய்த்துள்ள காலமெல்லாம் புகழொடும் ஓங்கி நிற்கும்' அநுமன் சிறந்த தூதனாக செயற்பட்டதை அறிந்து மகிழ்கின்றோம்.

தூய்மை துணைமை துணிவுடமை இம்மூன்றும்
வாய்மை வழியுரைப்பான் பண்பு"

என்ற குறிகளை எடுத்துக்காட்டி முடிக்கிறார்.

4.8. இராமபக்தன்:

இக்கட்டுரையில் அநுமனை இராமபக்தனாக நிரூபிக்கும் ரெட்டியார், "அடியேன் அயோத்தியில் தங்கிப் பல இடங்களைச் சுற்றி பார்க்கும்போது இராமபக்தியைப் பற்றி அங்கு நிலையில் சான்றுகள்" என தனது அயோத்தி அனுபவங்களைக் கூறுகின்றார். அதில் அயோத்தியில் இடம்பெற்றுள்ள மசூதி, குப்தர் படித்துறை, அநுமான் தேக்ரி போன்றவற்றை வரிசையாக கூறுகிறார். பிறகே 'இந்த வரலாறுகளையெல்லாம் அறிந்துகொண்ட நிலையில், கம்பன் காட்டும் அநுமனின் இராம பக்தியைக் காண முற்படுவோம்' என அநுமனின் இராம பக்தியைக் கூறுகிறார். இதற்கான சான்றுகள்:

இராமலக்குவணர்களை முதன் முதல் கண்டவுடன், அவர்களை நெருங்கிப் பேசுவதற்கு முன்னதாகவே

அன்பினன் உருகுகின்ற
 உள்ளத்தன் ஆர்வத் தோரை
முன்பிரிந் தனையர் தம்மை
 முன்னியான் என்ன நின்றான்

இஃது இவன் தந்தை கூறியவாறு திருமாலுக்கு அடிமை செய்யுமாறு பணித்ததையொட்டி நடைபெற்றதாக கருதலாகக் கருதலாம்.

சுக்கிரீவனுக்கு இராமலக்குமணர்களின் தன்மையை எடுத்துக்கூறும் போதும், அடுத்து அவனுக்கு இராம பிராமனின் சிறப்பை விவரிக்கும்போதும் இராமலக்குமணர்களின் மகிமையைக் கொண்டாடும்போதும் அநுமன் அவர்கள்மீது கொண்டுள்ள பக்தி தெளிவாகின்றது.

தொடர்ந்து, தூதனாகக் கடல் கடந்தது முதல் இராமகாதையின் நிறைவு வரையிலும் அநுமனது இராம பக்தி பளிச்சிட்டுக் காட்டும் இடங்கள் பல என்று கூறி, அவற்றைக் காட்ட முயல்கிறேன் என்று பல சான்றுகளைக் கூறுகிறார். அவற்றுள் சில:

அங்காரதாரையைக் கொன்றொழித்த பிறகு, அரக்கர் முதலியோர் தரும் எல்லா வகைத் துன்பங்களையும் இராமநாம உச்சரிப்பே போக்க வல்லது என்று உறுதி கொள்ளுகின்றான் என்றும், பாசத்தால் இராவணன் முன் நிறுத்தப்பெற்ற அநுமன் இராமணன் விடுத்த வினாக்களுக்கு கூறிய மறுமொழியில் இராமபக்தியைக் காணலாம் என்றும் பல இடங்களை இராமாயணத்திலிருந்து சான்றுகாட்டு விளக்குகிறார்.

3.9. குணக்குன்றன்:

இந்நூலின் இறுதிகட்டுரையான இதில் அனுமனை குணக்குன்றனாக நிறுவுகிறார் ரெட்டியார். குணம் என்னும் குன்றேறி நின்றார் என்று வள்ளுவர் பெருமான் முனிவர்களைக் குறிப்பிடுவார். அந்த அரும் பெருந்தொடரை அநுமனைக் குறிப்பிடவும் பயன்படுத்தலாம் என்பது அடியேன் கருத்து என்கிறார். அநுமனை எடுத்த எடுப்பிலேயே

தன்பெருங் குணத்தால் தன்னைத்
தானலாது ஒப்பிலாதான்

என்று பாராட்டுவதைக் கண்டு மகிழலாம் என்று கூறுகின்றார்.

தொடர்ந்து, அநுமனிடம் அடக்கம் உடையவன், சமயோசித புத்தி உடையவன் பொறையுடைமை உடையவன் என சான்றுகளுடன் விளக்குகிறார்.

சான்றுகள்:

அடக்கம் அமரருள் உய்க்கும் என்ற பொன் மொழியை நன்கு உணர்ந்த சீலன் என்றும், இந்தச் சிறியதாகிய கடலையேயன்றி ஏழு பெருங்கடல்களையும் கடக்க வேண்டுமென்றாலும் அவ்வாறே செய்து பிராட்டியை மீட்கும் வல்லமையுடையவர் பலர் இருக்கவும், அடியேனை ஏவியது அடியேனது பெரும்பேறு என்கின்றான். இஃது அவையடக்கம் போல உள்ளது என்கிறார்.[7]

சமயோசித புத்தி பற்றி பல சான்றுகளுடன் கூறுகிறார். அடுத்து, பொறையுடைமை பற்றி கூறும் போது, அநுமனைப் பொறையுடைமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம் என்கிறார்.

மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியால் வென்று விடல்

என்பது வள்ளுவர் வாக்கு. மனச்செருக்கால் தங்கட்குத் தீயவற்றைச் செய்தாலும் அவற்றை பொறமையுடைமையால் வென்றவிடுக என்பது அப்பெருமானின் அறவுரை. வாலி சுக்ரீவனுக்கு இழைத்த தீங்குகள் மிகப்பல. அவற்றை எதிர்த்துச் சாமளிக்கத் தன்னிடம் ஆற்றலிருந்தும் அதனை பொறமையுடமையால் பொறுத்துக்கொண்டு காலமும் இடமும் வந்து சேரும் என்று பொறுமையுடன் காத்திருக்கச் செய்கின்றான், சுக்ரீவனை என்று பல உதாரணங்களைத் தருகிறார் ரெட்டியார். தனது கட்டுரையில் முடிவில்,

இங்குக் காட்டப்பெற்ற முப்பெருங்குணங்களால் அநுமன் நமக்கு ஒரு குணக்குன்றனாகக் காட்சி அளிக்கின்றான். இன்னும் அவனுடைய குணநலன்களைப் பலவாறு விரித்துரைக்கலாம். அப்படி விரித்துரைத்தால்

அஃது அவனுடைய வால்போல் நீளுமாதலால் அதில் ஈடுபடவில்லை.[8] என்று நயமாக கூறுகிறார்.

இவ்வாறாக எட்டு கட்டுரைகளில் அநுமன் குறித்து பெருமையாக பேசுகிறார் ரெட்டியார்.

அடிக்குறிப்புகள்

1. ந. சுப்புரெட்டியார், பரணி பொழிவுகள், பக். 13
2. மேலது, பக். 22
3. மேலது, பக். 35
4. திருக்குறள் - 467
5. ந. சுப்புரெட்டியார், பரணி பொழிவுகள், பக். 57
6. மேலது, பக். 116 - 117
7. மேலது, பக். 145
8. மேலது, பக் 160

இயல் - 4

சுப்புரெட்டியாரின் மொழிநடையும் உத்திகளும்

4.1. முன்னுரை:

4.2. நடை:

இலக்கியத் தோற்றம் எவ்வளவு பழைய வாய்ந்ததோ அத்துணை அளவு பழமை வாய்ந்தது இலக்கியச் சுவைப்புமாகும். ஓர் இலக்கியத்தினை முழுமையாகச் சுவைத்து அது வெளிப்படுத்தும் கருத்தோட்டத்தினையும் அக்கருத்து வெளிப்படும் முறைமையினையும் மயக்கமின்றி உணர்ந்து கொள்லப் பெரிதும் துணைசெய்வது மொழியாகும்.

மொழியியல் என்பது மொழியை விளக்கி அது செயல்படும். வகையினை வெளிப்படும் ஓர் அறிவியல் துறையாக வளர்ந்து வருகிறது. மொழியியலின் ஒரு கூறே மொழிநடையியல் ஆகும். நூலின் வெற்றி ஆசிரியரின் மொழிநடை என்னும் கருவியால் அமைகிறது.

4.2.1. நடை குறித்த விளக்கங்கள்:

நடை என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் காணப்படுகின்றன. அவை தம்முள் முரண்பட்டும் திகழ்கின்றன. இலக்கியத் திறனாய்வில் வழங்கி வரும் மிகப் பழமையான சொற்களுள் நடை என்பதும் ஒன்றாகும். இது முரண்பட்ட பொருள்களையும் விவாதத்திற்குரிய பயன்பாட்டையும் கொண்டிருக்கும் சொல் ஆகும். ஒரு விளக்கம் பிறிதொரு சூழலில் மறுக்கப்படவும் கூடும்.

நடை என்பது ஒரு வெளிப்பாட்டு முறை ஆகும். அது மொழியியல் சாராத கூறுகளை மொழியியல் கலைச் சொற்களின் மூலம் விளக்க வாய்ப்பளிக்கும் ஒன்றாகும். செய்யுளிலும், உரைநடையிலும் காணப்பெறும் வெளிப்பாட்டுக் கூறுகள் நடை எனப்படும். ஓர் ஆசிரியர் ஒரு செய்தியை எவ்வாறு உரைக்கிறார் என்பதை இது குறிக்கும். ஓர் ஆசிரியருடைய சொற்களின் தெரிவைப் பரிசோதித்துப் பார்த்து பகுத்தாராய்ந்து மதிப்பிடுவதே நடை ஆகும். அவர் பேசும் முறைகள், வெளிப்பாட்டு முறைகள், வாக்கிய வடிவங்கள், பத்தி அமைப்புகள் என அவர் பயன்படுத்தக்கூடிய மொழிக்கூறினையும் அவற்றை அவர் பயன்படுத்தும் முறையை நடை கருத்தில் கொள்கிறது என்ற கருத்தை பழ. முத்துவீரப்பன் அவர்களின் தி. ஜானகிராமன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

4.2.2. நடை ஆய்வு முறைகள்:

ஓர் இலக்கிய ஆக்கத்தில் அமைந்த ஒலி முதலாக தொடை ஈறாக யாவற்றையும் நுட்பமாக கற்க அவற்றை இலக்கியப் படைப்பாளர் விருப்பத்துடன் பயன்படுத்துவதற்குக் காரணமாக அமைந்த சூழல் பண்பாட்டு முறை ஆகியவை தெரியவரும் என்ற கருத்தை இ. சுந்திரமூர்த்தி எடுத்துரைக்க அறிய முடிகிறது.[1]

4.3. எழுத்து நடை:

தமிழ் உலகில் சுப்புரெட்டியாரின் எழுத்து நடை தனித்தன்மை வாய்ந்தது. அவ்வகையில் இந்நூலில் ரெட்டியார் தனது எழுத்து நடையைச் சிறப்பாக வடிவமைத்துள்ளார்.

இராமபிரானது புகழ் அமிழ்தம் கேட்பவர் செவிகளுக்கு இனிமை தரும்; தேனாக இனிக்கும்; இராமபிரானது புகழைத் தனது செவிகளுக்குத் தேனாக அழகியதாகக் கொள்ளும் கவிக்கு நாயகன் - வானரத் தலைவன்[2]

வலிமையுடையவனே, வாலி தேவேந்திரனின் தப்பில்லாத புதல்வன்; முழு மதியம் விளங்கினாற்போன்ற வெண்ணிறத்தையுடையவன்; யமனுக்கும் கடப்பதற்கும் அரிய ஆணையுடையவன். ஒரே தாய் வயிற்றில் சுக்கிரீவனுக்கு முன் தமையனாகப் பிறந்தவன். ஒரே தாய் வயிற்றில் சுக்கிரீவனுக்கு முன் தமையனாகப் பிறந்தவன். வாலி அரசனாகவும், சுக்கிரீவன் இளவரசாகவும் இருந்து வந்து நாளில் எங்கள் கூட்டத்துக்குப் பகைவனான மாயாவி என்ற ஓர் அசுரன் எதிர்த்துப் போர் செய்தான். அவ்வாலியோடு போர் செய்ய முடியாமல் பின்வாங்கிய அந்த அசுரன் ‘இப்பூமண்டலத்தில் இருந்தால் வாலி தவறாமல்ட் தன்னைக் கொல்வான் என்று கருதிப் பாதாள லோகத்தில் ஒளிப்பதற்காகப் பாய்ந்து செல்லுவதற்கு அருமையான பூமியின் கீழுள்ள பெரும் பிலத்தினுள் (பிலம் - துவாரம் சென்றான்.[3]

4.4. தருக்க நெறிமுறை:

உரைநடையின் அமைப்பு பொருள் நிலையில் காரணகாரியத் தொடர்புடன் அமைந்திருந்தால் அத்தகைய உரைநடை தருக்க நெறிமுறையில் அமைந்த உரைநடையாகும்.

உதாரணமாக பல இடங்களில் சுப்புரெட்டியார்

இஃது அநுமனின் செயற்கருஞ்செயல்! இதனால் இராமகாதை இனிதாக நடைபெற வழி அமைகின்றது.

அநுமன் பிராட்டியைக் கண்டு செய்தியை இராகவனுக்குச் சொல்லியிராவிடில், இராம காதை அவலத்தில் முடிய ஏதுவாயிருந்திருக்கும்.

இந்நிகழ்ச்சிகள் நடைபெறாமல் போயிருப்பின் இராமகாதை செவிக்குத் தேனென இனித்திராது. துன்பக் கதையாக முடிந்திருக்கும்.[4]

4.5. வருணனை நெறிமுறை:

நூலாசிரியர்கள் தம் கட்டுரைகளுக்கு பின்னணியாக அமைந்த சூழலை விளக்கும் போது வருணனை நெறியைச் சிறப்பாகப் பின்பற்றியிருப்பதைக் காணலாம். அவ்வருணனைகள் பொருந்தியே அமைந்துள்ளன.

இராமன் இந்த வாக்குறுதியைக் கடைப்பிடித்தானா? இல்லை என்பதே மக்கள் தீர்ப்பு. இராமன் முதலியோர் புட்பக விமானத்தில் அயோத்திக்குத் திரும்புகின்றனர். அதனை அறிந்த பரத்துவாசமுனிவர் இருடிகள் சூழ இராமனை எதிர்கொள்ளச் செல்லுகின்றனர். அதனைக் கண்ணுற்ற இராமன் புட்பக விமானத்தை இறங்கச் செய்கின்றான். இராமன் விரைவாக முனிவன் முன் சென்று வணங்க, இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு மகிழ்கின்றனர்.

பரத்துவாசர் ‘இன்று எம் விருந்தாளியாக இருக்க’ என்று இராமனை வேண்ட அவனும் அவ்வாறே ஒருப்படுகின்றான். “பரதன் உயிர் பெரிதா, முனிவர் அளிக்கும் விருந்து பெரிதா என்பதை ஓராது விருந்திற்கு இணங்குகின்றான். இது பெருங்குற்றம். கணையாழியுடன் அநுமனைச் செய்தி கூறி அனுப்பியது சரிதான் என்றாலும் விருந்திற்குத் தங்கியது சரியன்று.

அதனால்தான் இராமன் 'சாப்பாட்டு இராமன்' ஆகின்றான். இது மக்கள் தீர்ப்பு. எத்தொழிலும் செய்யது உண்டு ஊர் சுற்றிபவனுக்குச் 'சாப்பாடு இராமன்' என்று வழங்கப்பெறும் சாட்டுப் பெயர். 'நடையில் நின்றுயர் நாயகனுக்கு' வழங்கப்பெறுகின்றது.[5]

4.6. மொழிபயன்பாடு:

ஓர் படைப்பில் இடம் பெற்றிருக்கும் மொழியின் பயன்பாடு அந்த ஆக்கத்தின் நடையின் அமைப்பை வடிவமைக்கிறது. எனவே இலக்கிய ஆக்கத்தின் இடம் பெற்றிருக்கும் மொழியின் இயல்பை ஆராய்ந்து விளக்கும் தன்மை நடைகுறித்த ஆய்வுகளிலும் கடைபிடிக்கப்படுகிறது.

சுப்புரெட்டியார் பலவகையில் மொழியைப் பயன்படுத்துகிறார்.

4.7. தொடர்நிலை:

வினாத்தொடர், விளித்தொடர், மரபுத்தொடர் என தொடர்களை அமைத்து ஒரு குறிப்பிட்ட கருத்தைப் புலப்படுத்துவதும் இலக்கிய நடையின் ஒரு பகுதியே ஆகும்.

4.7.1. விளித்தொடர்:

இளைய பெருமாள் பிழைத்துக்கொள்ளுகிறான். இந்த இருமுறைகளிலும் அநுமன் தலையீடு இராவிடில் இராமகாதையின் போக்கு எப்படிப் போயிருக்கும் என்பதை நாம் உய்த்து உணரலாம் அல்லவா?[6]

அநுமனது சிந்தனையோட்டம்; இவர்களைத் தேவர்கட்குத் தலைவர்களான மும்மூர்த்திகள் என்றால் அவர்கள் மூவர்; இவர்கள் இருவர்; வலிமை பொருந்திய வில்லைத் தாங்கியவர்களாகக் காணப்பெறுகின்றனர்.

இவர்களை ஒப்பவர் எவரும் இலர்; இவர்கள் செய்வதற்கு அரிய பொருள் ஒன்றும் இல்லை; இவர்கள் தன்மையை எப்படி ஆராய்வது?[7]

போன்றவை இந்நாவலில் இடம்பெற்றுள்ள விளித்தொடர்கள் ஆகும்.

4.7.2. இலக்கியத் தொடர்கள்:

சுப்புரெட்டியார் பல இராமயாணம், திருக்குறளில் இடம்பெறும் வரிகளைப் பயன்படுத்துகிறார்.

இங்ஙனம் சிந்தனையில் ஆழ்ந்தவன் யாவன்? கூறுவான் கம்பன், 'தன் பெருங்குணத்தால் தன்னைத் தானலாது ஒப்பிலாதான்' என்று.

புகழ் புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை' என்ற பொய்யாமொழிப்படி மனைவி கற்பு நிலை கலங்கினால் கணவனது புகழும் பெருமிதமும் ஒழிதல்பற்றிக் 'காகுத்தன் புகழொடும் பொற்பும் இன்று பொன்றும்' என்றும், பிராட்டியை இங்ஙனம் நிலைகுன்றக் கண்ட பின்பு தான் உயிர் வைத்திருப்பதில் பயன் இல்லை என்பதுபற்றி 'யான் இவன் பொன்றுவென்' என்றும், இங்ஙனம் அவள் கற்பழிவதற்குக் காரணமான இராவணன் அந்தத் தீவினைப் பயனால் பந்துமித்திரருடனும் ஊரோடும் தவறாமல் விரைவில் ஒழிவன் என்பதுபற்றி 'இவ் இலங்கையும் அரக்கரும் இன்று பொன்றுவர்' என்றும் கருதினன், காற்றின் மைந்தன். தான் கண்ணுற்றது இன்றைக்கே யாதலாலும் முன்னமே அவள் நிலை கலங்கியிருப்பின் அக்கொடிய வினையால் அரக்கர்கட்கும் அவர் ஊர்க்கும் அழிவு உண்டாயிருத்தல் கூடுமாதலால், இதுவரை அங்ஙனம் ஆகாமையால் இந்த ஒழுக்கக்கேடு அன்றுதான் நிகழ்ந்திருக்குமென்றும் கருதி 'இன்று' என்றனன். 'காகுத்தன் அருந்தேவி கற்பழிந்திருப்பின், அங்ஙனம் ஆதற்குக்

காரணமான இராவணனை அரக்கருடனும் இலங்கையுடனும் ஒழித்து யானும் என் உயிரை மாய்த்துக்கொள்வேன்' என்று அநுமன் கூறியதாகப் பின் இரண்டடிகட்குக் கருத்து காணலாம். 'இவள் பிராட்டியல்லள்' என்று கருதி இராவணனது மாளிகையுள் புகுகின்றான்.[8]

4.8. உத்திகள்:

கட்டுரையில் கையாலும் உத்திகளால் நூலானது தனிச் சிறப்பைப் பெறுகிறது. உத்தி மூலம் ஆசிரியரின் மொழித் திறனும் எழுத்தாற்றலும் வெளிப்படுவதோடு அல்லாமல் கலைப் படைப்பும் சிறப்புறுகின்றது. தான் அமைந்திருக்கும் கருத்துக்கள் வாசகர்களை சிறப்பாகச் சென்றடைய வேண்டும் என்று சில உத்திகளைக் கைகொள்வது நூலாசிரியரின் வழக்கமாகும். அவற்றை கட்டுரை உத்திகள் என்று வகைப்படுத்தலாம். ஆசிரியர் தம் காலத்தை ஒட்டியும், அவர் விளக்க எண்ணும் உள்ளடக்கத்தை பொருத்தும் மேலும் அவர் கட்டுரைகள் சென்று சேரும் வாசகர்களின் இயல்பைப் பொருத்தும் கட்டுரை உத்திகள் வேறுபடலாம். கட்டுரைக்கு பொருள் பொதிந்த தலைப்பை அமைத்ததோடு அல்லாமல் சிறந்த எழுத்து நடையையும் நூலாசிரியர் கைக்கொண்டு இருக்கிறார். சிறந்த சொல்லாட்சிகளையும் வர்ணிப்பு முறைகளையும் உவமை உருவகம் முதலிய அணிகளையும் கட்டுரை ஆசிரியர் தம் உத்திகளைக் கையாண்டுள்ளார் அவற்றை இனிக் காணலாம்.

4.8.1. நூலின் அமைப்பு:

நூலானது மொத்தம் எட்டு கட்டுரைகளைக் கொண்டு திகழ்கிறது. கட்டுரைகள் பல்வேறு தலைப்புகளில் இடம்பெற்று அடுத்து என்ன? அடுத்து என்ன? என்று ஆர்வத்தை தூண்டும் வகையிலும் அமைந்துள்ளது.

4.8.2. சொற்பொழிவு:

சுப்புரெட்டியார் கட்டுரைகளை சொற்பொழிவுகளாக தந்துள்ளார். படிப்போருக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

'அநுமன்' என்ற பெயரைச் சொன்னாலேயே கற்றவர் கல்லாதவர் மனத்தில் 'இராம தூதன்' என்றா கருத்தை எழும். ஆனால், கம்பன் படைத்த இராமகாதையில் எந்த ஓர் இடத்திலும் கம்பன் வாக்ககாகவோ, இராமன் வாக்காகவோ ஒரு செய்தியைச் சொல்லி, 'இதனை இன்ன இடத்திற்குச் சென்று, இன்னாரிடம் சொல்லி வா' என்பதாக இடம் பெறவில்லை. பிராட்டியைத் தேடி வருவதற்காகச் சுக்கிரீவனால் தென்றிசையில் அனுப்பப் பெற்றவர்களுள் அநுமன் ஒருவன் என்றும், அவர்களுள் அறிவிற்சிறந்த அநுமனை இராமன் தனியாக அழைத்து, அவனிடம் பிராட்டியின் அவயங்களை வருணித்தும், பிராட்டியிடம் சொல்லுமாறு சில அடையாளங்களைக் கூறியும், கணையாழியைத் தந்து அனுப்பியதுமான குறிப்புகள்தாம் காவியத்தில் உள்ளன.[9]

4.8.3. ஒப்பீடு:

கட்டுரைகளில் பல்வேறு இடங்களில் திருக்குறளை ஒப்பிட்டு படிப்போர் இன்பமடையும் வகையில் அமைந்துள்ளது.

அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு

என்று காட்டுவார். இதுகாறும் நாம் அநுமனைப் பற்றி அறிந்தவற்றால் அவனுக்கு இயற்கை அறிவு நன்றாக அமைந்துள்ளது என்பதை அறிவோம். அவனது அளுமை மிக நன்றாகவே - எடுப்பாகவே - அமைந்துள்ளது என்பதையும் அறிவோம். அன்றியும்,

"காதல்நான் முகனாலும் கணிப்பரிய
கலையனைத்தும் கதிரோன் முன்சென்று
ஓதினான் ஓதநீர் கடந்துபகை
கடிந்துஉலகை உய்யச் செய்தான்"

என்பதால் அவன் சூரியனிடமிருந்து கல்வி கற்றது பெறப்படுவதால் அவன் சிறந்த கல்வி அறிஞன் என்பதும் தெளிவாகின்றது இவை மூன்றும் அவனிடம் பொருந்தி இருத்தலால் அவன் சிறந்த தூதனாகின்றான்.

சிறந்த தூதனிடம் அஞ்சாமையும் துணிவுடைமையும் தனக்கு வரும் ஏதத்திற்கு அஞ்சாமையும் இன்றியமையாதனவாக அமைந்திருக்க வேண்டும் என்பது பொய்யாமொழி தூதனாக வந்து இந்நகரத்தினுள் புகுந்தபின் நீ அரக்கர்களைக் கொன்றது என்ன காரணத்தால் என்று வினவ, அதற்கு அநுமன் சிறிதும் அஞ்சாது,

"காட்டுவார் இன்மை யால்கடி காவி
வாட்டி னேன்என்னைக் கொல்லவந் தார்களை
வீட்டி னேன்பின்னை மென்மையி னால்உன்றன்

மாட்டு வந்தது காணும் மதியினால்"

என்று மறுமாற்றம் உரைக்கின்றான்.

சிறந்த தூதனிடம் இருக்க வேண்டியவற்றை,

அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு

இன்றி யமையாத மூன்று

என்ற குறலால் வற்புறுத்துவார், வள்ளுவப் பெருந்தகை. இராவணன் விடுத்த வினாக்களுக்கு அநுமன் விடையறுத்த பாங்கினால் இவற்றை அறியலாம். என பல்வேறு நிலைகளில் அநுமன் தூதிற்குரிய இலக்கணத்தோடு செயல்படுவதை ரெட்டியார் கூறுகிறார்.[10]

4.8.3. நீண்ட வாக்கியங்கள்:

சூழலின் சிறப்பையும் வேறுபாட்டையும் முதன்மையையும் உணர்த்துவதற்காக அதை விளக்கும் வாக்கியத்தை அடுத்து அமைந்த மற்ற வாக்கியங்களை விடவும் அளவில் நீண்டதாக அமைப்பது சுப்புரெட்டியாரின் இயல்பு எனலாம்.

பழிக்கு பழி வாங்குமாறு இராவணனைச் சிறை வைத்தல் அல்லது வெல்லுதலைத் தான் செய்வதும் மாவீரனான இராமபிரானது பெருமைக்குக் குறைவு தருவதேயாகும்; அதுவும் கிடக்கட்டும்' என்று அச்செயலையும் கைவிட்ட அநுமன், இராவணனைச் சேர்ந்தவர்களாகிய அரக்கரை முரியடித்து, அவன் பார்த்துக் கொண்டிருக்கையில் அவனது அரசமாதேவியான மண்டோதரியின் கூந்தலைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய்ச் சிறை வைத்துப் பழிக்குப் பழி வாங்கினால் மாத்திரம் தனது செய்கை சிறந்ததாகும் என்று கருதுகின்றான்.[11]

இது போன்ற பல நீண்ட வாக்கியங்கள் சுப்புரெட்டியாரின் நூலில் இடம்பெற்றுள்ளது.

4.9. முடிவுரை:

ஆய்வேட்டின் இறுதி இயலாகிய சுப்புரெட்டியாரின் நடையும், உத்தியும் என்பதில் கட்டுரையில் மொழி பயன்பாடு, நடை அமைப்பு, நூலில் பின்பற்றப்பட்டுள்ள வேறுபட்ட உத்திகள் ஆகியவை குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. பழ. முத்து வீரப்பன், தி. ஜானகிராமன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு பக். 259
2. ந. சுப்புரெட்டியார், அண்ணல் அநுமன், பக். 13
3. மேலது, பக். 29
4. மேலது, பக். 17
5. மேலது, பக். 76
6. மேலது, பக். 21
7. மேலது, பக். 47
8. மேலது, பக். 54
9. மேலது, பக். 114
10. மேலது, பக். 116 - 117
11. மேலது, பக். 59

ஆய்வு முடிவுகள்

"சுப்புரெட்டியார் காட்டும் அநுமன்" என்ற தலைப்பில் நான்கு இயல்களில் வழி கண்டறியப்பட்ட முடிவுகள் கீழ்கண்ட வகையில் பெறப்படுகின்றன.

- ✓ சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும் என்ற தலைப்பிலமைந்த முதல் இயலில் நூலாசிரியரின் தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான பிறப்பு, கல்வி, அலுவல் புரிந்த இடங்கள் குறித்த விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.
- ✓ அவருடைய பல்கலைக் கழக ஆய்வுகள் பற்றியும், அவருடைய நூற்றிற்கு மேற்பட்ட நூல்கள் எழுதியமைக்காக அவர் பெற்ற விவரங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.
- ✓ தமிழ் இலக்கியங்களில் அநுமன் என்பது இரண்டாவது இயலாகும். இவ்வியலில் தமிழ் இலக்கியத்தில் இடம்பெறும் அநுமன் பற்றிய பொதுச் செய்திகள் பொதுவாகத் திரட்டப்பட்டுள்ளன.
- ✓ அநுமன் பெயர்க்காரணம், இராமயணத்தில் அநுமன் சஞ்சீவி மலையைக் கொணர்ந்தமை, இதயத்தைத் திறந்து காட்டுதல், மகாபாரதத்தில் அநுமனின் இடம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.
- ✓ இந்நூல்களில் மட்டுமல்லாது அபிதான சிந்தாமணியில் இடம்பெறும் அநுமன் குறித்த செய்திகளும் தொகுக்கப்பட்டுள்ளன.
- ✓ மூன்றாவது இயல் சுப்புரெட்டியார் கட்டுரைகளில் அநுமன் ஆகும். இதில் சுப்புரெட்டியாரின் அண்ணல் அநுமன் நூலின் அமைப்பு போன்றவை விளக்கப்பட்டுள்ளன.

- ✓ எட்டு கட்டுரைகள் கொண்ட இந்நூலின் முதல் கட்டுரையில் கவிக்கு நாயகனில் எப்படி ரெட்டியார் நாகரீகப்பேச்சு உள்ளிட்ட உட்தலைப்பிட்டு அநுமனைக் கவிக்கு நாயகனாக நிறுவுகிறார் என்பது விளக்கப்பட்டுள்ளது.
- ✓ இரண்டாவது கட்டுரையான சொல்லின் செல்வனில் ரெட்டியார், அநுமனை பார்பணிய வடிவத்தை மேற்கொண்ட போது, பிராட்டியைக் கண்டபோது, பகைவர் மதிக்குமாறு பெருங்காரியத்தைச் செய்யும் போது என பல்வேறு சான்றுகள் காட்டி அவரை சொல்லின் செல்வனாகக் காட்டுகிறார் என்பது சுருங்க எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
- ✓ விழையும் உருவினன் என்ற நான்காவது கட்டுரையில் எப்படி ரெட்டியார், பன்னிரெண்டு உருமாற்றங்கள் அடைந்து விழையும் உருவினனாக காட்சியளித்தார் என்பது விளக்கப்பட்டுள்ளது.
- ✓ அஞ்சா நெஞ்சம் என்ற ஐந்தாவது கட்டுரையில் பஞ்ச சேனாதிபதிகள், கிங்கர்கள் போன்றவர்களை வதைத்தபோது, தூது சென்ற போது என அநுமன் பல்வேறு இடங்களில் அஞ்சா நெஞ்சனாக செயல்பட்டமையை ரெட்டியார் காட்டும் விதம் கூறப்பட்டுள்ளது.
- ✓ ஆறாவது கட்டுரையான இராம தூதனில் தனித்த வகையில் தூதிற்கு வள்ளுவர் சொல்லும் இலக்கணங்களையும் அநுமன் தூதனாக செயல்பட்ட விதத்தையும் ரெட்டியார் ஒப்பிடுவது காட்டப்பட்டுள்ளது.
- ✓ ராம பக்தனாக அநுமன் வாழ்ந்ததை ரெட்டியார் நிறுவும் போக்கும் விவரிக்கப்பட்டுள்ளது.
- ✓ குணக்குன்றனாக அநுமன் விளங்கியமையை ரெட்டியார் தெளிவுருத்தும் நிலை காட்டப்பட்டுள்ளது.

- ✓ நான்காவது இயலான சுப்புரெட்டியாரின் மொழிநடை என்ற இயலில், மொழி, நடை குறித்த பொதுவான விளக்கங்கள் மட்டுமின்றி, சுப்புரெட்டியாரின் மொழி குறித்தும் ஆயப்பட்டுள்ளது.
- ✓ சுப்புரெட்டியாரின் தருக்க நெறியிலமைந்த வாக்கியங்கள், வருணனை நெறிமுறையிலமைந்த வாக்கியங்கள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.
- ✓ இலக்கிய மேற்கோள்களை பயன்படுத்தும் விதம், நூலின் அமைப்பு, சொற்பொழி, நீண்ட வாக்கியங்கள் பயன்படுத்தும் நோக்கம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

துணை நூற்பட்டியல்

1. ந. சுப்புரெட்டியார், வடவேங்கடமும் திருவேங்கடமும், நிவேதிதா பதிப்பகம், சென்னை - 83 முதற்பதிப்பு: 2004.

2. ந. சுப்புரெட்டியார், அண்ணல் அநுமன், ந. சுப்பு ரெட்டியார் நூற்றாண்டு விழாக்குழு பதிப்பகத்தார், சென்னை - 40 இரண்டாம் பதிப்பு: 2018

3. முத்து வீரப்பன், பழ. தி. ஜானகிராமன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு, அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம் - 02. முதற் பதிப்பு 1995

4. அபிதான சிந்தாமணி, சிங்காரவேலு முதலியார். ஆ,

5. வாழ்வியற் களஞ்சியம் தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 10

பரணிப்பொழிவுகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியர் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில்
பணியாற்றியபோழ்து, நிகழ்த்திய விரிவுச் சொற்பொழிவுகளின்
தொகுப்பு. திருவேங்கடவன் பல்கலைக் கழகமும் பாக்காலா
தமிழ்ச்சங்கமும் இணைந்து சித்தூர் மாவட்டத்தில் வாழும்
தமிழர்கள் பயன்பெறும் வகையில்
இச்சொற்பொழிவுகளை நடத்தின.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939561-6-8

eBOOK ~ *மின் நூல்*

PREFACE

Printed here are a series of six Extension Lectures on a twelfth century Tamil Classic called **Kalinkattup-parani**, which it was my pleasure and privilege to deliver at Pakala during 1965-1966 under the joint auspices of Sri Venkateswara University and the Pakala Tamil Cankam. Extension lectures, as a means of fulfilment of the public and social functions of a University and its Faculty members and as a means of active contact with the intelligentsia outside its portals, have an importance which can hardly be exaggerated. In this case, the lectures, as I can testify by my experience, supplied a long-felt desire and need of the Tamils of Pakala and places around it. The lectures are a critical exposition of the classic of Jayankontan which is couched in a significant minor mode of Tamil literature called Parani, a model classic which, in fact, inaugurated the **Parani** tradition. I am happy that, thanks to an enlightened gesture of the University administration, the lectures will reach a larger public through print. I take occasion to express my gratitude to the dynamic Vice-Chancellor Dr. D. Jaganatha Reddy and the Members of the Syndicate for arranging for the extension lectures, and later, sponsoring publication of the lectures in book form by the University. I thank the Pakala Tamil Cankam for hosting the lectures, and the lecturer too.

Department of Tamil,
S. V. University,
March 31, 1972.

N. Subbu Reddiar

NSR100
KAMATCHI AMMAL FELLOWSHIP

MA Students in Tamil

Awarded to :

மு கோவிந்தன்

(பதிவு எண்: 11700117009)

(பேராசிரியரின் ஒரு நூலை மையக்கருத்தாகக் கொண்டு
ஆய்வு செய்த முதுகலைப்பட்ட மாணாக்கர்)

உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும்,
தேர்ந்தெடுக்கப்பெற்ற நூலும் வழங்கப்பெற்றன.

ஆய்வேட்டின் தலைப்பு: பரணிப் பொழிவுகள் ஒரு பொதுப்பார்வை

பேராசிரியரின் நூல்: **பரணிப் பொழிவுகள்**

துறை: தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக்கழகம், ஆந்திர மாநிலம்

நெறியாளர்: முனைவர் சு மாரியப்பன்

வருடம்: மே 2019

www.nasubbureddiar100.in

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

பரணிப் பொழிவுகள்

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

“பரணி பொழிவுகள் ஒரு பொதுப் பார்வை”

BHARANI POZHIVUGAL ORU POTHUP PAARVAI

திராவிடப் பல்கலைக் கழக முதுகலைப் பட்டத்தின்
ஒரு பகுதியாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

A project report submitted to Dravidian University
in partial fulfillment for the award of M.A. Degree

ஆய்வாளர்

மு. கோவிந்தன்

பதிவு எண்: **11700117009**

Submitted by

M. GOVINDAN

Reg. No.: **11700117009**

நெறியாளர்

முனைவர். க. மாரியப்பன்

உதவிப் பேராசிரியர்

Under the guidance of

Dr. G. Mariappan

Assistant Professor

தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக் கழகம்
குப்பம் - 517 426, ஆந்திரபிரதேசம்

Department of Tamil Language & Translation Studies

Dravidian University, Kuppam - 517 426 (AP)

May 2019

நன்றியுரை

தமிழ் முதுகலைப்பட்டம் பெறுவதற்காக “பரணி பொழிவுகள் ஒரு பொதுப் பார்வை” என்னும் தலைப்பில் ஆய்வு செய்வதற்கு வாய்ப்பளித்த திராவிடப் பல்கலைக்கழகத்திற்கும் தமிழ்த் துறையின் மேனாள், இன்னாள் துறைத் தலைவர்கள் முறையே முனைவர் இராக. விவேகானந்த கோபால் அவர்களுக்கும் முனைவர் த. விஷ்ணுகுமாரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

ஆய்வேட்டினை அளிக்க அறிவுறுத்தி, மேற்பார்வை செய்த தமிழ்த் துறை உதவிப்பேராசியரும் நெறியாளருமான முனைவர் க. மாரியப்பன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

இவ்வாய்வை நெறிப்படுத்திய தமிழ்த் துறை உதவிப்பேராசிரியர்கள் திரு கு. பத்மநாபன் அவர்களுக்கும் முனைவர் பூ. சு. கணேஷ்மூர்த்தி அவர்களுக்கும், துறையின் ஆராய்ச்சி இணை அலுவலரான முனைவர் ப. முனுசாமி அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

ஆய்வை சிறப்பான முறையில் முடிக்க உதவிய முனைவர்பட்ட ஆய்வாளர்களுக்கும் சி. ஜெகதீசன், து. சரவணன், மா. சின்னசாமி உள்ளிட்ட வகுப்புத் தோழர்களுக்கும் முதலாமாண்டு மாணவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

எனக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் பெற்றோர் சி. முனிராஜ் - ஞானம்மா ஆகியோருக்கும் என் அண்ணன் முனிரத்தினத்திற்க்கும் ஏனைய நண்பர்களுக்கும் நூலகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நன்றியுடன்

மு. கோவிந்தன்

பொருளடக்கம்

இயல் எண்	தலைப்பு	பக்க எண்
	ஆய்வு அறிமுகம்	1
1	சுப்புரெட்டியார் வாழ்வும் பணியும்	3
2	பரணி இலக்கியப் பொதுச் செய்திகள்	16
3	பரணி பொழிவுகள் ஓர் அறிமுகம்	26
4	சுப்புரெட்டியாரின் மொழிநடை	49
	ஆய்வு முடிவுகள்	59
	துணைநூற்பட்டியல்	62

ஆய்வு அறிமுகம்

ஆய்வுத் தலைப்பு:

"பரணி பொழிவுகள் ஒரு பொதுப்பார்வை" என்பதே இவ்வாய்வின் தலைப்பு ஆகும்.

ஆய்வு நோக்கம்:

சான்றோரான சுப்புரெட்டியாரின் பொழிவுகளில் வெளிப்படும் பரணி நூல்கள், கலிங்கத்துப் பரணி குறித்த செய்திகள் எத்தகையன என்பதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

ஆய்வு எல்லை:

இருநூற்றிற்கும் மேற்பட்ட சுப்புரெட்டியாரின் அனைத்து நூல்களையும் எடுத்துக்கொள்ளாமல் அவருடைய "பரணி பொழிவுகள்" என்ற நூலை மட்டும் இங்கு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வு அணுகுமுறை:

விளக்கவியல் அணுகுமுறை இந்த ஆய்வேட்டில் பின்பற்றப்பட்டுள்ளது.

ஆய்வு அமைப்பு:

"பரணி பொழிவுகள் ஒரு பொதுப்பார்வை" என்பதே இவ்வாய்வின் தலைப்பில் அமைந்த இவ்வாய்வேடானது ஆய்வு அறிமுகம், ஆய்வு முடிவுகள் நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுப்பட்டுள்ளது.

1. **"சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும்"** என்பதே இவ்வாய்வின் முதல் இயல் ஆகும். இவ்வியலில் சுப்புரெட்டியாரின் பிறப்பு, கல்வி, பணி அனுபவங்கள் போன்றவை விவரிக்கப்பட்டுள்ளன.

2. ஆய்வேட்டின் இரண்டாவது இயல் ”**பரணி இலக்கியப் பொதுச் செய்திகள்**” என்பதாகும். இவ்வியலில் பரணி என்னும் சிற்றிலக்கியங்கள் குறித்து தமிழ் இலக்கியங்களில் இடம்பெறலாகும் செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன.

3. ஆய்வேட்டின் மூன்றாவது இயல் “**பரணி பொழிவுகள் ஒரு அறிமுகம்**” என்பதாகும். இந்த இயலில் சுப்புரெட்டியாரின் ‘பரணி பொழிவுகள்’ என்ற நூலில் இடம்பெற்றுள்ள ஆறு சொற்பொழிவுகளில் இடம்பெறும் பரணி, கலிங்கத்துப்பரணி பற்றிய சிந்தனைகள் எடுத்துரைத்தக்கப்பட்டுள்ளன.

4. “**சுப்புரெட்டியார் மொழிநடை**” என்பது இவ்வாய்வேட்டின் நான்காவது இயலாகும் இதில் சுப்புரெட்டியார் பொழிவுகளில் வழி வெளிப்படும் அவருடைய மொழிநடையை விளக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதியாக அமைந்த ஆய்வு முடிவுகள் என்ற தலைப்பின் கீழ் ஆய்வின் முடிவாக கிடைத்தவை தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

ஆய்வுக்கு துணைநின்ற மூல நூல், துணை நூல்கள் அகர வரிசையில் துணை நூற்பட்டியலாக தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இயல் - 1

சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும்

பேராசிரியர் டாக்டர் சுப்புரெட்டியார் வாழ்க்கை வரலாறும் அவரின் சிறப்புகளும் இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் சீரிய தமிழ்ப்பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டதாகும். அறிவியல் பேராசிரியராக வளர்ந்து பின்னர் தமிழ்ப் பேராசிரியராக வந்தவர். இவர்தம் தமிழ்ப்பணி ஈடு எடுப்புமற்றது. இந்நூற்றாண்டில் இணையற்ற எழுத்தாளராகத் திகழ்ந்தவர் ஆவார்.

பிறப்பு:

திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டம் பெரகம்பி என்னும் சிற்றூரில் தம் தாய்மாமன் பண்ணையார் இல்லத்தில் 27.08.1916 இல் செல்லப்பிள்ளையாகப் பிறந்தார். செல்வமாகவும் வளர்க்கப் பெற்றார். பெற்றோர் இட்ட பெயர் சுப்புரெட்டி (பாட்டன் பெயர்). இரண்டு வயதில் தந்தையை இழந்தார்.

பெற்றோர்:

தந்தையார் ஞானி நல்லப்ப ரெட்டியார், திருச்சி மாவட்டம், முசிறி வட்டம் கோட்டாத்தூர் என்ற சிற்றூரைச் சேர்ந்தவர். அன்னையார் காமாட்சி அம்மாள் பெரகம்பி என்ற சிற்றுர். 1926 வரை பெரகம்பியில் வளர்ந்து, கோட்டாத்தூருக்கு வந்தவர்.

குடும்பம்:

1936 இல் தம் தந்தை வழி ஒன்றுவிட்ட அத்தைமகள் செல்லபாப்பா அம்மையாரை மணந்தார். பல்லாண்டுகள் மக்கட்பேறு இன்றி 1949 இல் இராமலிங்கமும், 1953 இல் இராமகிருஷ்ணனும், மக்களாகப் பிறந்தனர். இராமலிங்கத்திற்கு மிருணாளினி, அனுபமா என்ற பெண் மக்கள் இருவர். அண்மையில் மிருணாலினிக்குத் திருமணமாகி கணவன் அரவிந்த விஷ்ணுராமனுடன் அமெரிக்காவில் உயர் பதவிகளில் ஒரே நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர். சொந்த இல்லத்தில் வாழ்கின்றனர். அனுபமாவுக்கு பதவி கிடைத்து நியூஜெர்சியில் வாழ்கின்றனர்.

கல்வி:

பெரகம்பியில் (1921-26) திண்ணை பள்ளியில் பயின்றார். இலிங்கச் செட்டியர் (கோமுட்டி) இவர்தம் சிறந்த ஆசிரியர். (1927-30)வரை கோட்டத்தூரில் தொடக்கக் கல்வி கற்றார். இவருக்கு ஆசிரியராக அமைந்த சந்திர சேகரய்யர் (இலிங்காயத்து) என்பாரிடம் மூதுரை, நல்வழி,நன்னெறி, அரிச்சந்திர புராணம் முதலிய நூல்களைக் கற்றார். மற்றோர் ஆசிரியராக அமைந்த வி.கே அரங்கநாத அய்யர் (பார்ப்பனர்) என்பாரிடம் ஆங்கிலம் வரலாறு, அறிவியல், தரைஇயல் முதலியவற்றைக் கற்றார். இவரே துறையூர் பெருநிலக்கிழவர் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் (1930) சேர்ந்தார். அங்கு இக்கால முறைப்படி கல்விபெற வாய்ப்பு ஏற்பட்டது. இப்பெருமகனாரே அடுத்த

ஆண்டு (1931) முசிறி உயர்நிலைப் பள்ளியில் 4 ஆவது பாரத்தில் சேர்ந்தார். (1931-34) இல் உயர்நிலைப் பள்ளிக் கல்வி சிறப்பாக

நிறைவேறியது. தொடர்ந்து 1934-1939 திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் வேதியியல் (சிறப்பு), இயற்பியல், கணிதம் (துணைப்பாடங்கள்) பயின்று 1936 இல் பி.எஸ்ஸி., தேர்வில் கல்லூரியில் முதல் மாணவனாகவும், மாநிலத்தில் மூன்றாவது மாணவனாகவும், தேர்ச்சி பெற்றார். (39-40) பதவி வாய்க்கவில்லை. 1940-41 சென்னை சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயின்று எல்.டி., பட்டம் பெற்றார்.

அலுவல்:

எல்.டி பட்டம் பெற்ற ஆண்டே துறையூர் பெருநிலக் கிழவர் நடுநிலைப் பள்ளி தொடங்கப் பெற்றதால் (1941) ஜீன் முதல் அதன் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார். கடினமாக உழைத்து தம் திறமைகளையெல்லாம் காட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக வளர்த்தார் (1945).

அலுவல் காலத்தில்:

தனியாகப் பயின்று தமிழ் வித்துவான் பட்டம் பெற்றார். (1945). எம்.ஏ. பயில சட்டம் இடம்தரவில்லை. தம் பேராசிரியர் ஜெரோம் டி சௌசா(பாதிரியார்) ஆசிரியர் உதவியால் சட்டம் தளர்த்தப்பெற்றது. பி.ஏ., தேர்வு எழுதி (1947) பட்டம் பெற்றார். எம்.ஏ (தமிழ்) பயின்று கொண்டிருந்தபோது

1. காரைக்குடி அழகப்பா ஆசிரியர்க் கல்லூரி தொடங்கப் பெற்று அதில் தமிழ்ப் பேராசிரியர் பணி கிடைத்தது. 1951இல் தமிழ் எம.ஏ. பட்டம் பெற்றார். காரைக்குடியில் பத்து ஆண்டுகள் பல்லோர் வியக்கத்தக்க முறையில் பணியாற்றி நான்கு பயின்று முறை நூல்களை வெளியிட்டவர்.
2. 1960 முதல் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவியில் அமர்ந்தார். கடினமாக உழைத்து 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்,நம்மாழ்வார் தத்துவம்' பற்றி ஆராய்ந்து பிஎச்.டி. பட்டம் பெற்றார். இக்காலத்தில்,
    1) பல அறிவியல் நூல்களை எழுதி வெளியிட்டவர்.
    2) இரண்டு பேராசிரியர்களின் துணை கொண்டு தாவரவியல்,விலங்கியல், உடற் கூற்றியல் போன்ற உயிரியல் துறைகளை ஆழ்ந்து கற்று அவற்றில் அடிப்படையான அறிவு பெற்றார்.
    3) சுமார் 9 ஆண்டுகள் சென்னை அரசுடன் போராடி தமிழ் வளர்ச்சிக்கான மானியம் பெற்று தமிழ் எம்.ஏ ஆய்வுத் துறைகள் நிறுவினார். சுமார் எட்டு ஆண்டுகள் கடுமையாக உழைத்து தமிழகம் மெச்சும் வண்ணம் துறையைப் புகழோங்கச் செய்தார்.
    4) திருப்பதியில் பன்னாட்டுக் கழகம், பாக்காலா, சித்தூர், புத்தூர், நகரி ஆகிய இடங்களில் தமிழ்ச் சங்கங்கள் நிறுவி தமிழ் நடையாடும் பகுதிகளை ஒன்று சேர்த்து அங்கெல்லாம் தமிழ் இலக்கியக் கூட்டங்கள் நடைபெறச் செய்தார்.

5) துறை ஆண்டுவிழாக்களில் தமிழக அமைச்சர் வருவதைப் பங்கு பெறச் செய்தார். தவிர திரு. ஜி.டி. நாயுடு,குன்றக்குடி அடிகள், சரித்திர அறிஞர் மு. அருணாசலம், கம்பன் அடிப்பெடி சா. கணேசன், முதுபெரும் புலவர், கி. வேங்கடசாமி ரெட்டியார், தமிழ்க்கடல் எஸ்.கே ராமராசன்,சிந்தாமணிச் செம்மல் மு. இராமசாமி போன்ற அறிஞர்களையும் கருத்தரங்குகளில் பங்குபெறச் செய்து நிகழ்ச்சிகட்குப் பொலிவும் பெருமையும் சேர்த்தார். அமைச்சர் குழு முதலியோர்க்கு திருப்பதி பொதுமக்கள் சார்பாக வரவேற்புகள் நல்கவும் விருந்துச் செலவுக்கு திருப்பதியில் புகழ் பெற்ற உணவு விடுதி அதிபர் திரு. வேங்கடாசலம் அய்யரை (கேரளம்) அணுகி அப்பெருமானாரைச் செலவினை ஏற்கச் செய்தார்.

இவர் பங்கேற்ற துறைகள்:

1. **துறையூர்:**

- தலைவர்,டவுன் கோவப்பரேட்டில் சொசைட்டி.
- செயலாளர், மாவட்ட உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் சங்கம்.
- நிறுவனர், தலைவர் மாவட்ட தமிழாசிரியர் கழகம்.
- தலைவர், துறையூர் வட்ட தொடக்க நிலைப் பள்ளி ஆசிரியர் இணையம்.

2.திருப்பதி:

- தலைவர் திருப்பதி கலாச்சாரக் கழகம்.

- பாக்காலா, சித்தூர், புத்தூர் நகரி ஆகிய நான்கு இடங்களில் தமிழ்ச் சங்கங்கள் நிறுவி பல்வேறு இலக்கியக் கூட்டங்கள் நடைபெறச் செய்தார்.

ஓய்வுக்குப் பின்னர்:

1. தலைமைப் பதப்பாசிரியர், தமிழ்க் கலைக்களஞ்சியம் (தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை- 600 005.)-15 மாதங்கள்.
2. விருந்துப் பேராசிரியர் திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி – 517 502 (3 மாதங்கள்).
3. மதிப்பியல் பேராசிரியர் (தகைஞர்) காஞ்சி தத்துவ மையம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்(18 மாதங்கள்).
4. இயக்குநர், தெற்கு – தென்கிழக்கு ஆசிய மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம் (செ.ப.க. கட்டடம்) 6 ஆண்டுகள்.
5. வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்,தமிழ் இலக்கியத் துறை, மெரினா வளாகம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை -600 005. மூன்று பிஎச்.டி மாணவர்க்கு வழிகாட்டும் தகுதி பெற்றார். ஒருவர் பிஎச்.டி பட்டம் பெற்றார்.

பல்கலைக் கழகங்கள்:

1. கல்வி இயல் ஆலோசனைக் குழு- சென்னைப் பல்கலைக் கழகம் (1953-56) திருவேங்கடவன் பல்கலைக்கழகம் (பதவிப் பொறுப்பில்), மதுரை காமராஜர் பல்கலை கழகம் (வாழ்நாள்)

2. பேரவை- செ.ப.க.(53-56)- திருவேங்கடவன் பல்கலைக் கழகம் (பதவிப் பொறுப்பில்)
3. பாடத்திட்டக்குழு- திருவேங்கடவன், மைசூர்,பெங்களூர்,கேரளப் பல்கலைக் கழகங்கள்.
4. பேராசிரியர் நியமனக் குழு- சென்னை,மதுரை- காமராசர், திருவேங்கடவன் பல்கலைக் கழகங்கள்.
5. தேர்வாளர்- சென்னை, மதுரை- காமராசர்,திருவேங்கடவன் பல்கலைக் கழகங்கள்.
6. ஓர் உறுப்பினர் ஆணையம்- திருவேங்கடவன் பல்கலைக் கழகம் கல்லூரிகளில் உயர்நிலைத் தமிழ் தொடங்குவதற்கு பரிந்துரைத்தல்.

அரசு:

1. தமிழக அரசின் எழுத்துச் சீர்திருத்தக் குழு.
2. தமிழக அரசு நிதிஉதவி அளிப்பதற்குச் சிறந்த நூல்களை தேர்ந்தெடுக்கும் வல்லுநர் குழு.
3. அகவை முதிர்ந்த தமிழறிஞர்கட்கு ஊதியம் அளிப்பதற்காகப் பரிந்துரைக் குழு.
4. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மன்றம் உயர் மட்ட குழு.
5. அயல் மாநிலங்களிலும் அயல் நாடுகளிலும் தமிழ் பரப்புவதுபற்றித் திட்டம் வகுக்கும் குழு(அரசு அமைத்தது).
6. தமிழை அனைத்து நிலைகளிலும் கட்டாயம் ஆக்குவதற்கான வழிவகைகள் பற்றி ஆராய்ந்து பரிந்துரைக்கும் வல்லுநர் குழு.
7. திருமலை திருப்பதி தேவஸ்தானம்- நிதி உதவி அளிப்பதற்காகச் சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுக்கும் வல்லுநர் குழு.

அறக்கட்டளைப் பொழிவுகள்:

தம் வாழ்நாளில் இதுகாறும் 14 அறக்கட்டளைப் பொழிவுகள்(பல்கலைக் கழகங்களில்) நிகழ்த்தி அனைத்தையும் நூல் வடிவமாக்கிய ஒரே ஒரு பேராசிரியர் இவர்.

டாக்டர் பட்ட ஆய்வுகள்:

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் இவர்தம் அறிவியல் நூல்களை ஆய்ந்து ஒருவர் எம்.ஃ.பில் பட்டமும், சென்னை பல்கலைக் கழகத்தில் (உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் மூலம்) இவர்தம் அனைத்து நூல்களையும் ஆய்ந்து ஒருவர் பிஎச்.டி பட்டமும் பெற்றுள்ளனர்.

பெற்ற விருதுகள்:

1. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் அருங்கலைக்கோன்-1969.
2. பண்ருட்டி வைணவ சபை - ஸ்ரீ சடகோபன் பொன்னடி -1993.
3. மதுரை – காமராசர் பல்கலைக் கழகம் - தமழ்ப் பேரவைச் செம்மல் -1993 – வாழ்நாள் உறுப்பினர்- கல்வி ஆலோசனைக் கழகம்.
4. தமிழக அரசு – திரு.வி.க விருது -1995-ரூ. 10000.
5. இராசா சர் முத்தைய்ய வேள் விருது – 1994 -ரூ. 50000.
6. சென்னை ஆழ்வார் ஆய்வு மையம்- இராமாநுசர் விருது – 1996- ரூ. 25000.
7. சென்னைக் கம்பன் கழகம் - பேராசிரியர் இராதாகிருஷ்ணன் விருது – 1996- ரூ. 1000
8. மதுரை- காமராசர் பல்கலைக் கழகம் டி.லிட்., கௌரவப் பட்டம் - 1999.
9. தமிழக அரசு- கலைமாமணி – 1999 - மூன்று சவரன் தங்கப் பதக்கம்.

10. காஞ்சிப் பெரியவர் நூற்றாண்டு விழாக் குழு – சேவாரத்னா – 1999- ரூ.1000.

11. துறையூர் நகராண்மைக் கழகம் இவர் தம் பணியைப் பாராட்டி சிறப்பு வரவேற்பு – 2000 ஆண்டில்.

12. சி.பி. ஆதித்தனார் விருது -2001 - ரூ. 100000.

13. ஆய்வுத் தமிழகரசு- 2001- திருப்பெருந்திரு சோமசுந்தரர் குருவருள் அருட்பணி மன்றம்,சென்னை -ரூ.3000.

14. பொதுமறைச் செம்மல் -2002 – குருபழநி ஆதினம், திருக்குறள் பீடம், குருகுலம் மதுராந்தகம் - ரூ. 2000.

15. தமிழ்வாகைச் செம்மல் - 2003 – சேலம் தமிழ்ச் சங்கம் -ரூ. 10000.

புலமை:

தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, வடமொழி(சிறிதளவு) அறிவியல் - (7 துறைகளில்) எம்.எஸ்ஸி (தரத்தில்).

வெளிநாட்டுப் பயணம்:

1. 2002 ஏப்ரல், மே, சூன் அமெரிக்கா செல்லல். 4 மாநிலங்களைச் சுற்றிப் பார்த்தல், இரண்டு இடங்களில் பொழிவு.
2. 2003 –மே 1 – 15. இலங்கை செல்லல் - பெரும்பாலான இடங்கள் சுற்றிப் பார்த்தல்.
3. 2005 ஜீன் மலேசியா சிங்கப்பூர் செல்லல். சில இடங்களைச் சுற்றிப் பார்க்கத் திட்டம்.

தனிப் பண்புகள்:

1939 முதல் திருக்குறள் தோய்வு – ‘மனத்துக்கண் மாசிலனாதல்’ என்ற வாழ்வு. மனம், மொழி, மெய், இவற்றால பிறர்க்குத் தீங்கு செய்யாத வாழ்வு.

எதற்கும் கவலைப்படாத நெஞ்சம். கவலையால் பிரச்சனைகள் தீரா என்ற உறுதி. செய்வன திருந்தச் செய்தல் இவர் கோட்பாடு. கடமைகளை மறவாது செய்பவர். காலத்தைப் பொன்போல் போற்றுபவர். துறையூர், காரைக்குடி, திருப்பதி, சென்னை ஆகிய இடங்களில் இவரால் பயன் பெற்றவர்கள் பலர்.

போற்றிய பெருமக்கள்:

இவரால் போற்றப்பட்ட பெருமக்கள் காந்தியடிகள், திரு.வி.க., சித்பவானந்த அடிகள், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, தந்தைப் பெரியார், இராமாநுசர், தாயுமான அடிகள் ,இராமலிங்க அடிகள், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்த அடிகள், சைவ குரவர்கள் நால்வர், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பட்டினத்தடிகள், கவிஞர் தாகூர் பெர்னாட்ஷா முதலியோர் ஆவர்.

அவர் படைத்த நூல்கள்:

1. அகத்திணைக் கொள்கைகள்
2. அண்ணல் அனுமன்
3. அணுக்கரு பௌதிகம்
4. அணுவின் ஆக்கம்
5. அதிசய மின்னணு
6. அம்புலிப் பயணம்
7. அர்த்த பஞ்சகம்
8. அறிவியல் தமிழ்
9. அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்
10. அறிவியல் பயிற்றும் முறை
11. அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல் (மொழிபெயர்ப்பு)
12. அறிவியல் விருந்து
13. அறிவுக்கு விருந்து

14. ஆழ்வார்களின் ஆரா அமுது
15. இராக்கெட்டுகள்
16. இராமலிங்க அடிகள்
17. இல்லற நெறி
18. இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்
19. இளைஞர் தொலைக்காட்சி
20. இளைஞர் வானொலி
21. என் அமெரிக்கப் பயணம்
22. கண்ணன் பாட்டுத்திறன்
23. கம்பனின் மக்கள் குரல்
24. கல்வி உளவியல்
25. கல்வி உளவியல் கோட்பாடுகள்
26. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
27. கலியன்குரல்
28. கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி-ஒரு மதிப்பீடு
29. கவிஞன் உள்ளம்
30. கவிதை பயிற்றும் முறை
31. கவிமணியின் தமிழ்ப்பணி-ஒரு மதிப்பீடு
32. காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்
33. காலமும் கவிஞர்களும்
34. குயில் பாட்டு – ஒரு மதிப்பீடு
35. சடகோபன் செந்தமிழ்
36. சி.ஆர்.ரெட்டி(மொழிபெயர்ப்பு)
37. சைவ சமய விளக்கு
38. சைவ சித்தாந்தம்-ஓர் அறிமுகம்
39. சைவமும் தமிழும்
40. சோழ நாட்டுத் திருப்பதிகள்-1
41. சோழ நாட்டுத் திருப்பதிகள்-2
42. ஞானசம்பந்தர்
43. தந்தை பெரியார் சிந்தனைகள்
44. தம்பிரான் தோழர்
45. தமிழ் இலக்கியத்தில் அறம், நீதி, முறைமை

46. தமிழ் பயிற்றும் முறை
47. தமிழ்க்கடல் இராய.சொ.
48. தமிழில் அறிவியல் செல்வம்
49. தமிழில் அறிவியல்-அன்றும் இன்றும்
50. தாயுமானவர்
51. திருக்குறள் தெளிவு – உரைநூல்
52. திருவேங்கடமும் தமிழிலக்கியமும்
53. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
54. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
55. தொலை உலகச் செலவு
56. நமது உடல்
57. நவவித சம்பந்தம்
58. நாவுக்கரசர்
59. நினைவுக் குமிழிகள்-பாகம்-1
60. நினைவுக் குமிழிகள்-பாகம்-2
61. நினைவுக் குமிழிகள்-பாகம்-3
62. நினைவுக் குமிழிகள்-பாகம்-4
63. நீங்காத நினைவுகள்-1
64. நீங்காத நினைவுகள்-2
65. பட்டினத்தடிகள்
66. பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்
67. பரகாலன் பைந்தமிழ்
68. பரணிப் பொழிவுகள்
69. பல்சுவை விருந்து
70. பாஞ்சாலி சபதம்-ஒரு நோக்கு
71. பாட்டுத்திறன்
72. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
73. பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பீடு
74. பாரதீயம்
75. பாவேந்தரின் பாட்டுத்திறன்
76. புதுவை(மை)க் கவிஞர் பாரதியார்-ஒரு கண்ணோட்டம்
77. மலரும் நினைவுகள்

78. மலைநாட்டுத் திருப்பதிகள்
79. மாணிக்கவாசகர்
80. மானிட உடல்
81. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்
82. முத்தொள்ளாயிர விளக்கம்
83. மூவர் தேவாரம்-புதிய பார்வை
84. வடநாட்டுத் திருப்பதிகள்
85. வடவேங்கடமும் திருவேங்கடமும்
86. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்
87. வாய்மொழியும் வாசகமும்
88. வாழும் கவிஞர்கள்
89. வாழையடி வாழை
90. விட்டிணுசித்தன் விரித்த தமிழ்
91. வேமனர் (மொழிபெயர்ப்பு)
92. வைணவமும் தமிழும்
93. வைணவ உரைவளம்
94. வைணவ புராணங்கள்.

போன்ற நூல்கள் இவர் படைப்புகள் ஆகும். இதுவரை கூறப்பட்டவை அவரது வாழ்க்கை வரலாறு மற்றும் அவர் எழுதிய நூல்கள் ஆகும்.

பிறப்பு: ஆகஸ்டு – 27- 1916.

இறப்பு: மே- 1- 2006.

இயல் - 2
பரணி இலக்கியப் பொது செய்திகள்

2.1. முன்னுரை:

தமிழ் இலக்கியங்களை அகம், புறமென்று இரு வகையாகப் பகுப்பர். புறம் எனும் இலக்கியப் பிரிவில் இடம்பெறுவது பரணி இலக்கியமாகும். பகை மன்னரை வெற்றிக் கொண்டு, கள வேள்வி செய்த மன்னனின் வீரத்தையும், வெற்றியையும் புகழ்ந்துப் பாடுவத பரணிப் பாடுப் பொருளாகும். தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகள் எட்டினுள் விருந்தின்பாற்பட்டதாகும். விருந்து என்பது புதிய இலக்கியத் தோற்றத்தைக் குறிக்கும். பரணி இலக்கியம் பிற்கால சோழர் காலத்தில் முழுமைப்பெற்றதாயினும், அதன் தோற்றம் தொல்காப்பியத்திலும், சங்க நூல்களிலும் காணப்படுகின்றன. தொல்காப்பியம் புறத்திணையியலில் குறிப்பிடும் கள வேள்வி, கொற்றவை நிலை, முனே தேர்க்குரவை, பின்தேர்க் குரவை ஆகியவற்றின் கூட்டிணைப்பில் உருவானது தான் பரணி இலக்கியம். இது பாடாண் திணையை சார்ந்தது. புறநானூற்றில் கோவூர்கிழாரின் பாடலொன்றில், போர்க்களத்தில் பேய் கூழ் சமைக்கும் செய்தி இடம் பெற்றுள்ளது. பொய்கையாறில், நிகழும் களவழி நாற்பது போர் இலக்கியத்தின் முன்னோடியாக கொள்ளத்தக்கது.

2.2. பரணியும் பாட்டியல் நூல்களும்:

பாட்டியல் நூல்கள், பரணி இலக்கியத்தை விரிவாகப் பேசுகின்றன. அவ்விலக்கண நூல்கள் யானைப்படையை சிறப்பிக்கின்றன. பன்னிருப்பாட்டியல் போர்களத்தில் யானைகளை சாய்த்தவரே பரணிப் பெறுவதற்கு உரியவரென்றுக் கூறப்படுகிறது.

"யானையை சாய்த்தார் பன்னிரு ஆடுகளத்து அல்லாது யாவரும் பெறாஅர் பரணிப் பாட்டே..."(நூற்பா - 242)

பிரபந்த மரபியலிலும் (நூற்பா - 19)

ஆயிரம் யானைகளை ஆடுகளத்தில் வென்றவனுக்கு உரியது பரணி என்றுக் கூறுகிறது.[1]

போரில் பல யானைகளை வெற்றிக் கொண்டவன் மீது பாடப்படுவது பரணி எனலாம். கவிச்சகரவர்த்தி ஜெயங்கொண்டார் "முதலாம் குலோத்துங்கனின் வடக்கலிங்க வெற்றியை சிறப்பிப்பது" எனும் செய்தி - கலிங்கத்திப்பரணி.

கி.பி.12 - ம் நூற்றாண்டிற்கு முன்னரும், பரணி நூல்கள் இருந்தன. முதலாம் இராசாதிராசன், வீர ராசேந்திரன் ஆகியோரின் வெற்றிகளைப் புகழ்ந்துப்பாடிய பரணி நூல்கள் இருந்தன. இரண்டாம் இராசேந்திரன், கொப்பத்து போரை சிறப்பித்துப் பாடிய கொப்பத்து பரணியும் இருந்தது. இந்த நூல்களெல்லாம் இன்றும் பெயர் அறியும் நிலையிலேயே உள்ளன. போர் வெற்றியைப் பாடுவதே பரணி இலக்கியத்தின்

நோக்கமாக இருந்தது. பரணி இலக்கியம் வளர்ந்த போது புராணச் சாயலும், தத்துவச் சாயலும் பெற்றது. கலிங்கத்து பரணி முதலாம் குலோத்துங்கனின் வெற்றியைப் பற்றி பேசுகிறது.

தக்கயாக பரணி - தக்க யாகம் செய்ய முனைந்ததையும், வீர பத்திரன் அதை அழித்ததையும் விவரிக்கிறது. வாழ்க்கையை போர்க்களமாகக் கொண்டு அன்ம விடுதலைக்கு இடையூறாக நிற்கும் மோகம், பாசம், அஞ்ஞானம் ஆகியவற்றை வெற்றிக் கொள்ளுதல் என்ற நோக்கில் சமயம் சார்ந்த பரணிகள் தோன்றின. பரணிகள் 20 - ம் நூற்றாண்டில் உயிர்ப்புடன் திகழிவதை மு.பி.பாலசுப்பிரமணியத்தை சீனத்து பரணி அரங்க சீனிவாசனின் - வங்கத்து பரணி ஆகிய நூல்களில் அறியலாம்.

2.3. பரணி - பெயர்க் காரணம்:

பரணி பெயர் காரணம் குறித்து பல கருத்துக்கள் நிலவுகின்றன. தினைபுனத்தில் காவல் செய்வோர் பரண் ஒன்று அமைத்து அதன் மீது அமர்ந்து திணையை கவர வரும் பறவைகளை துரத்துவது போல போர்க்களத்தில் வீரன் ஒரவன் யானை மீது அமர்ந்து எதிரிகளை துரத்துவதால் பரணி எனும் பெயர் அமையலாயிற்று. தினைப்புனம் காப்போர் பரண் மீது இருந்து பறவைகளைத் துரத்துவது போல அரசன் வில், வாள் முதலிய படைக்களன்களால் அமைக்கப்பட்ட பரண் மீதிருந்து புலவர் பாடுதால் பரணி எனும் பெயர் பெற்றதென்றும் கூறலாம்.

அணி, மணி முதலியவற்றை வைக்கும் செப்பு பரணி எனப்படும். பல்வேறு வகையான கற்பனை நயமும், சுவையும் அமைந்த இலக்கியம் என்பதால் பரணி எனப் பெயர் பெற்றது என்பார்கள் ஒரு சிலர்.

பரணி நாளில் கூளிகள் காளிக்கு கூழ் சமைத்துப் படைக்கும் பாங்கினைக் கூறும் நூல் என்பதால் பரணி எனவும் பெயர் அமைந்தது என்பார்கள். பரணியில் பிறந்தவன் தரணி ஆள்வான் எனும் பழமொழிக்கு ஏற்ப புகழ்பெற்று விளங்குபவன் மேல் பாடுவதால் பரணி ஆனது என்பனர்.

காளியையும், யானையையும் தெய்வமாக உடையது பரணி நாள் மீன். இந்நாள் மீனால் பரணி எனும் பெயர் பெற்றது என்பனர் சிலர். இவ்வாறாக பரணி எனும் இலக்கியத்திற்கு பெயர் அமைப்பதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

பரணி இலக்கியத்தின் பெயரமைப்பு தனித்தன்மை வாய்ந்தது. போரில் தோற்றவன் பெயரை வைத்தோ, தோற்ற நாட்டின் பெயரை வைத்தோ பெயரமைப்பது மரபு. வடக்கலிங்கன் அனந்தவர்மனை முதலாம் குலோத்துங்கசோழ மன்னனின் படைத்தளபதி கருணாகரத் தொண்டைமான் வெற்றிக் கொண்டான். கலிங்க நாட்டை வெற்றிப் பெற்றதன் விளைவாக கலிங்கத்தி பரணி எனும் பெயரமைந்தது.

வீரபத்திரன், தக்கனை வென்றதால் தக்கையான பரணி எனும் பெயர் பெற்றது. இங்கனமே, பாசத்தை வதைத்ததால் பாசவதை பரணி, மோகத்தை வதைத்ததால் மோகவதை பரணி எனும் பெயர் பெற்றது.

2.4. பரணி இலக்கியங்கள்:

1. கொப்பத்துப் பரணி -
2. கூடல் சங்மத்துப் பரணி
3. கலிங்கத்துப் பரணி
4. தக்கயாகப் பரணி
5. ஆஞ்ஞுவதைப் பரணி
6. மோகவதைப் பரணி
7. பாசவதைப் பரணி
8. திருச்செந்தூர் பரணி
9. கஞ்சவதைப் பரணி
10. கலைச் சிதம்பரேசர் பரணி

முதலான நூல்கள் பரணி இலக்கியங்களாகும். இவற்றுள் காலத்தால் முற்பட்டது கலிங்கத்துப் பரணி ஆகும். இதன் ஆசிரியர் செயஙகொண்டார் ஆவார். இதன் காலம் கி பி 12 ஆம் நூற்றாண்டு ஆகும்

2.5. பரணி உறுப்புகள்:

பரணியில் இடம்பெறும் உறுப்புகளின் எண்ணிக்கைப் பற்றி பல்வேறுக் கருத்துக்கள் நிலவுகின்றன. புலவன் தான் புனையும் பரணியின் தேவைக்கு ஏற்ப பரணியில் இடம்பெறும் உறுப்புகளைக் கூட்டியோ, குறைத்தோ அமைத்துக் கொள்வான். கலிங்கத்து பரணியில் பதின் மூன்று உறுப்புகள் உள்ளன.

1. கடவுள் வாழ்த்து,
2. கடைத்திறப்பு,
3. காடு பாடியது,
4. கோவில் பாடியது,
5. தேவியைப் பாடியது,
6. பேய்களை பாடியது,
7. இந்திர சாலம்,
8. இராச பாரம்பரியம்,
9. பேய் முறைப்பாடு,
10. அவதாரம்,
11. காளிக்கு கூளிக் கூறியது,
12. களம் பாடியது,
13. கூள் ஆடுதல்,

தக்கயாக பரணியில் பதினொரு உறுப்புகள் உள்ளன.

1. கடவுள் வாழ்த்து,
2. கடைத் திறப்பு,
3. காடு பாடியது,
4. தேவியைப் பாடியது,
5. பேய்களைப் பாடியது,
6. கோயிலை பாடியது,
7. பேய் முறைப்பாடு,
8. காளிக்கு கூளிக் கூறியது,
9. கூள் ஆடுதலும், இருத்தலும்,
10. களம் காட்டல்,
11. வாழ்த்து.

கலிங்கத்து பரணியில் காணப்படும் இராச பாரம்பரியம் பல பரணி நூல்களில் இல்லை. ஈரடி தாழிசை யாப்பில் பல சந்தங்கள் அமைத்துப் பாடப்படுவது பரணி.

2.6. மோகவதைப் பரணி:

மதுரை நாயகம் பிள்ளையை பதிப்பாசிரியராகக் கொண்டு 1867 -ல் வெளி வந்தது எனத் தெரிகிறது. இதுவே, முதலில் அச்சிட்ட முதல் பரணி நூலாக இருக்கலாம். இன்றுக் கிடைக்கும் பரணி நூல்களில் பழமையானதாகக் கருதப்படும் கலிங்கத்து பரணி முதன் முதலாக கி.பி.1898 -ல் வெளி வந்தது என்பதை வாழ்வில் களஞ்சியம் வழி அறியலாகிறது.[2]

அஞ்ஞவதை பரணி என்ற பெயரில் இரு பரணி நூல்களும், மோகவதை பரணி என்ற பெயரில் இரு பரணி நூல்களும் காணப்படுகின்றன. இவற்றை சோதி பிரகாசமும், தத்துவராயரும் இயற்றியுள்ளனர்.

ய.மணிகண்டன் எழுதிய சிதம்பரப்பாட்டில் நூல் பரணி நூலின் தன்மைக் குறித்துப் பாடல்கள் அமைந்திருக்கின்றன.[3] அவற்றுள் ஒரு பாடல் உதாரணமாக,

"படைப்புக்குஆ யிரம்வேழம் எதிரார் போரில்
படப்போர்செய் தானுக்குக் கடவுள் வாழ்த்துக்
கடைதேதிறப்பு பாலைநிலம் காளிகோட்டம்
கழநிலை காளிக்குப் போய்ச்செல் பேய்க்கு

தொடர்களி சொலல் அதனால் தலைவன் கீர்த்தி
சொல்லல் அவந் சேறல்புற பொருள் தோன்றங்கபோர்
ஆடுதல்களம் விரும்பல் இவை நாற்சீர் ஆதி
அடி இரண்டில் ஏறாமல் பரணி பாடே.”

ஒரு நூலின் பொருளுக்கேற்ப அந்நூலில் வரும் பாடல்களில் சந்தம் அமையுமானால் அதற்கேற்ப இனிமை உண்டாகும் என்பதை நாம் அறிவோம்.

கலிப்பாவின் ஒரு வகையான கொச்சக கலி எனும் பாவின் உறுப்பாகிய ஈரடி கலித்தாழிசை என்ற உறுப்பே கலிப்பாடுவதற்கு சிறந்ததென கவிஞர் தேர்ந்தெடுத்திருக்கின்றார். எனவே, ஆனை ஆயிரம் அமரிடை வென்றவனைப்பற்றி புறத்திணைகள் விரவி வருமாறு புறத்திணைகள் பரவி பாடப் பெறுவது பரணி நூலாகும்.

“ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மாணவனுக்கு வகுப்பது பரணி” எனும் செய்தி இலக்கண விளக்கம் (நூற்பா - 838)- ல் பதியபெற்றுள்ளமைக் குறிப்பிடப்படுகிறது.

தமிழ் தாத்தா என்று அழைக்கப்படும் உ.வே.சுவாமிநாதன் அவர்கள் பரணி என்ற நால் மீன் காளியையும், எமனையும் தன் தெய்வமாகக் கொண்டதென்றும், அந்த நாள் மீனால் வந்தப் பெயரே இந்நூலுக்கு பெயராக அமைந்ததென்றும், இதுவே பொறுத்தமுடையது என்றும் கூறுகிறார்.

2.7. கலிங்கத்துப் பரணி தோன்றுவதற்கானக் காரணங்கள்:

தமிழர் புகழ், வெற்றி, போர், வீரம் இமைய நெற்றியில் இலட்சிணை பொறித்து கடல் கடந்துச் சென்றுக் காவியம் படைப்பது என்பது சிறப்பு எனக் கருதினர். தமிழில் உள்ள 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று கலிங்கத்து பரணி. கலிங்கத்து பரணி பேரிலக்கியம், போரிலக்கியம் தமிழ் பரணி நூல்களிலெல்லாம் தலைசிறந்தது, தனித்தன்மை வாய்ந்தது ஜெயங்கொண்டாரின் கலிங்கத்து பரணி.

ஒட்டக்கூத்தர் தம் பாடிய தக்கயாக பரணியில் தென்தமிழ் தெய்வ பரணியென்று கலிங்கத்து பரணியை போற்றிப் புகழ்ந்துப் பாடியிருப்பது, பரணிக்கோர் ஜெயங்கொண்டார் என்பதை மெய்பிக்கும். முதலாம் குலோத்துங்க சோழனை எல்லா நாட்டு அரசர்களும் கப்பப் பொருளுடன் வந்து சந்தித்தனர். அனந்தவர்மன் கப்பம் கட்டவில்லை. எந்ற செய்தி மந்திர ஓலையில் வந்தது. இதனைப் பார்த்த குலோத்துங்கன் முகம் கோபம் காட்டாமல் புன்னகைப் பூத்ததாம்.

இளி அலம்பு மத மாலைகள் கொண்டு அணைமான் அவனையும், கொணர் மீன் என்று மன்னனின் வாய் மலர் உதிர்ந்தது தான் தாமதம். வண்டையம்பதிக்கு அரசனான கருணாகரத் தொணன்டைமான் தலைமையில் வட கலிங்கம் நோக்கி கடல் போல படைவரிசை புறப்பட்டது. கங்கா நதி ஒரு புறமாகவும், படைக்கடல் மறுப்புரமாகவும் கலிங்கத்தை சுற்றி வளைத்தது கருணாகரனின் படை. கலிங்கப்போரில்

வெற்றிப் பெற்றுத் திரும்பினான் கருணாகரன். பரணிப் பாடினான் ஜெயங்கொண்டான். பூரிப்படைந்த குலோத்துங்கன் மெய் மறந்தான். பாட்டுக்கொரு பொன் தேங்காயை பரிசாக அளித்துப் போற்றினான். நினைக்க நினைக்க நெஞ்சம் விம்முகிறது.

2.8. முடிவுரை:

தமிழரின் வீரமும், தமிழரின் கொடையும் பாவலரைப் போற்றி பன்மை ஏட்டில் எழுதிக் காட்ட முடியாதவை. கலிங்கத்தை வென்றவன் கருணாகரன் என்றாலும் அதனினும் சிறப்பாக பரணி காலத்தையும் வென்று நிலைப்பெற்ற தமிழ் செல்வமாகிவிட்டது.

அடிகுறிப்புகள்

1. இலக்கண விளக்கம் - நூற்பா - 838
2. வாழ்வியல் களஞ்சியம் 109
3. ய. மணிகண்டன், சிதம்பரப்பாட்டியல், பக். 111

இயல் - 3

பரணி பொழிவுகள் ஓர் அறிமுகம்

3.1. முன்னுரை:

பரணி பொழிவுகள் என்ற நூலின் வாயிலாக நா.சுப்புரெட்டியார் அவர்கள் பல ஆய்வுத் தகவல்களை அளிக்கிறார்.மேலும் ஆறு உட் தலைப்புகள் கொண்ட இந்நூலானாது இவண் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.அது பின்வரும் இயலில் நிரல்பட தொகுப்பட்டுள்ளது.

3.2. கட்டுரைகளின் அமைப்பு:

சுப்புரெட்டியாரின் இருநூற்றுக்கும் மேற்பட்ட நுல்களில் ஒன்று 'பரணி பொழிவுகள்' என்ற நூல் ஆகும். இதனை வெளியிட்டவர்கள் ந.சுப்புரெட்டியார் நூற்றாண்டு கமிட்டி பதிப்பகத்தார் ஆவர். இந்நூலானது பிரிபேஸ், பின்னிணைப்பு ஆகியவை நீங்கலாக மொத்தம் ஆறு கட்டுரைகளை உடையது.அவ் ஆறு கட்டுரைகளின் தலைப்புகள்:

1. அறிமுகம்
2. கடை திறப்பு
3. பேய்கள் உலகம்
4. வரலாற்றுக் குறிப்புகள்
5. பரணி காட்டும் சுவைகள்
6. மும்மணிகள்

ஆகியவை ஆகும்.

இத்தலைப்புகளை ஒட்டி ரெட்டியார் பரணி பற்றிய பல்வேறு செய்திகளை எடுத்துக்காட்டுக் காட்டுகளுடன் விளக்குகிறார்.

3.3. அறிமுகம்:

அறிமுகம் என்ற முதலாவது கட்டுரையில் ந. சுப்புரெட்டியார் தனது பொழிவின் பின்புலத்தை விளக்கி உள்ளார். இதில் கலிங்கத்துப் பரணி பற்றிய பொதுவான செய்தியையும், பரணி என்ற சிற்றிலக்கிய வகைமையின் பெயர்க்காரணம், பரணி இலக்கணம், பரண உறுப்புகள், நூல் தோன்றுவதற்கான சூழ்நிலை என பல உட்தலைப்புகளைக் கொண்டது இந்நூல்.

இதில் பரணி வகைகளுள் கலிங்கத்துப் பரணி ஒரு முதல் நூல் என்பதை சிலப்பதிகாரத்துடன் ஒப்பிட்டு எழுதியுள்ளார். மேலும், சிலப்பதிகாரத்திற்கு இல்லாத பெருமை கலிங்கத்துப் பரணிக்கு உண்டெனில் அது ’மாடலன் மூலமாகக் கேள்வியுற்று கோவலன் வரலாற்றைப் பொருளாகக் கொண்டு இளங்கோ அடிகள் தம் காவியத்தை அமைத்தார். ஆனால், செயங்கொண்டாரோ தாம் நேரில் கண்ட, கேட்ட கலிங்கப் போர் வரலாற்றைப் பொருளாகக் கொண்டு தம் நூலை அமைத்துள்ளார்.கேள்வியுற்ற செய்தியைவிட, நேரில் கண்ட செய்தி தெளிவாக மனதில் அமையும் என்பதை நாம் நன்கு அறியலாம் என்கிறார்.

3.3.1. பெயர்க் காரணம்:

சிற்றிலக்கியங்கள் தற்காலத்தில் வளர்ந்துள்ளன.அதில் சிறப்புடையது பரணி.பரணிக்கான பெயர்க்காரணத்தை சுப்புரெட்டியார் தனியாக பேசுகிறார்.

'பரணி' என்பது நாளின் பெயராகும் என்பதை நாம் அறிவோம்.பரணி நாளில் கொண்டாடப்பெறும் போர் வெற்றி விழாவைச் சிறப்பித்துப் பாடப்பெறுவதால் பரணி என்ற நூலும் பெயர் பெற்றுவிட்டது.போர்க்குரிய கடவுள் கொற்றவை, காளி, கொற்றவைக்குரிய நாள் பரணி.பரணி நாளில் கொற்றவைக்குப் பலியிட்டு வெற்றிவிழாவை கொண்டாடுவது வழிவழி வந்துகொண்டிருக்கும் வழக்கம் ஆகும்.இதனை தேவ பாணியில் அடக்கிப் பேசுவார் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவரான பேராசிரியர் என்பவர். புறத்திணைகள் பலவும் நூலில் விரவி வருதலாலும் பாட்டுரைத் தலைவனைப் பெய்து சொல்லப்படுவதாலும் இங்ஙனம் கொண்டதற்கு ஒரு காரணமும் கூறுகிறார் அவர்." என இது போல பரணிக்கு பலர் கூறிய காரணங்களை எடுத்தியம்புகிறார்.

3.3.2. பரணி இலக்கணம்:

அடுத்து பரணி இலக்கணம் பற்றி கூற முற்படும் ந. சுப்புரெட்டியார்.போர் முகத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிக்கொண்ட வீரரை புகழ்ந்து பாடுவதை பரணி என்று வழங்குவர்.

"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மானவ னுக்கு வகுப்பது பரணி"[1]

என்ற இலக்கண விளக்கப்பாட்டியல் நூற்பாவால் இதனை அறியலாம். தவிர, பெரும் போர் புரிந்து வெற்றிபெற்ற வீரனைச் சிறப்பித்துப் பாடுவதையும் பரணி என்று வழங்கும் மரபு உண்டு' என்று கூறும் ரெட்டியார், பரணி என்பது வெற்றிபெற்றோனைச் சிறிப்பிப்பதே பரணி நூல் என்ற வழக்கு நிலை பெற்று இருந்தாலும் தோற்றோரைச் சார்ந்தே நூலக்குப் பெயரிடப்படும் முறையும் பரணி நூலின் பெயரால் அறியக் கிடக்கிறது என்று கூறி கலிங்கத்துப் பரணி என்பது தோல்வியுற்ற கலிங்க மன்னனின் நாட்டின் பெயரால் அமைந்துள்ளதன்றோ? என்றும் அதுபோல் தக்கயாகப் பரணி, கஞ்சவதைப் பரணி, இரணியவதைப் பரணி போன்ற தலைப்புகளையும் இதற்கு சான்றாகக் கூறுகிறார்.

மேலும், இந்த இலக்கணப் பகுதியில் பரணி இலக்கியமாவது கொஞ்ச்சக் கலியில் பாடப்பெறும் என்று கூறுகிறார்.கொஞ்சகக் கலியை ஈரடி கலித்தாழிசையால் கொண்டு பரணி இயற்றுவது ஏற்றது என்று கவிஞர்கள் தேர்ந்தெடுக்கின்றனர் என்கிறார்.

3.3.3. பரணி நூல்களில் தோற்றமும் வளர்ச்சியும்:

பரணி நூல்களின் தோற்றத்தனையும் வளர்ச்சியினையும் பற்றி சிந்திக்கும் சுப்புரெட்டியார், அது தொன்மையான காலத்தில் பிறந்தது என்கிறார்.கலிங்கத்துப் பரணியும் தக்கயத்துப் பரணியும் செய்ந்நன்றி காரணமாக பாடப்பெற்றவையாகும் என்கிறார்.

அடுத்து, ஒரு நூல் தோன்றுவதற்கான சூழ்நிலைகள் குறித்து சிந்த்துள்ள நா.சுப்புரெட்டியார், பேரிலக்கியம் தோன்றாது சிற்றிலக்கியம் தோன்றியமைக்கான காரணமாக அதற்கான சூழ்நிலை தோன்றாததே என்கிறார்.

3.3.4. பரணி நூலின் உறுப்புகள்:

பரணி உறுப்புகளைப் பற்றிப் பகர விரும்பும் ஆசிரியர், கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, பேய் முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது, வாழ்த்து போன்றவற்றை விளக்கிறார். அதற்கு சான்றாக, இலக்கண விளக்க நூற்பா பகுதியையும், பன்னிரு பாடியல் பகுதியினையும் சான்றாகக் கூறுகிறார்.

அச்செய்யுள்கள்:

கடவுள் வாழ்த்துக் கடைதிறப் புரைத்தல்
கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டம்
கடிகணம் உரைத்தல் காளிக் கதுசொலல்
வண்புகழ் உரைத்தல் எண்புதற் திணையுற

வீட்டல் அடுகளம் வேட்டல் (இலக்கண விளக்கம் நூற்பா 467)

தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை
மேவி அமரும் காளி கோயில்
கன்னியை ஏத்தல் அலகை விநோதம்
கனநிலை நிமித்தம் பசியே ஓகை
பெருந்தேவி பீடம் அழகுற இருக்க

அமர்நிலை நிமித்தம் அவள்பதம் பழிச்சா
மன்னவன் வாகை மலையும் அளவு
மரபினி தூரைத்தல் மறக்களம் காண்டல்
செருமிகு களத்திடை அடுகூழ் வார்த்தல்
பரவுதல் இன்ன வருவன பிறவும்
தொடர் நிலை யாகச் சொல்லுதல் கடனே[2]

3.3.4. கலிங்கத்துப் பரணி தோன்றிய காரணம்:

கலிங்கத்துப் பரணி தோன்றியத்து இரண்டுவித காரணங்கள் உள்ளன.அவை ஒன்று வாய்மொழி காரணம் இரண்டாவது செய்யுளை ஆதாரமாகக் கொண்டது.

வாய்மொழிக் கதை:

'பேச்சின் இடையில் புவியரசன் கவியரசனை நோக்கி வேடிக்கையாக 'கவிஞரே, கலிங்க நாட்டைச் சயங்கொண்டமையால், யானும் தங்களைப் போல் சயங்கொண்டான் ஆயினேன்' என்று கூறினான்.அதனைச் செவிமடுத்த கவிஞர் கோமான் 'அங்ஙனமாயின், சயங்கொண்டானைச் சயங்கொண்டான் பாடுதல் சாலப் பொருத்தமாகும்' என்று மறுமொழி உரைத்து இந்நுலை யாத்தான்.' என்பது ஆகும்.

செய்யுள்:

காவலர் ஈகை கருதுங்கால் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசுஒவ்வா - பூவில்நிலை
யாகாப் பொருளை அபயன் அளித் தான்புகழாம்
ஏகாப் பொருள் அளித்தோம் யாம்.

இதனை தொடர்ந்து, கலிங்கத்துப் பரணியின் நூலமைப்பை அவர் விளக்கிச் செல்கிறார்.

3.4. கடை திறப்பு:

கடை திறப்பு என்ற தலைப்பிலான இரண்டாவது பொழிவில் ந. சுப்புரெட்டியார், இதில் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன என்றும் அவற்றை தான் ஆராயவிருப்பதாகவும் தெரிவிக்கிறார்.இதில் கடைதிறப்பு என்பது கதவை திறக்குமாறு வேண்டுதலை உடையது என்பது இதன் பொருளாகும் என்று விளக்கம் தந்து தன்னுடைய ஆய்வினை நிகழ்த்துகிறார். அவர் கூறும் இரண்டு இரண்டு கருத்துக்கள்:

3.4.1. ஒன்று:

விசயதரனது பட்டினத்துள்ள மகளிர் கலிங்கப் போரில் பங்கு பெறச் சென்றிருந்த தங்கள் கணவன்மார் திரும்ப வரக் காலம் தாழ்ந்தமையால் அவர்களுடைய பிரிவால் கவன்று ஊடியும் தம் வாயிற் கதவுகளை அடைத்துக்கொண்டு வீட்டினுள்ளே இருக்க, கவிஞர் பெருமானாகிய சயங்கொண்டார் அவர்கள் வீட்டின் முன்புறம் அம்மகளிரின் இயற்கை அழகு செயற்கை அழகு மென்மைத்தன்மை, முன்னாட்களில் அவர்கள் ஊடியும் கூடியும் துய்த்த இன்பம் முதலியவற்றை எடுத்துக் கூறி அவர்களை அழைத்துக் கதவு திறக்கவும் கலிங்கப் போரில் வெற்றியைக் கேட்கவும் வேண்டுதல் என்பது.

3.4.2. மற்றொன்று:

செருக்களம் சென்ற தம் கொழுநர் குறித்த காலத்து வாராது தாழ்க்கக் கவலையுற்றும் ஊடியும் கதவுகளத் தாழிட்டுக் கொண்டு மகளிரைத் தம் மன்னனும் அவனுடைய தானைத் தலைவனும் அடைந்த கலிங்க வெற்றியைப் பாடுவதற்குத் தலை நகரிலுள்ள பல்வேறு மகளிரும் நாட்காலையே எழுந்து வாயிற்கடை துயிலெழுப்புதல் என்பது.

இதைத் தொடர்ந்து சில ஆய்வு முடிவுகளைக் கூறுகிறார். போருக்குச் சென்றிருந்த கணவர்களாகிய வீரர்கள் திரும்பி வர காலம் தாழ்த்தியமையால் அவர்களின் மனைவிமார்கள் கதவுகளை அடைத்துக்கொண்டு கவலையில் இருந்தார்கள் என்று கருதுவதற்கு எந்தக் குறிப்பும் காணப்பெறவில்லை என்றும் இப்பகுதி அம்மகளிரைப்பற்றியதே என்பதற்கும் எந்தச் சான்றும் தென்படவில்லை. ஆனால் இவற்றிற்கு மாறாக கொழுநர்களுடன் ஊடியும் கூடியும் இருந்த பாடல்களே அதிகம் இடம்பெற்றிருக்கிறது என்று சுப்புரெட்டியார் தனது ஆய்வுக் கருத்தைக் கூறுகிறார்.

மெய்யே கொழுநர் பிழைநலிய
வேட்கை நலிய விடியளம்
பொய்யே யுறங்கும் மட நல்லிர்
புனைபொற் கபாடம் திறமினே (தாழிசை 35)

என்ற பாடலை பார்க்கும் பொழுது இதில் கணவனின் உண்மையான தவறினை எடுத்துக்காட்டி அவருடன் புணர்ச்சிக்கு இடம்தராமல் மறுக்கின்றனர் மகளிர் சிலர்.இதனால் கணவர்கள் தங்களுடைய உண்மையான பிழையை எண்ணி மனவாட்டம் அடைகின்றனர்.ஆனால் வீரர்களின் மனைவிமார்கள் வீரர்களின் மனைவிமார்கள் உண்மையாக புணர

விரும்புகின்றனர். காம வேட்கையால் உறங்காமல் உறங்குவது போல் பாசாங்கு கொள்கிறார்கள்.

மேலும் பல பரணி நூல்களில் வரும் செய்திகளைக் கூறி விளக்கம் தந்துள்ளார் பரணி பொழிவின் ஆசிரியர்.

அவை பின்வருமாறு:

தக்கயாகப்பரணி, இரணியவதைப் பரணி இவைகளில் வரும் கடைதிறப்புகளில் வாரை மகளிர், நீரர மகளிர் மேரு கயிலை போன்ற இடங்களில் வாழும் மகளிர் முதலியோர் கடை திறக்குமாறு விளிக்கப்படுகின்றனர். கவிஞரே அவ்வாறு விளிப்பதாகக் கொண்டால், ஒட்டக்கூத்தரும், இரணியவதை நூலின் ஆசிரியரும் வானம், மேரு, கயிலை முதலான இடங்களுக்குச் சென்று உறக்கத்தில் கடவடைத்துக்கொண்டு இருக்கும் மகளிரைக் கதவுகளைத் தட்டுபவராக கூற நேரிடும். இது எவ்வாறும் பொருந்தாது என்பதைக் கூறுகிறார்.

சயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியில் மரபுகள் அமைந்த செய்திகளைப் பற்றி பேசும் சுப்புரெட்டியார் கலிங்க வெற்றிக் கொண்டாத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று தலை நகரத்திலுள்ள பல்வேறு மகளிரும் அதிகாலையிலேயே எழுந்து தம் தோழியின் வாயிற்கடை முன் நின்று அவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்புவதாக கொள்வது மிகவும் பொருத்தமுடையது என்று கூறுகிறார்.

இத்தகைய பண்டைய மரபு திருப்பாவை, திருவெம்பாவை முதலிய நூல்களில் பயின்று வந்துள்ளமையைக் கொண்டு வந்துள்ளதாகக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். இதற்கான சான்றுகள்:

திருப்பாவை 7 பாடல்
திருப்பாவை 18 பாடல்
திருவெம்பாவை 3 பாடல்
திருவெம்பாவை 8 பாடல்

மார்கழி நோம்பு கொண்ட மகளிர் ஆற்றுக்குச் சென்று நீராடிய பின்னர் தங்கள் நோம்பினை தொடர்வார்கள்.திருப்பாவையிலும், திருவெம்பாவையிலும், மகளிர் ஒருவரையொருவர் எழுப்புதல் வைகறையில் நடைபெறுவதாகாவே அறிகிறோம். மேலும், மரபுகளைப் பின்பற்றியே சயங்கொண்டாரின் எல்லா மங்கலங்களும் தொடங்குவதற்கு காலைப் பொழுதே பரணி விழா தொடக்கத்திற்கு உரியதாகக் கொண்டு தன்னுடைய நூலில் கடைதிறப்பு என்னும் பகுதியில் நாற்காலையிலேயே நிகழுமாறு அமைத்துள்ளார்.

தாழிசை 63, தாழிசை 64 (பக் - 37)

இவற்றைத் தொடர்ந்து வெற்றி விழாக்கள் கொண்டாடும் பண்டை மரபுகளையும் இது போன்று வெற்றி விழாக்களை வலியுறுத்தும் வேறு பல இலக்கியச் சான்றுகளையும் சுட்டியும், ஒப்பிட்டும் காட்டுகிறார் பொழிவின் ஆசிரியர்.

3.5. பேய்கள் உலகம்

பரணி பொழிவு நூலின் அடுத்தப் பகுதி பேய்கள் உலகம் ஆகும்.கவிஞர் கூறும் பேய்கள் உலகம் குறித்து இனி காணலாம்.பதிமூன்று இயல்கள் கொண்ட அச்சிறுகாப்பியத்தில் கடவுள் வாழ்த்து போக நான்கு பகுதிகளில் மக்கள் உலகினைப் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. மூன்று பகுதிகளில்

பேய்களின் தலைவியாகிய காளி தேவி அவள் வாழும் சூழ்நிலை அவள் திருக்கோயிலின் அமைப்பு ஆகியவையும் ஐந்து பகுதிகளில் பேய்களின் இயல்புகள் அவற்றின் செயல்கள் முதலியவை காட்டப்படுகின்றன. இந்த இரு உலகத்தினையும் இணைத்துக் காட்டும் திறனை இன்பத்தின் கொடுமுடிக்கும் கொண்டு செல்வதைக் காணலாம் என்கிறார் சுப்புரெட்டியார்.

பரணி இலக்கியத்தில் அமைந்த கற்பனையின் தன்மைகளை இரஸ்தின் என்ற திறனாய்வாளர் கருத்தினை வைத்து நிறுவுகிறார்.பிறகு சயங்கொண்டாரின் சிறப்பு கற்பனைத் தன்மைகளை விளக்கிச் செல்கிறார்.

3.5.1. காட்டின் இயல்பு:

பேய்களையும் பேய்களின் தலைவியாகிய காளி தேவியையும் கூறி சங்க இலக்கியங்களில் கொற்றவை என்றும் காளி தேவியைக் குறிப்பிடுவர் என்று எடுத்துக் கூறி சங்க நூல்களில் இடம்பெற்றுள்ள பாலை நிலத்தின் தன்மைகளைக் கூறி பேய்களில் உலகத்தை விவரிக்கிறார் சுப்புரெட்டியார்.

பல நாட்களாக பேய்கள் உணவின்றி இறந்துவிடுவோமா என்று நினைத்து காளி தேவியின் காலடியில் இருந்து நீங்காமல் இருந்தது.பேய்கள் அச்சம் தரும் தோற்றத்தில் இருந்தன.அவற்றின் வாய் குகைகளைவிட பெரியதாகவும் இந்த வாயினால் உணவு உண்டாலும் மகாராசன் கப்பல் போன்றது அதன் வயிறு உணவு இன்மையால் உடல் மெலிந்து மயங்கிக் கிடந்தன அப்பேய்கள்.

பேய்களின் உடல்களின் மீது கரிய கொம்புகள் போன்று உரோமங்களும், அவற்றின் முகத்தில் பாசி படர்ந்துள்ளது காதுகளில் ஆந்தைகள் நுழைந்ததால் வௌவால்கள் வலது காதுக்கும் இடது காதுக்கும் அலைந்தன.

இவ்வாறு பேய்களின் உலகத்தைப் பற்றி கூறி, காளி தேவியின் கோவில் அமைப்பு முறையைக் கூறுகிறார்.

குலோத்துங்கன் பகை அரசர்களைக் கொன்று அவன் மனைவிமார்களின் ஆபாரணங்களில் உள்ள ரத்தினங்கள் அன்னையின் கோவிலுக்கு அடித்தளமாக அமைக்கப்பெற்றது.

இறந்த வீரர்களின் கொழுப்பைச் சேறாகவும் உதிரத்தைத் தண்ணீராகவும் அவர்களின் தலைகளைக் கற்களாகக் கொண்டு கோவில் சுவர் எழுப்பப்பட்டுள்ளது.

3.5.2. அன்னை வழிபாடு:

தேவின் திருக்கோவில் மக்கள் உலகமும் பேய்கள் உலகமும் சந்திக்கும் பொதுஇடமாக அமைத்த செயங்கொண்டாரின் கற்பனைத்திறனைப் போற்றுகிறார் ரெட்டியார்.

காளி கோவிலுக்கு எருமைகளைப் பலியிடுவதையும் வீரர்கள் தங்கள் தலைகளை வெட்டி காளி தேவியின் கையில் கொடுக்கும் காட்சிகளும் இடம்பெறுகின்றன.சில இசை கருவிகள் ஒலிகளை எழுப்பு வீரர்களின் விலா எலும்புகளைச் சமித்தாகவும் இரத்தத்தை நெய்யாகவும் ஓமம் வளர்த்து காளி தேவிக்கு வேள்வி புரிந்து வழிபடுவார்கள்.

3.5.3. உண்ட களிப்பு:

பல நாட்களாக பசியில் இருந்த பேய்கள் உண்ட மகிழ்ச்சியால் மலைகள் கூத்தாடுவதுபோல் கூத்தாடுகின்றன.சில பேய்கள் ஆடைகளை மேலே வீசி பாடி விளையாடுகின்றன.இன்னும் சில பேய்கள் குலோத்துங்கன்

வெற்றியைப் பாடிக் கொண்டு இரண்டு கைகளையும் வீசிகொண்டு ஆடுகின்றன.சில பேய்கள் யானையின் வயிற்றினுள் புகுந்தும் விளையாடுகின்றன.

இதுபோன்று செயங்கொண்டார் தம் கற்பனைத் திறனைக்கொண்டு கவி பாடியுள்ளதாக ரெட்டியார் கூறுகிறார்.[3]

3.6. **வரலாற்றுக் குறிப்புகள்:**

வரலாற்றுக் குறிப்புகள் என்ற தலைப்பில் தனது நான்காவது பொழிவினை நிகழ்த்தியுள்ள ரெட்டியார், வரலாற்று ஆராய்ச்சி ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகமிக இன்றியமையாதது என்றும் அது முன்னோர் ஒழுகிக்காட்டிய உயர்ந்த நெறியாகும் என்று கூறுகிறார். அன்னோர் கொண்டுள்ள உயர்ந்த பண்புகளை எடுத்துக்காட்டுவது வரலாறு நூல் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்றும் வையத்துள் வாழ்வாங்கு வாழாதாற்கு வழியமைத்துத் தருவது வரலாற்றுத் துறையாகும் என்று வரலாறு பற்றிய சில பொதுச் செய்திகளைப் பற்றி பேசிவிட்டு வரலாற்றுக் குறிப்பிற்குள் புகுகிறார்.

மேலும் நாகரிகம் அடைந்துள்ள மேல் நாட்டு மக்கள், தம் நாட்டின் உண்மை வரலாறுகளை ஆய்ந்து பல நூல் வாயிலாக வெளிபடுத்துகின்றனர்.ஆய்வு கட்டுரைகள் வடித்து பல்லோர் அறியச் செய்கின்றனர்.

ஒரு நாட்டின் வரலாற்று மூலங்களை அறிந்து கொள்வதற்கு அந்நாட்டின் கல்வெட்டுகள் செப்பேடுகள் கோவில்கள் அங்கு காணப்பெறும் சிற்பங்கள், நாணயங்கள், இலக்கியங்கள் ஆகியவை மூலங்களாக

அமைகின்றன. அதில் உள்ள சில குறிப்புகளைக் கொண்டே வரலாற்று ஆசிரியர்கள் நூலை வரைகின்றனர்.அக்கால மக்களின் வாழ்க்கை வரலாறு நாகரிகம், பண்பாடு, வாணிகம் முதலிய பல்வேறு செய்திகளை இதன் மூலம் அறியலாம்.

கலிங்கத்துப்பரணியில் அக்கால சோழர்களின் வாழ்க்கை வரலாற்றை அறியலாம்."சோழ வளநாடு சோறுடைத்து என்ற பலமொழியை அறிவோம். சோழ நாட்டில் பசியும் பட்டிணியும் இன்றி வசியும் வளனும் பெற்று மகிந்தனர் மக்கள், அந்த நாட்டின் வளத்தைக் கூறும் வகையில்,

"ஒருபடி படியும் சீரிடம்
எழுகளிறு புரக்கும் நாடு"

புறம் - 40 பாடல்

என்று இலக்கிய செய்திகள் வாயிலாக அறியமுடிகின்றது.சைவமும் தமிழும் தழைத்தோங்கியது சோழர்கள் காலத்தில்தான்.விண் அளாவும் கோபுரங்கள் அமைந்த கோவில்கள் எழுப்பப்பெற்றதும், சிற்பக் கலைகள் செழிப்புற்றதும் அவர்கள் காலத்தில்தான்.அரசியல் அமைப்பில் பல்வேறு திருத்தங்கள் அமைக்கப் பெற்றமையும் அவர்கள் காலத்தில்தான்.கலிங்கத்துப் பரணியில் இராச பாரம்பரியம் என்ற பகுதியில் சோழர்கள் குலமுறை தொடக்கம் முதல் கிடைக்கப்பெறுகிறது.

இமையத்தில் வாழ்ந்துவந்த முதுபேயின் வாயிலாக காளிதேவிக்குச் சோழ அரசர்களின் வரலாற்றைக் கேட்டுவந்து உரைப்பதாக அமைந்திருக்கிறது கரிகாற்சோழன் வடவரசர்களை வென்று இமயம் வந்து தம் புலிக்கொடியைப் பொரிக்கிறான் என்ற செய்தி முதுபேயின் வாயிலாக அறியப்படுகிறது.

பரணியில் குறிப்பிடும் சில செய்திகளைப் பற்றி காண்போம்.முதலில் இராசராசன் அவன்மகன் ராஜேந்திரன் ஆட்சியிலும் சோழ நாடு எல்லை மிக விரிந்தது.மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டன.முதலாம் இராச இராசன் சேர நாட்டில் திருநந்தி கரையிலுள்ள சிவாலயத்தில் தான் பிறந்த ஐப்பசி திங்கள் சதய நாள் திருவிழாவை கொண்டாட ஏற்பாடு செய்தான். அந்த நாட்டில் உதகை என்ற நகரையும் வென்று வாகை சூடினான் இச்செய்தி கலிங்கத்துப் பரணியில் உதகைவென்ற கோன் என்று குறிப்பிடப்படுவதாக ரெட்டியார் தெரிவிக்கிறார்.

இதுபோல், தஞ்சை மாநாகரிலுள்ள கோவிலை நிறுவியவர் இவரே ஆவார் என்றும் ரெட்டியார் தெரியப்படுத்துகிறார்.

இராசராசனின் மகன் இராஜேந்திரனின் சிறப்புகளைக் கூறும் வகையில் வடநாட்டு அரசர்களை வென்ற போது கங்கைக் கரையில் களிறுகளுக்கு நீர் ஊட்டினான்.பர்மா நாட்டைச் சேர்ந்த கடாரத்தை வென்றான் இச்செய்தியானது 201 வது தாழிசையின் வாயிலாக அறியப்படுவதாகக் கூறுகிறார்.

இராசேந்திரன் எத்தனையோ போர்கள் புரிந்து வெற்றி பெற்றிருந்தாலும் இவன் கங்கையும் கடாரமும் கொண்டமைதான் அக்காலத்தில் மக்கள் மனதையும் புலவர்கள் உள்ளத்தையும் ஒருங்கே பிணித்துள்ளன.

இந்த வெற்றிச் சிறப்பினை செயங்கொண்டார் ஒட்டக்கூத்தர் போற்றி புகழுவார்கள் மேலும் இந்த செயல்களினால் இராஜேந்திரனுக்குக் கங்கை கொண்ட சோழன் கடாரம் கொண்டான் என்ற சிறப்புப் பெயர்கள் வழங்கப்பட்டதாக கல்வெட்டுகளினால் அறிகிறோம்.

அடுத்ததாக, இராசேந்திரன் மட்டமல்லாது அவனுடைய மக்களாகிய, இராசாதி ராசன், இரேஜேந்திர தேவன், இராச மகேந்திரன், வீர ராசேந்திரன் ஆகிய நால்வர் பெற்ற வெற்றி சிறப்புகளும் பேசப்படுவதாகக் கூறுகிறார் ரெட்டியார்.

3.7. பரணி காட்டும் சுவைகள்:

இதுகாறும் பல்வேறு தலைப்புகளில் பேசிவந்த ரெட்டியார் ஐந்தாவதாக பரணி காட்டும் சுவைகள் என்ற தலைப்பில் பொழிவாற்றியுள்ளார்.இவ் உட்தலைப்பில் சுவை என்றால் என்ன என்பதற்கு நாம் ஒரு காவியத்தைப் படிக்கும் போது நமக்குள் உண்டாகும் இன்ப உணர்ச்சியே சுவையாகும்.இதுவே இன்பம் அதுவே ஆன்மா ஒளி ஆன்மா அற்புதம் பிரதிபலிக்கிறது.அந்நிலையை அடைவதற்கு மனம் சலனமற்றிருக்க வேண்டும் என்று கூறுகிறார் ரெட்டியார்.பிறகு, தொல்காப்பியர் பேசும் சுவைகளுடன் பரணி சுவைகளையும் பொருத்திக் காட்டுகிறார்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப"

இந்த எட்டு சுவைகளும் சுவைக்கப்பெறும் பொருள் சுவை, குறிப்பு, விறல் என்ற வகைகளால் எண்ணான்கு முப்பத்திரெண்டு ஆகும் என்று உரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர்.

இச்சுவை அனுபவத்தினை கலிங்கத்துப்பரணியில் பொருத்தி ஆய்வு மேற்கொண்டுள்ளார் இப்பொழிவின் ஆசிரியர். அவை பின்வருமாறு,

3.7.1.: நகைச்சுவை:

கலிங்கத்துப்பரணியில் பேய்கள் கூழ் உண்ணும் பகுதியில் நகைச்சுவை தோன்றும் காட்சிகள் இடம் பெறுகின்றன.

ஒரு குருட்டுப் பேயின் உண் கலத்தை ஒரு திருட்டுப் பேய் ஒளித்து வைத்துக்கொள்கிறது.குருட்டுப் பேய் கையில் கூழ் ஏற்று அருந்துகிறது.இக்காட்சியும் ஒரு பேய் ஓட்டை களத்தில் கூழ் பெற்று உண்ணுகிறது கூழ் ஒழுகும் நிலையைப் பார்த்து களத்தைக் கவிழ்த்துப் பார்க்கின்றது.அப்பேய் கூழ் முழுவதையும் கொட்டிப் போகிறது.

இவ்வாறு போர்களத்தில் பேய்களின் சில செயல்களை நகைச்சுவை சுவையோடு பொருத்துக்காட்டுகிறார் ரெட்டியார்.

3.7.2: அழுகை:

கலிங்கப் போரில் காணும் சில நிகழ்ச்சிகளை அழுகை சுவையோடு பொருத்திக் காட்டுகிறார். போர்க்களத்திற்குத் தன் கணவனை தேடிக் கொண்டு வரும் மங்கை யொருத்தி அங்கு தன் கணவனின் உடலும் முகமும் வேறுவேறாகவும் கையும் காலும் வேறுவேறாகவும் துண்டுபட்டு கிடப்பதைப் பார்க்கிறாள். கணவனின் தலை மட்டும் அவள் கையில் கிடைக்கிறது. ஏனைய உறுப்புகள் நரிகள் இழுத்துச் சென்றன போலும்!

இன்னொருத்தி தன் கணவன் முகத்தைக் கண்ட பிறகு தன் உயிரைத் துறக்க விரும்புகிறாள்.போர்க்களத்திற்கு வந்து சாதகரையும் இடாகினியையும் அவ் உடலை காட்டுமாறு வேண்டுகிறாள்.இவ்வாறு போர்க்கள நிகழ்வுகளைக் கொண்டு அழுகைச் சுவையோடு பொருத்துகிறார் ரெட்டியார்.

3.7.3. இளிவிரல்:

அருவருப்பு அல்லது இழிவு தோன்றுவதற்குக் காரணமாக இருக்கும் செயல்கள் தோன்றத்தக்க சூழல்கள் அனைத்திலும் இளிவரல் தோன்றும்.இச்செயல் நாணத்தக்க செய்கையாலும் பிறக்கும்.

கருணாகரனும் அவனுடைய வீரர்களும் கலிங்க நாட்டைத் தாக்கிய போது அவர்கள் முன் நிற்காமல் கலிங்க வீரர்கள் மாற்றுருகொண்டு மறைகின்ற செய்திகளைக் கூறும் தாழிசை வழி இச்சுவையை அறியலாம். சிலர் புத்தர் போலும், சிலர் வேதியர் போலும், சிலர் சமணர்கள் போலும், சிலர் பாணர்கள் போலும் மாற்றுருகொண்டு மாறுகின்றனர்.இதன் வழி இச்சுவையைச் சுட்டிக்காட்டுகிறார் ரெட்டியார்.

3.7.4. மருட்கை:

முதுபேய் காளிதேவியின் முன்பு காட்டிய தான் கற்ற இந்திர சாலங்கள் பலவும் நம்மை வியப்புச் சுவையில் ஆழ்த்துகின்றன.இக்காட்சிகளை எல்லாம் நேரில் காண்பது போன்ற சூழலை உண்டாக்குகின்றன என்று முதுபேயின் செயல்களை மருட்கை சுவையோடு பொருத்திக் காட்டுகிறார்.

3.7.5: **அச்சம்**:

அச்சம் என்ற உணர்ச்சி மக்களுடைய உடன்பிறந்த சொத்து என்றே சொல்லலாம்.இந்த உணர்ச்சி இல்லாத மனிதர்களே இல்லை என்றே கூறலாம். இச்சுவை பின்வருமாறு:

குலோத்துங்கள் படைவீரர்கள் கலிங்க நாட்டிற்குள் புகுந்து ஊர்களை எரிகொளுவிச் சூறையாடுவதைக் கண்டவுடன், கலிங்க நாட்டு மக்கள் எங்கே புகலிடம் யாரோ அதிபதி?என்று தம் அரசனிடம் ஓடி முறையிடுகின்றனர் என்ற காட்சியும், மக்கள் மிக்க நடுக்கத்துடன் விரைந்தோடி அரசனிடம் முறையிடும் காட்சியைக் காட்டுவது இது.அப்படி ஓடும்போது அவர்களுடைய ஆடையும் நழுவி விழுவதையும் காட்டுகிறார் கவிஞர்.மேலும் குடிமக்கள் தமக்கு நேர்ந்த தீங்குகளைச் சொல்லி முறையிடுவதை இத்தாழிசையில் காணலாம்.இவ்வாறு அச்சச் சுவை மிளிர்வதைப் போர்க்களத்தில் காட்டுகிறார் ரெட்டியார்.

3.7.6. பெருமிதச் சுவை:

பெருமிதம் என்ற சுவையானது காளி தேவியை வழிபடும் வீரர்களைக் குறிப்பிடும் இடங்களில் மிளிர்வதைக் காணலாம்.தாங்கள் கேட்கும் வரத்தைத் தரும்படி அதற்கு ஈடாக தங்கள் உடம்பில் உள்ள உறுப்புகளை அறுத்து தருவதாகவும் வீரர்கள் பலவும் ஒலி எம் மருங்கும் கேட்கப்பெறுகின்றன.இதில் பெருமித உணர்ச்சி பொங்குவதை எடுத்துக்காட்டுகிறார்.

3.7.7. வெகுளி:

திரை கொடுக்காத காரணத்தினால் குலோத்துங்கன் தன் நாட்டின் மீது படையை ஏவியுள்ளான் என்பதைக் கேள்வியுற்று கலிங்க மன்னன் ஆனந்தவன்மன் சினம் கொள்கிறான்; வெந்தறுகிறான். வெகுளியினால் வெய்துயிர்த்துக் கை புடைத்து வியந்தான் என்ற செய்தியில் வெகுளிச் சுவையைப் பொருத்திக்காட்டுகிறார் சுப்புரெட்டியார்.

3.7.8. உவகை:

போரைப்பற்றியப் பற்றி கலிங்கத்துப் பரணியில் உவகைச் சுவை இடம்பெற்றிருப்பதிலிருந்தே அச்சுவையின் பெருமையை அறியலாம். கடை திறப்பில் இச்சுவை பலவாறு சித்திரிக்கப்பட்டிருப்பதை இரண்டாம் பொழிவில் விளக்கியுள்ளார் அவை பின்வருமாறு:

போரில் புண்பட்ட வீரர்களுக்கு வீட்டில் மருத்துவை சிகிச்சைத் தரப்படுகிறது.அப்புண்களுக்கு அவ்வீரர்களின் துணைவியரே சிகிச்சை தருகின்றனர்.இது போன்ற நிகழ்ச்சிகளே உவகைச் சுவையோடு பொருத்திக் காட்டுகிறார்.[4]

3.8 மும்மணிகள்:

இதுவரையிலும் பரணி சிற்றிலக்கியத்தைப் பல்வேறு கோணங்களில் நின்று ஆய்ந்த சொற்பொழிவாளர் இப்பொழுது பாட்டுடைத் தலைவனாகிய முதற்குலோத்துங்கன் அவன் தளபதியாகிய கருணாகரத் தொண்டைமான் இந்த அருந்தமிழ் நூலை ஒப்பற்ற கலைச்செல்வத்தைப் படைத்த கவிஞர்

செயங்கொண்டார் ஆகிய மூவரைப் பற்றி சில செய்திகளை நமக்கு உரைக்கிறார் ரெட்டியார்.

3.8.1.: குலோத்துங்கன்:

குலோத்துங்கன் சாளுக்கியர் மரபின் தோன்றி சோழர் குலத்தை விளங்க வைத்து பெருவீரனாய்த் திகழ்ந்தான்.இவன் தந்தை சாளுக்கியக் குலத்தின் இராசராசன் தாய் கங்கைகொண்ட சோழனின் மகளாகிய அம்மங்கை தேவி இராசராசனும் கங்கைகொண்டானின் உடன்பிறந்த மகனே ஆவான்.

குலோத்துங்கன் கீழைச்சாளுக்கிய மரபினன் ஆவான். ஆனால் அவன் சோழ மண்டலத்தில் தன் தாய்ப் பாட்டன் அரண்மனையில் பிறந்து இளமை பருவத்தில் அங்கு வளர்ந்தமையாலும் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு பயின்று தமிழ் மக்களின் வழக்க ஒழுக்கங்களை மேற்கொண்டமையாலும் இவன் தன்னை சோழ அரசனாகவே கருதிக்கொண்டான் என ரெட்டியார் குறிப்பிடுகிறார்.

3.8.2. கருணாகரத் தொண்டைமான்:

புகழ்பெற்ற தலைபதியான இவரை முதன்முதலாக தெரியப்படுத்தியவர் செயங்கொண்டாரே ஆவார் என சுப்புரெட்டியாரே ஆவார்.குலோத்துங்கன் அடைந்த வெற்றிச் சிறப்புகளுக்கெல்லாம் அவன் கீழ் அமைந்த தானைத் தலைவர்களே காரணம் ஆவார்கள்.அவர்களுள் முதன்மையானவர் கருணாகரத் தொண்டைமான் ஆவார்.கலிங்க நாட்டிற்கு நேரில் சென்று போர் புரிந்த தன் அரசனான அபானுக்கு வாகை மாலை சூடியவன் இவனே ஆவான்.கருணாகரன் பெயரை உடைய ஒருவன் இலங்கையை எரித்த புகழ்

உடையவன், மற்றவன் கலிங்கம் எரித்த புகழ் உடையவன் என்று செயங்கொண்டார் கூறுவதாக ரெட்டியார் தெரியப்படுத்துகிறார்.

3.8.3. செயங்கொண்டார்:

கலிங்கத்துப்பரணி நூலை இயற்றி குலோத்துங்கன் புகழையும் அவன் தலைமை சேனாதிபதியான கருணாகரத் தொண்டைமானின் பெருமையையும் இந்த உலகில் அழியாமல் நிலைபெற செய்வதர் செயங்கொண்டார். அவர் குலோங்குத்துங்கனின் அவையை அணி செய்த ஒப்பற்ற புலவர்.

செயங்கொண்டார் எந்த சமயத்தைச் சேர்ந்தவர் என்று உறுதியாக கூறமுடியவில்லை. இவர் ஊரைப் பற்றிய மேற்கூறிய பாடல்களில் இரவில் உண்ணாமை, உயிர்க்கொலை புரியாமை முதலிய சமண சமயக் கோட்பாடுகளை நன்கு விளக்குவதால் இவர் சமணராய் இருந்தார் என்பது தெள்ளத்தெளிவாக புரிகிறது. திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன் என்றும் என்ற திருவாய் மொழி படி இவர் குலோத்துங்கனின் பிறப்பினை திருமாலின் அவதாரமாகவே கூறுகின்றனர் என்றும் இவரை வைணவர் என்று கூறுவதற்கில்லை.

காலத்தைப் பொருத்தமட்டில் முதற் குலோத்துங்கன் கி.பி. 1070 - 1118 கிட்டதட்ட ஐம்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுவார்கள். இரண்டாம் கலிங்கப் போர் நடைபெற்றது கி.பி.1112 இல். இந்த போரைப் பற்றிதான் செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியில் நூற்பொருளாக அமைத்துக்கொண்டார் எனவே செயங்கொண்டார் காலமும் குலோத்துங்கனின் காலமும் ஒன்றே ஆகும என்று ரெட்டியார் அறியத்தருகிறார்.[6]

3.9. முடிவுரை:

இவ்வாறாக ஆறு தலைப்புகளில் பரணி குறித்து பொதுவாகவும் கலிங்கத்துப் பரணி குறித்து சிறப்பாகவும் ரெட்டியார் ஆராய்ந்துள்ளார் என்பதை இவ்வியலில் காணப்பட்டது.

அடிக்குறிப்புகள்

4. இலக்கண விளக்கம் - நூற்பா - 838
5. பன்னிரு பாட்டியல் - நூற்பா 58
6. ந.சுப்புரெட்டியார், பரணி பொழிவுகள், 84
7. மேலது, 148
8. மேலது, 151
9. மேலது, 173

இயல் - 4

சுப்புரெட்டியாரின் மொழிநடை

4.1. **முன்னுரை:**

கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக பயன்படுத்திய உத்திகள், மொழி வழக்கு போன்றவற்றை ஆராய்வதாக இவ்வியல் அமைந்துள்ளது. நன்னூல், பொதுப்பாயிரத்தில் பத்து அழுகுகள், பத்துக்குற்றங்கள், எழுவகை மதம், முப்பத்திரண்டு உத்திகள் இவை நூலின் பொதுப்பாயிரமாகச் சுட்டுகிறார். இது சிறந்த மொழிநடைக்கு இலக்கணமாகச் கருதலாம்.

4.2. **மொழி:**

இலக்கியத் தோற்றம் எவ்வளவு பழைய வாய்ந்ததோ அத்துணை அளவு பழமை வாய்ந்தது இலக்கியச் சுவைப்புமாகும். ஓர் இலக்கியத்தினை முழுமையாகச் சுவைத்து அது வெளிப்படுத்தும் கருத்தோட்டத்தினையும் அக்கருத்து வெளிப்படும் முறைமையினையும் மயக்கமின்றி உணர்ந்து கொள்லப் பெரிதும் துணைசெய்வது மொழியாகும்.

மொழியியல் என்பது மொழியை விளக்கி அது செயல்படும்.வகையினை வெளிப்படும் ஓர் அறிவியல் துறையாக வளர்ந்து வருகிறது.மொழியியலின் ஒரு கூறே மொழிநடையியல் ஆகும்.நூலின் வெற்றி ஆசிரியரின் மொழிநடை என்னும் கருவியால் அமைகிறது.

4.2.1. நடை குறித்த விளக்கங்கள்:

நடை என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் காணப்படுகின்றன.அவை தம்முள் முரண்பட்டும் திகழ்கின்றன.இலக்கியத் திறனாய்வில் வழங்கி வரும் மிகப் பழமையான சொற்களுள் நடை என்பதும் ஒன்றாகும்.இது முரண்பட்ட பொருள்களையும் விவாதத்திற்குரிய பயன்பாட்டையும் கொண்டிருக்கும் சொல் ஆகும்.ஒரு விளக்கம் பிறிதொரு சூழலில் மறுக்கப்படவும் கூடும்.

நடை என்பது ஒரு வெளிப்பாட்டு முறை ஆகும்.அது மொழியியல் சாராத கூறுகளை மொழியியல் கலைச் சொற்களின் மூலம் விளக்க வாய்ப்பளிக்கும் ஒன்றாகும்.செய்யுளிலும், உரைநடையிலும் காணப்பெறும் வெளிப்பாட்டுக் கூறுகள் நடை எனப்படும்.ஓர் ஆசிரியர் ஒரு செய்தியை எவ்வாறு உரைக்கிறார் என்பதை இது குறிக்கும்.ஓர் ஆசிரியருடைய சொற்களின் தெரிவைப் பரிசோதித்துப் பார்த்து பகுத்தாராய்ந்து மதிப்பிடுவதே நடை ஆகும். அவர் பேசும் முறைகள், வெளிப்பாட்டு முறைகள், வாக்கிய வடிவங்கள், பத்தி அமைப்புகள் என அவர் பயன்படுத்தக்கூடிய மொழிக்கூறினையும் அவற்றை அவர் பயன்படுத்தும் முறையை நடை கருத்தில் கொள்கிறது என்ற கருத்தை பழ. முத்துவீரப்பன் அவர்களின் தி.ஜானகிராமன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

4.2.2. நடை ஆய்வு முறைகள்:

ஓர் இலக்கிய ஆக்கத்தில் அமைந்த ஒலி முதலாக தொடை ஈறாக யாவற்றையும் நுட்பமாக கற்க அவற்றை இலக்கியப் படைப்பாளர் விருப்பத்துடன் பயன்படுத்துவதற்குக் காரணமாக அமைந்த சூழல் பண்பாட்டு

முறை ஆகியவை தெரியவரும் என்ற கருத்தை இ. சுந்திரமூர்த்தி எடுத்துரைக்க அறிய முடிகிறது.[1]

4.3. எழுத்து நடை:

தமிழ் உலகில் சுப்புரெட்டியாரின் எழுத்து நடை தனித்தன்மை வாய்ந்தது.அவ்வகையில் இந்நூலில் ரெட்டியார் தனது எழுத்து நடையைச் சிறப்பாக வடிவமைத்துள்ளார்.

"கலிங்கத்துப் பரணி" என்னும் வனப்பு மிக்க மாளிகையின் முன்னர் அமைந்திருக்கும் எழிலெல்லாம் திரண்ட ஓர் அழகிய பூங்காபோல் 'கடை திறப்பு' என்னும் பகுதி அமைந்துள்ளது என்று சொல்லி வைக்கலாம். சென்னை போன்ற பெருநகரங்களில் பெருஞ் செல்வர்கள் வாழும் அரண்மனை போன்ற பங்களாக்களின் முன்புறம் இத்தகைய எழிலமைப்பு இருப்பதைக் காணலாம். இதனை பார்க்க வாய்ப்பில்லாதவர்கள் திரைப்படங்கள் வரும் காட்சிகளில் தாம் பார்த்தவற்றை நினைவுபடுத்திக் கொள்வார்களாக. காவியத்தின் நுழைவாயில் போல் அமைந்திருக்கும் இப்பகுதியிலுள்ள ஒரு சில காட்சிகளைப் பொழிவின் இருதியில் காட்டுவேன்.[2]

4.4. தருக்க நெறிமுறை:

உரைநடையின் அமைப்பு பொருள் நிலையில் காரணகாரியத் தொடர்புடன் அமைந்திருந்தால் அத்தகைய உரைநடை தருக்க நெறிமுறையில் அமைந்த உரைநடையாகும்.

உதாரணமாக பல இடங்களில் சுப்புரெட்டியார்

முன்னர்க் குறிப்பிட்ட இரண்டு கருத்துக்களிலும், இரண்டாவது கருத்தே மிகவும் பொருத்தமுடையது; கொள்ளக்கூடியது தம் அரசனும் அவனுடைய தானைத் தலைவனும் அடைந்த கலிங்க வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று வேண்டித் தலைநகரத்திலுள்ள பல்வேறு மகளிரும், நாட்காலையே எழுந்து தம் தோழியரின் வாயிற்கடை முன்னின்று அவர்களைத் துயிலெழுப்புவதாகக் கொள்வதுதான் மிகவும் பொருத்தமுடையதாகும். இத்தகைய பண்டைய மரபு திருப்பாவை, திருவெம்பாவை முதலிய நூல்களில் பயின்று வந்துள்ள மரபுகளை அடியொற்றி வந்துள்ளதாகக் கொள்ள வேண்டும்.[3]

4.5. வருணனை நெறிமுறை:

நூலாசிரியர்கள் தம் கட்டுரைகளுக்கு பின்னணியாக அமைந்த சூழலை விளக்கும் போது வருணனை நெறியைச் சிறப்பாகப் பின்பற்றியிருப்பதைக் காணலாம்.அவ்வருணனைகள் பொருந்தியே அமைந்துள்ளன.

மகளிர் கணவரோடு உறையும் நிலை மிக அழகாகக் காட்டப் பெறுகின்றது.விலை மதிக்க முடியாத தரளமாலைகள் அவர்கள் கொங்கைகளில் அசைந்த வண்ணம் உள்ளன; அவர்களின் கெண்டை மீன் போன்ற கண்விழிகள் புரண்டு புரண்டு காதணிகளில் தாங்குகின்றன.இந்நிலையில் மலைபோன்ற தம் கணவரின் தோள்களைத் தழுவி நிற்கின்றனர்.இந்நிலை மயில்கள் ஆடி வருவன போல் தோன்றுகின்றது.

கவிஞர்களின் உள்ளம் இட்ட இடத்தில் கிடக்கும் கல் போன்றது அன்று.அது கதிரவன் ஒளியையும் காற்றையும் நாடி மேல்நோக்கி வளரும் செடி போன்றது; மேன்மேலும் சுற்றி வளரும் கொடிபோன்றது. ஆகவே, பொருள்களின் இருப்பை உள்ளவாறு கண்டு அந்த எழிலில் அவர்களுடைய உள்ளம் அமைதி அடைவதில்லை; பொருள்களை மேலும் வனப்புறச்செய்து தம் உள்ளம் விழையும் சிறந்ததோர் உலகினைப் படைக்க முயல்கின்றது. அந்த முயற்சி இடைவிடாத முயற்சியாக வளர்ந்தோங்குகிறது.அதுவே அவர்களுடைய அகத் தெழுச்சிக்குக் காரணம் ஆகின்றது. 'உள்ளது போதும்' என்ற மன நிறைவு ஏற்பட்டுவிட்டால் அம் மனநிலை புதியன படைக்கும் ஆற்றலுக்கு முற்றுப்புள்ளி வைத்ததுபோல் ஆகிவிடும்.[4]

4.6. மொழி பயன்பாடு:

ஓர் படைப்பில் இடம் பெற்றிருக்கும் மொழியின் பயன்பாடு அந்த ஆக்கத்தின் நடையின் அமைப்பை வடிவமைக்கிறது.எனவே இலக்கிய ஆக்கத்தின் இடம் பெற்றிருக்கும் மொழியின் இயல்பை ஆராய்ந்து விளக்கும் தன்மை நடைகுறித்த ஆய்வுகளிலும் கடைபிடிக்கப்படுகிறது.

சுப்புரெட்டியார் பலவகையில் மொழியைப் பயன்படுத்துகிறார்.

4.7. தொடர்நிலை:

வினாத்தொடர், விளித்தொடர், மரபுத்தொடர் என தொடர்களை அமைத்து ஒரு குறிப்பிட்ட கருத்தைப் புலப்படுத்துவதும் இலக்கிய நடையின் ஒரு பகுதியே ஆகும்.

4.7.1. விளித்தொடர்:

இன்று கலிங்கத்துப் பரணி என்ற நூலை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கும் நோக்கத்தில் வந்துள்ளேன், சாதாரணமாக சமூகத்தில் புதிதாகச் சந்திக்க நேரும் அன்பர்களை அறிமுகம் செய்து வைக்கின்றனர் அல்லவா? அத்தகைய ஓர் அறிமுகமே இது.அன்பர் யார்?அவர் எங்கிருந்து வருகின்றார்?அவருடைய தகுதி என்ன?சமூகத்தில் அவருடைய நிலை என்ன?என்பன போன்ற சில பொதுச்செய்திகளை மேம் போக்காகக் கூறியே அந்த அன்பர் அறிமுகம் செய்து வைக்கப்பெறுகின்றனர். (பக். 1)

போன்றவை இந்நாவலில் இடம்பெற்றுள்ள விளித்தொடர்கள் ஆகும்.

4.7.2. இலக்கியத் தொடர்கள்:

சுப்புரெட்டியார் பல இடங்களில் சங்க இலக்கியம், திருக்குறள், கம்பராமாயணம் போன்றவற்றில் இடம்பெறும் வரிகளைப் பயன்படுத்துகிறார்.

'கொப்பூழாகிய நீர்ச்சுழியில் உரோமப் பசுந்தண்டு முளைதெழுந்துள்ளது; அத்தண்டில் மாலையில் காணப்பெறும் தாமரை மொட்டுக்கள் போன்று இரண்டு கொங்கைகள் தாங்கப்பெறுகின்றன' என்று வருணிக்கும் அழகினைக் காண்மின், கொப்பூழை நீர்ச்சுழிக்கும் கொங்கைகளைத் தாமரை அரும்புகட்கும் உவமை கூறுவது வழிவழி வரும் கவி. மரபு "நீர்ப்பெயல் சுழியின் நிறைந்த கொப்பூழ்" (பொருநா. வரி 36) "ஆற்றில் சுழியொன்றி நின்ற தன்ன உந்தியாள்" (கம்பரா. பாலகாண்-உண்டாட்டு - 15) என்பவற்றில் உந்தி நீர்ச்சுழியுடன் உவமிக்கப்பெற்றிருந்தல் காண்க. அங்ஙனமே, "குளனணி தாமரை பாசரும்பு

ஏய்க்கும், இளமுலை பாராட்டினாய்" (கலி-22) என்றும், "தாமரை, முற்றா முகை நீர் எழுதி முலையென்றீர்" (பாண்டிக் கோவை -36) என்றும் வருவதில் தாமரை அரும்பு கொங்கைகட்கு உவமையாக வந்துள்ளமை காணத்தக்கது.[5] (பக். 39)

4.8. உத்திகள்:

கட்டுரையில் கையாலும் உத்திகளால் நூலானது தனிச் சிறப்பைப் பெறுகிறது.உத்தி மூலம் ஆசிரியரின் மொழித் திறனும் எழுத்தாற்றலும் வெளிப்படுவதோடு அல்லாமல் கலைப் படைப்பும் சிறப்புறுகின்றது.தான் அமைந்திருக்கும் கருத்துக்கள் வாசகர்களை சிறப்பாகச் சென்றடைய வேண்டும் என்று சில உத்திகளைக் கைகொள்வது நூலாசிரியரின் வழக்கமாகும்.அவற்றை கட்டுரை உத்திகள் என்று வகைப்படுத்தலாம். ஆசிரியர் தம் காலத்தை ஒட்டியும், அவர் விளக்க எண்ணும் உள்ளடக்கத்தை பொருத்தும் மேலும் அவர் கட்டுரைகள் சென்று சேரும் வாசகர்களின் இயல்பைப் பொருத்தும் கட்டுரை உத்திகள் வேறுபடலாம். கட்டுரைக்கு பொருள் பொதிந்த தலைப்பை அமைத்ததோடு அல்லாமல் சிறந்த எழுத்து நடையையும் நூலாசிரியர் கைக்கொண்டு இருக்கிறார்.சிறந்த சொல்லாட்சிகளையும் வர்ணிப்பு முறைகளையும் உவமை உருவகம் முதலிய அணிகளையும் கட்டுரை ஆசிரியர் தம் உத்திகளைக் கையாண்டுள்ளார் அவற்றை இனிக் காணலாம்.

4.8.1. நூலின் அமைப்பு:

நூலானது மொத்தம் ஆறுகட்டுரைகளைக் கொண்டு திகழ்கிறது.கட்டுரைகள் பல்வேறு தலைப்புகளில் இடம்பெற்று அடுத்து என்ன?அடுத்து என்ன?என்று ஆர்வத்தை தூண்டும் வகையிலும் அமைந்துள்ளது.

4.8.2. சொற்பொழிவு:

சுப்புரெட்டியார் கட்டுரைகளை சொற்பொழிவுகளாக தந்துள்ளார்.படிப்போருக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

தமிழன்பர்களே! தாய்மார்களே!

வணக்கம்.இன்று நடைபெறுவது கலிங்கத்துப்பரணி பற்றிய நான்காம் சொற்பொழிவு.சென்ற சொற்பொழிவில் நாம் பேய்களின் உலகில் உலவினோம்.பேய்களின் உலகினையும் மக்கள் உலகினையும் இணைத்துக் காட்டும் கவிஞரின் மதி நுட்பத்தை எடுத்துக்காட்டினேன்.காளி தேவியின் திருக்கோயிலே மக்கள் உலகமும் பேய்களின் உலகமும் சந்திக்கும் இடமாக அமைந்துள்ள கவிஞரின் கற்பனைத் திறனை எடுத்து விளக்கினேன். பெரும்பாலும் இங்கு வரலாற்றுக் குறிப்புகளாகக் கிடைக்கும் செய்திகள் யாவும் இமயத்தினின்றும் போந்த முதுபேயின் மூலமாகவும், அன்னை காளி தேவியின் வாயில் வைத்தும் நுவலப்பெறுகின்றன. சில செய்திகளைக் கவிஞரின் கூற்றாலும், கலிங்க வேந்தனின் அமைச்சனும் படைத்தலைவனுமான எங்கரயானின் கூற்றாலும் அறிகின்றோம்.[6]

4.8.3. **நீண்ட வாக்கியங்கள்:**

சூழலின் சிறப்பையும் வேறுபாட்டையும் முதன்மையையும் உணர்த்துவதற்காக அதை விளக்கும் வாக்கியத்தை அடுத்து அமைந்த மற்ற வாக்கியங்களை விடவும் அளவில் நீண்டதாக அமைப்பது சுப்புரெட்டியாரின் இயல்பு எனலாம்.

இக்கருத்தை பேராசிரியர் மு. இராகவய்யங்கார் அவர்கள் மறுத்து, ஸுக்திரத்நஹாரம் செய்த கலிங்கராயனும், அபாயன் சேனாதிபதியருள் ஒருவனான மணவிற் காலிங்கராயனும், அவன் தலைமைச் சேனாதிபதியான வண்டைக் கருணாகரனும் மூவேறு தலைவர்கள் என்றும், அம்மூவரையும் ஒருவராகக் கொள்வதற்குத் தக்க சான்றுகள் இல்லையென்றும் தடை விடைகளால் தெளிவாக ஆய்ந்து அறுதியிட்டுள்ளார்கள். (178)

இது போன்ற பல நீண்ட வாக்கியங்கள் சுப்புரெட்டியாரின் நூலில் இடம்பெற்றுள்ளது.

4.9. முடிவுரை:

ஆய்வேட்டின் இறுதி இயலாகிய சுப்புரெட்டியாரின் நடையும், உத்தியும் என்பதில் கட்டுரையில் சற்று கடினமான மொழிநடை, சுருங்கச்சொல்லுதல், விளக்கி வரைதல், கதைகூறுதல் போன்ற வேறுபட்ட உத்திகளை கையாண்டுள்ளார்.

அடிக்குறிப்புகள்:

1. பழ. முத்து வீரப்பன், தி. ஜானகிராமன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு பக். 259
2. ந. சுப்புரெட்டியார், பரணி பொழிவுகள், பக். 25 - 26
3. மேலது, 29
4. மேலது, 57
5. மேலது, 39
6. மேலது, 86

ஆய்வு முடிவுகள்

"பரணி பொழிவுகள் ஒரு பொதுப்பார்வை" என்ற தலைப்பில் நான்கு இயல்களில் வழி கண்டறியப்பட்ட முடிவுகள் கீழ்கண்ட வகையில் பெறப்படுகின்றன.

- ✓ சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும் என்ற தலைப்பிலமைந்த முதல் இயலில் நூலாசிரியரின் தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான பிறப்பு, கல்வி, அலுவல் புரிந்த இடங்கள் குறித்த விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.
- ✓ அவருடைய பல்கலைக் கழக ஆய்வுகள் பற்றியும், அவருடைய நூற்றிற்கு மேற்பட்ட நூல்கள் எழுதியமைக்காக அவர் பெற்ற விவரங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.
- ✓ பரணி இலக்கியப் பொதுச் செய்திகள் என்பது இரண்டாவது இயலாகும். இவ்வியலில் தமிழ் இலக்கியத்தில் இடம்பெறும் பரணி பற்றிய பொதுச் செய்திகள் பொதுவாகத் திரட்டப்பட்டுள்ளன.
- ✓ பரணி இலக்கியங்கள் யாவை, பரணி இலக்கிய உறுப்புகள் பற்றிய விவரங்கள் தொகுப்பட்டுள்ளன.
- ✓ பரணி பெயர்க்காரணம், பரணி குறித்து பாட்டியல் நூல்களில் இடம்பெறும் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.
- ✓ பரணி நூல்கள் யாவும் ஒத்தவை இல்லை என்ற செய்தியும் மேகவதைப் பரணி நூல் ஏனைய பரணி நூல்களிலிருந்து எங்ஙனம் வேறுபட்டுள்ளது என்பதற்கான விளக்கமும் தரப்பட்டுள்ளன.
- ✓ கலிங்கத்துப் பரணி தோன்றுவதற்கான காரணம் விளக்கப்பட்டுள்ளது.

- ✓ மூன்றாவது இயல் பரணி பொழிவுகள் ஒரு அறிமுகம் ஆகும். இதில் சுப்புரெட்டியாரின் பரணி பொழிவுகள் நூலின் அமைப்பு போன்றவை விளக்கப்பட்டுள்ளன. அதில் பரணி தோன்றுவற்கான காரணமாக சொல்லப்பட்டும் வாய்மொழி, செய்யுள் சான்றுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- ✓ கடை திறப்பு என்ற ரெட்டியாரின் இரண்டாவது பொழிவில் கடைதிறப்பு என்பது கதவை திறக்குமாறு வேண்டுதலை உடையது என்பதும், கடைதிறப்பிற்கு இருவகை காரணங்கள் உள்ளன என ரெட்டியார் எங்ஙனம் விளக்குகிறார் என்பதும் விளக்கப்பட்டுள்ளன.
- ✓ அடுத்து, பேய்கள் உலகம் தலைப்பில் உரையாற்றும் ரெட்டியார் கலிங்கத்துப் பரணியில் பேய்கள் உலகம் எங்ஙனம் இடம்பெற்றுள்ளன என்பது விளக்கப்பட்டுள்ளது.
- ✓ வரலாற்றுச் செய்திகள் என்ற பொழிவில் சுப்புரெட்டியார் கலிங்கத்துப் பரணி உள்ளிட்ட, பரணி நூல்களில் இடம்பெறலாகும் செய்திகள் பற்றி கூறுபவை குறித்து ஆராயப்பட்டுள்ளது.
- ✓ பரணி காட்டும் சுவைகள் என்ற பொழிவில் தொல்காப்பியத்தில் இடம்பெறும் மெய்ப்பாடுகளையும் கலிங்கத்துப் பரணியில் இடம்பெறும் சுவைகளையும் ஒப்பிட்டு கூறுபவை விவரிக்கப்பட்டுள்ளன.
- ✓ மும்மணிகள் என்ற பொழிவில் குலோத்துங்கன், கருணாகரத் தொண்டைமான், செயங்கொண்டார் ஆகியோர் குறித்து ரெட்டியார் விதந்தோதுபவை ஆராயப்பட்டுள்ளன.

- ✓ நான்காவது இயலான சுப்புரெட்டியாரின் மொழிநடை என்ற இயலில், மொழி, நடை குறித்த பொதுவான விளக்கங்கள் மட்டுமின்றி, சுப்புரெட்டியாரின் மொழி குறித்தும் ஆயப்பட்டுள்ளது.
- ✓ சுப்புரெட்டியாரின் தருக்க நெறியிலமைந்த வாக்கியங்கள், வருணனை நெறிமுறையிலமைந்த வாக்கியங்கள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.
- ✓ இலக்கிய மேற்கோள்களை பயன்படுத்தும் விதம், நூலின் அமைப்பு, சொற்பொழி, நீண்ட வாக்கியங்கள் பயன்படுத்தும் நோக்கம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

துணை நூற்பட்டியல்

1. ந. சுப்புரெட்டியார், வடவேங்கடமும்
திருவேங்கடமும்,
நிவேதிதா பதிப்பகம்,
சென்னை - 83
முதற்பதிப்பு: 2004.

2. ந. சுப்புரெட்டியார், பரணி பொழிவுகள்,
ந. சுப்பு ரெட்டியார்
நூற்றாண்டு விழாக்குழு பதிப்பகத்தார்,
சென்னை - 40
இரண்டாம் பதிப்பு: 2018

3. மணிகண்டன், ய. பரஞ்சோதியார்,
சிதம்பரப் பாட்டியல்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சை - 01

4. முத்து வீரப்பன், பழ. தி. ஜானகிராமன்
சிறுகதைகள் ஒரு திறனாய்வு,
அண்ணாமலை பல்கலைக் கழகம்,
சிதம்பரம் - 02.
முதற் பதிப்பு 1995

5. வாழ்வியற் களஞ்சியம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் 10

கம்பனில் மக்கள் குரல்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூலில் உள்ள 11 கட்டுரைகளின் மூலமாக, கம்பன் காலத்து
குடியாட்சி, அசுரர்கள் வதம், இளையபெருமாள், குறிஞ்சி
நிலக்காட்சிகள், அநுமனின் திறன், காடுறை வாழ்க்கை,
இராகவன் புகழ், தம்பியுடையான் பகையஞ்சான்,
இன்ன பிற காட்சிகளையும் திறனாய்வு முறையில்
கம்பனை நுகர இயலுகிறது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978 -81-939430-1-4

eBOOK ~ *மின் நூல்*

ந சுப்பு ரெட்டியார்
1916 2016
100
நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

அணிந்துரை

கம்பனில் மக்கள் குரல் 1983

வழங்கியோர்:

நீதிபதி சு இரத்தினவேல் பாண்டியன்



அணிந்துரை

நீதிபதி சு. இரத்தினவேல் பாண்டியன்,
சென்னை உயர் நீதிமன்றம்

"விருத்த மெனும் ஒண்பாவிற்கு உயிர் கம்பன்" என்று புலவர்களால் போற்றப்பெறும் கம்பன் மக்கள் கவிஞன். மக்களின் மன எழுச்சிகளையும் அவர்களின் சுவையறிபாங்கையும் நன்கு அறிந்தவன். ஆகையால் 'நடையினின்றுயர் நாயகன்' கதையை 'ஈரத்தமிழில்' நாடறியச் செய்தனன். அவனியில் அவதார மூர்த்தியாக நடையாடின இராம பிரானை மக்கள் மனத்தில் எழுந்தருளச் செய்தான்; தமிழகத்தில் பக்தி இயக்கத்திற்குப் பின்னர் எழுந்த காவியமாதலால் ஆழ்வார் பாசுரங்களின் தாக்கம் காவியத்தின் சிறப்பைப் பன்மடங்கு உயர்த்தி விடுகின்றது. கடந்த ஐம்பதாண்டு முன்னர் வரையிலும் இக்காவியம் புலவர்களால் மட்டிலும் போற்றப்பெற்று வந்தது. கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகக் காரைக்குடி 'கம்பன் அடிப்பொடி' அமரர் சா. கணேசன் அவர்களின் அரிய முயற்சியால் கம்பன் பொது மக்களுக்கு நன்கு அறிமுகமானான். ஆனந்த விகடனில் பி. ஸ்ரீ. அவர்கள் எழுதி வந்த 'கம்ப சித்திரம்' பற்றிய கட்டுரைகளும் ரசிகமணி டி. கே. சி. அவர்களின் காவியம்பற்றிய பேச்சும், எழுத்தும், அவர்தம் கம்பராமாயணப் பதிப்பும் பொதுமக்களின் ஆர்வத்தை மேலும் வளர்த்தன. அண்மைக் காலத்தில் மாவட்டந் தோறும் கம்பன் கழகங்கள் தோன்றுவதற்கு முதற்காரணமானவர் முன்னாள் தமிழகத் தலைமை நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயில் அவர்கள். இக் கழகங்கள் கம்பன் காவியத்தைப் பொது மக்கள் நுகரும் திருப்பணியை நிறைவேற்றி வருகின்றன. கற்றோரும் மற்றோரும் காவியத்தை அநுபவித்து மகிழ்கின்றனர்.

பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் இங்ஙனம் கம்பனை ஆழ்ந்து கற்றோருள் ஒருவர். பல்லாண்டுகளாகப்

பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர் எழுதிய பதினொரு கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். பேராசிரியர் பல கோணங்களில் கம்பனைத் துய்த்தமையைக் கட்டுரைகள் பிரதிபலிக்கின்றன. 'கம்பனில் மக்கள் குரல்' என்ற முதற் கட்டுரையில் புறநானூற்றுக் காலம் முதல் நடைபெற்று வந்த 'கோனாட்சி' முறை மாறிக் கம்பன் காலத்தில் (பத்தாம் நூற்றாண்டு) 'குடியாட்சி' முறைக்கு வித்திட்ட நயத்தைக் காட்டுகின்றார். மக்களுக்கு உயிராக இருந்த அரசன் அவர்கட்கு உடலாகின்றான். 'மன்னுயிர் உய்யத் தாங்கும் உடலன்ன மன்னவன்' என்றாகின்றான் (பக். 2). இக்கட்டுரையில் பேராசிரியர் நான்கு அரசுகளைக் காட்டுவதும், மக்கள் அந்த அரசுகளைப்பற்றித் திறனாய் வதும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. 'காவியத் தம்பி' என்ற கட்டுரை இளையபெருமாளைப் பற்றியது; 'தம்பி யுடையான் பகையஞ்சான்' என்ற உண்மையைப் பறை சாற்றுகின்றது (பக். 32). 'அறங்கடந்தவர் செயல்' என்ற கட்டுரை 'ஆணவத்தின்' திருவிளையாடல்கள் ஒரு நாள் அடங்கியே தீரும் என்ற உண்மையை எடுத்துக் காட்டுவ தாக அமைகின்றது, 'கம்பனில் குழந்தை இன்பம்' என்ற கட்டுரை கம்பன் குழந்தையின்பத்தைப் பற்றி ஏன் பாட வில்லை, சரியான சந்தர்ப்பம் இருந்தும் பாடாது விட்டது ஏன்? என்ற வினாவை எழுப்பி அதற்கு விடையும் தரும் பாங்கு நம் சிந்தனைக்கு விருந்தாகின்றது.

'மலைக்'காட்சி' (ஆறாவது கட்டுரை) குறிஞ்சி நிலக் காட்சிகளை அற்புதமாகச் சித்திரித்துக் காட்டுகின்றது. இங்குக் கம்பனின் 'தெய்மாக் கவியின் மாட்சி'யைக் காண முடிகின்றது. இஃது தான் இராமன் திருமணத்திற்குப் பின்னர் காடுறை வாழ்க்கையின் தொடக்கத்தில் நுகர்ந்த தேனிலவுப் (Honey moon) பகுதி! அதன் பிறகு இராமன் பல் வேறு துன்பங்கட்கு ஆளாகின்றான் என்பதை நாம் அறிவோம். 'விளையும் பயிர்' என்ற கட்டுரை மேகநாதனின் திறமையை மேம்பட எடுத்துரைக்கின்றது, 'சிறை வைத்த

காதல்' என்ற கட்டுரையில் சீதையின் உருவத்தை இராவணன் சிறையில் வைத்ததையும் (ஆரணி, மாரீசன் வதை—83), பல நூறு பாடல்கட்குப் பின்னர் அந்த உருவம் சிறைவீடு பெற்றதையும் (யுத்த இராவணன் வதை-239) காட்டும் பாங்கு பேராசிரியரின் நுண்மாண் நுழை புலத்தை நுட்பமாகக் காட்டுகின்றது.

'கவி நாயகன்' (9-வதுகட்டுரை) என்பதில் 'கவிநாயகன்' என்ற தொடர் கம்பனையும் அநுமனையும் சுட்டுவதை (பக்-108) எடுத்துக் காட்டி, "இராகவன் புகழினைச் செவிக் குத் தேனுக இனிக்கும் வண்ணம் திருத்திய பெருமையை இரு கவிநாயகர்களிடத்திலும் கண்டுகளிக்கலாம். வான் மீகத்திலுள்ள வரலாறுகளில் சிலவற்றைத் திருத்தித் தமிழர்களின் மரபுக்கும் நாகரிகத்திற்கும் ஏற்றவாறு இராமகாதையை அமைத்த பெருமை கவிநாயகனுகிய கம்பனுக்கு உரியது. இராமனது காடுறை வாழ்க்கையின் வரலாற்றில் நேர்ந்த சில பேராபத்துகளை நீக்கி அதனைச் செம்மையாக மாண்புறுத்திய பெருமை கவி நாயகராகிய வாயுபுத்திரனைச் சாரும்" (பக்-97) என்று சுட்டியுரைத்து இராமனது வரலாற்றில் எழுந்த கோணல் கள் எவை என்பதையும், அவற்றை நிமிர்த்தின அநுமனின் திறத்தினையும்' விளக்கும் பாங்கு அற்புதமாக அமைந் துள்ளது.

'கம்பன் காட்டும் மேழிச் செல்வம்' என்ற கட்டுரையில், இக்காலத்திற்கும் பொருந்துகின்ற தன்மையைக் காண்கின் ருேம். 'உணவு பற்ருக்குறை' பற்றிய காரணங்களைச் சுட்டியுரைத்து "வன மகோத்ஸவம்', 'ஏர்முனைவிழா' போன்ற விழாக்களைக் கொண்டாடுவதால் யாதொரு பயனும் விளையப் போவதில்லை.வாணிகத்திற்கும் பொருத்த மான விளம்பரத் திட்டங்களை உணவுப் பெருக்கத்திற்காக அரசினர் மேற்கொள்வது வருத்தத்தை விளைவிக்கின்றது" என்ற புரட்சிகரமான கருத்து ஆழ்ந்து சிந்திக்கதக்கது. (பக், 105). "(ஏரெழுபது) கம்பனுடையதா? அல்லது பிற்

காலத்துப் புலவர் ஒருவர் இயற்றினதாக அவன் பெயரில் உலவவிட்டாரா?" (பக், 107) என்ற ஆராய்ச்சியில் இறங்காமல் கம்பன் மேழிச்செல்வத்தைப் பாராட்டுவதை மட்டிலும் விளக்குகின்றது. 'கம்பனில் உருக்காட்சிகள்' என்ற இறுதிக் கட்டுரை ஆங்கிலத் திறனாய்வு முறையில் கம்பனை நுகர்வதற்கு வழியமைத்துக் காட்டுகின்றது.

பேராசிரியர் **டாக்டர் ரெட்டியார்** பல்துறை அறிஞர். பல துறைகளையும் சிறப்பாக அறிவியல் துறைகளை முறையாகப்பயின்று அவற்றில் ஆழ்ந்த புலமையைஅடைந்தவர். சிறந்த சிந்தனையாளர். பல் வேறு துறைகளில் படைப்பிலக்கியங்களை வழங்கி தமிழன்னையைப் பெருமிதத்துடன் களிக்கச்செய்து வருகின்றவர். இவரை **'நடமாடும் கலைக் களஞ்சியம்'** என்று கூறினாலும் அக்கூற்று மிகைபடக் கூறியதாகாது. அறிவியல்முறையில் **(Scientific Method)** பயிற்சி பெற்ற அறிஞரின் நோக்கும் போக்கும் ஆழமாகவே இருக்கும் என்ற உண்மைக்கு இப்பேராசிரியர் ஓர் எடுத்துக் காட்டாகவே அமைகின்றார். பார்ப்பதற்கும், பழகுவதற்கும் இனியவர்; படைப்புகளையும் இனிமையாக வழங்குகின்றார். நல்ல உடல் நலத்துடனும் மனவளத்துடனும் திகழும் இத்தகைய 60 ஆண்டுகட்கு மேல் பழுத்த **'இளைஞர்களின்'**சேவை நாட்டுக்குத் தேவை. இத்தகைய பெரியோர்களை ஒல்லும் வகையெல்லாம் மொழி வளர்ச்சிக்கும் பயன் படுத்திக் கொள்வது அரசின் கடமை. 56 நூல்களைப் படைத்த பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பல்லாண்டுகள் வாழ்க! வளர்க அவர்தம் தமிழ்ப் பணி!!' என்று வாழ்த்துகின்றேன்.

அண்ணாநகர்
10-5-83

சு. இரத்தினவேல் பாண்டியன்

NSR100
KAMATCHI AMMAL FELLOWSHIP

MA Students in Tamil

AWARDED TO :

ப வெண்ணிலா

(பதிவு எண்: 11700117008)

(பேராசிரியரின் ஒரு நூலை மையக்கருத்தாகக் கொண்டு ஆய்வு செய்த முதுகலைப்பட்ட மாணாக்கர்)

உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப்பெற்ற நூலும் வழங்கப்பெற்றன.

ஆய்வேட்டின் தலைப்பு: கம்பனில் மக்கள் குரல்

பேராசிரியரின் நூல்: **கம்பனில் மக்கள் குரல்**

துறை: தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக்கழகம், ஆந்திர மாநிலம்

நெறியாளர்: முனைவர் க மாரியப்பன்

வருடம்: மே 2019

www.nasubbureddiar100.in

பேராசிரியர் முனைவர்
ந சுப்பு ரெட்டியார்

கம்பனில் மக்கள் குரல்

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publication

கம்பனில் மக்கள் குரல்

Kambanil Makkal Kural

திராவிடப் பல்கலைக்கழக முதுகலைப்பட்டத்தின்
ஒரு பகுதியாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

A project report submitted to Dravidian University
in partial fulfillment for the award of M.A. Degree

ஆய்வாளர்
ப. வெண்ணிலா
பதிவு எண்: 11700117008

submitted by
P. VENNILA
Reg.No:11700117008

நெறியாளர்
முனைவர் க. மாரியப்பன்
உதவிப் பேராசிரியர்.

Dr. G. MARIAPPAN
Assitant professor

தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,
திராவிடப்பல்கலைக்கழகம்,
குப்பம் **- 517 426**, ஆந்திரபிரதேசம்.

Department of Tamil Language and Translation Studies,
Dravidian University, Kuppam – 517 426 (AP)

May - 2019

நன்றியுரை

என் தமிழ் ஆர்வத்திற்கு வித்திட்ட திராவிடப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கும், முதுகலைப்பட்ட ஆய்வினை மேற்கொள்ளச் செய்த பல்கலைக்கழகத்திற்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தலைப்பில் ஆய்வு செய்வதற்கு அனுமதி தந்த முன்னால் திராவிடப் பல்கலைக் கழகத் தலைவா் முனைவா் ஆர். விவேகானந்தகோபால் அவா்களுக்கு எனது மனமாா்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வு சீராகவும், சிறப்பாகவும் அமைவதற்கு நெறியாளராக விளங்கி, அனுதினமும் அரிய பல கருத்துக்களை அன்போடு வழங்கி, ஆய்வினைச் சிறக்கச் செய்த எனது மேற்பாா்வையாளரும், தமிழ்த்துறை உதவிப் பேராசிரியருமான முனைவா் க. மாரியப்பன் அவா்களுக்கு என் உள்ளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

முதுகலைப்பட்டம் பெறுவதற்காக, “கம்பனில் மக்கள் குரல்” என்னும் தலைப்பில் ஆய்வு செய்வதற்கு வாய்ப்பளித்த திராவிடப்பல்கலைக்கழகத்திற்கும், தமிழ்த்துறைத்தலைவா் முனைவா் த. விஷ்ணுகுமரன், கு. பத்மநாபன், ஆகி யோருக்கும் என் நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

எனது அனைத்து வகை முன்னேற்றத்திற்கும் உறுதுனையாய் இருந்து, அனைத்து வழிகளிலும் உதவிய எனது அன்புக்குரிய என் அப்பா எ.கா.பழனி, அம்மா ப. முத்தம்மாள், அண்ணன் ப. ராஜ்குமாா், ஆகியோா்க்கு என் மனமாா்ந்த நன்றிகள்.

ஆய்வு சிறப்பாக அமைய உதவிகளைச் செய்த நூலகத்தாருக்கும் அலுவலா்களுக்கும் என் மனமாா்ந்த நன்றிகள்.

ப. வெண்ணிலா.

பொருளடக்கம்

இயல் எண்	இயல் தலைப்பு	பக்க எண்
	ஆய்வு அறிமுகம்	6-8
1	சுப்புரெட்டியார் வாழ்க்கை வரலாறு	9-20
2	தமிழ் இலக்கியங்களில் கம்பன்	21-29
3	சுப்புரெட்டியார் காட்டும் கம்பன்	30-47
4	மொழிநடையும் உத்திகளும்	48-56
	ஆய்வு முடிவுரை	57
	துணைநூற் பட்டியல்	58-59

ஆய்வு அறிமுகம்

முன்னுரை

ஆய்வு அறிமுகம் என்ற இப்பகுதி திட்டக்கட்டுரைப் பற்றிய சுருக்கமாக அமைகின்றது. தலைப்புத் தேர்வுக்கான காரணம், ஆய்வுத் தலைப்பு விளக்கம், ஆய்வின் நோக்கம், ஆய்வின் எல்லை, சான்றாதாரங்கள் தொகுப்பு, ஆய்வு அணுகுமுறைகள் மற்றும் ஆய்வேட்டின் அமைப்பும் பகுப்பும் என்ற உட்தலைப்புகளில் ஆய்வு பற்றிய விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

தலைப்பு தேர்வு

தமிழியல் ஆய்வுத் துறையில் டாக்டர் .ந. சுப்புரெட்டியார் பற்றிய ஆய்வுகள் அதிகம் வெளிவந்துள்ளன. அவர் படைத்த ஆய்வுக் கட்டுரைகளை தெளிவாக ஆராய வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாகவும் ஆய்வாளரின் விருப்பத்தின் காரணமாகவும் இத்தலைப்புத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ஆய்வுத் தலைப்பு விளக்கம்

‘கம்பனில் மக்கள் குரல்’ என்பதே இவ்வாய்வின் தலைப்பாகும். இவ்வாய்வில் மக்களின் ஆட்சி முறைகள் பற்றியும் மக்களுக்காக அரசர்கள் ஆட்சி மக்களின் குரலுக்கு மதிப்பு கொடுத்ததையும் பற்றியும் விளக்குவதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது. எனவே இந்த ஆய்விற்கு கம்பனில் மக்கள் குரல் எனப் பெயரிடப்பட்டது.

ஆய்வு முன்னோடி

கம்பனில் மக்கள் குரல் என்ற ஆய்வுக் கட்டுரைகள் புத்தகமாக்கப்பட்டு ஆய்வாளருக்குக் கிடைக்கப் பெற்றது. அப்புத்தகம் இவ்வாய்வை மேற்கொள்ள ஆய்வாளருக்குத் தூண்டுகோலாக அமைந்த ஒன்றாகும்.

ஆய்வின் நோக்கம்

தமிழ் ஆய்வு உலகில் அதிகம் அறியப்பட்டவர் டாக்டர். ந. சுப்புரெட்டியார் ஆவார். எனவே சுப்புரெட்டியாரின் சிறப்பை வெளிக்கொணர வேண்டும் என்பதே இவ்வாய்வின் நோக்கம்.

ஆய்வு எல்லை

டாக்டர்.ந. சுப்புரெட்டியாரின் படைப்பான கம்பனில் மக்கள் குரல் என்ற நூல் முழுவதுமே ஆய்வுப் பொருளாக வரையறை செய்யப்பட்டு ஆராயப்படுகின்றது.

தரவுகள் திரட்டிய விதம்

இவ்வாய்வுக்கான தரவுகள் நூலகங்கள் இணையதளம் மூலமாகச் சேகரிக்கப் பெற்றன.

ஆய்வு அணுகுமுறைகள்

ஆய்வு அணுகுமுறைகள் பல வகைப்பட்டன "கம்பனில் மக்கள் குரல்" என்ற இவ்வாய்வு விளக்க முறையில் அமைந்துள்ளது. மேலும் பகுப்பாய்வு முறையும் பின்பற்றப்பட்டிருக்கிறது.

ஆய்வேட்டின் அமைப்பும் பகுப்பும்

ஆய்வு அறிமுகம், ஆய்வு முடிவுரை, நீங்கலாக நான்கு இயல்கள் இவ்வாய்வேட்டில் அமைக்கப்படடிருக்கிறது.

1. சுப்புரெட்டியார் வாழ்க்கை வரலாறு
2. தமிழ் இலக்கியங்களில் கம்பன்
3. சுப்புரெட்டியார் காட்டும் கம்பர்
4. மொழிநடை உத்திகளும்

ஆய்வு அறிமுகம் என்ற இப்பகுதியில் தலைப்புத்தேர்வு ஆய்வுத்தலைப்பு விளக்கம் ஆய்வு முன்னோடி ஆய்வு நோக்கம் ஆய்வேட்டின் அமைப்பும் பகுப்பும் போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன.

தமிழ் இலக்கியங்களின் கம்பன் என்ற முதல் இயலில் கம்பன் வாழ்க்கை வரலாறு பற்றியும் அவரது இலக்கிய திறமை பற்றியும் இலக்கிய பாடல் கவிப்புலமை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

சுப்புரெட்டியார் காட்டும் கம்பர் என்ற மூன்றாவது இயலில் 11 தலைப்புகள் அடங்கிய கம்பராமாயணம் கூறும் செய்திகளை சுப்புரெட்டியார் அவர் நடையில் எழுதப்பட்டுள்ளதை மேலும் மெருகூட்டி ஆய்வாளரால் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மொழிநடை உத்திகளும் என்ற நான்காவது இயலில் கம்பர் எழுதிய கம்பராமாயணம் என்னும் நூலில் உள்ள சில கதைகள் கட்டுரையாக "கம்பனில் மக்கள் குரல்" என்னும் தலைப்பில் 11 தலைப்புகள் கொண்ட கட்டுரை வாயிலாக பயன்படுத்தப்பட்ட மொழிநடை உத்திகள் ஆகியவற்றை கம்பர் எவ்வாறு பயன்படுத்தி உள்ளார். அவற்றை டாக்டர்.ந. சுப்புரெட்டியார் எவ்வாறு பயன்படுத்தியுள்ளார் என்பதை இவ்வியலில் கூறப்பட்டிருக்கின்றது.

ஆய்வு முடிவுகள் என்ற இறுதிப் பகுதியில் இவ்வாய்வேட்டின் வழியாக ஆய்வாளரால் காணப்பட்ட சில முடிவுகள் தொகுப்பு தரப்பட்டிருக்கிறது.

இயல்.1.டாக்டர்.ந.சுப்புரெட்டியரின் வாழ்க்கை வரலாறு

பேராசிரியர் டாக்டர் சுப்புரெட்டியர் வாழ்க்கை வரலாறும் அவரின் சிறப்புகளும் இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் சீரிய தமிழ்ப்பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டதாகும். அறிவியல் பேராசிரியராக வளர்ந்து பின்னர் தமிழ்ப் பேராசிரியராக வந்தவர். இவர்தம் தமிழ்ப்பணி ஈடு எடுப்புமற்றது. இந்நூற்றாண்டில் இணையற்ற எழுத்தாளராகத் திகழ்ந்தவர் ஆவார்.

பிறப்பு:

திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டம் பெரகம்பி என்னும் சிற்றூரில் தம் தாய்மாமன் பண்ணையார் இல்லத்தில் 27.08.1916 இல் செல்லப்பிள்ளையாகப் பிறந்தார். செல்வமாகவும் வளர்க்கப் பெற்றார். பெற்றோர் இட்ட பெயர் சுப்புரெட்டி (பாட்டன் பெயர்). இரண்டு வயதில் தந்தையை இழந்தார்.

பெற்றோர்:

தந்தையார் ஞானி நல்லப்ப ரெட்டியார், திருச்சி மாவட்டம், முசிறி வட்டம் கோட்டாத்தூர் என்ற சிற்றூரைச் சேர்ந்தவர். அன்னையார் காமாட்சி அம்மாள் பெரகம்பி என்ற சிற்றூர். 1926 வரை பெரகம்பியில் வளர்ந்து, கோட்டாத்தூருக்கு வந்தவர்.

குடும்பம்:

1936 இல் தம் தந்தை வழி ஒன்றுவிட்ட அத்தைமகள் செல்லபாப்பா அம்மையாரை மணந்தார். பல்லாண்டுகள் மக்கட்பேறு இன்றி 1945 இல் இராமலிங்கமும், 1953 இல் இராமகிருஷ்ணனும், மக்களாகப் பிறந்தனர். இராமலிங்கத்திற்கு மிருணாளினி, அனுபமா என்ற பெண் மக்கள் இருவர். அண்மையில் மிருணாலினிக்குத் திருமணமாகி கணவன் அரவிந்த விஷ்ணுராமனுடன் அமெரிக்காவில் உயர் பதவிகளில் ஒரே நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர். சொந்த இல்லத்தில் வாழ்கின்றனர். அனுபமாவுக்கு பதவி கிடைத்து நியூஜெர்சியில் வாழ்கின்றனர்.

கல்வி:

பெரகம்பியில் (1921-26) திண்ணை பள்ளியில் பயின்றார். இலிங்கச் செட்டியர் (கோமுட்டி) இவர்தம் சிறந்த ஆசிரியர். (1927-30)வரை கோட்டத்தூரில் தொடக்கக் கல்வி கற்றார். இவருக்கு ஆசிரியராக அமைந்த சந்திர சேகரய்யர் (இலிங்காயத்து) என்பாரிடம் மூதுரை, நல்வழி,நன்னெறி, அரிச்சந்திர புராணம் முதலிய நூல்களைக் கற்றார். மற்றோர் ஆசிரியராக அமைந்த வி.கே அரங்கநாத அய்யர் (பார்ப்பனர்) என்பாரிடம் ஆங்கிலம் வரலாறு, அறிவியல்,

தரைஇயல் முதலியவற்றைக் கற்றார். இவரே துறையூர் பெருநிலக்கிழவர் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் (1930) சேர்ந்தார். அங்கு இக்கால முறைப்படி கல்விபெற வாய்ப்பு ஏற்பட்டது. இப்பெருமகனாரே அடுத்த ஆண்டு (1931) முசிறி உயர்நிலைப் பள்ளியில் 4 ஆவது பாரத்தில் சேர்ந்தார். (1931-34) இல் உயர்நிலைப் பள்ளிக் கல்வி சிறப்பாக நிறைவேறியது. தொடர்ந்து 1934-1939 திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் வேதியியல் (சிறப்பு), இயற்பியல், கணிதம் (துணைப்பாடங்கள்) பயின்று 1936 இல் பி.எஸ்ஸி., தேர்வில் கல்லூரியில் முதல் மாணவனாகவும், மாநிலத்தில் மூன்றாவது மாணவனாகவும், தேர்ச்சி பெற்றார். (39-40) பதவி வாய்க்கவில்லை. 1940-41 சென்னை சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயின்று எல்.டி., பட்டம் பெற்றார்.

அலுவல்:

எல்.டி பட்டம் பெற்ற ஆண்டே துறையூர் பெருநிலக் கிழவர் நடுநிலைப் பள்ளி தொடங்கப் பெற்றதால் (1941) ஜீன் முதல் அதன் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார். கடினமாக உழைத்து தம் திறமைகளையெல்லாம் காட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக வளர்த்தார் (1945).

அலுவல் காலத்தில்:

தனியாகப் பயின்று தமிழ் வித்துவான் பட்டம் பெற்றார். (1945). எம்.ஏ. பயில சட்டம் இடம்தரவில்லை. தம் பேராசிரியர் ஜெரோம் டி சௌசா(பாதிரியார்) ஆசிரியர் உதவியால் சட்டம் தளர்த்தப்பெற்றது. பி.ஏ., தேர்வு எழுதி (1947) பட்டம் பெற்றார். எம்.ஏ (தமிழ்) பயின்று கொண்டிருந்தபோது

1. காரைக்குடி அழகப்பா ஆசிரியர்க் கல்லூரி தொடங்கப் பெற்று அதில் தமிழ்ப் பேராசிரியர் பணி கிடைத்தது. 1951இல் தமிழ் எம்.ஏ. பட்டம் பெற்றார். காரைக்குடியில் பத்து ஆண்டுகள் பல்லோர் வியக்கத்தக்க முறையில் பணியாற்றி நான்கு பயின்று முறை நூல்களை வெளியிட்டவர்.
2. 1960 முதல் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவியில் அமர்ந்தார். கடினமாக உழைத்து 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்,நம்மாழ்வார் தத்துவம்' பற்றி ஆராய்ந்து பிஎச்.டி. பட்டம் பெற்றார். இக்காலத்தில்,
    1) பல அறிவியல் நூல்களை எழுதி வெளியிட்டவர்.
    2) இரண்டு பேராசிரியர்களின் துணை கொண்டு தாவரவியல்,விலங்கியல், உடற் கூற்றியல் போன்ற உயிரியல்

துறைகளை ஆழ்ந்து கற்று அவற்றில் அடிப்படையான அறிவு பெற்றார்.

3) சுமார் 9 ஆண்டுகள் சென்னை அரசுடன் போராடி தமிழ் வளர்ச்சிக்கான மானியம் பெற்று தமிழ் எம்.ஏ ஆய்வுத் துறைகள் நிறுவினார். சுமார் எட்டு ஆண்டுகள் கடுமையாக உழைத்து தமிழகம் மெச்சும் வண்ணம் துறையைப் புகழோங்கச் செய்தார்.

4) திருப்பதியில் பன்னாட்டுக் கழகம், பாக்காலா, சித்தூர், புத்தூர், நகரி ஆகிய இடங்களில் தமிழ்ச் சங்கங்கள் நிறுவி தமிழ் நடையாடும் பகுதிகளை ஒன்று சேர்த்து அங்கெல்லாம் தமிழ் இலக்கியக் கூட்டங்கள் நடைபெறச் செய்தார்.

5) துறை ஆண்டுவிழாக்களில் தமிழக அமைச்சர் வருவதைப் பங்கு பெறச் செய்தார். தவிர திரு. ஜி.டி. நாயுடு,குன்றக்குடி அடிகள், சரித்திர அறிஞர் மு. அருணாசலம், கம்பன் அடிப்பெடி சா. கணேசன், முதுபெரும் புலவர், கி. வேங்கடசாமி ரெட்டியார், தமிழ்க்கடல் எஸ்.கே ராமராசன்,சிந்தாமணிச் செம்மல் மு. இராமசாமி போன்ற அறிஞர்களையும் கருத்தரங்குகளில் பங்குபெறச் செய்து நிகழ்ச்சிகட்குப் பொலிவும் பெருமையும் சேர்த்தார். அமைச்சர் குழு முதலியோர்க்கு திருப்பதி பொதுமக்கள் சார்பாக வரவேற்புகள் நல்கவும் விருந்துச் செலவுக்கு திருப்பதியில் புகழ் பெற்ற உணவு விடுதி அதிபர் திரு. வேங்கடாசலம் அய்யரை (கேரளம்) அணுகி அப்பெருமானாரைச் செலவினை ஏற்கச் செய்தார்.

இவர் பங்கேற்ற துறைகள்:

1. **துறையூர்:**

- தலைவர்,டவுன் கோவப்பரேட்டில் சொசைட்டி.
- செயலாளர், மாவட்ட உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் சங்கம்.
- நிறுவனர், தலைவர் மாவட்ட தமிழாசிரியர் கழகம்.
- தலைவர், துறையூர் வட்ட தொடக்க நிலைப் பள்ளி ஆசிரியர் இணையம்.

2.திருப்பதி:

- தலைவர் திருப்பதி கலாச்சாரக் கழகம்.
- பாக்காலா, சித்தூர், புத்தூர் நகரி ஆகிய நான்கு இடங்களில் தமிழ்ச் சங்கங்கள் நிறுவி பல்வேறு இலக்கியக் கூட்டங்கள் நடைபெறச் செய்தார்.

ஓய்வுக்குப் பின்னர்:

1. தலைமைப் பதப்பாசிரியர், தமிழ்க் கலைக்களஞ்சியம் (தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை- 600 005.)-15 மாதங்கள்.
2. விருந்துப் பேராசிரியர் திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி – 517 502 (3 மாதங்கள்).
3. மதிப்பியல் பேராசிரியர் (தகைஞர்) காஞ்சி தத்துவ மையம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்(18 மாதங்கள்).
4. இயக்குநர், தெற்கு – தென்கிழக்கு ஆசிய மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம் (செ.ப.க. கட்டடம்) 6 ஆண்டுகள்.
5. வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்,தமிழ் இலக்கியத் துறை, மெரினா வளாகம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை -600 005. மூன்று பிஎச்.டி மாணவர்க்கு வழிகாட்டும் தகுதி பெற்றார். ஒருவர் பிஎச்.டி பட்டம் பெற்றார்.

பல்கலைக்கழகங்கள்:

1. கல்வி இயல் ஆலோசனைக் குழு- சென்னைப் பல்கலைக் கழகம் (1953-56) திருவேங்கடவன் பல்கலைக்கழகம் (பதவிப் பொறுப்பில்), மதுரை காமராஜர் பல்கலை கழகம் (வாழ்நாள்)
2. பேரவை- செ.ப.க.(53-56)- திருவேங்கடவன் பல்கலைக் கழகம் (பதவிப் பொறுப்பில்)
3. பாடத்திட்டக்குழு- திருவேங்கடவன், மைசூர்,பெங்களூர்,கேரளப் பல்கலைக் கழகங்கள்.
4. பேராசிரியர் நியமனக் குழு- சென்னை,மதுரை- காமராசர், திருவேங்கடவன் பல்கலைக் கழகங்கள்.
5. தேர்வாளர்- சென்னை, மதுரை- காமராசர்,திருவேங்கடவன் பல்கலைக் கழகங்கள்.
6. ஓர் உறுப்பினர் ஆணையம்- திருவேங்கடவன் பல்கலைக் கழகம் கல்லூரிகளில் உயர்நிலைத் தமிழ் தொடங்குவதற்கு பரிந்துரைத்தல்.

அரசு:

1. தமிழக அரசின் எழுத்துச் சீர்திருத்தக் குழு.
2. தமிழக அரசு நிதிஉதவி அளிப்பதற்குச் சிறந்த நூல்களை தேர்ந்தெடுக்கும் வல்லுநர் குழு.
3. அகவை முதிர்ந்த தமிழறிஞர்கட்கு ஊதியம் அளிப்பதற்காகப் பரிந்துரைக் குழு.
4. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மன்றம் உயர் மட்ட குழு.
5. அயல் மாநிலங்களிலும் அயல் நாடுகளிலும் தமிழ் பரப்புவதுபற்றித் திட்டம் வகுக்கும் குழு(அரசு அமைத்தது).
6. தமிழை அனைத்து நிலைகளிலும் கட்டாயம் ஆக்குவதற்கான வழிவகைகள் பற்றி ஆராய்ந்து பரிந்துரைக்கும் வல்லுநர் குழு.
7. திருமலை திருப்பதி தேவஸ்தானம்- நிதி உதவி அளிப்பதற்காகச் சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுக்கும் வல்லுநர் குழு.

அறக்கட்டளைப் பொழிவுகள்:

தம் வாழ்நாளில் இதுகாறும் 14 அறக்கட்டளைப் பொழிவுகள்(பல்கலைக் கழகங்களில்) நிகழ்த்தி அனைத்தையும் நூல் வடிவமாக்கிய ஒரே ஒரு பேராசிரியர் இவர்.

டாக்டர் பட்ட ஆய்வுகள்:

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் இவர்தம் அறிவியல் நூல்களை ஆய்ந்து ஒருவர் எம்.ஃ.பில் பட்டமும், சென்னை பல்கலைக் கழகத்தில் (உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் மூலம்) இவர்தம் அனைத்து நூல்களையும் ஆய்ந்து ஒருவர் பிஎச்.டி பட்டமும் பெற்றுள்ளனர்.

பெற்ற விருதுகள்:

1. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் அருங்கலைக்கோன்-1969.
2. பண்ருட்டி வைணவ சபை - ஸ்ரீ சடகோபன் பொன்னடி -1993.
3. மதுரை – காமராசர் பல்கலைக் கழகம் - தமழ்ப் பேரவைச் செம்மல் -1993 – வாழ்நாள் உறுப்பினர்- கல்வி ஆலோசனைக் கழகம்.
4. தமிழக அரசு – திரு.வி.க விருது -1995-ரூ. 10000.
5. இராசா சர் முத்தையய வேள் விருது – 1994 -ரூ. 50000.
6. சென்னை ஆழ்வார் ஆய்வு மையம்- இராமாநுசர் விருது – 1996- ரூ. 25000.
7. சென்னைக் கம்பன் கழகம் - பேராசிரியர் இராதாகிருஷ்ணன் விருது – 1996- ரூ. 1000
8. மதுரை- காமராசர் பல்கலைக் கழகம் டி.லிட்., கௌரவப் பட்டம் - 1999.
9. தமிழக அரசு- கலைமாமணி – 1999 - மூன்று சவரன் தங்கப் பதக்கம்.
10. காஞ்சிப் பெரியவர் நூற்றாண்டு விழாக் குழு – சேவாரத்னா – 1999- ரூ.1000.
11. துறையூர் நகராண்மைக் கழகம் இவர் தம் பணியைப் பாராட்டி சிறப்பு வரவேற்பு – 2000 ஆண்டில்.
12. சி.பி. ஆதித்தனார் விருது -2001 - ரூ. 100000.
13. ஆய்வுத் தமிழகரசு- 2001- திருப்பெருந்திரு சோமசுந்தரர் குருவருள் அருட்பணி மன்றம்,சென்னை -ரூ.3000.
14. பொதுமறைச் செம்மல் -2002 – குருபழநி ஆதினம், திருக்குறள் பீடம், குருகுலம் மதுராந்தகம் - ரூ. 2000.
15. தமிழ்வாகைச் செம்மல் - 2003 – சேலம் தமிழ்ச் சங்கம் -ரூ. 10000.

புலமை:

தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, வடமொழி(சிறிதளவு) அறிவியல் - (7 துறைகளில்) எம்.எஸ்ஸி (தரத்தில்).

வெளிநாட்டுப் பயணம்:

1. 2002 ஏப்ரல், மே, சூன் அமெரிக்கா செல்லல். 4 மாநிலங்களைச் சுற்றிப் பார்த்தல், இரண்டு இடங்களில் பொழிவு.
2. 2003 –மே 1 – 15. இலங்கை செல்லல் - பெரும்பாலான இடங்கள் சுற்றிப் பார்த்தல்.
3. 2005 ஜீன் மலேசியா சிங்கப்பூர் செல்லல். சில இடங்களைச் சுற்றிப் பார்க்கத் திட்டம்.

தனிப் பண்புகள்:

1939 முதல் திருக்குறள் தோய்வு – 'மனத்துக்கண் மாசிலனாதல்' என்ற வாழ்வு. மனம், மொழி, மெய், இவற்றால பிறர்க்குத் தீங்கு செய்யாத வாழ்வு. எதற்கும் கவலைப்படாத நெஞ்சம்.

கவலையால் பிரச்சனைகள் தீரா என்ற உறுதி. செய்வன திருந்தச் செய்தல் இவர் கோட்பாடு. கடமைகளை மறவாது செய்பவர். காலத்தைப் பொன்போல் போற்றுபவர். துறையூர், காரைக்குடி, திருப்பதி, சென்னை ஆகிய இடங்களில் இவரால் பயன் பெற்றவர்கள் பலர்.

போற்றிய பெருமக்கள்:

இவரால் போற்றப்பட்ட பெருமக்கள் காந்தியடிகள், திரு.வி.க., சித்பவானந்த அடிகள், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, தந்தைப் பெரியார், இராமாநுசர், தாயுமான அடிகள் ,இராமலிங்க அடிகள், இராமகிருஷ்ண பரமஹம்சா, விவேகானந்த அடிகள், சைவ குரவர்கள் நால்வர், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பட்டினத்தடிகள், கவிஞர் தாகூர் பெர்னாட்ஷா முதலியோர் ஆவர்.

அவர் படைத்த நூல்கள்:

1. அகத்திணைக் கொள்கைகள்
2. அண்ணல் அனுமன்
3. அணுக்கரு பௌதிகம்
4. அணுவின் ஆக்கம்
5. அதிசய மின்னணு
6. அம்புலிப் பயணம்
7. அர்த்த பஞ்சகம்
8. அறிவியல் தமிழ்
9. அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்
10. அறிவியல் பயிற்றும் முறை
11. அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல் (மொழிபெயர்ப்பு)
12. அறிவியல் விருந்து
13. அறிவுக்கு விருந்து
14. ஆழ்வார்களின் ஆரா அமுது
15. இராக்கெட்டுகள்
16. இராமலிங்க அடிகள்

17. இல்லற நெறி

18. இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்

19. இளைஞர் தொலைக்காட்சி

20. இளைஞர் வானொலி

21. என் அமெரிக்கப் பயணம்

22. கண்ணன் பாட்டுத்திறன்

23. கம்பனின் மக்கள் குரல்

24. கல்வி உளவியல்

25. கல்வி உளவியல் கோட்பாடுகள்

26. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி

27. கலியன்குரல்

28. கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி-ஒரு மதிப்பீடு

29. கவிஞன் உள்ளம்

30. கவிதை பயிற்றும் முறை

31. கவிமணியின் தமிழ்ப்பணி-ஒரு மதிப்பீடு

32. காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்

33. காலமும் கவிஞர்களும்

34. குயில் பாட்டு – ஒரு மதிப்பீடு

35. சடகோபன் செந்தமிழ்

36. சி.ஆர்.ரெட்டி(மொழிபெயர்ப்பு)

37. சைவ சமய விளக்கு

38. சைவ சித்தாந்தம்-ஓர் அறிமுகம்

39. சைவமும் தமிழும்

40. சோழ நாட்டுத் திருப்பதிகள்-1

41. சோழ நாட்டுத் திருப்பதிகள்-2

42. ஞானசம்பந்தர்

43. தந்தை பெரியார் சிந்தனைகள்

44. தம்பிரான் தோழர்

45. தமிழ் இலக்கியத்தில் அறம், நீதி, முறைமை

46. தமிழ் பயிற்றும் முறை

47. தமிழ்க்கடல் இராய.சொ.

48. தமிழில் அறிவியல் செல்வம்

49. தமிழில் அறிவியல்-அன்றும் இன்றும்

50. தாயுமானவர்

51. திருக்குறள் தெளிவு – உரைநூல்

52. திருவேங்கடமும் தமிழிலக்கியமும்

53. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்

54. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

55. தொலை உலகச் செலவு

56. நமது உடல்

57. நவவித சம்பந்தம்

58. நாவுக்கரசர்

59. நினைவுக் குமிழிகள்-பாகம்-1

60. நினைவுக் குமிழிகள்-பாகம்-2

61. நினைவுக் குமிழிகள்-பாகம்-3

62. நினைவுக் குமிழிகள்-4

63. நீங்காத நினைவுகள்-1

64. நீங்காத நினைவுள்-2

65. பட்டினத்தடிகள்

66. பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்

67. பரகாலன் பைந்தமிழ்

68. பரணிப் பொழிவுகள்

69. பல்சுவை விருந்து

70. பாஞ்சாலி சபதம்-ஒரு நோக்கு

71. பாட்டுத்திறன்

72. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்

73. பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பீடு

74. பாரதீயம்

75. பாவேந்தரின் பாட்டுத்திறன்

76. புதுவை(மை)க் கவிஞர் பாரதியார்-ஒரு கண்ணோட்டம்

77. மலரும் நினைவுகள்

78. மலைநாட்டுத் திருப்பதிகள்

79. மாணிக்கவாசகர்

80. மானிட உடல்

81. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

82. முத்தொள்ளாயிர விளக்கம்

83. மூவர் தேவாரம்-புதிய பார்வை

84. வடநாட்டுத் திருப்பதிகள்

85. வடவேங்கடமும் திருவேங்கடமும்

86. வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்

87. வாய்மொழியும் வாசகமும்

88. வாழும் கவிஞர்கள்

89. வாழையடி வாழை

90. விட்டிணுசித்தன் விரித்த தமிழ்

91. வேமனர் (மொழிபெயர்ப்பு)

92. வைணவமும் தமிழும்

93. வைணவ உரைவளம்

94. வைணவ புராணங்கள்.

போன்ற நூல்கள் இவர் படைப்புகள் ஆகும். இதுவரை கூறப்பட்டவை அவரது வாழ்க்கை வரலாறு மற்றும் அவர் எழுதிய நூல்கள் ஆகும். இவையே வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகள் சிறப்புகள் ஆகும்.

பிறப்பு: ஆகஸ்டு – 27- 1916.

இறப்பு: மே- 1- 2016.

இயல் 2.தமிழ் இலக்கியங்களில் கம்பன்

முன்னுரை:

தமிழ் இலக்கியங்களில் கம்பன் எழுதிய இலக்கியங்களையும் கம்பனை பற்றி இலக்கியங்கள் தரும் செய்திகளையும் பற்றி காண்போம். “கல்வியிற் பெரியர்“ என்றும், “கவிச்சக்ரவர்த்தி“ என்றும் நல்லியற்புலவரெல்லாம் மனமொத்து வாயாரப் புகழும் பெருமாண்புடைய அருமைக் கம்பரின் பெருமைச் சிறப்பு முழுவதும் இத்தமிழுலகம் நன்கறிந்து நாளும் பாராட்டுவதேயாம். இக்கவியரசர் வரலாறு, காலம், முதலியன, இக்காலத்து ஒன்றோடொன்றொவ்வாப் பல்வேறு வகையால் வழங்கப்படுகின்றன. சிறிது பழைய தமிழ் நூல்களையே பெருங்கருவியாகக் கொண்டு நோக்கின், அவற்றதுண்மை, இன்னதென்று துணியலாகும். இவ்வாராய்ச்சிக்குப் பெருந்துணையாகக் காண்பன. தமிழ் நாவலர் சரிதை, தொண்டைமண்டல சதகம், சோழமண்டல சதகம், பாண்டிமண்டல சதகம் என்பனவும், பிறவுமாம். இவற்றுள் கண்ட சில பாடல்களையும் அடிகளையும் இங்கு காணலாம் இத்தெய்வப்புலவரது வரலாறு ஒருவாறு நன்கு உணரலாகும்.

கம்பர்

கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர்
கும்பமுனி சாயங் குலைந்தவூர் - செம்பதுமத்
தாதகத்து நான்முகனுந் தாதையுந்தே டிக்காணா
வோ தகத்தார் வாழுமழுந் தூர்.”

(தமிழ் நாவலர் சரிதை)

என்று அவர் ஊர் பற்றி அவர் பாடிய பாடலாகும்.

கம்பர் (கி.பி. 1180-1250) என்பவர் தமிழ் கவிஞரும், நூலாசிரியரும் ஆவார். இவர் இயற்றிய கம்பராமாயணம் நூலானது புகழ் பெற்றதாகும். கம்பராமாயணத்தினை படித்த பலரும் கம்பரின் கவித்திறனைப் பாராட்டியுள்ளார்கள். கம்பருக்கு ”கல்வியிற் பெரியோன் கம்பன்”, ”கவிச்சக்ரவர்த்தி” போன்ற பட்டங்களை சூட்டியுள்ளனர். கம்பரின் கவித்திறனால், ”கம்பன் வீட்டு கட்டுத் தறியும் கவி பாடும்” என்ற முதுமொழி தமிழில் உள்ளது. தமிழ் இலக்கியத்தில் கம்ப இராமாயணமே மிகப்பெரிய இதிகாசம் எனக் கருதப்படுகிறது.

பெயர்க்காரணம்

இவர் குலம்

நாரணன் விளையாட் டெல்லா நாரத முனிவன் சொல்ல வாரணக்
கவிதைசெய்தா னறிந்துவான் மீகியென்பான்
சீரணி சோழநாட்டுத் திருவழுந் தூருவச்சன்(1)
(2)காரணி கொடையான் கம்பன் றமிழினாற் கவிதை செய்தான்.

(இராமாவதாரப் பாயிரம்.)

இன்று கம்பர் குலம் என்று அழைக்கப்படும் உவச்சர்கள் குலத்தில் பிறந்தமையால் பெற்ற பெயர் என்று கூறுவர். காளி கோயிலில் பூசை செய்யும் மரபினர் என்று உவச்சர்கள் சுட்டப்பெறுகின்றனர். கம்பர் குழந்தையாகக் காளி கோயில் கம்பத்தின் அருகே கிடந்தமையால் இப்பெயர் பெற்றார் என்பர். கம்பங் கொல்லையைக் காத்து வந்தமையால் கம்பர் என்று அழைக்கப்பட்டார் என்றும் கூறுவர். காஞ்சிபுரத்தில் உள்ள இறைவனாகிய ஏகம்பன் தேவாரப் பதிகங்களில் 'கம்பன்' என்றே சுட்டப்படுகிறான். அந்தப் பெயர் இவருக்கும் இடப்பட்டது என்பர். இப்பாட்டில் "உவச்சன்" என்பதற்கியைய, வாணியன் தாதன் என்பான் இக்கம்பரைப் பாடிய வசைப்பாட்டின்கண், "கைம்மணிச் சீரன்றிச் சீரறி யாக்கம்ப நாடன்" (தமிழ் நாவலர் சரிதை) என வருதல் காணமுடிகிறது. கைம்மணிச் சீர் - கையின் மணியோசை. உவச்சர் என்பார் காளிகோயில் முதலியவற்றிற் பூசைபுரியும் வகுப்பினராதலால், அவர்க்குக் கையால் மணியொலிப்பித்தலுந் தொழிலாம்.

வரலாறு

இவர் வளர்ந்து கல்வி பயின்று சிறந்தவாறு:-

பெற்றுவளர்த்தும் வித்தைதனைப் பேணிக்கொடுத்தும் பெயா கொடுத்தும
பற்றவரும்பா லமுதளித்தும் பகைத்தவறுமைப் பயந் தீர்ந் துங்
கற்றமுதனூற் றிருவழுந்தூர்க் கம்பன்றழையக் கருணை செய்தோர்
மற்றும்புலவோ ரையும்வாழ வைத்தார் சோழ மண்டலமே.

(சோழமண்டல சதகம்.)

கம்பர், கிபி 12 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவழுந்தூர் என்னும் இடத்தில் ஆதித்தன் என்பவருக்கு மகனாக ஒச்சன் என்ற உட்பிரிவில் பிறந்தார். அவரது பெற்றோர்கள் கடவுள் நரசிம்மரின் தீவிர பக்தர்கள் என்பதால் அவருக்கு 'கம்பர்' என்று பெயர் சூட்டினர். 'கம்பர்' என்றால் 'தூண்' என்று பொருள். பக்தப் ப்ரகலாதனைக் காக்க நரசிம்மர் தூணைப் பிளந்து கொண்டு வந்தார் என்ற பக்திக் கூற்றைக் கொண்டு அவருக்கு அப்பெயர் சூட்டினர் அவரது பெற்றோர்.

கம்பர் கி.பி 1180ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலம் வட்டம் திருவழுந்தூர் என்கிற கிராமத்தில் ஆதித்தன் என்பவற்றின் மகனாக பிறந்தவர் கம்பர். கம்பனின் பெயர் அவர் காளி கோயிலின் அருகில் இருந்ததால் கம்பர் என்று பெயர் வந்தது என்று சிலரும், வேறு சிலர் கம்பங்கொல்லையை காத்து வந்தததால் கம்பன் என்று பெயர் வந்தது என்று சிலரும் கூறுகின்றனர். மற்றும் சிலர் அவரின் பெயர் வந்ததுக்கு காரணம் கம்பர் குலம் அதாவது காலி கோயிலில் பூஜை செய்பவர்கள் குடும்பம் கம்பர் குளம் என்று அழைக்கப்படுகிறது. அதனாலேயே அவருக்கு அந்த பெயர் வந்தது என்று சிலர் கூறுகின்றனர் இருந்தாலும் அவரது பெயர் எப்படி தழுவி வந்தது என்று இன்று வரை சரியாக தெரியவில்லை மரபு சார்ந்து இந்த பெயர் வந்தது என்று தமிழ் ஏடுகளில் இடம்பெற்றுள்ளது.

கம்பர் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலம் வட்டம் திருவழுந்தூர் என்றழைக்கப்படும் தேரழுந்தூர் என்னும் ஊரில் பிறந்தவர். கம்பருடைய தந்தை ஆதித்தன் என்றும், கம்பருடைய மகன் அம்பிகாபதி என்றும் கூறப்படுகிறது. அம்பிகாபதி கவிஞராக இருந்து, சோழ மன்னனின் மகளான அமராவதி என்பவளைக் காதலித்து வந்துள்ளார். இதன் காரணமாக சோழ மன்னன் அம்பிகாபதியைக் கொன்றுவிட்டார் என்றும், அதன் காரமாகவே இராமாயணத்தில் புத்திர சோகத்தினைக் கொண்ட தரசதன் பாடும் பாடல்களில் புத்திர சோகம் அதிகம் வெளிபடுவதாகவும் கூறுகின்றனர். சோழ மன்னனுடன் ஏற்பட்ட பிணக்கின் காரணமாகக் கம்பர், சோழநாட்டிலிருந்து ஆந்திர நாட்டிற்குச் சென்று தங்கியிருந்ததாகவும் கூறப்படுகிறது.

கம்பரை சடையப்ப வள்ளல் என்பவர் ஆதரித்து வந்துள்ளார். இவர் திரிகார்த்த சிற்றரசனாவார். இவரே கம்பரை இளமைக் காலத்தில் பேணிக்காத்தவர் என்றும் பின்பே சோழ மன்னன் கம்பரை ஆதரித்து வந்ததாகவும் கூறுகின்றனர். சோழ மன்னன் கம்பநாடு என்ற பகுதியைக் கம்பருக்கு தந்துள்ளார். கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டமும் சோழன் தந்தது என்று கூறுகின்றனர்.

கம்பர் வள்ளி என்ற தாசியைக் காதலித்து வந்ததாகவும், கம்பரை வேறு பெண்ணொருத்தி காதலித்து வந்தாலும், அவளை கம்பர் ஏற்கவில்லை எனவும் தமிழ் நாவலர் சரிதியில் சில செய்யுள்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பரை பாண்டிய மன்னனும், காகதிய ருத்திரன் என்ற மன்னும் பாராட்டியுள்ளதாகவும், சோழ அரசன் கம்பரைக் கொல்ல திட்டமிட்தாகவும் கூறப்படுகிறது.

கம்பனின் காலம்

கம்பனின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியாகும். கம்பருடைய இராமாயணத்தில் சீவக சிந்தாமணியின் தாக்கம் இருப்பதால், கம்பர் திருத்தக்க தேவரின் காலத்திற்குப் பிந்தையவர் என்றும், ஓரங்கல் நாட்டில் அவர் தங்கியிருந்த காலத்தில் அங்கு பிரதாபருத்திரன் என்ற மன்னன் ஆண்டு வந்ததையும் கண்டறிந்துள்ளனர். கம்பர் தமிழகத்தில் மூன்றாம் குலோத்துங்கச் சோழனிடம் கருத்து மாறுபட்டு ஆந்திர நாட்டில் தங்கியிருந்தமையால், பிரதாபருத்திரன் மற்றும் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆகியோர் காலத்தினைக் கொண்டு பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் கம்பர் வாழ்ந்திருப்பதாகக் கருதுகின்றனர். ஆனால் கம்பருடைய காலம் ஒன்பதாம் நூற்றாண்டு, பத்தாம் நூற்றாண்டு எனவும் கருத்துகள் உ ள்ளன. கம்பர் தனியன்கள் என்ற தனிப்பாடல்களின் தொகுதியிலிருந்து ”எண்ணிய சகாப்தம் எண்ணூற்று ஏழின் மேல்” என்ற பாடலைக் கொண்டு கம்பராமாயணம் கி.பி. 885 ல் இயற்றப்பட்டதாக கூறுகின்றனர். ஆனால் இக்கருத்தினை வையாபுரிப் பிள்ளை என்ற ஆய்வாளர் மறுத்துள்ளார். இந்த கம்பர் தனியன்கள் பிற்காலத்தின் இடைச்செருகலாகக் கருதுகிறார். ”ஆவின் கொடைச் சகரர்” என்ற பாடலினைக் கொண்டு கி.பி. 978 என்றும் முதலாம் இராசராச சோழனுக்கு முன்பு இருந்த உத்தம சோழன் காலம் என்றும் சிலர் கூறினர். ஆனால் இந்த கணிப்பும் தவறானது

என்று ஆய்வாளர்கள் மறுத்துள்ளர். இராசமாணிக்கனார் கி.பி. 1325க்கு முன்பே கம்பர் காவியத்தினை இயற்றியிருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

கம்பர் இயற்றிய நூல்கள்

கம்பர் ஏரெழுபது பாடி அரங்கேற்றியது

குணங்கொள் சடையன் புதுச்சேரிக் கொடையன் சேதிராயன் முதற் கணங்கொள்
பெரியோர் பலர்கூடிக் கம்பநாடன் களிகூற விணங்கும்பரிசி
லீந்துபுலி யேழும்புகழே ரெழுபதெனு
மணங்கொள் பெருங்காப் பியப்பனுவல் வகித்தார் சோழ மண்டலமே.

(சோழமண்டல சதகம்.)

சடையனாகிய புதுச்சேரிக் கொடையன் என்க சேதிராயனும் புதுவை ஊராதல் பற்றிப் புதுச்சேரிக் கொடையனாகிய சேதிராயன் என்னும்மையும் சடையன், சேதிராயன் முதலிய பெரியோர் நிறைந்த அவையியற்றான் இவர் ஏரெழுபது அரங்கேற்றியது.

- சிலையெழுபது.
- சடகோபர் அந்தாதி
- சரசுவதி அந்தாதி
- திருக்கை வழக்கம்
- கம்பராமாயணம்
- ஏரெழுபது
- மும்மணிக்கோவை
- கம்பர் தனிப்பாடல்கள்.

கம்பனைப் பற்றிய நூல்கள்

1. கம்பன் புதிய பார்வை - அ.ச.ஞானசம்பந்தன் - கங்கை புத்தக நிலையம்.
2. கம்பன் காவியத்தில் ஆளுமைத் திறன்கள் - பேராசிரியர் இரத்தின நடராசன் - ஏகம் பதிப்பகம்.
3. கம்பன் தொட்டதெல்லாம் பொன் - கமலா சங்கரன் - விகடன் பிரசுரம்.
4. கம்பன் கருத்துக் களஞ்சியம் - வானதி பதிப்பகம்.
5. கம்பன் என் காதலன் - சிவகுமார் - அல்லயன்ஸ் கம்பெனி.
6. கம்பன் சில சிந்தனைகள்- ஸ்ரீ முனைவர் பாலஇரமணி - ஏகம் பதிப்பகம்.
7. கம்பன் கண்ட தமிழகம் - சாமி சிதம்பரனார் - பாவை பதிப்பதிகம்.
8. கம்பன் காணும் திருமால் - ஆ.கிருஷ்ணன் - வானதி பதிப்பகம்.
9. கம்பன் என்றொரு மானிடம் - சாமி. தியாகராசன்.
10. காசில் கொற்றத்துக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் - கபிலன் வெளியீடு.
11. கம்பன் தனிப்பாடல்கள் - புலியூர்க் கேசிகன்
12. பாட்டரங்கில் கம்பன் - பாவலர் மணி சித்தன் - வானதி பதிப்பகம்.
13. கம்பன் கல்வியில் பெரியன் - கம்பனடிசூடி பழ. பழனியப்பன் - மணிமேகலைப் பிரசுரம்.
14. கம்பரசம் - பேரறிஞர் அண்ணா.
15. கம்பன் படைத்த கவின்மிகு பாத்திரங்கள் - முனைவர் க. முருகேசன் - சீதை பதிப்பகம்.
16. கம்பனில் அறிவு - பாவலர் சு. வேல்முருகன் -கம்பன் பதிப்பகம்.

17. கம்பன் பாடிய அறம் - பாவலர் சு. வேல்முருகன் - கம்பன் பதிப்பகம்.
18. கம்பன் பாடிய வண்ணங்கள் - முனைவர் இரா. திருமுகன்.
19. கம்பன் கண்ட அரசியல் - டாக்டர் எஸ் இராமகிருஷ்ணன்.
20. சிறியன சிந்தியாதான் - எஸ். இராமகிருஷ்ணன் - தையல் வெளியீடு.

"கம்பன் வீட்டுத் கட்டுத்தறியும் கவிபாடும்" என்றொரு பழமொழியே உருவாகும் அளவிற்கு, கம்பரது புகழும், கவித்திறமையும் அனைவராலும் இன்றளவும் பேசப்பட்டு வருகிறது. 'கவிபேரரசர் கம்பர்', 'கவிச்சக்ரவர்த்தி கம்பர்', 'கல்வியில் பெரியவர் கம்பர்' என்றெல்லாம் அவரது கவித்திறனைப் பறைசாற்றும் அளவிற்கு அவருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியில் சொல்வன்மைக் கொண்டவராக இருந்த அவர், ஆழமான கவிதை அனுபவமும், கற்பனை ஆற்றலும், புலமைத் திறனும் பெற்று, அவரது சமகாலத்துப் புலவர்களான ஓட்டக்கூத்தர், சேக்கிழார் போன்றோரின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார். 'கம்பராமாயணம்', 'சிலையெழுபது', 'சடகோபர் அந்தாதி', 'சரசுவதி அந்தாதி', 'திருக்கை வழக்கம்', 'ஏரெழுபது' மற்றும் 'மும்மணிக்கோவை' போன்றவை அவர் படைத்த படைப்புகளாகும். இதில் 'கம்பராமாயணம்' தமிழ் இலக்கியத்தில் தலைச்சிறந்த காவியமாகக் கருதப்படுகிறது. மேலும் கம்பரின் தனித்துவமான சுவைக்கினிய பாணியில் அதைப் படைத்ததால் அது உலகளாவிய அங்கீகாரம் பெற்றது எனலாம்.

" கம்பன் வீட்டு கட்டுத் தறியும் கவிபாடும் " என்ற பழமொழிக்கு ஏற்ப கம்பனது வாழ்க்கை முழுக்க தமிழ் இலக்கியமும், தமிழ் வளமையும் பொங்கி வழிந்து உள்ளது. கம்பத்து புகழும் கவிபாடும் திறனும் இன்றுவரை தமிழ் மக்களிடையே தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது. அவரது கற்பனை திறன் மற்றும் கவிபாடும் திறமை ஆகியவற்றை அவரது காலத்தில் இருந்த அனைத்து கவிஞர்களும் பாராட்டியுள்ளனர்.

கம்பன் தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் புலமை பெற்று இருந்ததும் மேலும் அவர் தமிழ் மீதும் தமிழ் இலக்கியத்தின் மீதும் அவர் கொண்ட பற்று மற்றும் அவர் தமிழ் மொழிக்காக ஆற்றிய தொண்டினையும் இதில் விரிவாக காணலாம்.

கம்பரின் சிறப்பு

''கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும்" எனும் பழமொழி அவரது கவித்திறத்தை உணர்த்தும் ஒன்று. கம்பர் "கவிச்சக்கரவத்தி" என்றும் புகழப்படுகிறார்.

- கம்பர் என்றொரு மானுடன் வாழ்ந்ததும் என தன்னுடைய சுயசரிதையில் மகாகவி பாரதியார் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தன்னுடைய பாடலில் "கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" எனப் பாடியுள்ளார்.

- "அம் புவியில் மக்கள் அமுதம் அருந்த வைத்த "கம்பர் கவியே கவி" என கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

- “தமிழ்மொழி தனக்கு ஒரு தவச்சிறப்பைத் தந்தது “கம்பரின் கவிச் சிறப்பே” என நாமக்கல் கவிஞர் கூறியுள்ளார்.

- கல்வியிற் பெரியன் கம்பன் - முதுமொழி

- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் - முதுமொழி

- பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடல் இவரை விருத்தம் என்னும் ஒண்பா பாடுவதில் மிகச் சிறந்தவர் என்று குறிப்பிடுகிறது.

வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
சயங்கொண்டான் விருத்தமென்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா
அந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்
வசைபாடக் காள மேகம் பண்பாகப்
பகர்சந்தம் படிக்காச
லாலொருவர் பகரொ ணாதே.

- பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.

சடையப்ப வள்ளலின் ஆதரவு

நாதஸ்வர வித்வான்களான ஒச்சன் பரம்பரையில் பிறந்திருந்தாலும், அவர் தமிழ்நாட்டில் உள்ள வெண்ணைநெல்லூர் என்னும் ஊரில் உள்ள ஒரு பணக்கார விவசாயி ஒருவரால் செல்வ செழிப்போடு எடுத்து வளர்க்கப்பட்டார். இளம் வயதிலிருந்தே அவர் தொன்மையான மொழிகளான சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியின் மீது பேரார்வம் உடையவராக இருந்ததால், அவரது நலம் விரும்பியான வள்ளல் சடையப்ப முதலியார் என்பவரின் உதவியுடன் அவ்விருமொழிகளை மிகுந்த ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்தார். சிறு வயதிலிருந்தே அவருக்குக் கவிதைகள் எழுதும் ஆர்வம் இருந்தது. அம்மொழிகளின் அடிப்படையை பாரம்பரிய முறையில் நன்கு கற்ற அவர் பல கவிதைகளும், நூல்களும் எழுதத் தொடங்கினார். அதன் பின்னர் அவரது கவிப்புலமை எட்டுத்திக்கும் பரவத் தொடங்கியது.

கம்பரின் கவிப்புலமை

மாபெரும் கவிஞராக உருவெடுத்த கம்பரின் புகழை அறிந்த அப்போதைய சோழ மன்னர் அவருக்கு அழைப்பு விடுத்தார். அரண்மனைக்கு சென்ற அவர் மன்னரின் அன்பு கட்டளைக்கிணங்க அவரது படைப்புகளில் சில வரிகளை அவருக்குப் பாடிக் காட்டினார். அவரது கவித்திறனை நேரில் கண்டு வியந்த சோழ மன்னர், அவருக்கு ‘கவிஞர்களின் பேரரசர்’ என்றும் அர்தமுடைய ‘கவி சக்கரவர்த்தி’ என்றும் பட்டம் சூட்டி அவருக்கு சொந்தமான பெருவாரிய நிலத்தைப் பரிசளித்து அதற்கு ‘கம்பநாடு’ என்றும் பெயர் சூட்டினார்.

இலக்கிய வாழ்க்கை

கம்பரின் தாய்மொழி தமிழ் என்றாலும் சமஸ்கிருதத்திலும் அவர் புலமைப் பெற்றே விளங்கினார். அதற்கு சான்று அவர் எழுதிய 'கம்பராமாயணம்'. முனிவர் வால்மீகி சமஸ்கிருதத்தில் படைத்த ராமாயணத்தை அவர் தமிழில் அவருக்குரித்தான பாணியில் மீண்டும் எழுதினார். அவரது பாடல் வரிகளின் அழகு, அற்புதமான நயம், உவமானம், மற்றும் பல வகையான வியக்கத்தகு கவிதை நடைகள் அவரது பாரம்பரிய கவிதைகளில் இடம் பெற்றிருக்கும். தமிழ்மொழியின் பெருமையை இடைக்கால கட்டங்களில் அற்புதமாக வெளிக்காட்டியதால் அவர் 'கம்ப நாட்டாழ்வார்' என்றும் அழைக்கப்பட்டார். அவர் கம்பராமாயணம் தவிர 'சிலையெழுபது', 'சடகோபர் அந்தாதி', 'சரசுவதி அந்தாதி', 'திருக்கை வழக்கம்', 'ஏரெழுபது' மற்றும் 'மும்மணிக்கோவை' போன்ற அற்புதப் படைப்புகளைப் படைத்துள்ளார்.

கம்பர் வாய்மொழி செய்தி

கம்பர் அவரது இளம் வயதில் வள்ளி என்கிற தாசியை காதலித்து வந்ததாகவும் அவரை அந்த பெண் ஏற்று கொள்ளவில்லை என்று நம்பமுடியாத தகவல் உள்ளது. மேலும் அவருக்கு ஒரு மகன் உள்ளதாகவும் அவரது மகன் பெயர் அம்பிகாபதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவரின் மகனான அம்பிகாபதி அந்த காலத்தில் இருந்த சோழ மன்னனின் மகளை காதலித்ததாகவும் அதனால் கோவம் கொண்ட சோழ மன்னன் அம்பிகாபதியை கொன்றுவிட்டதாகவும் சில குறிப்புக்கள் கூறுகிறது. மேலும் அவரின் மகனை அவர் இழந்ததாலேயே புத்திர சோகத்தினை பற்றி கம்பராமாயணத்தில் இடம் பெற்றுள்ளதாக சில குறிப்புகள் கூறுகிறது.

கம்பரை ஆதரித்த வள்ளல் ஒச்சன் பரம்பரையில் பிறந்த கம்பர் ஆரம்ப காலத்தில் ஒரு செல்வமிக்க விவசாயி ஒருவரின் அரவணைப்பில் வளர்ந்தார். அந்த காலத்தில் கம்பர் சமஸ்கிருதம் மற்றும் தமிழில் கைத்தேர்ந்தவரானார். அதோடு தனது கவித்திறனையும் கற்பனைத்திறனையும் மெருகேற்றி தன்னை செதுக்கி கொண்டார். பிறகு ஏகப்பட்ட பாடல்களையும், கவிதைகளையும் தமிழில் எழுதிய இவர் கவிபாடும் திறனையும் பெற்றார். பிறகு அரசவையில் சென்று கவிபாடி பரிசு பெறுவது மட்டுமின்றி அங்குள்ள சபையை தனது இலக்கிய திறன் மூலம் கவர்ந்து இழுக்கும் திறனையும் அவர் பெற்றிருந்தார். இதுபோன்று அவரின் திறமையை பார்த்த சடையப்ப வள்ளல் கம்பரை ஆதரித்து அவற்றின் தமிழ் திறனை நிலைநிறுத்த மிகுந்த உதவி புரிந்தார்.

கம்பரின் அடைமொழி

கவி பேரரசர் கம்பர் கவிச்சக்கரவர்த்தி கல்வியில் பெரியவர் கம்பர் கம்பரின் அற்புத படைப்புகள் கம்பர் தனது படைப்புகளின் மூலம் தனது திறமையை மட்டும் வெளிப்படுத்தாமல்

தமிழின் அழகையும், எளிமையினையும் தனது படைப்புகளின் மூலம் உலகிற்கு தந்தார். அவரின் படைப்புகளின் சிறு தொகுப்பு கீழே இணைக்கப்பட்டுள்ளது. கம்ப ராமாயணம் சரசுவதி அந்தாதி சடகோபர் அந்தாதி ஏரெழுபது சிலையெழுபது திருக்கைவழக்கம் மும்மணிக்கோவை.

இறப்பு:

கவிச்சக்ரவர்த்தி கம்பர், கிபி 1250 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். இதுவரை வந்த தமிழறிஞர்கள் பட்டியலில், கம்பர் யாரும் எட்ட முடியாத இலக்கில் உள்ளார் என்று தான் சொல்லவேண்டும். ஆனால், இன்றளவும் தமிழ் அறிஞர்கள் மத்தியில், கம்பனின் கவிதைத் தொகுப்புகள் இணையற்றதாகவே உள்ளது என்று சிறப்பாகவும், பெருமிதத்தோடும் கூறலாம்.

முடிவுரை:

‘தமிழ் இலக்கியங்களில் கம்பன்’ என்னும் தலைப்பில் அவரைப் பற்றியும் அவரது வாழ்க்கை வரலாறு பற்றியும் அவரது இலக்கிய படைப்புகள் பற்றியும் அவா் இலக்கியங்களில் கவி நயத்தையும் பாடலின் கருத்தை மக்களுக்கு எளிமையாக விளங்கும் வகையில் கையாளப்பட்டுள்ளதை அவா் படைத்த இலக்கிய பாடல் வாயிலாக நன்கு புலனாக

இயல்.3. சுப்புரெட்டியார் காட்டும் கம்பன்

பேராசிரியர் பல கோணங்களில் கம்பனை புகழ்ந்தமையைப் பற்றி இக்கட்டுரைகள் பிரதிபலிக்கின்றன.

'கம்பனில் மக்கள் குரல்' என்ற கட்டுரையில் புறநானூற்றுக் காலம் முதல் நடைபெற்று வந்த 'கோனாட்சி' முறை மாறிக் கம்பன் காலத்தில் 'குடியாட்சி' முறைக்கு வித்திட்ட நயத்தைக் காட்டுகின்றது. இக்கட்டுரையில் பேராசிரியர் நான்கு அரசுகளைக் காட்டுவதும், மக்கள் அந்த அரசுகளைப் பற்றி திறனாய்வதும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. வாருங்கள் அக்கட்டுரையைக் காண்போம்.

கதைச் சுருக்கம்

முதலில் கோனாட்சியே நிலைபெற்று இருந்தது. பிற்காலத்தில் அரசர்கள் தங்கள் கடமைகளிலிருந்து தவறியதால் குடிமக்கள் முன்னேற்றம் பெற்று மக்களாட்சி தொடங்கியது.

தசரதன் நாட்டின் மக்களை உயிராகக் கருதிவந்தார். 'மக்களுக்காக மக்களாட்சி' என்று அமெரிக்கா நாட்டு ஆபிரஹாம் லிங்கன் குரல் எழுப்புவதற்கு முன்னரே கம்பநாடன் மக்களே நாட்டின் உயிர்நாடி என்று குரல் எழுப்பிவிட்டார்.

அயோத்தி அரசு:

காவியத்தில் நாம் முதன் முதலாகக் காண்பது அயோத்தி அரசு.

தாயொக்கும் அன்பில்; தவம்ஒக்கும் நலம்ப யப்பில்;
சேயொக்கும் முன்னிறு ஒருசெல்கதி உய்க்கும் நீரால்;
நோயொக்கும் என்னில் மருந்துஒக்கும்; நுணங்கு கேள்வி;
ஆயப் புகுங்கால் அறிவுஒக்கும் எவர்க்கும் அன்னன்.

தசரதன் மக்களிடம் அன்பு கொண்டவர் அவர் அரசாட்சிக்கு பிறகு தன் மகன் இராமனுக்கு முடிசூட்ட நினைக்கிறார். பின்பு முடிசூட்டும் விழாவிற்கு ஏற்பாடு செய்கிறார். மக்களும் ஆரவாரமாக இருக்கிறார்கள். பின்பு இன்பத்தில் பங்கு கொண்ட மக்கள் துன்பத்திலும் பங்கு கொண்டனர். இராமன் முடிசூட்டும் நிலைக்குத் தடை ஏற்பட்டுவிட்டது. என்பதை ஊர்மக்கள் அறிகின்றனர். அரசன் இளையவன் மீது கொண்டுள்ள மோகத்தால் கருத்தழிந்து விட்டான் என்பார் சிலர். "வரங்கொடுத்த இலட்சணம் நன்றாக இருக்கின்றது"? முன்னவனுக்கு அரசை முதலில் கொடுத்து பின்னர் அதைப் பின்னவனுக்குக் கொடுத்தால் அது முறை திரும்பிய செயல் ஆகாதா? என்று சிலர் கூறுவர். தன்னலத்தின் காரணமாக இராமனுக்கு நேர்ந்த கொடிய வஞ்சனை, தீவினையால் தம் நெஞ்சு வெடிக்காமலிருக்கின்றதே என்று கூறுவர். உயிர் உடலை விட்டுப்

பிரியாதிருக்கின்றதே என்றும் கூறுவர். இவர்கள் கூற்றில் "மொழியைக் காத்தல்" "இறைமகள் திருமணம்" என்ற சொற்றொடர்கள் கேலிக் கூத்துக்கு இலக்காகிவிட்டன. பின்பு இராமன் சீதை ஆகியோர் காட்டிற்கு வனவாசம் சென்று நிறைவெய்திய பிறகு திரும்பி வரும் நாளில் வரவில்லை என்று பரதன் தீயில் வீழ்வதற்கு தயாராகிறான். அந்நேரத்தில் அனுமன் மேதிரத்தை அடையாளமாக காட்டி அவர்களுக்குப் புரிய வைக்கிறான். பின்பு இராமன் புட்பக விமானத்திலிருந்த பொழுதே மக்கள் ஒலி இலங்கை நகர்க்கு அப்பாலும் எட்டி விட்டதாகக் கம்பன் கவிபாடுகின்றான். இவ்வாறு அயோத்தி அரசு நடைபெற்றது.

மிதிலை அரசு:

அக்காலத்தில் மதிலையிலும் கோனாட்சியே நிலவியிருந்தது. அங்கு அரசாட்சியில் மக்கள் மிகவும் அக்கறை கொண்டிருந்தனர்.

சனகன் சீதையின் கன்னியா சுல்கமாக வைத்திருந்த வில்லை யாரும் வளைத்து நாணேற்ற முடியாததால் சீதையின் திருமணம் நடைபெறாமலே இருந்தது. அந்த வில்லை இராமன் வளைக்கும் சந்தர்ப்பம் வருகின்றது அந்த வில்லை இராமன் 60 ஆயிரம் பேர் சுமந்து கொண்டு வருகிறார்கள்.

இவ்வரசன் இவ்வில்லைக் கொண்டு ஏன் சீதையின் வாழ்க்கையை வீணாக்குகிறான். சீதையின்மேல் அரசர்க்கு அக்கறை இல்லையா? இருந்தது என்றால் தகுந்த மணமகன் வந்த பொழுதே திருமணத்தை முடித்து விட வேண்டும். இராமன் இவ்வில்லை வளையானாகில் சீதை வாழ்வே இல்லை என்று மக்கள் குரல் கேட்கிறது. பின்பு இராமன் அவ்வில்லை வளைத்து வெற்றி பெறுகிறார் பின்பு திருமணம் நடைபெறுகிறது.

கிட்கிந்தை அரசு

ந.சுப்புரெட்டியார் கிட்கிந்தை அரசைக் காட்டுகிறார். வாலி கொடுத்த தொல்லையைத் தாங்க முடியாமல் சுக்கீரிவனும், அநுமன் உட்பட பல வானர வீரர்களும் ருசியமுக பருவத்தை தம் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் அநுமன், இராம சுக்கிரிவ நட்பு ஏற்படுகின்றது. சுக்ரிவனை பலர் சூழ்ந்திருந்தனர் என்பதிலிருந்து அவனை ஆதரிக்கும் ஒரு வானரக் கூட்டம் இருந்ததாகக் கருத வேண்டியுள்ளது. வானர ஆட்சியும் நடைபெற்று வந்தது என்பதற்கு வேறுஒரு சான்றும் உள்ளது. வாலி இறந்ததினால் தாரை, அங்கதன் ஆகியோரைத் தவிர வேறு ஒருவரும் தூங்கியதாகக் கவிஞர் காட்டவில்லை. கிட்கிந்தை நாட்டு அரசன் இறந்ததற்குக் கூட மக்கள் உட்கிடக்கையைக் காட்டாததால் வாலியாட்சி மக்கள் கருத்திற்கு இணங்க நடைபெறவில்லை என்பதை ஊகிக்க வேண்டியுள்ளது.

இலங்கை அரசியல்:

இலங்கை அரசில் மக்கள் குரலுக்கு என்ன மதிப்பு இருந்தது என்பதைக் காணலாம்

இலங்கை அரசியலில் சூர்ப்பநகை என்னும் அரக்கியின் நிலை பற்றி பேசுகின்றார். சூர்ப்பநகை மூக்கும் காதும் வெம்முரண் முலைக் கண்களும் இழந்து இலங்கைக்கு வருகிறாள். “வடதிசை” வாயில் வழியாக நுழைகிறாள்.

அவளது அவல நிலையைக் கண்ட அரக்கப் பெருமக்கள் மிகவும் துயருறுகின்றனர். மகளிர் சோகத்துடன் அழுகின்றனர். இந்த அவமானம் நேர்ந்தது தேவேந்திரனாலா அல்லது உலகைப்படைத்த மலரவன் பாற்பட்டதே? அல்லது ஆழியான்? சிவபெருமானாலா என்று கேட்கின்றனர்.

கற்புநிலை கடந்துவிட்டால் எனக்கருதி கரண் இவளை அழகற்றவளாகச் செய்திருக்கக்கூடுமோ என்று அயிர்க்கின்றனர். முனிவர்களின் வெகுளியின் காரணமாக இருக்குமோ என்று மக்கள் தத்தமக்குத் தோன்றியவாறு பேசுவதைக் காண்கிறோம். இவ்வாறு இலங்கையில் இராவணன் ஆட்சி பற்றி பேசுவதையும் சீதையைத் துன்புறுத்திய நிலை பற்றியும் இவ்வியலில் காணப்படுகிறது.

கம்பன் காவியத்தில் இதுவரை மக்கள் குரலைப்பற்றிக் கண்டோம். கோணாட்சி இறந்த போதும் குடியாட்சிக் கருத்துக்களுக்கு முதலிடம் கொடுத்துள்ளான் என்பது ஆங்காங்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் காட்டப்படுகின்றது. மக்களின் கருத்துக்கு மதிப்பு கொடுத்து கோணாட்சியே சிறப்பாக நடைபெற்றது.

காவியத் தம்பி

காவியத் தம்பி என்னும் கட்டுரை இளையபெருமாளைப் பற்றியது. ‘தம்பி உடையான் பகையஞ்சான்’ என்ற உண்மையைப் பறை சாற்றுகிறது.

கதைச் சுருக்கம்

“உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ்” என்பது ஆன்றோர் வாக்கு. இராமனுக்குத் தம்பியர் பலர். கூடப்பிறந்தோர் மூவர். பிறப்பால் இல்லாமல் தானாகச் சேர்ந்தவர் மூவர். இராமனுக்கு ஆறு தம்பியவர் தொடர்பு அறும்படி செய்தல் வேண்டும். பிறகு பரதாழ்வானுக்குச் சூட்டிய அதே கிரிடத்தையே அடியேனுக்கு அருள் புரிவாயாக என்று வீடணன் வேண்டிநிற்கிறார்.

இராமன் ‘நாங்கள் நால்வர் தசரதனுக்கு மகனாகப் பிறந்தோம்; காட்டுக்கு வந்தபிறகு குகனின் நட்பு ஏற்பட்டது. சுக்கிரிவன் வந்து சேர அறுவராக மாறினோம். இப்பொழுது உன்னை ஏற்றுக்கொண்டு எழுவராகிவிட்டோம்’ என்று கூறினான். இராமனுக்கு கிடைத்த தம்பியரால் வரும் துன்பத்தை எளிதாகச் சமாளித்துக் கொண்டார்.

இராவணன் சீதையைக் கடத்தி கொண்டு போனதன் காரணமாக இராவணனனுக்கும் இராமனுக்கும் போர் நடைபெறுகிறது. இதில் இராமனின் தம்பியராகிய எழுவரும் இராமனுக்கு

உதவியாகப் போர் புரிகின்றன. இவ்வாறு போர் புரியும் போது பல இன்னல்கள் நேர்ந்த பொழுதும் இராவணின் மகனான இந்திரசித்து கடும் போர் புரிந்த நிலையிலும் இராமன் தம்பியரான எழுவரும் இராமனுக்கு உதவிப் செய்தனர். ஒரு கால கட்டத்தில் சீதையை விட்டுவிடுங்கள் என இராவணனிடம் இந்திரஜித்து கேட்ட போது முடியாது எனக் கூறிய நிலையில் எனவே மீண்டும் போருக்கு வருகின்றான். மாயப்போர் புரிந்த இந்திரசித்தின் கரத்தை அறுத்து வீழ்த்துகின்றான் இலக்குவன். இராமனுக்குப் பாதகாணிக்கையாகத் தலையை வைக்கிறான். இராமனுக்கு ஒரே மகிழ்ச்சி, வியப்புடன் பார்க்கின்றான். தம்பிகளின் நிலையை எண்ணி இராமன் மகிழ்ந்து போகின்றான். தசரதன் தான் இயற்றும் தவ வேள்வியைக் காப்பதற்கு "நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத்தந்திடு" என்று விசுவாமித்திர முனிவர் கேட்டபோது கூட இராமனுடன் இலக்குவனையும் சேர்த்தே தருகின்றன். சுபத்திராதேவி தரும்தேவதை நீயும் காட்டிற்குச்செல்க".

இலட்சுமணன் நீ இராமன் பின்தான் செல்லவேண்டும் செல்லும் போது உன்னைப் பார்ப்பவர்கள் யாவரும் இராமன் தம்பி என்று கூறாமல் அடிமை என்று எண்ணும்படி நீ நடந்து கொள்ள வேண்டும் இராமன் வந்தால் நீயும் வா மாறாக ஏதேனும் நடைபெற்றால் இராமனுக்கு முன்பு உன் உயிரை விடு என தாய்மார்கள் அனுப்பிவைத்தனர்.

"தம்பி உடையான் பகைக்கு அஞ்சான்" என்ற பழமொழிக்கு இன்றளவும் இலக்குவன் உரியவனாக நிற்கிறான். இக்கட்டுரையில் இராமன் தம்பியரால் அடையும் பெருமிதத்தை பற்றியும் அவர்கள் வெற்றியை வீரத்தை பற்றியும் கூறுகிறது. தம்பி உடையான் பகைக்கு அஞ்சான் என்ற கருத்தை உணர்துகின்ற

அறங்கடந்தவர் செயல்

'அறங்கடந்தவர் செயல்' என்ற கட்டுரை 'ஆணவத்தின்' திருவிளையாடல்கள் ஒரு நாள் அடங்கியே தீரும் என்ற உண்மையை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. காதலர்கள் திருமணம் செய்து கொண்ட பிறகு அலர் அடங்கிவிடுகிறது. இதனை விளக்குவதற்கு வரும் உவமை இராமாயணக் கதையைப்பற்றியது. இராமன் சீதையை மீட்கும் பொருட்டு இலங்கைக்குச் செல்லும் பொழுது துணையாக வந்த சுக்ரீவன், அநுமன் ஓர் ஆலமரத்தின் அடியில் வேதங்களை ஆராய்ந்து கொண்டிருக்கின்றான். அப்போது பறவைகளின் சத்தத்தை இராமன் ஆணையால் நிறுத்திவிட்டான் அதுபோல காதலர்களின் ஊரார் பேச்சை நிறுத்திவிட்டனர். இராவணனுடைய பெயரைக் கேட்டாலும் போதும் வானவரின் மனைவிமாருடைய கருப்பம் கலங்கிவிடும். தனது தமையனான குபேரனையும் போரில் வென்று அவனுடைய புட்பக விமானத்தைக் கைப்பற்றிக் கொண்டவன். இப்படி பல விசயங்கள் இராவணன் செய்ததாகக் கூறலாம். இராவணனுக்கும் இராமனுக்கும் இடையில் இலங்கையில் முதல் நாள் போர் தொடங்குகின்றது. இலங்கையில் நான்கு வாயில்களிலும் இராக்கதசேனை புறப்பட்டு வருகின்றது. சேனைகளை சுக்கிரிவன் ஒருவனே எதிர்த்து வச்சிரமுஷ்டிக்கும்

சுக்கிரிவனுக்கும் நடந்தபோரில் வச்சிரமுஷ்டி வானுலகம் சென்றான். கும்பகர்ணனை இடும்பன் கொல்கின்றான். இப்போரில் ஒரு சமயம் இராவணனைத் தவிர அனைவருமே மடிந்து விடுகின்றனர். முகத்தில் ஒளி இல்லை. மணிமுடி இல்லாததால் பிரகாசம் இல்லை. ஆலமரம் விழுதுகளுடன் காட்சியளிப்பதுபோல் தனது 20 கைகளையும் தொங்கவிட்டு உடலை இராமன் முன் காட்டிக் கொண்டு நிற்கின்றான். இயற்கையிலேயே கருமை நிறம் வாய்ந்த இராவணன் இன்னும் கறுத்துக் காணப்படுகின்றான். மீறி நிற்கும் நாணத்தால் கால்விரல்களால் நிலத்தைக் கீறிக் கொண்டு நிற்கின்றான். அறநெறிப்படி நடக்காதவர்களின் மனிதர்களின் செயல் இப்படித்தான் என்று அறியமுடிகின்றது.

இராவணின் அழிவு

இராவணன் அழியக் காரணம், பராக்கிரமங்களையும் பலமும் படைத்திருந்தும் காமம் ஒன்று நெஞ்சினுள் நுழைந்து அவைகளை எல்லாம் தேய்த்து விடுகின்றது. இவை மட்டும் இல்லாமல் இருந்தால் மேலானவனாகக் காட்சியளித்திருப்பான்.

நமது ஆசையை அடக்கும் போது நாம் அமரனாகிறோம். நம் ஆசைக்கு உடன்படும் போது அசுரன் ஆகின்றோம் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

கம்பனில் குழந்தை இன்பம்

‘கம்பனில் குழந்தை இன்பம்’ என்ற கட்டுரை கம்பன் குழந்தை இன்பத்தைப் பற்றி ஏன் பாடவில்லை, சரியான சந்தர்ப்பம் இருந்தும் பாடாது விட்டது ஏன்? என்ற வினாவை எழுப்பி அதற்கு விடையும் தரும் பாங்கு நம் சிந்தனைக்கு விருந்தாகின்றது.

தமிழர்களின் வாழ்க்கையில் குழந்தைச் செல்வம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

> **“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
> **நன்கலம் நன்மக்கட் பேறு.”**
>
> **“ குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
> **மழலைச்சொல் கேளா தவர்.”**

என்று வள்ளுவரும் பாராட்டி பேசுகின்றார்.

பாரதியாரும் “கண்ணம்மா” – என்குழந்தை என்ற தலைப்பில் மனதைக் கொள்ளை கொள்ளக்கூடிய இன்னிசைக் கவிதையைப் பாடியுள்ளார். சமயக்குரவர்களும் குழந்தை பற்றிய அற்புதச் சொல்லோவியங்களை அருளியுள்ளனர். பெரியாழ்வாரின் பிள்ளைப்பாட்டே பிற்காலத்தில் “பிள்ளைத்தமிழ்” என்ற தனிப்பிரபந்த வகையாக வடி வெடுத்தது. மனித உலகை ஆண்ட

தசரதனுக்கு 12 ஆண்டுக் காலமாகக் குழந்தைபேறு இல்லாதிருந்தது. 60,000 மங்கையரை மணந்து அறநெறி வழுவாது செங்கோலோங்கிய மன்னனுக்கு குழந்தைப் பேறு ஏற்படுகிறது.

குழந்தை பிறந்தது

1. கோசலை இராமனை பெற்று எடுத்தாள்.
2. கைகேயிக்கு பரதன் பிறந்தான்.
3. சுமித்திரைக்கு இலக்குவன் சத்துருக்கன் மக்களாகப் பிறந்தனர்.

இவை போன்ற நிகழ்வுகள் பற்றி கம்பர் கூறிய நிலையில் இறப்பின் போது மண்டோதரியின் சோக வெளிப்பாட்டைக் கூறுவதாகப் பாடல் ஒன்றை வெளிப்படுத்தியுள்ளார். அதிகாயன் இறப்பைக் குறித்து தானிய மாலினிதான் அதிகமாகப் புலம்புகின்றான்.

“ இந்திரற்குத் தோலாத நன்மகளை ஈன்றாள் என்று
அந்தரத்து வாழ்வாரும் ஏத்தும் அளியத்தேன்
மந்தரத்தோள் என்மகனை மாட்டா மனிதன்றன்
உந்துசிலைப் பழிக்கு உண்ணக் கொடுத்தேனே.”

மேகநாதன் இறந்துபடும்போது தான் துக்கத்தின் கொடுமுடிவுகள் எல்லாம் காட்டப்பெறுகின்றன. இராவணன் மண்டோதரி புலம்பலிலும் இத்தகைய கொடுமுடிவுகளைக் காணலாம். மூன்று உலகங்களையும் வென்று மும்மூர்த்திகளையும் ஏவல் கொண்ட இராவணன் புத்திர சோகத்தால் வாய்விட்டுப் புலம்புகின்றான் வீரவுணர்ச்சியும் சோக உணர்ச்சியும் மாறி மாறி வெளிவருகின்றன. இராவணன் இறந்த பொழுது வீடணன், மண்டோதரி புலம்புவதற்கான பாடல்களில் கம்பனின் சோகத் துடிப்புதான் காணப்படுகின்றது. கம்பர் தன் மகன் அம்பிகாவதி இறந்த காரணத்தினால் துக்கம் வெளிப்படவில்லை. சோகவுணர்ச்சியைக் காட்ட வேண்டிய இடங்களில் அது மிகச் சிறப்பாகக் காட்டப் காட்டப்படுகின்றது என்பது தெளிவாக இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

அறிமுகம்

அறிமுகம் என்னும் தலைப்பில் இராமனும் சீதையும் சந்திக்கும் நிகழ்வை இங்கு ‘அறிமுகம்’ என்னும் தலைப்பில் கட்டுரையாக காண்போம்.

இராமனும் சீதையும் சந்தித்தல்

அகலிகையைக் கௌதம முனிவரிடம் சேர்த்துவிட்டு இராம இலக்குவன் விசுவாமித்திரமுனிவரும் மிதிலை நகரை நோக்கி வருகின்றனர். சனக மகாராசனின் அரண்மனைக்குள் புகுந்து அங்குள்ள பல காட்சிகளைக் கண்டு கன்னி மாடத்தின் அருகே வரும்போது மேல் மாடத்தில் நின்று கொண்டிருந்த சீதையை இராமன் பார்க்கின்றான்.

முன்பின் அறியாதவர்களை ஊழ் சேர்த்து வைக்கிறது. ஒருவரை ஒருவர் பார்க்க நேரிடும் போது இன்னார் என்று அறிந்து கொள்ள இயலவில்லை. உடல் இரண்டு உயிர் ஒன்று என்று கூறும்படி ஆகின்றனர்.

விசுவாமித்திரர் அறிமுகம் செய்து வைத்தல்:

இராமன் இலட்சுமணனை அறிமுகம் செய்து வைக்கிறார். இவர்கள் உனது விருந்தினர்கள் தாம் உன்னுடைய சிறந்த யாகத்தைக் காண்பதற்காகத் தான் வந்திருக்கின்றனர். இவர்கள் தசரதச் சக்கர வர்த்தியின் புதல்வர்கள் 12 நாட்களாகச் சீதையின் மனத்திற்கு ஈடாக வைக்கப் பெற்றிருந்த எந்த அரசகுமாரர்களாலும் எடுத்து நாண் ஏற்ற முடியாத சிவதனுசை பற்றி அறிந்துள்ள முனிவர் மனக்குறை நீங்கும் காலம் நெருங்கி விட்டது என்பதைக் குறிப்பாகத் தெரிவிக்கின்றார். குமாரர்களின் குலமுறைகள் கூறப்பெறுகின்றன. பின்பு மானிடப் பிறவியில் சீதையில் இராமனும் அறிமுகமாகி ஒன்று சேர்கின்றனர்.

இக்கட்டுரையில் இராமன் சீதை ஆகிய இருவரையும் அறிமுகம் செய்து விளக்கமாக இக்கட்டுரை அமைக்கின்றது.

மலைக்காட்சி

'மலைக்காட்சி' என்னும் ஆறாவது கட்டுரை குறிஞ்சி நிலக்காட்சிகளை அற்புதமாகச் சித்திரித்துக் காட்டுகின்றது. இங்குக் கம்பனின் 'தெய்மாக் கவியின் மாட்சியைக் காணமுடிகின்றது. இ்.து தான் இராமன் திருமணத்திற்குப் பின்னர் காடுரை வாழ்க்கையின் தொடக்கத்தில் நுகர்ந்த தேனிலவுப் பகுதி! அதன் பிறகு இராமன் பல்வேறு துன்பங்கட்கு ஆளாகின்றன் என்பதை நாம் அறிவோம்.

குகப்பெருமானிடம் விடைபெற்றுச் சென்ற இராமன் இலக்குவனுடனும் சீதையுடனும் வனத்தில் புகுகின்றன். அங்கு பல காட்சிகளைச் சீதைக்குக் காட்டிக்கொண்டே சென்று இறுதியில் எதிர் கொண்டு வரவேற்ற பரத்து வாச முனிவரைக் கண்டு அவர் ஆசிரமத்தில் உபசரிக்கப்பெற்று அவரிடம் விடை பெற்றுக் கொண்டு அவர் யோசனைப்படிச் சித்திர கூட மலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். அப்பொழுது சில விலங்குகளின் காட்சிகளை இராமன் சீதைக்கு காட்டிச் செல்லுகின்றான். அற்புதமான நிகழ்ச்சி ஒன்று ஓர் ஆண் யானையும் ஒரு பெண் யானையும் காணப்படுகின்றன. பெண் யானை நிறைந்த கருப்பத்துடன் இருக்கின்றது. ஆண்யானை மனம் உருகும் காதலுடன் ஒரு தழைக் கொத்தை துதிக்கையால் ஒடித்து அதைக் கொண்டு மலைப் பொந்திலுள்ள ஒரு பெரிய தேன் கூட்டை துதிக்கையால் எடுத்து கருவைத் தாங்கியுள்ள பெண் யானை பருகுமாறு அதன் வாயில் வைக்கின்றது இது போன்ற காட்சிகளைக் காட்டி கூட்டிச் செல்கின்றனர். இக்காட்சிகளைக் காணும் நாமும் குறிஞ்சித் திணையின் சூழ்நிலையைக் கண்டுகளிக்கின்றோம். உதக

மண்டலம், கொடைக்கானல் போன்ற மலை பகுதிகளில் இருப்பது போன்ற மனநிறை வினையும் பெற்று மகிழ்கின்றேம்.

மலைக்காட்சி என்னும் தலைப்பில் மலையில் உள்ள அற்புதக்காட்சிகளை பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

விளையும் பயிர்

'விளையும் பயிர்' என்ற கட்டுரை மேகநாதனின் திறமையை மேம்பட எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கை வேந்தனுடைய மூத்த குமாரன் மேகநாதன் என்போன் இராவணனுக்கு மயன் மகளாகிய மண்டோதரி வயிற்றில் பிறந்தவன். வீரர்களில் தலைசிறந்தவன். இளமையிலேயே தேவந்திரனுடன் போரிட்டு அவனைத் தோற்கடித்து சிறை செய்து கொண்டு வந்து தன் தந்தையை முன் நிறுத்தி 'இந்திரஜித்து' என்ற சிறப்புப்பெயர் பெற்றவன். இராமாயணத்தில் கம்பன் இவனை ஒரு சிறந்த வீரனாகப் படைத்துக் காட்டுகின்றன். பல இடங்களில் இவனது வீரச் செயல்களைக் காண்கின்றேம். சிறந்த வீரனும் யூகியுமான அநுமன் சீதையைத் தேடிச் சென்ற போது முதன் முதலில் நள்ளிரவில் இராவணனது மாளிகையில் இவனை உறங்கும் நிலையில் காண்கின்றன்.

இராவணின் மகன் பற்றிக் கூறுதல்

இராவணனுக்கு மயன் மகளாகிய மண்டோதரி வயிற்றில் பிறந்தவன். வீரர்களில் தலைச்சிறந்தவன். இளமையிலேயே தேவந்திரனுடன் போரிட்டு அவனைத் தோற்கடித்து சிறை செய்து கொண்டுவந்து தன் தந்தை முன் நிறுத்தி 'இந்திரஜித்து' என்ற சிறப்புப்பெயர் பெற்றவன்.

இந்திரஜித்தின் வீரம்

நிகும்பலை யாகத்தை அழித்து இலக்குவன் இவனோடு போர்புரியும் போது இவன் தன் ஆற்றல்களை எல்லாம் ஒருங்கு திரட்டிப் பெருஞ்சமர் விளைவிக்கின்றான்.

இந்திரஜித்தின் இறுதி

இவ்வாறு இளமையிலேயே பல வீரச்செயல்கள் நிகழ்த்தி இராவணனுக்கு சிறந்த பக்க பலமாக இருந்தான். இலக்குவனால் மூக்கும் காதும் வெம்முரன் முலைக் கண்களும் முறையே போக்கப்பட்ட சூர்பனகை இவனைக் குறிப்பிட்டுப் புலம்புகின்றாள "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதை இது உணர்த்துகின்றன.

இக்கட்டுரையில் இராவணனின் மகன் இந்திரஜித்தின் வீரம் போர் வாழ்க்கை பற்றி கூறுகிறது. விளையும் பயிர் என்னும் தலைப்பில் கூறப்படுகின்றது.

சிறைவைத்த காதல்

'சிறை வைத்த காதல்' என்ற கட்டுரையில் சீதையின் உருவகத்தை இராவணன் சிறையில் வைத்ததையும் பல நூறு பாடல்களுக்குப் பின்னர் அந்த உருவம் சிறைவீடு பெற்றதையும் காட்டும் பாங்கு பேராசிரியரின் நுண்மாண் நுழை புலத்தை நுட்பமாகக் காட்டுகின்றது.

இராமன், சீதை, இலக்குமணன் தங்கிய இடம் கோதாவரி நதிக்கருகில் பஞ்சவடி சோலை யொன்றில். அரக்கனின் முதல் செயல் தொடங்குகிறது. சூர்ப்ப நகையின் சூழ்ச்சி இராமனை விரும்பியதால் சீதை இருந்தால் இடையூராக இருக்கும் என்று எண்ணி அவளை கடத்தச் செய்கிறாள். இலக்குவன் காவலாக இருப்பதை அறியாத சூர்பநகை வந்த போது அவளை முடியை பிடித்து வயிற்றில் உதைத்து பின்பு அவள் மூக்கையும் காதையும் அறுத்துவிடுகின்றான். பின்பு அவள் இராமனிடம் முறையிடுகிறாள். இலக்குவனையாவது திருமணம் செய்யுமாறு வேண்டுகிறாள் பலிக்கவில்லை. பின்பு சூர்ப்பநகை அவள் அண்ணனிடம் பத்தி வைக்கிறாள். சீதையின் அழகைப் பற்றிக் கூறி அவனை காமத்தை ஏற்றிவிடுகிறாள். இராவணன் அவள் கூறியது அனைத்தும் மறந்து விடுகின்றான். ஆனால் சீதையை மறக்கவில்லை. பின்பு சீதையைக் கடத்தி கொண்டு போய் விடுகின்றான். இவ்வாறு இருக்கும் நிலையில் அவள் மீது அதிகமாகக் காம உணர்வு கொண்டதால் அவன் அவளை சிறைவைத்து கொண்டிருந்தான். இதை அறிந்த இராமன் சீதையை மீட்க வந்த போது இராமனின் அம்பு துளைத்து இறந்து படுகிறான். பின்பு மண்டோதரி இராவணனின் உடலைக் கண்டு கைலாய மலையைத் தூக்கி எடுத்த அழகிய உடல் எள் நுழைப்பதற்கு கூட இடம் இல்லாமல் துளைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறாள். பஞ்சவடியில் கண்ட சீதையைக் குறித்து சூர்ப்பனகை ஊட்டிய காம மயக்கத்தால் சீதையின்மேல் இராவணன் மனச்சிறையில் வைத்த காதல் இராமன் இட்ட அம்பால் துளைக்கப்பட்டதை காணமுடிகிறது. இக்கதையில் சூர்பநகையின் சூழ்ச்சியின் காரணமாக இராவணனின் காம செயல் பற்றியும் அதனால் நேர்ந்த விளைவுகள் பற்றியும் காமத்தின் காரணமாகத் தன் செங்கோலையும் உயிரையும் இழந்தது இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது.

கவி நாயகன்

'கவிநாயகன்' என்ற தொடர் கம்பனையும் அனுமனையும் சுட்டுவதை எடுத்துக் காட்டி இராவணன் புகழினைச் செவிக்குத் தேனாக இனிக்கும் வண்ணம் திருந்திய பெருமையை இரு கவிநாயகனிடத்திலும் கண்டுகளிக்கலாம்.

இராம காதை என்னும் காவிய அரங்கினுள் அநுமன் வரலாறு பெருஞ்சிறப்புடையதாய்ப் பேரொளி வீசி நிற்கின்றது. காவியத்திற்கே முதுகெழும்பு போன்றவன் மாருதி. உலகில் அறத்தை

அறக்கெடுத்து அலைக்கும் இராவணன் முதலிய அரக்கர்கள் அழிந்தொழிவதற்கு இவ்வநுமன் முக்கிய காரணமாக நின்றதால் இவனை 'ஆணியாய் உலகுக்கு எல்லாம் அறம் பொருள் நிரப்பும் அண்ணல்' என்று சிறப்பித்தான் கவிஞர் கோமான். இவ்வாறு இராமனின் பெருமை அநுமனையைச் சாறும் என கம்பர் சில இடங்களில் புகழ்ந்து கூறியுள்ளார். கிட்கிந்தை காண்டம் மராமாப் படலத்திலிருந்து காவியம் நிறைவுபெரும் வரையில் சிறப்பித்து கூறியுள்ளனர்.

முதலாவது

சீதாப் பிராட்டி பல திங்களாக அரக்கர்களால் துன்பப்பட்டு மிகவும் 'மென் மருங்குல் போய் வேறுள அங்கமும் மெலிந்து' கிடக்கின்றாள். புலிக்குழாய்த் தகப்பட்ட மானிளம் பேடைப்போல் கண் களிமைத்தலையும் முகிழ்த்தலையும் துறந்து வெளிடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்யுடன் விளங்குகின்றனள். 'சுருதி நாயகன் வரும் என்ற துணிவால்' எட்டு திசைகளிலும் தன் பார்வையைச் செலுத்தி நிற்கின்றனள். இவ்வாறு அசோகவனத்தில் இருக்கும் நிலையை கம்பன் சுந்தரக் காண்டத்தில் குறிப்பிடுகிறார். பின்பு சீதாப்பிராட்டி நடந்தவை எல்லாம எண்ணி பார்க்கும் பொழுது அரக்கன் செய்தமைக்கு எனக்கு என்ன மருந்து என பேசுகிறாள். இராமன் தன்னை மீட்ட பிறகு 'இற்புகத் தக்கலை' என்று கூறினால் தன் கற்பு நிலையை எவ்வாறு மெய்ப்பிப்பது என எண்ணி தன்னை முடித்துக் கொள்ள முயலும் பொழுது இராம நாமத்தைச் சொல்லித் தன்னை அண்டர் நாயகன் தூதன் என்று கூறி பிராட்டியின் செயலை தடுத்து நிறுத்துகிறான். இப்பெறுமை ஆஞ்சனையைச் சாறும் எனக்கூறி சீதையின் வனவாசம் நிலையைப் பற்றி கூறி அந்நேரத்தில் அநுமன் செய்த உதவிகளைப் பற்றியும் முதலாவதாகக் கூறியுள்ளனர்.

இரண்டாவது

இந்திரசித்து தொடுத்து விடுத்த அரவக்கணையால் அல்லோலகல்லோலப் பட்டு போயிற்று வானரச் சேனை. இலக்குவனும் நாகபாசத்தால் கட்டுண்டு கிடக்கின்றான். வீடணண் புலம்புகின்றான் இராமனும் சோர்வுற்றுப் பேசாத நிலையை அடைகிறான். கருடன் வரவால் இந்நிலை எல்லாம் மாறிவிடுகிறது. பின்பு இருவருக்கும் போர் நிகழ்கின்றது. போரில் இறந்துப்பட்ட வீரர்களைக் கண்டு இராமன் பெருந்துயருறுகின்றன். தம்பியின் நிலையைக் கண்டு ஒன்றும் பேசாது தன்னை மறந்து கிடக்கின்றான். இலங்கையில் வெற்றிவிழா கொண்டாடுகின்றனர். வீடணன் அநுமனை காப்பாற்றுகிறான். சாம்பவன் மூலம் சஞ்சீவி மருந்தினை அருந்த வழியையும் கூறுகிறன்றார். பின்பு அநுமன் அம்மலையை பெயர்த்து கொண்டு வந்து அம்மருந்தினை எல்லோரும் அருந்தி உயித்தெழுகின்றனர். 'நன்னெறியில் விளங்கும் நாவலனே' என்று இராமன் அநுமன் செய்த உதவிகளை எல்லாம் கூறி உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகின்றேம். என்று இராமன் உள்ளம் உருகப் பேசுகின்றன்.

மூன்றாவது

சீதையை மீட்டு கொண்டு அயோத்திக்கு வரும் போது பரத்துவாசன் ஆசிரமத்தில் தங்குகின்றனா். அப்பொழுது அங்கு அநுமனைப் பற்றி பேசுகின்றனா். அப்பொழுது இராமன் வரவை எதிர்பார்த்து கொண்டிருக்கும் பரதன் தீ குளிக்க தயாராகிறான். அப்பொழுது மாருதி 14 ஆண்டுகள் வனவாசம் முடிந்து வருவதை கூறுகிறான். இவ்வாறு நீ செய்திருந்தால் இராமன் உயிர் வாழ்வானே எனக் கூறுகின்றனா். இவ்வாறு ‘கவிக்கு நாயகன் கவி நாயகன்’ என்று புகழ்ந்துரைக்கப்படுகின்றனா். சீதையைக் காப்பாற்றி இராமனின் புகழ்ச்சியை எடுத்துரைக்கும் விதமாக மூன்றாவது அமைந்துள்ளது.

கம்பன் காட்டும் மேழிச் செல்வம்

‘கம்பன் காட்டும் மேழிச் செல்வம்’ என்ற கட்டுரையில் இக்காலத்திற்கும் பொருந்துகின்ற தன்மையைக் காண்கின்றேம். ‘உணவு பற்றாக்குறை’ பற்றிய காரணங்களைச் சுட்டியுரைத்து ‘வன மகோத்ஸவம்’ ‘ஏர்முனைவிழா’ போன்ற விழாக்களைக் கொண்டாடுவதால் யாதொரு பயனும் விளையப் போவதில்லை. வாணிகத்திற்காக விளம்பரங்களை செய்வதில் எந்த பயனும் இல்லை. என்பதை புரிந்து கொள்ளாத மனிதர்களாக வாழ்கின்றனா் இக்காலத்து மக்கள். அவா்களுக்கு எடுத்து கூறும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

பன்னெடுங்காலமாகவே நம் நாடு உழவுத் தொழிலில் தலைசிறந்து விளங்கிய நாடாகும். இது பற்றி தமிழ் மூதாட்டியராகிய அவ்வையார் “மேழிச் செல்வம் கொழை படாது” என்று கூறியுள்ளனா். ஒரு பெண் யானை படுத்து உறங்கிய இடத்திலிருந்து விளையும் விளை பொருள்கள் ஆண்யானைகளுக்கு போதுமான அளவு உணவு விளையும் எனக் கூறுவர். இப்படி இருந்த நாட்டில் இன்று பஞ்சம் தலை விரித்து ஆடுகின்றது. உணவுப் பங்கீட்டு முறை, வெளிநாடுகளிலிருந்து உணவு இறக்குமதி செய்தல், அந்நாடுகளினின்றும் இலவச உணவு பொருள்களைப் பெறுதல், உணவு பெருக்கத் திட்டம் இவை அன்றாடப் பிரச்சனைகளாகி விட்டன. இவை பற்றி எல்லாம் அரசு யோசிக்காமல் விளம்பரம் செய்து கொண்டிருக்கின்றனா். இந்நிலையில் கம்பன் கூறும் மேழிச்செல்வத்தைப் பற்றி பார்ப்போம்.

கம்பன் தமிழக வளத்தைக் கண்டு கோசலநாட்டு வளத்தைப் பேசுகின்றான். அந்நாட்டில் விளையும் பொருள்களை எல்லாம் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வது பற்றி கூறியுள்ளாா். மேழிசெல்வத்தைப் போற்றும் வகையில் “ஏரெழுபது” என்ற நூலை இயற்றியுள்ளாா்.

உழவா்களின் சிறப்பு

உழவா்கள் ஏா்விழாக் கொண்டாடலன்றி முடிசூட்டும் மன்னா்கள் போா்விழா கொண்டாடமுடியாது. இதுகருதி வள்ளுவப் பெருந்தகையும் “உழவா் உலகத்திற்கு ஆணி” என்று கூறினாா்.

உழவுத் தொழிலின் சிறப்பு

உழவுத்தொழில் எந்த குறையுமில்லாமல் இருந்தால் தான் நான்மறைகள் சிறப்பாகப் பொலிவுறும்; அந்தணர் இயற்றும் வேள்விகள் விளக்கமுறும்; கலைகள் யாவும் கிளைத்துச் செழிக்கும்; அரசு நீதியும் சிறந்து விளங்கும் இவ்வாறு உழவர்களின் ஏர் நடப்பதால் தான் உலகில் எல்லாச் செயல்களும் நடைபெறும் என பாராட்டி பேசுகின்றனர்.

உழவு கருவிகளின் சிறப்பு

முதன் முதலாக உழவுக்கருவிகளை சிறப்பிக்கும் ஏர் விழாவினை குறிப்பிடுகிறார். இதனைத் தொடர்ந்து ஊற்றணி, நுகத்தடி, நுகத்துளை, நுகத்தாணி, பூட்டாங் கயிறு, கொழு, கொழுவாணி, தாற்றுக்கோல், உழுவெருது, அதன் சுவற்கறை முதலியவற்றின் சிறப்புகள் பேசப்படுகின்றது.

உழுதல், பயிரிடல் சிறப்பு

"உலகெலாம் ஒலி விளங்கும் உழவர் உழும் உழவாலே" என்று உழவனின் சிறப்பைக் கூறுகின்றனர். "உழுதசால் வழியன்றி உலகுவழி அறியாதே" என்று படைசாலின் சிறப்பினைப் பாராட்டுகின்றனர். இவ்வாறு உழவர்கள் நிலத்தைப் பராமரிக்கும் செயல்களைப் பற்றி கூறுகின்றனர்.

பைங்கூழின் சிறப்பு

பச்சை பசேலெனப் பைங்கூழ் தழைத்துப் வளர்தல் வேண்டும் என்றால் கழைகளைக் களைதல் வேண்டும் என உழவு சிறப்பினை கூறுகின்றனர்.

இவ்வாறு உழவர்களின் சிறப்பினைப்பற்றி கம்பர் தன் கட்டுரையில் மக்களுக்கு உழவு முக்கியம் என்பதை எடுத்து கூறுகிறார்.

கம்பனில் உருக்காட்சிகள்

கம்பனில் உருக்காட்சிகள் என்ற இறுதிக் கட்டுரை ஆங்கிலத் திறனாய்வு முறையில் கம்பனை நுகர்வதற்கு வழியமைத்துக் காட்டுகின்றது. உருக்காட்சி என்பது சொற்களினால் கவிஞன் புலன்கட்குக் கவர்ச்சியுடையதாகச் செய்யும் ஒரு வகை உத்தியாகும்.

செவிப் புல உருக்காட்சிகள்
கட்புல உருக்காட்சிகள்
சுவைப் புல உருக்காட்சிகள்
நாற்றப் புல உருக்காட்சிகள்
நொப்புல உருவக்காட்சிகள்
இயக்கப்புல உருக்காட்சிகள்
மரவு வழி உருக்காட்சிகள்

இவ்வாறு இத்தனை வகையான உருக்காட்சிகள் அமைந்துள்ளன. இவற்றை இங்கு காண்போம்.

கட்புல உருக்காட்சிகள்

படிப்போர் மனதில் நிலையான பதிவினை விளைவிக்கின்றன. கட்புல-செவிப்புலத் துணைக்கருவிகள் அதிகமாகப் பயன்படுத்தப்பெறுகின்றன. நான்முகன் சிவன் காட்சி தருவதை காட்டும் பாடல் வழியாக கருமுகில், தாமரைக்காடு பூந்தல், இருசுடர், செம்பொன், குன்று, கருடன் மேல் வந்து தோன்றுதல் கட்புலத்தை கவரும் காட்சிகளாகும்.

நொப்புல உருக்காட்சிகள்

சுழலிடும் கூந்தலும்
துகிலும் சோர்தரச்
தழலிடு வல்லியே
போலச் சாம்பியள்

என இராமனைக் கண்ட பிறகு சீதை படும் விரக தாப நிலையைக் காட்டுவது இப்பாடல். நெருப்பில் போடப்பெற்ற பூங்கொடி வாடுதல் நொப்புல உருக்காட்சியாகும்.

நாற்றப்புல உருக்காட்சிகள்

அருவி நீரில் கலந்து வரும் பல நறுமணப் பொருள்கள் தரும் வாசனையைத் தெரிவித்தல் நாற்றப்புல உருக்காட்சியாகும்.

சுவைப்புல உருக்காட்சிகள்.

அநுமன் இலங்கையில் சீதையைத் தேடிச் சென்றபோது அரக்கியர் முதலிய பற்பலர் இருந்த நிலையைக் காட்டுவது சுவைப்புல உருக்காட்சி ஆகும்.

மரபு நிலை உருக்காட்சிகள்

தசரதன் நாடுகாத்தலைக் கூறுவது உயிரெலாம் உறை உறையும் உடம்பு ஆதல் மரபு நிலை உருக்காட்சிகள் ஆகும்.

உருக்காட்சிகளின் கலவை

இயக்கப்புல உருக்காட்சி – மயில்கள் ஆடுதல்

கட்புல உருக்காட்சி – தாமரை விளக்கம் தாங்குதல், குவளை கண் விழித்து நோக்குதல், தெண்திரை எழினி காட்டுதல் ஆகியவை ஆகும்

செவிப்புல உருக்காட்சிகள் - கொண்டல் ஒலித்தல், வண்டுகள் பாடுதல், ஆகியவை ஆகும் இவ்வாறு இக்கட்டுரையில் உருக்காட்சிகள் பற்றி கம்பனின் கவிப்புலமை நன்றாக வெளிப்படுகின்றது.

இவ்வாறு உருக்காட்சிகள் பற்றி கம்பன் தெளிவாக இக்கட்டுரை வாயிலாக மக்களுக்கு உணர்த்தி உள்ளதைப் பற்றி இங்கு தெளிவாக கூறியுள்ளனர்.

முடிவுரை

மூன்றாவது இயலாகிய இவ்வியலில் கம்பர் 11 கதை வாயிலாகக் கம்பராமாயணம் பற்றி கம்பர் கூறி ஒவ்வோர் கதையிலும் ஒவ்வோர் கருத்தை மக்களுக்கு தெரிவிக்கும் வாயிலாக அமைந்துள்ள வண்ணம் மிகவும் மகிழ்ச்சிகரமாக உள்ளது. இவற்றை டாக்டர்.ந. சுப்புரெட்டியார் அவர்கள் 'கம்பனில் மக்கள் குரல்' என்னும் தலைப்பில் 11 உட்தலைப்புகளிட்டு அவற்றின் வாயிலாக அவரின் கவிநலத்தையும் புலமையும் நன்றாகக் காட்டியுள்ளதை தெளிவாகக் காணமுடிகின்றது. இவ்வாறு இவ்வியலில் கம்பர் கம்பராமாயணம் இயற்றியதன் சிறப்பும் அவற்றில் அவர் செய்த கவிபுலமையும் காணமுடிகிறது. சுப்புரெட்டியார் சீறிய முயற்சியில் அவர் செய்த அற்புதபடைப்பையும் இவ்வியலில் உள்ள 11 கட்டுரை வாயிலாகக் காணமுடிகின்றது.

இயல் 4. மொழிநடை உத்திகளும்

முன்னுரை

கட்டுரையில் கையாளுகின்ற நடையாலும் உத்திகளாலும் கட்டுரை தனிச்சிறப்பைப்பெறுகிறது உத்திகளின் மூலம் கட்டுரையாளரின் மொழித்திறனும் எழுத்தாற்றலும் அல்லாமல் கலைப்படைப்பும் சிறப்புறுகின்றது. கட்டுரையின் தலைப்பு, நனவோடைஉத்தி, கதைக்குள்கதை, எழுத்துநடை, வருணனை, சொல்லாட்சி, உவமை, உருவகம்,ஆகியவற்றை கட்டுரையாளர் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதைப்பற்றி ஓர் இலக்கிய ஆக்கத்தில் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள பாங்கில் காணப்பெறும் முறையை நடை என்கிறோம். இப்படிப்பட்ட ”நடை” மற்றும் “உத்தி” ஆகியவற்றை ஆசிரியர் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதைப்பற்றி இந்த நான்காவது இயலில் நிரல்படக் காணலாம்.

மொழிநடை

‘மொழி நடை’ என்பது பற்றிச் சிறிய விளக்கத்தை இப்பகுதியில் காண்போம். மொழி நடையை ‘ளுவலடந’ என்று ஆங்கிலத்திலும் ‘பாணி’ என்று வடமொழியிலும் வழங்குவர். கதை அல்லது கட்டுரை எழுதுவோர் தம் கருத்தைக் கற்போர் விரும்பும் முறையில் எழுதும் முறையை அல்லது எழுதும் பாங்கினை மொழிநடை என்பார்கள். ‘கருத்தைக் கொடுக்கும் முறை’ என்றும் சொல்லலாம். எழுத்தின் வெற்றி, எழுதும் பாங்கினைப் பொறுத்து அமையும் என்பது சான்றோர் கொள்கை ஆகும். அம் மொழிநடைகள் பல வகைப்படும். அவை, தனித்தமிழ் நடை, அடுக்குமொழி நடை, எளிய நடை, இனிய நடை, வினாவிடை நடை, மணிப்பிரவாள நடை, கலப்பு மொழி நடை எனப் பலவாகும். இத்தகைய மொழி நடை நூல்கள் பலவற்றைக் கற்று எழுதப் பழகினால், நம் மொழிநடையும் சிறப்பாகும்.

இயல்பு வழக்கும் தகுதி வழக்கும் இணைந்த மரபு வழிப்பட்ட மொழியே இலக்கியத்தின் சாதனமாகிறது. இலக்கியம் என்பது தனி மனிதனின் அனுபவ வெளிப்பாடு. தனி மனிதனின் அனுபவ வெளிப்பாடானது கலை வடிவம் பெறுவதற்கு அவன் பயன்படுத்தும் சாதனமே மொழி. இந்த மொழி பொது மொழியிலிருந்து மாறுபட்டதன்று. பொது மொழியை உள்வாங்கிய ஒன்று. ஓர் இலக்கியப் படைப்பில் பதிவாகியிருக்கும் மொழியே இலக்கிய ஆசிரியரின் மொழியாகும். இதனை மொழிப் பதிப்பு என்பர். ஒரு பொருளை உணர்த்த ஓர் ஆசிரியன் மொழியைக் கையாளும் திறனே அவனது நடையாகும். ஒருவனின் மொழித் திறனுக்கும் மொழி நடைகசும் உள்ள தொடர்பு பிரிக்க முடியாதது. மொழியே நடை; நடையே ஆசிரியன் என்பர். ஒரு படைப்பைப் படித்தவுடன் இது இளங்கோவின் நடை என்றும் இது கம்பன் நடை என்றும் இது பாரதியின் நடை என்றும் இது புதுமைப்பித்தன் நடை என்றும் இது தி. ஜானகிராமனின் நடை என்றும இது லா. சா. ராமாமிர்தத்தின் நடை என்றும் நம்மால் எப்படிச் சொல்ல முடிகிறது? அவர்களுக்குரிய மொழிநடையை வைத்துதான்.

நடையியல்

ஒவ்வொரு ஆசிரியனுக்கும் ஒரு மொழி நடை உண்டு. இம்மொழி நடை என்பது இடையறாத பயிற்சியின் பொருட்டு ஆழ்ந்த அனுபவத்தின் அடிப்படையில் சொல்ல வேண்டும் என்னும் உந்துதலில் அமைவதாகும். ஓர் இலக்கிய ஆசிரியனின் மொழிநடையை ஆராய மேற்கொண்ட நெறிமுறையே நடையியல் எனப்படும். 'STYLISTI' என்னும் சொல்லானது 'DIE STYLISTIK' என்னும் ஜெர்மானியச் சொல்லிலிருந்து வந்தது என்பர். நடையியல் பற்றிய ஆராய்ச்சியானது இன்று வளர் நிலையிலேயே இருக்கிறது. ஒருவனின் நடைபற்றியது ஓர் இலக்கியப் படைப்பைத் திறனாயும் துறையினை வளப்படுத்த உதவும்.

நடையியல் ஆய்வு

நடையியல் ஆராய்ச்சியினை மூன்று நிலைகளில் மேற்கொள்ளுவதைக் காணலாம்.

1.படைப்பின் சார்பு

2.உருவமைப்புச் சார்பு

3. படைப்புக்கு வெளிநிலவும் சூழல் சார்பு

முதல் பகுதி ஓர் இலக்கியப் படைப்பை ஒட்டியது.

இரண்டாவது பகுதி படைப்பின் அமைப்பு மொழி பற்றியது.

மூன்றாவது பகுதி படைப்பு தோன்றிய காலத்துச் சூழல் பற்றியது. இருந்தாலும் மொழிப் பதிவு எனப்படும் இலக்கியப் படைப்பின் மொழியைப் பொருட்புலப்பாடு வடிவம் எனப் பிரிக்கலாம். இதனை வெளியீட்டு நிலையில் படைத்தல் சுட்டுதல் எனவும் சொல்லலாம். மொழி நடைபற்றிச் சொல்லுவதற்கு முன்னால் நடையியல்பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல வேண்டும்.

நடையின் பொருட் புலப்பாடு

நடையின் பொருட் புலப்பாட்டினை இரு வகைககளாகப் பிரிக்கலாம். அவை வெளிப்படை, குறிப்பு என்பனவாகும். வெளிப்படை என்பது மொழி நடையின் புறத் தோற்றம எனலாம். இது சொல்லுக்கும் பொருளுக்கும் நேரடித் தொடர்பு கொண்டது – எளிமையானது. குறிப்பு என்பது தமிழில் உள்ளுறை உவமம் போன்றது. இலக்கண அமைப்புக்கு மீறிய நிலையில் பொருளுக்கு ஓர் உள்ளார்ந்த அர்த்தம் கொடுப்பது எனலாம். இது ஆசிரியரின் ஆத்மார்த்தப் பண்பு கொண்டது எனலாம். ஆசிரியரின் மொழி நடையில் வெளிப்படையாகத் தோன்றுவதைத் தெரிநிலை எனவும அணி நிலை எனவும் வகுக்கலாம். தெரிநிலை ஒன்றும் ஒன்றும் இரண்டு எனச் சொல்லுவதாகும். அணி நிலை என்பது ஈருயிரும் ஓருயிராயின் எனச் சொல்லுவதாகும்.

நடை அழகு

வசன நடைக் கலையின் இயல்பை இரண்டு நிலைகளினின்று நோக்கி நாம் கற்கலாம். ஒருநிலை மொழியைப் புறத்தே நின்று வழங்குவதைப் பற்றியது. இதன் நோக்கம் பிழையற்ற திருந்திய நடை என்று கொள்ளலாம். மற்றொரு நிலை மொழியை அகத்தே நின்று வழங்குவதாகும். இதன் நோக்கம் பிறரை வசீகரித்தல் போன்ற அழகாகும். இதனை அழகிய நடை என்றும் கூறுவர். சொல்லமைப்பை மாத்திரம் ஆய்ந்தால் ஒரு திருந்திய நடையே நமக்குக் கிடைக்கும். இது சாதாரண மக்களுடைய பேச்சில் இருக்கும் குறைபாடுகளை எங்கும் முறைப்பட நீக்குதலால் விளைவதாகும். ஆனால் இவ்வாறு திருத்தமுற்ற நடையிலும் மேம்பட்டு அழகுடைத்தாக வசனம் அமைய வேண்டுமெனில அப்பொழுது முன்னே குறித்த குற்றங்களை நீக்குவதுடன் ஆசிரியனுக்குரிய ஆத்ம குணங்கள் சிலவும் பொருந்தி இருத்தல் வேண்டும். இக் குணங்கள் நடை அழகிற்கு உதவுவனவாகும் எனபர்.

நடை அழகிற்கு வேண்டுவன

1. பிழையற்ற நடை
2. அணி நடை.

அணி நடை என்றவுடன் நடைக்குத் தேவையான அலங்காரம் செய்தல் என்று நினைத்துக் கொண்டு உவமைகளையும் சிலேடைகளையும் வேண்டாத அலங்காரச் சொற்களையும் வழக்கிழந்த சொற்களையும் பயன்படுத்துவது கூடாது. தமிழில் மரபுத் தொடர்களும் வளமைத் தொடர்களும் உவமைத் தொடர்களும் ஏராளம். அவற்றை இடமறிந்து பயன்படுத்தினால்தான் நடை அழகு பெறும். இது போலவே பொருள் தெரிந்து பழமொழிகளையும் பயன்படுத்த வேண்டும். இதுவும் அளவு கடந்துவிட்டால் பொருட் சிறப்பை இழந்து விடும் எனலாம்.

உவமையணி:

உவமையணி என்பது கூறக் கருதிய பொருளை நன்கு தெரிந்த ஒன்றைக் காட்டி விளக்குவது. ஒருபொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டு அழகு படுத்திக்கூறுவது. சொல்ல எடுத்துக் கொண்ட பொருளை வேறு ஒருபொருளுடனோ அல்லது பலபொருள்களுடனோ அப்பொருளின் பண்பு,தொழில்,பயன் என்பவற்றைக் காரணமாகக்கொண்டு இயைபுபடுத்தி இருபொருள்களுக்கும் இடையே உள்ள ஒப்புமைபுலப்படும்படி பாடுவது உவமை அணியாகும்.
12-ம்நூற்றாண்டில்எழுதப்பட்டதாகக் கருதப்படும். இவ்வாறான உவமையணி கம்பனில் மக்கள் குரல் என்னும் நூலில் கையாளப்பட்டுள்ளது.

மொழிநடை என்பது ஒரு எழுத்தாளரின் சிறப்பை உலகிற்கு எடுத்து கூறும் வகையில் அமைதல் முக்கியமான ஒன்றாகும் இவ்வாறான மொழிநடை கம்பனில் மக்கள் குரல் என்னும் நூலில் கம்பன் எழுதிய கம்பராமாயணம் என்ற நூலிளிருந்து சில படலத்தின் கதைகளை எடுத்து 11 கட்டுரையாக கம்பனில் மக்கள் குரல் என்னும் நூலில் கட்டுரையாக வெளிவந்துள்ளது. அவற்றை

டாக்டர்.ந. சுப்புரெட்டியார் அவரின் நடையில் கட்டுரையாக எழுதியுள்ளார். இவ்வாறான 11 கட்டுரைகளிலும் அவரின் மொழிநடை இலக்கிய வகையிலும் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

உத்திகள்

கட்டுரையில் கையாலும் உத்திகளால் கட்டுரை தனிச்சிறப்பைப் பெறுகிறது. உத்தி மூலம் ஆசிரியரின் மொழித்திறனும் எழுத்தாற்றலும் வெளிப்படுவதோடு அல்லாமல் கலைப்படைப்பும் சிறப்புறுகின்றது. தான் அமைந்திருக்கும் கருத்துக்கள் வாசகர்களை சிறப்பாகச் சென்றடைய வேண்டும் என்று சில உத்திகளைக் கைக்கொள்வது ஆசிரியரின் வழக்கமாகும். அவற்றை கட்டுரை உத்திகள் என்று வகைப்படுத்தலாம். ஆசிரியர் தம் காலத்தை ஒட்டியும், அவர் விளக்க எண்ணும் உள்ளடக்கத்தை பொருத்தும் மேலும் அவர் கட்டுரை சென்று சேரும் வாசகர்களின் இயல்பைப் பொருத்தும் கட்டுரை உத்திகள் வேறுபடலாம். கட்டுரை பொருள் பொதிந்த தலைப்பை அமைத்ததோடு அல்லாமல் சிறந்த எழுத்து நடையையும் கட்டுரை ஆசிரியர் கைக்கொண்டு இருக்கிறார். சிறந்த சொல்லாட்சிகளையும் வர்ணிப்பு முறைகளையும் உவமை உருவகம் முதலிய அணிகளையும் கட்டுரை ஆசிரியர் தம் உத்திகளைக் கையாண்டுள்ளார் அவற்றை இனிக் காணலாம்.

கம்பர் கையாண்ட அணிகள் பல உத்திகள் பல. முரண் தொடை போன்றவற்றை கம்பர் பல பாடல்களில் கையாண்டுள்ளார். கம்பர் கையாண்டதைப் போல தமிழிலே வேறு எந்தக் கவிஞரும் கையாண்டதில்லை. ஒரு பாட்டிலே ஒரு பாத்திரத்தின் இருவேறு மன நிலைகளை எடுத்தியம்புகின்றார் கம்பர். ஆரண்ய காண்டத்தில் இலக்குவனால் மூக்கறுபட்டு சூர்ப்பணகை பின்பு ஜனஸ்தானத்தில் வந்து கரதூஷணாதியர்களிடம் முறையிட்டாள். அவர்களையும் இராம இலக்குவர் வதம் செய்யவே நேரே தன் அண்ணன் இராவணனிடம் வந்து தனக்கு நேர்ந்த அவமானத்தையும் தான் மூக்கறுபட்டதையும் எடுத்துக்கூறி புலம்பினாள் சூர்ப்பணகை. கவிச் சக்கரவர்த்தி கம்பரைப் பற்றி கவிப் பேரரசர் வைரமுத்து

> **“சொல்லுக்குள் வாக்கியத்தைச்**
> **சுருக்கி வைத்த கவிப்புலவர்”**
> **“சூத்திரம் போல் பாட்டெழுதும் சுகக்கவி.**

என்று போற்றுகிறார். கம்பரும் சிறந்த பாட்டு எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கியுள்ளார்.

> **புவியனுக்கணியாய் ஆன்ற**
> **பொருள் தந்து புலத்திற்றாகி**
> **அவியகத் துறைகள் தாங்கி**
> **ஐந்திணை நெறிய ளாவுச்**
> **சிவியுறத் தெளிந்து தண்ணென்**
> **ஒழுக்கமும் தழுவுச் சான்றோரர்**
> **கவியெனக் கிடந்த கோதா**
> **வரியினை வீரர் கண்டார்.**
>
> **(ஆரண்ய காண்டம், சூர்ப்ப.1)**

ஆன்ற பெருமை வாய்ந்த கோதாவரி ஆறு சான்றோர் கவிபோல் விளங்கிற்று என்று கம்பன் அமைத்த உவமையின் அழகினை ஆராய்ந்தறிந்தால் எக்காலும் எல்லோருக்கும் இன்பம் பயப்பதாகும். இதன் வழி கம்பர் அணிநயம், ஆழ்ந்த பொருட்சிறப்பு, அகப்பொருள் துறைகள்,

ஐந்திணை வருணனை முதலியன அமைந்து தெளிவும் குளிர்ந்த ஒழுக்கமும் உடையதாக விளங்குவதே பாட்டு என்கிறார். "உரிய சொற்கள் உரிய இடங்களில் பொருந்தி நடப்பதே நடை. மொழியில் அழுத்தத்தையும் தெளிவையும் உருவாக்க முயலும் எல்லா வழிவகைகளையும் மொழிநடையியலின் கீழ் அடக்கலாம். இவற்றில் எல்லா மொழிகளிலும் பழமையான மொழியில் கூட ஊடுருவிச் செல்லும் உருவகங்களும் எல்லா அணி உருவகங்களும் சொற்றொடர் அமைப்பும் அடங்கும். அடுக்கு நிலை, நிறைவு, உயர்வு நவிற்சி, உச்சநிலை என்றினை உருவகங்களை அழகிய நடைக்குரியவை" ஆகும்

மோனை

அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடி மோனை ஆகும். இக்கட்டுரைக்காக நோக்கியபோது கம்பர் அடிமோனையை தம்பாடல்களில் அரிதாகவே பயன்படுத்தியுள்ளார்.

எனக்கு நல்லையும் அல்லை நீ என் மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை அத் அத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லிகை மதியில் மனத்தோய்

என மோனையில் முதல் சீரில் அல்லாமல் இரண்டாம் மூன்றாம் சீர்களில் முதல் எழுத்து ஒன்றி வர தொடுக்கப்பட்ட அடிமோனை கம்பரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. நான்கு அடிகளிலும் முதல் சீரில் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுக்கப்பட்ட மோனையை கம்பர் ஏன் பயன் படுத்தவில்லை என்பது ஆய்வுக்குரியதாகும்.

சீர் மோனை

சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது சீர் மோனை எனப்படும்.

முதல் சீரிலும் இரண்டாம் சீரிலும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது சீர் இணை மோனை எனப்படும்.

முந்தினர் முரண் இலர் சிலவர் மொய் அமர்
நின்று இலை சில விளம்ப நோகச்கிலென்
நன்று இனி நரரொரு குரங்கை நாம் அறக்
குழுமி மேகங்களை குமுறின குளிர்வளி கொணர்ந்து
தேவரும் அடங்கினர் இயக்கர் கிந்தினர்
தாவரும் தாவை தருக்குத் தாழ்ந்தனர்

கீழ்க்கதுவாய் மோனை

இங்கு முதல், நான்காம் சீர்களில் முதல் எழுத்து ஒன்றி வந்த கீழ்க்கதுவாய் மோனை அமைந்துள்ளது.

செற்றார் எதிர்வரும்....

முற்றி மூன்று உலகுக்கும் முதல்வன் ஆயது

இந்த அடியில் முதல் மற்றும் நான்காம் சீரில் முதல் எழுத்து ஒன்றிவர ஒரூஉ மோனை அமைந்துள்ளது. கம்பர் ஓர் மோனையில் இணை மோனையை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார்.

எதுகை

அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது அடி எதுகை எனப்படும். கம்பராமாயணத்திலுள்ள பெரும் பாலான பாடல்களில் அடியெதுகை கையாளப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

"எனக்கு நல்லையும் அல்லைநீ என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை அத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்"

நான்கு அடிகளில் முதல் சீரிலும் இரண்டாம் சீரிலும் மூன்றாம் சீரிலும் இரண்டாம் எழுத்துகள் ஒன்றிவர தொடுக்கப்பட்ட முற்று எதுகை கையாளப்பட்டுள்ளது. முற்றெதுகை கம்பரால் பெரும்பான்மையான இடங்களில் கையாளப்பட்டுள்ளது. இ∴து கம்பரின் தனிச் சிறப்பாகும்.

சீர் எதுகை

சீர் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ஓர் எதுகை ஆகும். அடியெதுகையைப் போன்று சீர் எதுகையை கம்பர் அதிகம் பயன்படுத்தவில்லை. என்பது கம்பரின் தனிச் சிறப்பாகும். சான்றாக,

"மந்தாரம் உந்து மகரந்தம் மணந்த வாடை"

முரண்

அடியிலோ, சீரிலோ சொற்கள் மொழியிலும் பொருளிலும் முரணுதல் முரண் ஆகும்.

"செறி கழல் அரக்கர்தம் அரசு சீரியோர்
நெறி அலது ஆதலில் நிலைக் கலாமையும்
இவனை இன்துணை உடைய போர் இராவணன், என்னே
புவனம் மூன்றையும் வென்றது ஒர்பொருள் எனப் புகழல்
சிவனை நான் முகத்து ஒருவனை, திருநெடுமால் ஆம்
அவனை அல்லவர் நிகர்ப்பவர் என்பதும் அறியேன்!
கீதங்கள் இசைத்தனர் கின்னரர் கீதம் நின்ற
பேதங்கள் இயைம்பினர் பேதையர் ஆடல் மிக்க
பூதங்கள் தொடர்ந்து புகழ்ந்தன் ஆசு ரேசர்
வேதங்கள் இயம்பினர் தென்றல் விழுந்து செய்"

பொருள் முரணை விட சொல் முரண் அடிகளின் முதல் சீரில் அதிகம் பயன் படுத்தப்பட்டுள்ளது.

வண்ணம்

ஒலி நிலையில் காணப்படும் மற்றொரு உத்தி வண்ணமாகும். ஒரே ஒலி அல்லது அதற்கிணையான ஒலிகள் ஒரு அடியிலோ. பாடல் முழுவதுமோ பயின்று வருவதனையே வண்ணம் என்கின்றனர். வல்லெழுத்துக்கள் மிகுந்து வருமானால் வல்லெழுத்து வண்ணம், மெல்லெழுத்து மிகுந்து வருமானால் மெல்லெழுத்து வண்ணம் எனப்படும். இவ்விரு வண்ணங்களையும் மிக அழகாகப் பயன் படுத்தியுள்ளார். தூங்குகின்ற கும்பகர்ணனை எழுப்ப

பெரும் முயற்சிகள் செய்கின்றனர். இரு பெண்கள் நெல் குற்றும் பொழுது இரு உலக்கைகளை மாறி மாறி குற்றுவதைப் போல அமைந்துள்ளது. அப்பாடல் கிங்கரர்கள் கோபம் கொண்டு கும்பகர்ணனை எழுப்புகின்றனர்

“உறங்குகின்ற கும்பகர்ண
உங்கள் மாய வாழ்வு எலாம்
இறங்குகின்றது இன்று காண
எழுந்திராய்! எழுந்திராய்
கறங்கு போல வில் பிடித்த
காலதூதர் கையிலே
உறங்குவாய் உறங்குவாய்
இனிக்கிடந்து உறங்குவார்.

இப்பாடலில் வல்லின வண்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இராவணின் தங்கை சூர்ப்பனகை பஞ்சவடியென்னும் சோலையை நோக்கிப் புறப்பட்டாள். மயிலின் சாயலும், அன்னத்தின் அணி நடையும் வாய்ந்த மங்கை பஞ்சின் மெல்லடிப் பாதங்கள் படியில் தோய பர்ணசாலையை நோக்கி வருகின்ற அந்த பான்மையை,

“பஞ்சி ஒளிர். விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சம்நிகர், சிறியள் ஆகி
அஞ்சொல் இளமஞ்ஞை என, அன்னம் என, மின்னும்
வஞ்சி என, நஞ்சம் என, வஞ்சி மகள் வந்தாள்”.

அன்னம் போல் நடந்து வந்த அழகினை மெல்லிசை வண்ணத்தால் எழுதியமைந்த கம்பரின் கவித்திறம் கற்போர் கருத்தினைக் கவர்வதாகும்.

இயைபு

கம்பர் ஈற்று இயைபினையும் அடிமுதல் இயைபினையும் கையாண்டுள்ளார். இவ்விரண்டில் மிகுந்து காணப்படுவது அடிமுதல் இயைபே. பெரும்பாலான பாடல்களில் எல்லா அடிகளிலும் முதல்சொல் இயைபு பெற்று விளங்குவதைக் காணலாம்.

“விழுந்தனர், கழன்றனர், வெகுண்டனர், திரிந்தார்
அழுந்தினர், அழுந்திலர், அகன்றிலர், அகன்றார்
எழுந்தனர், எழுந்திலர், எதிர்ந்தனர், முதிர்ந்தார்
ஒழிந்தனா் ஒழுந்திலா் உணர்ந்திலா்கள் ஒன்றும்”

இப்பாடலில் கம்பர் விழுந்தனர். அழுந்தினர், எழுந்தனர், ஒழிந்தனர் என அடி முதல் இயைபினையும் திரிந்தார், அகன்றார், முதிர்ந்தார் என அடியிறுதி இயைபினையும் கையாண்டுள்ளார்.

சொற்கள்

அடி முதல் இயைபு அமையும் வகையில் கம்பர் பெரும்பான்மையான பாடல்களை அமைத்துள்ளார். சான்றாக,

“முடிவெழும் ஒலியில் முறையின் யாழ்நரம்பு
எழவெழும் ஒலியில் இமைப்பில் கண்ணினர்
விழவெழும் ஒலியில் வேறும் ஒன்றில
அழவெழும் ஒலியலது அரச விதியே”

என்ற பாடலில் இராமன் பிரிவை எண்ணி மக்கள் அழுவதால் உண்டாகிய ஒலியைத் தவிர ஏனைய ஒலிகள் இல்லாதன ஆயின என்பதை இப்பாடல் குறிப்பிடுகின்றது.

முடிவுரை

கம்பர் எதுகை, மோனை, முரண், இயைபு ஆகியவற்றை நடையியல் உத்திகளாகப் பயன்படுத்தியுள்ளார். மோனையைப் பயன்படுத்தும் போது அடிமோனையை மிகக் குறைவாகவும் சீர் மோனையை ஆங்காங்கேயும் பயன்படுத்துகிறார். கம்பர் மோனையைக் காட்டிலும் எதுகையை அதிகம் பயன்படுத்துகிறார். சீர் எதுகையைக் காட்டிலும் அடியெதுகையை மிக அதிகமாகப் பயன்படுத்துகிறார். முரண் பயன்பாட்டில் பொருள் முரணைக் காட்டிலும் சொல் முரண் அதிகமாகக் காணப்படுகின்றது.மொழி முதல் இயைபு பெரிதும் கையாளப்பட்டுள்ளது. மொழி இறுதி இயைபு மிகக் குறைவாகவே கையாளப்பட்டுள்ளது. கம்பராமாயணம் முழுவதையும் புள்ளியியல், நடையியல் அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால் கம்பரின் நடையியற் கூறுகள் துல்லியமாகக் கண்டறியப்படலாம். அவ்வாறு கண்டறியப்பட்டால் பாட பேதங்கள், பிற்சேர்க்கை போன்றவற்றை நீக்குவதற்குத் துணையாக இருக்கும். ஒலி நிலையிலும் சொல் நிலையிலும் தொடர் நிலையிலும் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஒரு பரந்துபட்ட ஆய்வுக் களமாக கம்பராமாயணம் அமைந்துள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவ்வாறாக கம்பன் எழுதிய கம்பராமாயணத்தில் அவர் பயன்படுத்திய மொழிநடை உத்திகள் பற்றி டாக்டர் ந. சுப்புரெட்டியார் எழுதிய கம்பனில் மக்கள் குரல் என்னும் தலைப்பில் எழுத்தப்பட்ட 11 கட்டுரையின் வாயிலாக இவர் பயன்படுத்திய சில இலக்கிய நடை உத்திகளைப் பற்றி இவ்வியலில் காணமுடிகிறது.

ஆய்வு முடிவுகள்

"கம்பனில் மக்கள் குரல்" என்ற இந்த ஆய்வேட்டில் இருந்து சில ஆய்வு முடிவுகள் ஆய்வாளரால் பெறப்படுகிறது.

- கம்பராமாயணம் படிப்பதற்கு ஆர்வம் ஊட்டும் வகையில் இருக்கும்
- கம்பர் எழுதிய அறத்தைப் பற்றி கதைகளை கூறுவன.
- கருத்துக்களை ஒவ்வோர் தலைப்பு வாயிலாக கூறப்படும் .
- அறம் தவறினால் ஏற்படும் விளைவுகள் பற்றி மிக தெளிவாக புரியவைப்பது.
- பொது இடங்களில் படிக்க கூடியவையாக இருக்கும்.
- கதைகளும் நீதிகளும் பிரிக்க முடியாததாகி அமைந்திருக்கும்.
- போர் சம்பவம் குறித்து எழுதப்பட்டவை மிக சுவாரசியமாக அமைந்திருக்கும்.
- விலங்குகள் பறவைகள் மனிதர்கள் அசுரர்கள் தேவர்கள் கடவுள்கள் என எல்லாத் தரப்பினருக்கும் இக்கதையில் இடம் உண்டு.
- சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை உற்சாகத்தோடு படிப்பதற்கும் ஏதுவானது.
- தம்பிகளின் பாசத்தை பற்றி சிறப்பாக கூறியுள்ளது.
- இயற்கை வருணனைகள் அதிகம் இடம் பெற்றிருக்கும்.
- குழந்தையின்பத்தை பற்றி கூறும் வகையில் அமைந்திருக்கும்.
- இலக்கிய நடையில் அமைந்திருக்கும்
- டாக்டர்.ந. சுப்புரெட்டியார் அவர்கள் எழுதிய கட்டுரையில் இலக்கிய நடையை பயன்படுத்தியுள்ளதை காணமுடிகிறது.

துணை நூற்பட்டியல்

முதன்மை ஆதாரம்

டாக்டர்.ந. சுப்புரெட்டியார் கம்பனில் மக்கள் குரல்
centenary committee publications
AD-15th street, Anna Nagar west,
Chennai-600 040

துணை ஆதாரங்கள்

1. டாக்டர்.ந. சுப்புரெட்டியார் வடவேங்கடமும் திருவேங்கடமும்
நிவேதிதா பதிப்பகம்
13 ஆவது தெரு,
அசோக் நகர்,
சென்னை -83.

2.ரேணுகாதேவி.வீ சங்கப் பெண்பாற் புலவர்களின் மெ
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை – 2012

3. ரா.ராகவையங்கார் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள்
தலைமைத் தமிழாராய்ச்சியாளர்
library.senthamil.org/065.htm

4.முனைவர்.சி.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கம்பராமாயணம்
tamilnation.co/literature/kamban/kambaramayanam.htm

இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இலக்கியங்களின் பல்வேறு வகைகளையும் ஆராய்ந்து
இக்கால இலக்கிய வளர்ச்சி பற்றியும், ஆழ்ந்த
புலமையோடு எளிய முறையில் சிந்தனைப்
பொறிகள் தெறிக்க மிக சிறப்பாக இந்நூல்
வடிவமைக்கப் பெற்றுள்ளது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939353-9-2

eBOOK ~ *மின் நூல்*

அணிந்துரை

இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்

1997

வழங்கியோர்:

திரு இரா காந்தி
மூத்த வழக்கறிஞர்
சென்னை உயர்நீதி மன்றம்



அணிந்துரை

திரு. இரா. காந்தி, மூத்த வழக்கறிஞர்,
சென்னை உயர்நீதி மன்றம்.

ஓர் அறக்கட்டளைச் சொற்பொழிவு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது சென்னைப் பல்கலைக் கழகமும், தமிழ் இலக்கியத் துறையும் சேர்ந்து நடத்திய நமது பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களுடைய கல்கி அறக் கட்டளை சொற்பொழிவினுடைய நூல் வடிவம்.

பேராசிரியர் அவர்கள் எழுதியுள்ள நூல்களின் எண்ணிக்கையும், அவர்கள் எழுதியுள்ள கட்டுரைகளும், உரைநடைகளும் எண்ணிலடங்கா. முத்தாய்ப்பு வைத்தாற்போல், இந்த "இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்" என்ற அற்புதமான சொற்பொழிவை நூலாக வடித்திருக்கிறார்.

தமிழ் இலக்கியத்தினுடைய 2500 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றில் பிறமொழி தாக்குறவு பற்றி நூலாசிரியர் சிறப்பாக ஆராய்ந்து சொல்லியிருக்கிறார். மேலும் பண்டைய இலக்கணமான தொல்காப்பியத்திலிருந்து பண்டைய இலக்கியங்கள்பற்றியும் மற்ற இலக்கிய வேந்தர்களைப் பற்றியும் மிகச் சிறப்பாகச் சொல்லுயிருக்கிறார். வடமொழியினுடைய சொற்கள் தமிழிலிலே கலந்து இருக்கின்ற காரணங்களைச் சொல்லிகின்ற பொழுது, ஆதிசங்கரரின் அத்வைதக் கொள்கையும், இராமாநுசருடைய விசிட்டாத்வைதக் கொள்கையும் பரவத் தொடங்கியபோது, வடமொழி கற்றவர்களின் தொகை பெருகியது என்கிறார். வடமொழியை 'தேவபாஷை' என்றும் 'நீசபாஷை' என்றும் தூற்றியும் கூறிய அன்பர்களையும் நூலாசிரியர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

வெண்பாவினுடைய விளக்கங்களையும் நெடு வெண்பாடிவினுடைய விளக்கங்களையும் வெகு சிறப் பாக எடுத்துரைத்திருக்கிறார். வஞ்சிப்பா பற்றி ஆசிரியர் எழுதியிருப்பது அவரது ஆராய்ச்சித்திறனைக் காட்டுகிறது. திருப்பாவை, திருவெம்பாவை, தேவாரம், திருவாசகம் முதலிய பக்திப் பனுவல்களிலிருந்து மேற்கோள் காட்டிய நூலாசிரியர், பிற்காலத்தில் வந்த இலக்கியவாதிகள், கவிஞர்களுடைய நூல்களையும் இக்கால இலக்கியங்களை விளக்கும் போக்கில் காட்டி யிருக்கிறார். யாப்பு எப்படி ஒலி நயத்திற்குத் துணை புரிகிறது என்பதனை பாரதியாரின் "பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா" என்ற பாடலின் மூலமும், பாரதிதாசனின் "பெண்குழந்தை தாலாட்டு" என்ற பாடலின் மூலமும் சிறப்பாக விளக்குகிறார். கவிதைகள் உணர்ச்சி பொங்க இருக்கவேண்டும் என்பதற்குப் பல பாடல்களை மேற்கோள்களாகக் காட்டி விளக்கு கின்றார். கும்மிப் பாடல்கள்பற்றி பல மேற்கோள் காட்டி எழுதிய நூலாசிரியர் கி.பி. 7-ஆம் 9-ஆம் நூற்றாண்டுகளில் பக்திப் பாடல்கள் பாடிய ஆழ்வார், நாயன்மார்கள் தம்முடைய பக்திப் பாடல்களில் இளங்கோ அடிகளைப் பின்பற்றி நாட்டுப் பாடல் களின் கூறுகளை அமைத்துப் பயன்படுத்தினார்கள் என்று ஆராய்ந்து எழுதியுள்ளார். பாரதியாருடைய பாடல்களை விரிவாக கூறியுள்ள நூலாசிரியர், அப் பெருமகனார் தமது பாடல்களில் குழந்தை இலக்கியத் திற்கு வித்திட்டார் என்று கூறி, புதிய ஆத்திசூடியை யும், முரசுப் பாட்டையும் மேற்கோள் காட்டுகிறார்.

குழந்தைக் கல்வி பற்றி எழுதுகிற நூலாசிரியர் தம்முடைய பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிய அநுபவத்தைக் கொண்டு விளக்குகிறார். மேநாட்டு அறிஞர்களில் ரூசோ, பெஸ்டலாஸ்ஸி, ஃபிராபெல், மாண்டிசாரி

போன்ற அறிஞர்களின் சேவையைப் பாராட்டுகிறார். தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டில் தோன்றின புதிய முயற்சியில் பிறந்ததுதான் 'புதுக் கவிதை' என்று எழுதுகிறார். இதனை வரவேற்றுப் பேசும் நூலாசிரியர் இது தமிழ் அன்னைக்குச் சூட்டப் பெற்ற புதியதொரு அணியாகும் என்றும் சொல்லு கிறார்.

இப்படி இலக்கியங்களுடைய பல்வேறு வகைகளை யும் ஆராய்ந்து இக்கால இலக்கிய வளர்ச்சி பற்றியும், ஆழ்ந்த புலமையோடு எளிய முறையில், சிந்தனைப் பொறிகள் தெறிக்கப் பேராசியர் ரெட்டியார் அவர்கள் மிகச் சிறப்பாக இந்த நூலை வடித்திருக்கிறார். நல்ல நூல்களை எழுதுவதும் வெளியிடுவதுமாகக் கொண் டிருக்கிறார் பேராசிரியர் ரெட்டியார். அவர்களுடைய நூற்றுக்கணக்கான படைப்புகளுக்கு இடையில் இந் நூல் சிறப்பான இடத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை. தமிழுக்கும், தமிழகத்திற்கும் நூலாசிரியர் ஆற்றிவரும் தொண்டு மிகவும் போற்றுதற்குரியது.

—இரா. காந்தி.

"ஈரோடு இல்லம்"
47, மூன்றாவது முதன்மை சாலை
காந்திநகர், அடையாறு
சென்னை-600 020
ஆகஸ்டு 6, 1997
தொ.பே. 4910974

NSR100
KAMATCHI AMMAL FELLOWSHIP

MA Students in Tamil

Awarded to :

வெ மஞ்சுளா

(பதிவு எண்: 11700117002)

(பேராசிரியரின் ஒரு நூலை மையக்கருத்தாகக் கொண்டு ஆய்வு செய்த முதுகலைப்பட்ட மாணாக்கர்)

உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப்பெற்ற நூலும் வழங்கப்பெற்றன.

ஆய்வேட்டின் தலைப்பு: அறிமுக நோக்கில் இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்

பேராசிரியரின் நூல்: இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்

துறை: தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக்கழகம், ஆந்திர மாநிலம்

நெறியாளர்: முனைவர் கு பத்மநாபன்

வருடம்: மே 2019

www.nasubbureddiar100.in

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

பேராசிரியர் முனைவர்
ந சுப்பு ரெட்டியார்

இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்



Swaminatha Iyer

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

"அறிமுக நோக்கில் இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்"

ARIMUKA NOKKIL ILAKKIYA VAIKAIYIN
VALARCHIYUM IKKALA ILAKKIYANGALUM

திராவிடப் பல்கலைக் கழக முதுகலைப் பட்டத்தின்
ஒரு பகுதியாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

A project report submitted to Dravidian University
in partial fulfilment for the award of M.A. Degree

ஆய்வாளர்
செல்வி வெ மஞ்சுளா
பதிவு எண்: 11700117002

Submitted by
V Manjula
Reg. No. 11700117002

நெறியாளர்
முனைவர் கு பத்மநாபன்
உதவிப்பேராசிரியர்

Under the guidance of
Dr K Padmanbhan
Assistant Professor

தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக் கழகம்
குப்பம் - 517 426, ஆந்திரப்பிரதேசம்

Department of Tamil Language & Translation Studies
Dravidian University, Kuppam – 517 426 (AP)

May 2019

நன்றியுரை

திராவிடப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., (தமிழ்) படிக்க வாய்ப்பு அளித்த மரியாதைக்குரிய **மாண்புமிகு துணைவேந்தர்** மற்றும் **பதிவாளர்** ஆகியோருக்கு என் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை ஆய்வாளராக ஏற்றுக்கொண்டு ஆய்வுத்திட்டத்திற்குத் தேவையான தலைப்பினையும், இயல்களையும் பகுத்துக் கொடுத்து பல்வேறு பணிகளுக்கிடையே ஆய்வுப்படிகளைத் திருத்திச் செப்பனிட்டுக் கொடுத்து இவ்வாய்வுத்திட்டம் நிறைவு பெற வழிகாட்டியாக அமைந்த நெறியாளர் **முனைவர் கு.பத்மநாபான் எம்.ஏ.,எம்.ஃ.பில், பிஎச்.டி,** உதவிப் பேராசிரியர், தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப்பல்கலைக்கழகம், குப்பம் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் ஆய்வுத் திட்டத்தின் செம்மையாக்கத்தில் நெறியாளரோடு தோழமை உணர்வுடன் செயல்பட்டு நூல்களும் கருத்தாக்கங்களும் வழங்கிய **முனைவர். க.மாரியப்பன்** அவர்களுக்கும், **முனைவர்.பூ.சு.கணேசமூர்த்தி** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எம் துறைத்தலைவர் **முனைவர் விஷ்ணுகுமாரன்** அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

என்னை ஆளாக்கிய என் அன்புத் தந்தை **வெள்ளையன்** அவர்களுக்கும் பெற்றெடுத்த அன்னை **சோலையம்மாளுக்கும்** இந்நேரத்தில் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். என் வளர்ச்சியில் என்றும் உறுதுணையாக இருக்கும் ஆய்வு மாணவர்கள் **செந்தாமரைக்கும், சந்திரசேகரன் அண்ணாவுக்கும்** நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் சகோதரன் **ஸ்ரீதருக்கும்** என் மனமார்ந்த நன்றிகள். வகுப்புத்தோழி **வினிதாவிற்கும்** மற்றும் உள்ள நண்பர்களுக்கும் நன்றிகள் பல.

எனது ஆய்விற்குத் தேவையான நூல்களை இன்முகத்துடன் வழங்கிய திராவிடப்பல்கலைக்கழக நூலகத்தாருக்கும், ந.சுப்புரெட்டியார் அவர்களின் மகனார் **சு.இராமலிங்கம்** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெ.மஞ்சுளா

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகத்	-	அகத்திணையியல்
உ.ஆ	-	உரையாசிரியர்
தொல்	-	தொல்காப்பியம்
பொருள்	-	பொருளதிகாரம்
செய்யுள்	-	செய்யுளியல்
ப	-	பக்கம்
பக்	-	பக்கங்கள்
பதி	-	பதிப்பாசிரியர்
மேலது	-	மேற்காட்டிய நூல்
நூ	-	நூற்பா

நெறியாளர் சான்றிதழ்

ஆய்வாளர் உறுதிமொழி

நன்றியுரை

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

உள்ளடக்கம்

இயல் எண்	தலைப்பு	பக்கம்	
	ஆய்வு அறிமுகம்	1	4
1	ந.சுப்புரெட்டியாரின் வாழ்க்கை வரலாறும் அவர்தம் படைப்புகளும் விருதுகளும்	5	19
2	இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும் - நூல் அறிமுகம்	20	40
3	இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும் - மதிப்பீடு	41	48
	ஆய்வு முடிவுகள்	49	50

பின் இணைப்பு

துணை நூற்பட்டியல்

“ஆய்வு அறிமுகம்”

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் எண்ணற்ற தமிழ்ச் சான்றோர்கள் தோன்றினர். பல நூறு இலக்கிய நூல்களைப் படைத்தனர். அவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் ந.சுப்புரெட்டியார் ஆவார். அவரின் இலக்கியப் படைப்பான **“இலக்கிய வகையின் வளர்ச்சியும் இலக்கியங்களும்”** என்ற நூலின் அறிமுகமாகவும் அவரின் வாழ்க்கை வரலாறு குறித்த செய்தியுமாகவும் இத்திட்ட ஆய்வு அமைகிறது.

ஆய்வுத் தலைப்பு விளக்கம்

“அறிமுக நோக்கில் இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்” என்பதே இவ்வாய்வின் தலைப்பாகும். ந.சுப்புரெட்டியார் எழுதிய மேற்காணும் நூலின் உள்ளடக்கத்தை விளக்கும் விதமாக இத்திட்ட ஆய்வு அமைகின்றது.

ஆய்வு நோக்கம்

ந.சுப்புரெட்டியார் நூற்றுக்கணக்கான நூல்களைப் படைத்துள்ளார். அவற்றில் “**இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்** ” என்ற நூலினை அறிமுகப்படுத்துவதே இத்திட்ட ஆய்வின் நோக்கமாகும்.

கருதுகோள்

ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் முதற்கொண்டு தற்கால இலக்கியம் வரையிலான பரந்துபட்ட அறிவு உடையவர் என்பது மறுக்கமுடியாத ஒன்று. அதை நிருபிக்கும் விதமாக, இலக்கிய வகை பற்றிய இவரின் கண்ணோட்டம் பிற சான்றோர்களின் கண்ணோட்டத்திற்கு இயைபு உடையதாக அமைந்திருக்கிறது என்பதும் சில இடங்களில் அவரின் மொழிநடை பிறரின் மொழிநடையோடு மாறுபட்டிருக்கிறது என்பதும் இத்திட்ட ஆய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

“**இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்** ” என்ற நூலில் காணலாகும் எட்டு வகையான உட்தலைப்புகளை மட்டுமே ஆய்வு எல்லையாகக் கொண்டு இத்திட்ட ஆய்வேடு அமைந்துள்ளது.

ஆய்வு முன்னோடிகள்

ஆய்வாளருக்கு **“ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணிகள்”**[1] என்ற முனைவர் பட்ட ஆய்வேடு ஆய்வாளருக்குக் கிடைக்கப்பெற்றது. மேலும் **“ந.சுப்புரெட்டியாரின் படைப்புகள்: கலையும் கருத்தியலும்”**[2] என்ற பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு நூல் ஒன்றும் கிடைக்கப்பெற்றது. இதுவே இத்திட்ட ஆய்வு செய்வதற்கு உறுதுணையாக ஆய்வாளருக்கு அமைந்தது.

ஆய்வுச் சான்றுகள்

முதன்மை சான்றாதாரம்	-	**இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்**
துணைமை சான்றாதாரங்கள்	-	**சுப்புரெட்டியார் குறித்த கட்டுரைகள், சுப்புரெட்டியாரின் பிற நூல்கள்**

ஆய்வு அணுகுமுறைகள்

இத்திட்ட ஆய்வேடு விளக்கமுறை அணுகுமுறையிலும் பகுப்பாய்வு அணுகுமுறையிலும் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆய்வுக்கட்டமைப்பு

இத்திட்ட ஆய்வேடு ஆய்வு அறிமுகம், ஆய்வு முடிவுகள் நீங்கலாக,

1. ந.சுப்புரெட்டியாரின் வாழ்க்கை வரலாறும் அவர்தம் படைப்புகளும் விருதுகளும்
2. இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும் - நூல் அறிமுகம்
3. இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும் - மதிப்பீடு

என மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டு ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வு அறிமுகம் என்ற தலைப்பில், முன்னுரை, ஆய்வுத்தலைப்பு விளக்கம், ஆய்வு நோக்கம், கருதுகோள், ஆய்வு எல்லை, ஆய்வு முன்னோடிகள், ஆய்வுச் சான்றுகள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வுக்கட்டமைப்பு, ஆய்வு முடிவுகள் போன்றன விளக்கப்பட்டுள்ளன.

ந.சுப்புரெட்டியாரின் வாழ்க்கை வரலாறும் அவர்தம் படைப்புகளும் விருதுகளும் என்ற முதல் இயலில், ந.சுப்புரெட்டியாரின் பிறப்பு, கல்வி, குடும்ப வாழ்க்கை, பணி, படைத்த நூல்கள், பெற்ற விருதுகள், இறப்பு போன்றன தரப்பட்டுள்ளன.

இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும் - நூல் அறிமுகம் என்ற இரண்டாவது இயலில், வரலாற்றுப் பின்னணி, இலக்கிய வளர்ச்சி, தொல்காப்பியக் குறிப்புகள், பாவினங்களின் தோற்றம், அடிவரையறை இல்லாத

செய்யுள் வகை, வழி வழியாக வளர்ந்த வரலாறு, புதிய வகைப் பாடல்கள், குழந்தை இலக்கியம், புதுக்கவிதை, முடிப்புரை போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன.

இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும் - மதிப்பீடு என்ற மூன்றாவது இயலில், ந.சுப்புரெட்டியாரின் நூல் குறித்த மதிப்பீடு முன் வைக்கப்படுகின்றது.

ஆய்வு முடிவுகள் என்ற இறுதிப் பகுதியில் இத்திட்ட ஆய்வேட்டின் அடிப்படையில் கண்டெடுக்கப்பட்ட முடிவுகள் முன் வைக்கப்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து மேலாய்வுக் களங்கள், பின் இணைப்புகள், துணைநூற்பட்டியல் இணைக்கப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. க.ஜோதிமணி, ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணிகள், (நூலக்கம் பெறாத முனைவர் பட்ட ஆய்வேடு) மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ஆகஸ்ட் 2015

2. முனைவர் க.முருகேசன், முனைவர் சு.இராமலிங்கம், (பதிப்), ந.சுப்புரெட்டியாரின் படைப்புகள்: கலையும் கருத்தியலும், ஜூலை, 2016

இயல் 1

"ந.சுப்புரெட்டியாரின் வாழ்க்கை வரலாறும் அவர்தம் படைப்புகளும் விருதுகளும்"

1.0 முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் சீரிய தமிழ்ப்பணி குறிப்பிடத்தக்கதாகும். அறிவியல் பேராசிரியாக இருந்து தமிழ்ப் பேராசிரியராக வளர்ந்து திறம்படப் பணியாற்றியவர். இவர்தம் தமிழ்ப்பணி போற்றுதற்குரியது. இவரது வாழ்க்கைத் தகவல்களை நாம் இவ்வியலில் காண்போம்.

1.1 பிறப்பும் வளர்ப்பும்

ந.சுப்புரெட்டியார் தம் வாழ்க்கை வரலாற்றை **'நினைவுக் குமிழிகள்'** என்னும் தலைப்பில் நான்கு பகுதிகளாக எழுதியுள்ளார். **'மலரும் நினைவுகள்' 'நீங்காத நினைவுகள்'** ஆகிய தன் வரலாற்று நூல்களிலும் அவர்தம் வாழ்க்கை வரலாற்றை விரிவாகவும் விளக்கமாகவும் எழுதியுள்ளார். இந்நூல்களின் துணைகொண்டு அவருடைய வாழ்க்கை வரலாற்றைத் தெளிவாக அறிய முடிகின்றது.

ந.சுப்புரெட்டியார் **'ஞானியார்'** பரம்பரையைச் சேர்ந்த ஞானி நல்லப்ப ரெட்டியாருக்கும், காமாட்சி அம்மாளுக்கும் மகனாக 27-08-1916இல் பிறந்தார். திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டத்திலுள்ள **பெரகம்பி** என்னும் சிற்றூரில் தன் தாய்மாமனாகிய பண்ணை நல்லப்ப ரெட்டியாரின் **'பண்ணையார் வீடு'** என்றழைக்கப்படும் பண்ணை இல்லமே ந.சுப்புரெட்டியார் பிறந்த இடமாகும். 'பெரகம்பி' என்னும் சிற்றூருக்கு மேற்கில் ஆறுகல் தொலைவிலுள்ள கோட்டத்தூர் என்னும் சிற்றூரே ந.சுப்புரெட்டியாரின் தந்தையாகிய ஞானி நல்லப்ப ரெட்டியார் பிறந்த ஊராகும்.

"ந.சுப்புரெட்டியார் 1926 வரையில் பெரகம்பியில் வளர்ந்து பின்னர் கோட்டத்தூருக்குக் குடிபெயர்ந்தவர். ந.சுப்புரெட்டியாரின் தாய்மாமனான பண்ணை நல்லப்ப ரெட்டியாருக்கும், ந.சுப்புரெட்டியாரின் தந்தையான ஞானி நல்லப்ப ரெட்டியாருக்கும் ஏறக்குறைய ஒத்த வயதே. ந.சுப்புரெட்டியாரின் தாய்மாமனான பண்ணை நல்லப்ப ரெட்டியார் பரம சாது. இவருக்கும் பெரகம்பிலுள்ள ஒரு பெண்ணுக்கும் திருமணம் நடந்தது. ஆயினும் இரண்டாடுகள் கூட அவர்களது இல்லற வாழ்க்கை இனிதாக நடைபெறவில்லை. பண்ணை நல்லப்ப ரெட்டியாரின் தாயாரும் தனது பாட்டியுமான செல்லாயம்மாள் அரவணைப்பில் ந.சுப்புரெட்டியார்

செல்லப்பிள்ளையாக வளர்ந்து வந்தார். ந.சுப்புரெட்டியாருக்கு தம் மூன்று வயது நிறைவடையும் முன்னர் ஞானி நல்லப்ப ரெட்டியார் தம் முப்பது அகவையை எட்டும் முன்னர் இறந்து விட்டார்".[1] ந.சுப்புரெட்டியாரின் தாய்மாமனாகிய பண்ணை நல்லப்ப ரெட்டியார் நம் மனைவியைப் பிரிந்து வாழ்ந்தார். அப்போது அவருக்கு மூன்று வயதில் செல்லப் பாப்பா என்ற பெண் குழந்தை இருந்தது. பண்ணை நல்லப்ப ரெட்டியார் தம் மனைவியைப் பிரிந்து வாழ்ந்ததாலும், அவருடைய தங்கையான காமாட்சி அம்மாள் இளம் வயதில் விதவையானதாலும் அவருடைய முழுக்கவனமும் ந.சுப்புரெட்டியாரின்பால் திரும்பியது. ந.சுப்புரெட்டியார் இளமையில் பண்ணையார் வீட்டுப் பண்ணைச் செல்லமாகப் போற்றி வளர்க்கப்பட்டார். ந.சுப்புரெட்டியாரின் பாட்டியார் அவருக்காக மட்டுமே அரிசிச்சோறு, பருப்பு, குழம்பு, ரசம் ஆகிய உணவைச் சுவைபடச் சமைத்தார்.

1.2 தொடக்க நிலைக்கல்வி

ந.சுப்புரெட்டியாருக்கு ஐந்து வயது நிறைவு வெறும் போது திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் இலிங்கச் செட்டியார், வைதிகச் சடங்குகளுடன் ந.சுப்புரெட்டியாருக்கு, பண்ணை நல்லப்ப ரெட்டியார் இல்லத்தில் வித்தியாப்பியாசம் (எழுத்தறிவித்தல்) என்னும் சடங்கினைத் தொடங்கி வைத்து அவருக்குத் தொடக்க நிலைக்கல்வியை ஊட்டினார். **"ஆசிரியர் (இலிங்கச் செட்டியார்) மஞ்சள் தடவிய அளவுபடுத்தப் பெற்றுத் தயாரித்த நான்கைந்து பனையோலை அடங்கிய ஒரு சிறு கட்டில் 'ஹரி:நமோத்துசித்தம்' என்று எழுதித் தந்ததும், சருக்கரை கலந்த காய்ச்சிய பாலில் ஏதோ மந்திரம் எழுதிப் பருகச் செய்தலும், அதன் மேற்படியேட்டில் எழுதியதைத் தனித்தனி எழுத்தை மூன்று முறையும் ஆசிரியர் சொல்ல அப்படியே என்னைச் சொல்லும்படி செய்தலும் இவையாவும், ஒரு சிறு விநாயகர் வழிபாட்டிற்குப் பின்னரே நடைபெற்றதும் நினைவுக்கு வருகின்றன. மறுநாள் தொடங்கி பள்ளிக் கூடத்திற்கு முற்பகலும் பிற்பகலும் ஒழுங்காகப் போய்வந்ததும் நினைவுக்கு வருகின்றது"**[2] என ந.சுப்புரெட்டியார் தம் தொடக்க நிலைக்கல்வி அனுபவத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

1.3 ந.சுப்புரெட்டியாரின் தொடர்கல்வி முயற்சிகள்

கோமுட்டி செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த இலிங்கச் செட்டியாரிடம் ந.சுப்புரெட்டியார் அவரது திண்ணைப் பள்ளியில் 1921-1926களில் பயின்றார். பெரகம்பியில் செல்லப்பிள்ளையாக ந.சுப்புரெட்டியார் வளர்ந்த போது அவரிடம் அழுதழுதே காரியத்தை சாதித்துக்கொள்ளும் பண்பும், தான் செய்த குற்றத்தைப் பிறர்மேல் சுமத்தும் பண்பும் இருந்தது. பெரகம்பியில் ஆடிப் பதினெட்டு அன்று

நடைபெற்ற கரகாட்ட விழா, கண்ணன் பிறப்புத் திருவிழா, காமன் பண்டிகை ஆகிய மூன்று விழாக்களும் ந.சுப்புரெட்டியாரைப்4 பெரிதும் கவர்ந்தன.

“ந.சுப்புரெட்டியார் கோட்டதூரில் நான்கு வருடங்கள் (1927-1930) கழகத் தொடக்கப் பள்ளியிலும், சாமுவேல் பிள்ளை என்பவரால் நடத்தப் பெற்ற ஆங்கிலப் பள்ளியிலும் படித்தார்”.[3] 1931இல் ந.சுப்புரெட்டியார் முசிறியில் நான்காவது படிவம் படித்துக் கொண்டிருந்தார். கோட்டத்தூர் கழகத் தொடக்கப்பள்ளியில் வேலூர் வாத்தியார் சந்திரசேகரய்யர் என்னும் ஓராசிரியரே இருந்தார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது. ஆயினும் சோதிடம் நன்றாகத் தெரிந்தவர். **‘சிவிக்ஸ்’** என்ற பாடநூலும், **‘கணித நூலும’** பாடநூல்களாகும். **“சந்திரசேகரய்யர் இவற்றைச் சொல்லித்தராமல் வாய்பாட்டினை மனப்பாடம் செய்தல், கூட்டல். கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்குகள், ரூபாய் அணா பைசா கணக்கு, அருணகிரி அந்தாதி, அறப்பளீசுர சதகம், அரிச்சந்திரபுராணம்”**[4] ஆகியவற்றையே சொல்லிக்கொடுத்தார். பின்னர் அந்தப் பள்ளிக்கு சுப்பராய உடையார் என்னும் தலைமை ஆசிரியர் வந்தார். **“சுப்பராய உடையாருக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும். அத்துடன் அவருக்கு நாட்டு வைத்தியமும் தெரிந்ததால் மிக விரைவாகப் பொதுமக்களிடம் செல்வாக்குப் பெற்றார். சுப்பராய உடையார் தம் வீட்டில் ஆங்கிலத்தையும் வட்டிக்கணக்கையும் இலாப நட்டக் கணக்கையும் தனிப்பாடமாகச் சொல்லிக் கொடுத்து கூடுதல் வருமானத்தைப் பெற்றார**”[5] கோட்டத்தூர் சந்திரசேகரய்யர், சுப்பராய உடையார், வி.கே.அரங்கநாத அய்யர் ஆகிய மூவரும் ந.சுப்புரெட்டியாருக்கு ஆசிரியர்களாகப் பணியாற்றினர். ந.சுப்புரெட்டியார் துறையூர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளியில் சேர்ந்து எட்டாவது படித்த எட்டுமாதக் காலத்தில் தான் தசமபின்னக் கணக்குகளைக் கற்றுக் கொண்டார். ந.சுப்புரெட்டியார் கல்லூரிக் கல்வியை முடித்துக் கொண்டு துறையூரில் ஒரு உயர்நிலைப்பள்ளியைத் தாமே நிறுவி அப்பள்ளியின் தலைமையாசிரியர் ஆனார்.

1.4 கல்லூரிக் கல்வி

ந.சுப்புரெட்டியார் 1937-1939 ஆம் ஆண்டுகளில் திருச்சி சூசையப்பர் கல்லூரியில் படித்து இளங்கலைப் பட்டம் பெற்றார்.

1.5 குடும்ப வாழ்க்கை

ந.சுப்புரெட்டியார் 1936இல் தம் தந்தை வழியில் ஒன்றுவிட்ட அத்தை மகளான செல்லபாப்பா அம்மையாரை மணந்தார். அவர்களுக்குப் பன்னிரெண்டு ஆண்டுகள் மக்கட்பேறு இல்லை. 1949இல் இராமலிங்கமும் 1953இல் இராமகிருஷ்ணனும் பிறந்தனர். இராமலிங்கத்திற்கு மிருணாளினி, அனுபமா என்ற இரு பெண் மக்கள்

உள்ளனர். மிருணாளினி தன் கணவன் அரவிந்த் விஷ்ணுராமனுடன் அமெரிக்காவில் ஒரே நிறுவனத்தில் உயர்பதவிகளில் பணியாற்றி வருகின்றனர்.

மருத்துவக் கல்வியைப் பயின்ற டாக்டர் இராமகிருஷ்ணனும் அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் முதியோர் மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். இவர் மகன் வேங்கடவன் மருத்துவமும், இரண்டாம் மகன் பிரகாசு பொறியியலும் படித்து முடித்துள்ளனர்.

1.6 ந.சுப்புரெட்டியார் எழுதியுள்ள நூல்கள்

ந.சுப்புரெட்டியார் எழுதியுள்ள நூல்களை ஆசிரியத்தொழில், உளவியல், இலக்கியம், சமயம் - தத்துவம் குறித்த விளக்க நூல்கள், திருத்தலப் பயண நூல்கள், திறனாய்வு நூல்கள், வரலாறு மற்றும் தன் வரலாற்று நூல்கள், அறிவியல் நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் என வகைப்படுத்திக் குறிப்பிடலாம். தமிழ்ப்பணிக்காகவே தமிழில் இவரெழுதிய நூல்கள் போற்றுதலுக்கும் சிறப்பிற்கும் உரியவை.

1.7 ஆசிரியத்தொழில், உளவியல்

ந.சுப்புரெட்டியார் ஆசிரியத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்குப் பயன்படும் வகையில் ஆசிரியர்களுக்குத் தேவையான கற்றல், கற்பித்தல், உளவியல் கோட்பாடுகளை விளக்கி ஐந்து நூல்களை எழுதியுள்ளார். அவை வருமாறு:

1. **தமிழ் பயிற்றும் முறை**
2. **கவிதை பயிற்றும் முறை**
3. **அறிவியல் பயிற்றும் முறை**
4. **கல்வி உளவியல் கோட்பாடுகள்**
5. **யுனஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல்**

இந்நூல்கள் தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் பயிற்றுவிக்கும் முறை, தமிழ்க்கவிதைகளைப் பயிற்றுவிக்கும் முறை, அறிவியல் கல்வியைக் கற்றுக்கொடுக்க வேண்டிய முறை, கல்வி உளவியல் கோட்பாடுகள் அவற்றின் முக்கியத்துவம், யுனஸ்கோ நிறுவனம் வெளியிட்டுள்ள **‘அறிவியல் பயிற்றும் அடிப்படை நூல்’** ஆகியன தமிழ் வழிக்கல்வியின் முதன்மையையும் முக்கியத்துவத்தையும் தெளிவு படுத்துகின்றன.

1.8 தமிழ் இலக்கிய நூல்கள்

தமிழ் இலக்கிய வகைமைகளுள் சிறப்பிடம் பெறுவது கவிதைகளே. ந.சுப்புரெட்டியார் அக்கவிதைகளைப் படைக்கும் கவிஞர்களின் நோக்கங்களை **‘கவிஞன் உள்ளம்’** என்னும் நூலில் எளிமையாக விளக்கிக் கூறியுள்ளார். காலத்தால்

உருவாக்கப்படும் கவிஞர்களும் உண்டு தமக்கென காலத்தை உருவாக்கிக் கொள்ளும் கவிஞர்களும் உண்டு. கவிஞர்கள் தோன்றிய அல்லது தோன்றும் காலப்பின்புலத்தை அவர் **‘காலமும் கவிஞர்களும்’** என்னும் நூலில் தெளிவுப்படுத்தியுள்ளார். இலக்கியங்களில் காணப்பெறும் நுட்பமான காதலுணர்வை விளக்கி அவர் **‘காதல் ஓவியங்கள்’** என்னும் நூலினை எழுதியுள்ளார். இலக்கியம் கற்பவர் உணர்வைத் தூண்டிச் சிந்தனையை வளர்ப்பதை அவர் **‘அறிவுக்கு விருந்து’** என்னும் நூலில் விளக்கியுள்ளார். ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணிகளுள் மிக அரியதாகக் கருதப்பெறுவது அவரது **‘முத்தொள்ளாயிர விளக்கம்’** என்னும் நூலாகும். அவர் முத்தொள்ளாயிரப் பாடல்களுக்கு நுட்பமான விளக்கங்களைத் தந்துள்ளார். அவர் கலிங்கத்துப்பரணியின் இலக்கியச் சிறப்புக்களை விளக்கிய நிகழ்த்திய சொற்பொழிவுகள் **‘பரணிப் பொழிவுகள்’** என்னும் நூலாக வெளிவந்திருக்கின்றது. அவர் அறிவியல் தமிழின் தேவையையும் முதன்மையையும் விளக்கி **‘அறிவியல் தமிழ்’** என்னும் நூலினைத் தமிழ்ச் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

காப்பியங்களில் ந.சுப்புரெட்டியாரின் உள்ளத்தை ஈர்த்தது கம்பராமாயணமே. இதற்குக் காரணம் பன்னிரு ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களின் உட்பொருளைக் கம்பன் ஆண்டுள்ள திறனே ஆகும். இவ்வகையில் அவரெழுதியுள்ள **‘கம்பனின் மக்கள் குரல்’, பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்’** என்னும் இரண்டு நூல்களும் குறிப்பிடத்தக்கவை. தமிழ்ச் சான்றோர்களும் தமிழறிஞர்களும் தத்தம் கொள்கைக்கேற்பவும் கருத்திற்கேற்பவும் திருக்குறளுக்கு உரைவிளக்கம் கண்டுள்ளனர். ந.சுப்புரெட்டியாரும் திருக்குறளுக்குத் தனது பங்களிப்பாக ஒவ்வொரு குறளுக்கும் மூன்று வரிகளில் சுருக்கமான உரையினை எழுதியுள்ளார். அவரெழுதிய உரை **‘திருக்குறள் தெளிவு’** என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்திருக்கிறது. **‘திருக்குறள் கருத்தரங்கு மலர் - 1974’** என்னும் திருக்குறள் ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய ஆய்வு மலர் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். **‘திருக்குறள் - வாழ்வியல் சிந்தனைகள்’, ‘வள்ளுவர் காட்டும் வாழ்வியல்’** என்னும் இருநூல்களில் அவர் வள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறிகளை எளிமையாக விளக்கியுள்ளார். திருவேங்கடம் தமிழுக்கு அளித்துள்ள பங்களிப்புக் குறித்துத் **‘திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்’** என்னும் நூலினையும் ந.சுப்புரெட்டியார் எழுதியுள்ளார். அறிவியல் சிந்தகனைகளில் ந.சுப்புரெட்டியார், பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கு நிகரானவர். தமிழ் இலக்கியம். சமயம், தத்துவம் ஆகியனவற்றில் காணலாகும் அறிவியல் சிந்தனைகளையும் கருத்தாக்கங்களையும் விளக்கி அவர் **‘அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்’** என்னும் நூலினையும் எழுதியுள்ளார். தமிழ் இலக்கியங்கள் அறத்திற்கும் நீதிக்கும் அளித்துள்ள

பங்களிப்புகளே மிகுதி. அவற்றைத் தமிழ் இலக்கியச் சான்றுகளைக் கொண்டு விளக்குவதற்காகத் **‘தமிழ் இலக்கியத்தில் அறம் நீதி முறைமை’** என்னும் நூலினை எழுதி உள்ளார். தமிழில் தோன்றி வளர்ந்துள்ள இலக்கிய வகைகள், அவற்றின் வளர்ச்சி, இக்கால இலக்கியத்தின் நோக்குகள், போக்குகள் ஆகியன குறித்து விளக்குவதற்காக அவர் **‘இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியமும்’** என்னும் ஆய்விலக்கிய நூலினையும் எழுதியுள்ளார்.

‘பாவேந்தர் பாரதிதாசன் - ஒரு கண்ணோட்டம்’, ‘வாய்மொழியும் வாசகமும்’, ‘பல்சுவை விருந்து’ ‘புதுவை(மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் - ஒரு கண்ணோட்டம்’ முதலான இலக்கிய நூல்களையும் ந.சுப்புரெட்டியார் எழுதியுள்ளார். அவருடைய **‘காந்தியடிகளின் நெஞ்சுவிடு தூது’** என்னும் இலக்கிய நூலும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும்.

1.9 சமய, தத்துவ விளக்க நூல்கள்

ந.சுப்புரெட்டியார் எழுதியுள்ள சமய, தத்துவ, விளக்க நூலக்ள் அனைத்தும் சைவ, வைணவ சமயங்களின் கொள்கைநெறி விளக்கங்களாகவே அமைந்துள்ளன. அவரது **‘திருப்பாவை விளக்கம்’, ‘அர்ச்சிராதி’, ‘ஐந்து இரகசியங்கள்’** என்னும் வைணவ சமய தத்துவ விளக்க நூல்களை திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ளது. ந.சுப்புரெட்டியாரின் **‘வைணவமும் தமிழும்’**, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடான **‘கலியன் குரல்’, ‘கீதைக்குறள்’, ‘கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில்’, ‘ஆண்டாள் பாவையும் அழகு தமிழும்’**, ஐதிகம், இதிகாசம், சம்வாதம் ஆகியன குறித்து அவரெழுதிய **‘வைணவ உரைவளம்’, ‘கண்ணன் துதி’, ‘இராமர் தோத்திரம்’, ‘வைணவ புராணங்கள்’, ‘நவவித சம்பந்தம்’, ‘அர்த்த பஞ்சகம்’** ஆகிய நூல்கள் வைணவ சமய விளக்கம் தொடர்பானவைகளாகும். அவர் கடித உத்திமுறையில் எழுதிய **‘சைவ சமய விளக்கு’, ‘சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்’, ‘சைவமும் தமிழும்’** ஆகிய நூல்கள் சைவ சமயம் தொடர்பான தத்துவச் சிந்தனைகளை எளிமையாக விளக்குபவை. ந.சுப்புரெட்டியார் சமய, தத்துவச் சிந்தனைகளைப் பொதுநிலையில் விளக்குவதற்காக **‘முக்தி நெறி’** என்னும் நூலினை எழுதியுள்ளார். இந்நூல் தமிழக அரசின் பரிசினைப் பெற்ற நூலாகும். அவர் ஆன்மீக நெறியை அறிவியலுடன் இணைத்து **‘ஆன்மீகமும் அறிவியலும்’** என்னும் நூலொன்றையும் எழுதியுள்ளார். ‘சமயம், தத்துவம்’ என்னும் பொருளமைதியில் அவர் இருபது நூல்களை எழுதியுள்ளார்.

1.10 திருத்தலப் பயண நூல்கள்

ந.சுப்புரெட்டியார், வைணவத் திருத்தலங்களுக்குப் புனிதப் பயணங்களை மேற்கொண்டு அத்திருத்தலங்களின் வரலாறு, புராணக் குறிப்புக்கள், பெருமைகள் ஆகியனவற்றை விளக்கி மலைநாட்டுத் திருப்பதிகள், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், பாண்டி நாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள், தமிழக அரசின் பரிசு பெற்ற சோழநாட்டுத் திருப்பதிகள் (முதல், இரண்டாம் தொகுதிகள்) முதலான திருத்தலப் பயண நூல்களை எழுதியுள்ளார். சைவ சமயச் சான்றோர்கள் மேற்கொண்ட திருத்தலப் பயணங்களின் பெருமைகளையும் அவர்கள் பாடிய தேவாரப் பாடல்களின் சிறப்புக்களையும் விளக்கி அவர் நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் **'தம்பிரான் தோழர்' (சுந்தரர்), 'ஞானசம்பந்தர்', 'நாவுக்கரசர்', 'மாணிக்கவாசர்'** எனும் நூல்கள் குறிப்பிடத்தக்கன. ந.சுப்புரெட்டியார் அமெரிக்கா, இலங்கை ஆகிய நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் செய்துள்ளார். அந்நாடுகளில் தாம் மேற்கொண்ட பயண அனுபவங்களை விளக்கி **'என் அமெரிக்கப் பயணம்', 'என் இலங்கைப் பயணம்'** என்னும் இரண்டு பயண இலக்கிய நூல்களை எழுதிப் பயண இலக்கியத்திற்கும் வித்திட்டுள்ளார்.

1.11 திறனாய்வு நூல்கள்

தமிழ் இலக்கியப் பரப்பில் திறனாய்வு நூல்களின் எண்ணிக்கை மிகக் குறைவு என்றே குறிப்பிடலாம். இக்குறையைப் போக்கும் அளவிற்கு ந.சுப்புரெட்டியார் தமிழ்க்கவிதை, தொல்காப்பியம், கம்பராமாயணம், புதுக்கவிதை, பாரதியார் கவிதைகள், ஆழ்வார்களின் பாசுரங்கள், பாரதிதாசன் பாட்டுத்திறன், வாலியின் வசனகவிதைக் காப்பியத்திறன், அற இலக்கியங்கள், தமிழ் இலக்கியங்களின் சமய, தத்துவச் சிந்தனைகள், தமிழ் இலக்கிய வகைகள், இக்கால இலக்கியங்களின் நோக்கும் போக்கும், கவிமணியின் கவிதை வாயிலாக ஆற்றிய தமிழ்ப்பணிகள், புதிய பார்வையில் **'மூவர் தேவாரம்", 'பல்சுவை இலக்கிய விருந்து'** எனப் பல திறனாய்வு நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள், **'கவிதை அனுபவம்', 'பாட்டுத்திறன்'** ஆகிய இரண்டும் மிகச் சிறந்த தமிழ்க் கவிதைத் திறனாய்வு நூல்களாகும். **'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை', 'அகத்திணைக் கொள்கைகள்'** ஆகிய இரண்டு நூல்களும் தொல்காப்பியத் திறனாய்வு நூல்களாகும். **'கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள்', 'பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியங்கள்', 'அண்ணல் அனுமன்'** ஆகிய மூன்று நூல்களும் கம்பராமயணத் திறனாய்வு நூல்களாகும். **'புதுக்கவிதை நோக்கும் போக்கும்'** என்னும் நூல் புதுக்கவிதைத் திறனாய்வு நூலாகும். **'கண்ணன் பாட்டுத்திறன்', 'பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு', 'குயில்பாட்டு – ஒரு மதிப்பீடு'**

தமிழ்நாடு அரசின் பரிசு பெற்ற நூலான **'பாரதீயம்'** ஆகிய நூல்கள் பாரதியார் கவிதைகள் பற்றிய திறனாய்வு நூல்களாகும்.

ஆழ்வார்கள் ஆரா அமுது, விட்டுசித்தன் விரித்த தமிழ், சடகோபன் செந்தமிழ், பரகாலன் பைந்தமிழ் ஆகிய நூல்கள் ஆழ்வார்களின் பாசுரங்கள் குறித்த திறனாய்வு நூல்களாகும். **'பாவேந்தர் பாட்டுத்திறன்', 'பாண்டியன் பரிசு ஒரு மதிப்பீடு'** ஆகிய நூல்களும் பாரதிதாசன் பாட்டுத்திறன் குறித்த மதிப்பீட்டுத் திறனாய்வு நூல்களாகும். **'கவிஞர் வாலியின் அவதார புருஷன் - ஒரு மதிப்பீடு', 'கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி ஒரு மதிப்பீடு'** ஆகிய இரு நூல்களும் கவிஞர் வாலியின் வசனகவிதைக் காப்பியத்திறன்களை எடுத்துரைக்கும் திறனாய்வு நூல்களாகும். ந.சுப்புரெட்டியார் தமிழ் இலக்கியங்களில் காணலாகும் அறம், சமயம், தத்துவச் சிந்தனைகளை **'அறிவியல் நோக்கில் இலக்கியம் சமயம் தத்துவம்'** என்னும் திறனாய்வு நூலை விளக்கியுள்ளார். அவர் தமிழ் இலக்கிய வகைகள், அவற்றின் தோற்றம் வளர்ச்சி, இக்கால இலக்கியங்களின் நோக்கு, போக்கு ஆகியனவற்றை **'இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்'** என்னும் நூலினுள் விளக்கியுள்ளார். கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை தம் கவிதை வாயிலாக ஆற்றிய தமிழ்ப்பணிகளை **'கவிமணியின் தமிழ்ப்பணி – ஒரு மதிப்பீடு'** என்னும் நூலினுள் விளக்கியுள்ளார். அவர் மூவர் தேவாரப்பாடல்களை புதியநோக்கில் ஆராய்ந்து **'மூவர் தேவாரம் - புதிய பார்வை'** என்னும் ஆய்வு நூலினை எழுதியுள்ளார். இந்நூல் தமிழ்நாட்டின் சமய, சமூக, பண்பாட்டியல் சூழல்களில் மூவர் தேவாரப் பாடல்களை விளக்கியுரைக்கின்றது. இதனைத் தவிர ந.சுப்புரெட்டியார் **'வாழும் கவிஞர்கள்', 'தந்தை பெரியார் சிந்தனைகள்', 'பல்சுவை விருந்து'** போன்ற திறனாய்வு நூல்களையும் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1.12 வரலாற்று நூல்களும் தன் வரலாற்று நூல்களும்

ந.சுப்புரெட்டியார் இலக்கியம், சமயம், தத்துவம், அறிவியல், பயண அனுபவம், இலக்கியத் திறனாய்வு ஆகிய துறைகளில் மட்டுமன்றி, வரலாற்றுத் துறை சார்ந்தும், தன் வரலாற்றை எடுத்துக்கூறியும் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் **'வேமனார்', 'குராஜாட', 'சி.ஆர்.ரெட்டி', 'தாயுமானவடிகள்', 'பட்டினத்தடிகள்', 'இராமலிங்கடிகள்', 'பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள்', தமிழ்க்கடல் ராய.சொ', 'முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்'** ஆகியன வரலாற்று நூல்கள். **'நினைவுக்குமிழிகள் - முதற்பகுதி', 'நினைவுக்குமிழிகள் - இரண்டாம் பகுதி', 'நினைவுக்குமிழிகள் - மூன்றாம் பகுதி', 'நினைவுக்குமிழிகள் -**

நான்காம் பகுதி' 'மலரும் நினைவுகள்' 'நீங்காத நினைவுகள்' ஆகிய நூல்களும் ந.சுப்புரெட்டியார் தன் வரலாற்றை விளக்கும் நூல்களாகும். ந.சுப்புரெட்டியார், தன் வரலாற்று நூல்களின் எளிமை, உண்மை, நம்பகத்தன்மை ஆகியனவற்றைக் காணமுடிகிறது.

1.13 அறிவியல் நூல்கள்

தமிழ்ப் பேராசிரியரான ந.சுப்புரெட்டியார் ஆழ்ந்த அறிவியல் புலமையுடன் தமிழில் மனித உடலியல், மரபியல், அணுவியல், வானொலி, தொலைக்காட்சித் தொழில் நுட்ப அறிவியல், பௌதிகவியல், விண்வெளிப் பயணம், இராக்கெட்டுகள் ஆகியன குறித்துப் பல அறிவியல் நூல்களை எளிமைப்படுத்தி எழுதியுள்ளார். அவற்றுள் **'மானிட உடல்'** தமிழக அரசின் பரிசுபெற்ற நூலான **'நமது உடல்', 'வாழையடி வாழை'** ஆகிய நூல்கள் மனித உடலியலும் மரபியலும் சார்ந்தவை. **'அணுவின் ஆக்கம்', 'அதிசய மின்னனு'** ஆகிய இருநூல்களும் அணுவியல் தொடர்பானவை. **'இளைஞர் வானொலி', 'இளைஞர் தொலைக்காட்சி'** ஆகிய இருநூல்களும் வானொலி மற்றும் தொலைக்காட்சியின் தொழில்நுட்ப அறிவியல் தொடர்பானவை.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பரிசினைப் பெற்ற நூலான **'அணுக்கரு பௌதிகம்'** என்னும் நூல் பௌதிகவியல் தொடர்பானவை. **'அம்புலிப் பயணம்', 'தொலை உலகச் செலவு'.** தமிழக அரசின் பரிசினைப் பெற்ற **'விண்வெளிப் பயணம்'** ஆகிய நூல்கள் விண்வெளிப் பயணம் குறித்தன. தமிழக அரசின் பரிசு பெற்ற நூலான **'இராக்கெட்டுகள்'** இராக்கெட்டின் அறிவியல் உருவாக்கம் மற்றும் பயன்பாடு பற்றியது.

ந.சுப்புரெட்டியார் கடித உத்தி முறையில் ஆண் - பெண் பாலுறவின் அறிவியல் உண்மையையும் அதன் தேவையையும் வலியுறுத்தி **'இல்லற நெறி'** என்னும் நூலினை எழுதியுள்ளார். இந்நூல் இல்லற வாழ்வியல் ஈடுபடும் ஆண், பெண் இருபாலரும் படித்தப் பயன்பெற வேண்டிய நூலாகும். அறிவியல் துறை சார்ந்து அவரெழுதிய **'அறிவியல் விருந்து'** என்னும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசினைப் பெற்ற நூலாகும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு **'தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும்'** என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. இந்நூல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின்

வெளியீடாகும். அவர் **‘தமிழில் அறிவியல் செல்வம்’** என்னும் நூலினையும் எழுதியுள்ளார்.

1.14 ஆராய்ச்சி நூல்கள்

ந.சுப்புரெட்டியார் தமிழ் ஆர்வலர் மட்டுமன்று தம் வாழ்க்கையையே தமிழ்ப்பணிக்காகவும் தமிழாராய்ச்சிக்காகவும் அர்ப்பணம் செய்தவர். அவரெழுதிய நூல்கள் அனைத்துமே ஆராய்ச்சி நூல்களே என்றாலும், **‘கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி’, ‘வைணவச் செல்வம் - முதல், இரண்டாம் பகுதிகள்’** (தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு), **‘வடவேங்கடமும் திருவேங்கடமும்’** ஆகிய நூல்கள் முழுமையான மிகச் சிறந்த ஆராய்ச்சி நூல்களாகும்.

1. ‘Religion and Philosophy of Nalayira Divya Prabandam with special reference to Nammalvar’
2. ‘Studies in Arts and Science’ (61st Birth Day commemoration Volume)
3. ‘Collected Papers’ ஆகிய நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள அவரது ஆராய்ச்சி நூல்களாகும்.

1.15 ந.சுப்புரெட்டியார் பெற்ற விருதுகளும் பாராட்டுகளும்

1. 1969இல் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் **‘அருங்கலைக்கோன்’** என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது.
2. 1993இல் பண்ருட்டி, வைணவ சபை ந.சுப்புரெட்டியாருக்கு **‘ஸ்ரீசடகோபன் பொன்னடி’** என்னும் விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.
3. 1993இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ந.சுப்புரெட்டியாருக்கு **‘தமிழ் பேரவைச் செம்மல்’** என்னும் விருதினை வழங்கிக் கௌரவித்ததோடு, இப்பல்கலைக்கழகத்தின் கல்வி ஆலோசனைக் கழகத்தின் வாழ்நாள் உறுப்பினர் தகுதியையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.
4. 1995இல் தமிழக அரசு, ந.சுப்புரெட்டியாருக்கு **திரு வி.க விருதினையும்** ரூபாய் பத்தாயிரம் ரொக்கப்பணத்தையும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.
5. 1984இல் ந.சுப்புரெட்டியாருக்கு **இராசா சர் முத்தய்ய வேள் விருதும்** ரூபாய் பத்தாயிரம் ரொக்கப் பணமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.
6. 1996இல் சென்னை ஆழ்வார் ஆய்வு மையம் ந.சுப்புரெட்டியாருக்கு **இராமானுசர் விருதும்** ரூபாய் இருபத்தையாயிரம் ரொக்கப்பணமும் வழங்கி கௌரவித்துள்ளது.

7. 1996இல் சென்னைக் கம்பன் கழகம் ந.சுப்புரெட்டியாருக்கு **பேராசிரியர் இராதாகிருஷ்ணன் விருதும்** ரூபாய் ஆயிரம் ரொக்கப்பணமும் வழங்கிக் கௌரவித்துள்ளது.
8. 1999இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ந.சுப்புரெட்டியாருக்கு **டி.லிட் கௌரவ டாக்டர்** மதிப்புறு முனைவர் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது.
9. 1999இல் தமிழக அரசின் இயல் இசை நாடகத்துறை **'கலைமாமணி'** விருதினையும், மூன்று சவரன் தங்கப்பதக்கத்தையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.
10. 1999இல் காஞ்சியில் காஞ்சிப் பெரியவர் நூற்றாண்டு விழாக்குழு ந.சுப்புரெட்டியாருக்கு **'சேவாரத்னா'** விருதினையும், ரூபாய் ஆயிரம் ரொக்கப்பணத்தையும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.
11. 2000த்தில் துறையூர் நகராண்மைக் கழகம் இவர்தம் பணியைப் பாராட்டிச் சிறப்பு வரவேற்பு அளித்துக் கௌரவித்துள்ளது.
12. 2001இல் ந.சுப்புரெட்டியாருக்கு **சி.பா.ஆதித்தனார் விருது** (தமிழறிஞர்களுக்கான சிறப்பு விருது) ரூபாய் ஒரு லட்சம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.
13. 2001இல் சென்னை, திருப்பெருந்திரு சோமசுந்தரர் குருவருள் அருட்பணி மன்றம் **'ஆய்வுத் தமிழரசு'** என்ற விருதினையும் ரூபாய் மூவாயிரம் ரொக்கப் பரிசினையும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.
14. 2002இல் குரு பழநி ஆதினமும் திருக்குறள் பீடமும் குருகுலம் மதுராந்தகமும் இணைந்து ந.சுப்புரெட்டியாருக்கு, **'பொதுமறைச் செம்மல்'** என்னும் விருதினையும், ரூபாய் இரண்டாயிரம் ரொக்கப் பணத்தையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.
15. சேலம் தமிழ்ச்சங்கம் ந.சுப்புரெட்டியாருக்கு 2003 ஆம் ஆண்டில் **'தமிழ்வாகைச் செம்மல்'** என்னும் விருதினையும் ரூபாய் பத்தாயிரம் ரொக்கப் பணத்தையும் வழங்கிச் சிறப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1.16 வெளிநாட்டுப்பயணங்கள்

ந.சுப்புரெட்டியார் அறிவியல் துறைகளில் பெரும் புலமை பெற்றுப் பின்னர்த் தமிழ்ப்பேராசிரியராக வந்தவர். அவர் அமெரிக்கா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளார். அந்நாட்டு மக்களின் சமூக, பண்பாட்டியல் சார்ந்த வாழ்வியல் நெறிகளை உற்றுக் கவனித்து அவற்றைத் தமது பயண அனுபவ நூல்களாக எழுதியுள்ளார். ந.சுப்புரெட்டியார் 2002 ஆம் ஆண்டில் ஏப்ரல் - சூன் மாதங்களில் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்தார். அமெரிக்காவின் நான்கு மாநிலங்களைச் சுற்றிப் பார்த்த அவர் இரண்டு இடங்களில் சொற்பொழிவு

நிகழ்த்தினார். அப்பயண அனுபவங்களை விளக்கி **‘என் அமெரிக்காப் பயணம்’** என்னும் பயணநூலினை எழுதியுள்ளார். அவர் 2003 இல் மே ஒன்று முதல் பதினைந்து வரை, பதினைந்து நாட்கள் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து இலங்கையின் பெரும்பான்மையான இடங்களைச் சுற்றிப் பார்த்தார். அவர்தம் இலங்கைப் பயண அனுபவங்களை விளக்கி **‘என் இலங்கைப் பயணம்’** என்னும் பயண நூலினை எழுதியுள்ளார். அவர் 2005ஆம் ஆண்டில் ஜுன் மாதத்தில் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார். இவரது வெளிநாட்டுப் பயணங்கள் தமிழ்மொழி, தமிழிலக்கியம் என்னும் முறையில் உலகத் தமிழர்களின் இருப்பினையும் செயலினையும் மதிப்பிடும் வகையில் அமைந்திருந்தன.

1.17 ந.சுப்புரெட்டியார் பங்கேற்ற குழுக்களும் பொறுப்புகளும்

தமிழகப் பல்கலைக்கழகங்கள், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிச் செயல் திட்டங்கள், திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஆகியனவற்றில் பல்வேறு பொறுப்புக் குழுக்களில் பங்கேற்று ந.சுப்புரெட்டியார் தமிழுக்கு ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அ) 1953-1956 ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் குழு உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். அவர் திருப்பதி, திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியபோது, அப்பல்கலைக்கழகத்தின் கல்வியியல் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றியபோது, அப்பல்கலைக்கழகத்தின் கல்வியியல் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராகப் பங்கேற்றுக் கல்விப் பணியைத் திறம்படச் செய்துள்ளார். அவர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் ஆலோசனைக் குழுவில் வாழ்நாள் உறுப்பினராக நியமிக்கப்பட்டுத் திறம்படச் செயலாற்றியுள்ளார்.

ஆ) 1953 – 1956 ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ‘பேரவை’ உறுப்பினராக இருந்துள்ளார். திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியபோது அப்பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இ) ந.சுப்புரெட்டியார் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகம் மற்றும் மைசூர், பெங்களுர், கேரளப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் பாடத்திட்டக்குழு உறுப்பினராகவும், ஒருங்கிணைப்பாளராகவும் செயலாற்றியுள்ளார்.

ஈ) சென்னை, மதுரை காமராசர், திருவேங்கடவன் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்கள் நியமனக் குழு உறுப்பினராக இடம் பெற்றிருந்தார்.

உ) சென்னை, மதுரை காமராசர், திருப்பதி - திருவேங்கடவன் பல்கலைக்கழகங்களில் தேர்வாளராகவும் பணியாற்றியுள்ளார்.

ஊ) திருவேங்கடவன் பல்கலைக்கழக கல்லூரிகளில் உயர்நிலைத் தமிழ்ப்பாடம் (முதுகலைத் தமிழ், இளநிலை, முதுநிலை ஆய்வுகள்) தொடங்குவதற்கு ந.சுப்புரெட்டியார் ஓர் உறுப்பினர் ஆணையத்திலும் சில காலங்கள் பணியாற்றியுள்ளார்.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிப் பணியிலும் ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணி குறிப்பிடத்தக்கதாகும். அவர்,

அ) தமிழக அரசின் எழுத்துச் சீர்திருத்தக்குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

ஆ) தமிழக அரசு நிதியுதவி அளிப்பதற்குச் சிறந்த நூல்களைத் தேர்வு செய்யும் வல்லுநர் குழுவின் உறுப்பினர் செயலராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

இ) வயது முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ஊதியம் அளிப்பதற்காக அமைக்கப்பட்ட பரிந்துரைக் குழுவிலும் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.

ஈ) தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மன்றத்தின் உயர்மட்டக்குழுவின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

உ) அயல் மாநிலங்களிலும் அயல்நாடுகளிலும் தமிழ் பரப்புவதற்காகத் திட்டங்கள் வகுப்பதற்குத் தமிழக அரசால் அமைக்கப்பட்ட திட்டங்கள் வகுக்கும் குழுவிலும் ந.சுப்புரெட்டியார் உறுப்பினராகப் பங்குபெற்றுத் திறம்பட செயலாற்றியுள்ளார்.

ஊ) தமிழை அனைத்து நிலைகளிலும் கட்டாயம் ஆக்குவதற்கான வழிவகைகள் பற்றி ஆராய்ந்து திட்டவரைவுகளைப் பரிந்துரைக்கும் வல்லுநர்குழுவில் ந.சுப்புரெட்டியார், முதன்மை உறுப்பினராகப் பங்கேற்று செயலாற்றியுள்ளார்.

இதனைத் தவிர ந.சுப்புரெட்டியார் திருமலை, திருப்பதி தேவஸ்தானம் சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து நிதியுதவி அளிப்பதற்காக அமைத்த வல்லுநர் குழுவின் தலைவராகவும் அவர் திறம்பட செயலாற்றியுள்ளார். இதற்கெல்லாம் அவரது தமிழ்மொழியறிவும், தமிழிலக்கிய, இலக்கணத் திறனாய்வு மற்றும் ஆராய்ச்சி திறன்களே ஆகும்.

1.18 ந.சுப்புரெட்டியாரின் புலமைத்திறன்

ந.சுப்புரெட்டியார் வேதியியல், இயற்பியல், அணுவியல், மின்னியல், மின்னனுவியல், மனித உடலியல், உயிரியல் முதலான ஏழு அறிவியல் துறைகளில் முதுகலை அறிவியல் பட்டத்திற்கு நிகரான, தரமான அறிவியல் புலமை பெற்றவர். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் அம்மொழிகளின் இலக்கியங்களிலும் தேர்ந்த புலமையும், கூர்ந்த அறிவும் உடையவர் ந.சுப்புரெட்டியார். அவருக்கு வடமொழியிலும் சிறிதளவு அறிவுப்புலமை உண்டு.

1.19 அறக்கட்டளை நிறுவனர்

தமிழகப் பல்கலைக்கழகங்களின் பல்வேறு அறக்கட்டளைகளில் சிறப்புச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ள ந.சுப்புரெட்டியார் தாமே ரூபாய் இருபத்தைந்தாயிரம் வீதத்தில் ஒன்பது பல்கலைக்கழகங்களில் அறக்கட்டளைகளையும் நிறுவியுள்ளார். அவற்றுள் கோவை பாரதியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், சேலம் பெரியார் பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியனவற்றில் அவர் நிறுவியுள்ள அறக்கட்டளைகளும், திருச்சி காவிரி மகளிர் கல்லூரி, திருச்சி மாவட்டம், நெடுங்கூர் அண்ணாமலைபுரத்திலுள்ள சிந்து மெட்ரிகுலேசன் பள்ளியிலும் அவர் நிறுவியுள்ள அறக்கட்டளைகள் குறிப்பிடத்தக்கன.

1.20 முடிவுரை

ந.சுப்புரெட்டியாரின் வாழக்கையும் இலக்கியப் பின்புலமும் தமிழுக்குப் பல அரிய இலக்கண, இலக்கிய நூல்களை வழங்கியுள்ளது. வைணவத்திற்குத் தொண்டு என்ற வகையில் அவர் பல இலக்கியத் திறனாய்வு நூல்களை எழுதியுள்ளார். கல்வியியல் துறைக்குப் பயன்படும் வகையில் அவர் கற்றல் - கற்பித்தல் முறை குறித்த பல நூல்களைத் தமிழில் எழுதியுள்ளார். இந்த வகையில் அவருடைய தமிழ்ப்பணிகள் தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு ஏற்றம் தருவதாகும்.

அடிக்குறிப்புகள்

1. ந.சுப்புரெட்டியார், நினைவுக்குமிழிகள் (1) பக். 3-16
2. மேலது, பக். 19-20
3. மேலது, ப. 63
4. மேலது, பக். 81-83
5. மேலது, பக். 86-87

இயல் 2

“இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்” - நூல் அறிமுகம்

2.0 முன்னுரை

ந. சுப்புரெட்டியார், தமிழ் இலக்கிய வகைமையின் தோற்றம், பின்புலம், வளர்ச்சி, இக்கால இலக்கிய வகைமைகளின் போக்குகள் ஆகியனவற்றை விளக்கி சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்வி அறக்கட்டளையின் சார்பில் இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். அச்சொற்பொழிவு **“இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்”** என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. இந்நூலினுள் அவர் தமிழ் இலக்கிய வகைமை குறித்த தம் ஆராய்ச்சி நுண்திறனை ஆழமாகவும் அழுத்தமாகவும் வெளிப்படுத்தியுள்ளார். அவரது தமிழ் இலக்கியப் பணிக்கு இந்நூல் ஒன்றே போதுமான சான்றாதாரம் எனக் கொள்ளலாம்.

2.1 தமிழ் இலக்கியத்தில் வரலாற்றுப் பின்னணி

சங்க காலத்திற்கும் கி.பி.ஏழாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சமஸ்கிருதம் கற்ற அறிஞர்களின் தொடர்பு தமிழகத்தில் இருந்தது. சமணமும் பௌத்தமும் தமிழகத்தில் பரவத் தொடங்கிய பின்னர், அச்சமயங்களைச் சார்ந்தவர்கள் சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி முதலான மொழிகளைக் கற்றனர். இதனால் வடநாட்டு மொழிகளின் சொற்கள் தமிழில் கலந்தன. **“அக்காலத்தில் தான் வடசொற்கள் பல தமிழ் இலக்கியத்திலும் ஏறின. இந்நிலையில் தென்னகத்தில் இலக்கிய மொழிகளாகத் தமிழும் சமஸ்கிருதமும் திகழ்ந்தன. தமிழைத் ‘தென்மொழி’ என்றும் சமஸ்கிருதத்தை ‘வடமொழி’ என்றும் குறிப்பிட்டனர்”**[1] அக்காலத்தில் வடமொழியாளர் தமிழைத் **‘திராவிடம்’** என அழைத்தனர். கி.பி.ஏழாம் நூற்றாண்டினரான திருநாவுக்கரசர் வடமொழியான ஆரியத்தையும், தென்மொழியான தமிழையும் **‘ஆரியன் கண்டாய்’ ‘தமிழன் கண்டாய்’** எனச் சமநிலையில் போற்றினார். அவர் இந்தியாவின் கலைவழிப்பட்ட பாகுபாட்டை ஆரியம், தமிழ் என இரண்டு இனமாகவே போற்றினர். கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் தமிழர்களுடன் வடமொழியாளர் தொடர்பு பல நிலைகளில் ஏற்பட்டது. சமணர்கள் சில வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தும் தழுவியும் எழுதினர். வடமொழியை ஆழ்ந்து கற்ற பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் வடமொழியிலேயே **‘மத்தவிலாசம்’** என்ற நாடக நூலை எழுதினார். காஞ்சியில் வாழ்ந்த தண்டி என்பவன் வடமொழியில் **‘காவ்யதர்ஷம்’** என்னும் நூலினை எழுதினார். இந்நிலையில் வடமொழி வெறியர்கள் வடமொழியை **‘தேவபாஷை’** எனப்

போற்றி, தமிழ்மொழியை **'நீசபாஷை'** என இகழ்ந்தனர். இதனால் தமிழுக்கு இழுக்கு நேரிடும் என்பதை உணர்ந்த தமிழ்ப் பற்றாளர்கள் தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம் முதலான பக்திப் பனுவல்களுக்கு தமிழ், சமஸ்கிருதச் சொற்களைக் கலந்து பாசுரங்களுக்கு வைணவ ஆசாரியர்களும், ஸ்ரீபுராணம் முதலான சமண நூல்களுக்குச் சமணர்களும் மணிப்பிரவாள நடையிலேயே உரையெழுதினர். இசுலாமியப் படையெடுப்பைத் தொடர்ந்து, தமிழகத்தில் விசய நகரப் பேரரசின் ஆட்சி தோன்றியது. நாயக்க மன்னர்கள் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றனர். ஆழ்வார்களின் பாசுரங்கள் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பெற்றன. காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் தெலுங்கு எழுத்தில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை வெளியிட்டுள்ளார்.

2.2 தமிழ் இலக்கிய வளர்ச்சி

தொல்காப்பியத்தைத் தொடர்ந்து பண்டைக் காலத்தில் அகம், புறம் என்னும் துறைகளில் வரையறை செய்யப்பெற்ற ஆயிரக்கணக்கான பாடல்களைப் புலவர்கள் இயற்றினர். கற்பனைக்கு விரிவு கொடுக்கும் அகப்பாடல்கள் மிகுதியாகத் தோன்றின. இப்பாடல்கள் நாடக வழக்கில் புனையப்பெற்றவை. கி.பி.ஐந்து - ஆறாம் நூற்றாண்டுகளில் பக்திப் பாடல்கள் மிகுதியாகத் தோன்றின. இவற்றையடுத்துக் காப்பியங்களும், பின்னர்ப் புராணங்களும் தமிழில் மிகுதியாகத் தோன்றின. வடமொழி புராணங்களின் தமிழ் மொழிபெயர்ப்பே இவற்றுள் மிகுதி. இசுலாமியரின் படையெடுப்புக்குப் பின்னர்த் தமிழ்நாட்டில் அமைதி குன்றியிருந்த காலத்தில் பெருங்காப்பியங்கள் தடைப்பட்டு சிற்றிலக்கியங்களாகிய பிரபந்தங்கள் மிகுதியாகத் தோன்றின. தூது, உலா, மடல், கலம்பகம், பிள்ளைத்தமிழ் முதலான இலக்கிய வகைகள் இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் ஆங்கில மொழி மற்றும் ஆங்கில இலக்கியத் தொடர்பினால் இலக்கியப் படைப்புலகில் புதிய திருப்பங்கள் தோன்றின. இவ்வாறு தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிப் பலநிலைகளை வரலாற்றுப் பார்வையில் ந.சுப்புரெட்டியார் தெளிவுபடுத்தியுள்ளார்.

2.3 தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கிய வகைகள்

பண்டைக் காலத்தில் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் செய்யுள் வடிவத்திலேயே படைக்கப் பெற்றன. செய்யுளின் இலக்கணத்தைத் தொல்காப்பியர் **செய்யுளியலில்**[2] நூற்பாக்களில் தொகுத்துக் கூறியுள்ளார். அவர் 34 செய்யுள் உறுப்புக்களைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றை மாத்திரை எழுத்தியல் வகை முதல் **'மாட்டு'** என்னும் யாப்பிலக்கணப் பகுதி வரை இருபத்தாறு என்றும், காப்பியமாகிய தொடர்நிலைச் செய்யுளுக்கு உரியவை அம்மை, அழகு முதல் இழைபு வரையுள்ள **'எட்டு'** என்றும் வகைப்படுத்திக் காட்டியுள்ளார் தொல்காப்பியர். இவ்வாறு தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கிய வகைகளைக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார் 'பா'

என்பதற்குப் பேராசிரியர், **"பாவென்பது சேட்புலத்தில் இருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடல் ஓதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்தற்கு ஏதுவானதாகிய பரந்து பட்டுச் சொல்வதோர் ஓசை"**[3] என விளக்கம் தருவார். இந்தப் **'பா'** ஏழு வகைப்படும். அவை பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுமொழி என்பனவாகும்.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே

அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்"[4]

இவற்றுள் **'பா'** என்பது அடிவரையறை உடையது ஆகும். **'பா'** என்பது செய்யுளே. ஏனையவே அடிவரையறை அற்றவை. இந்த அடிவரையறை இல்லாதவற்றைத் தொல்காப்பியர்,

"எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்

அடிவரை இல்லன ஆறென மொழிப'[5]

எனத் தெளிவாகவே கூறியுள்ளார். இந்நூற்பாவில் **'எழுநிலம்'** என்பதற்கு இளம்பூரணர் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்னும் ஏழுவகையான இலக்கிய வகை என்றே உரையெழுதியுள்ளார்.

2.3.0 செய்யுள் வகைகள்

தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முன்னரும் தமிழில் இலக்கியங்கள் நான்கு வகையான பாக்களால் இயற்றப் பெற்றன என்பதை ந.சுப்புரெட்டியார் தக்க சான்றுகளுடன் தெளிவுப்படுத்தியுள்ளார். அடிநிலையால் பெயரிட்டு வழங்கப்பெறும் ஆசிரியப்பா நான்கு வகைப்படும் என்பார் இளம்பூரணர்,

"ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியென

நாலியற் றென்ப பாவகை விரியே"[6]

என்பர். பாவின் இலக்கணத்தை அவர் செய்யுளியலில் பத்தொன்பது நூற்பாக்களில் (செய்.நூற் 101-119) விளக்கியுள்ளார். ஆசிரியப்பா இயற்சீரானும் ஆசிரிய உரிச்சீரானும் ஆசிரியத்தளையானும் அகவலோகையானும் நாற்சீரடியானும் சிறுபான்மை ஒழிந்த சீரானும் தளையானும் அடியானும் வருவது. ஆசிரியர் அறிவித்தல் போலப் பொருள்களை அறிவித்து நிற்றலால் இது ஆசிரியப்பா என்னும் பெயரினைப் பெற்றது. நேரிசை ஆசிரியம், இணைகுறளாசிரியம், நிலைமண்டில ஆசிரியம், அடிமறிமண்டில ஆசிரியம் என நான்கு வகைப்படும். இதனை ந.சுப்புரெட்டியார் பாரதிதாசன் கவிதைகள், பாரதிதாசனின் குடும்ப விளக்கு, ஐங்குறுநூறு ஆகியனவற்றிலிருந்து சான்றுப் பாடல்களைக் காட்டிவிளக்கியுள்ளார். **"ஆசிரியப்பாவின் பெருக்கத்திற்கு எல்லை ஆயிரம் அடியாகும். சுருக்கத்திற்கு எல்லை மூன்றடியாகும். பெருக்கத்திற்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்றவற்றிலுள்ள பாடல்களை**

எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். சுருக்கத்திற்கு 'ஐங்ககுறுநூறு' என்ற தொகை நூலிலுள்ள பாடல்களை எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்"[7] என்கின்றார் ந.சுப்புரெட்டியார்.

2.3.1 வெண்பா

வெண்ணிறம் போன்ற இயல்புடைமை பற்றி ஒப்பினாகிய பெயரே வெண்பா. இது வெண்சீரானும் இயற்சீரானும் வெண்டளையானும் செப்பலோசையானும் அகவலடியானும் முச்சீரடியானும் வருவது ஆகும். நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாடல், அங்கதச் செய்யுள் என்பனவும் அளவொத்தவையும் வெண்பா யாப்பின என்பார் தொல்காப்பியர்.

"நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோடு
ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின"[8]

இவையெல்லாம் ஓசையால் ஒக்குமாயினும் அளவானும் தொடையானும் பொருளானும் இனத்தானும் வேறுபடும் என்பார் இளம்பூரணர். நெடுவெண்பாட்டிற்குக் குடும்ப விளக்கிலிருந்தும் ந.சுப்புரெட்டியார் வஞ்சிப்பாவினையும் கலிப்பாவினையும் தொல்காப்பிய நூற்பாக்களைக் கொண்டு விளக்கியுள்ளார். துள்ளல் இசையைக் கொண்டு தரவு, தாழிசை, தனிச்சொல்,சுரிதகம் ஆகிய உறுப்புக்களைப் பெற்று வருவதே **'கலிப்பா'** ஆகும். ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, கொச்சக ஒருபோகு, அம்போதரங்க ஒருபோகு, கலிவெண்பாட்டு, உறழ்கலி ஆகியனவற்றின் இலக்கணத்தை ந.சுப்புரெட்டியார் எளிமையாக விளக்கியுள்ளார்.

2.3.2 ஒலிநயமும் யாப்பும்

அச்சு வடிவத்தில் காணும் பாட்டு அரையுயில் பெற்றது. அதைப் பாடிய புலவர் தற்போது இல்லை. பாடிய புலவர்கள் தம் பாடல்களில் முகக்குறிப்பு, கையசைவுகள், இசை ஆகியனவற்றை விட்டுச் செல்லவில்லை. ஆயினும் ஒலிநயம், கற்பனை, மோனை, எதுகை போன்ற கூறுகளையும் அவற்றின் சாயல்களாக விட்டுச் சென்றுள்ளனர். ஆதலால் அச்சுவடிவத்தில் காணும் பாட்டு 'ஒளிப்பட நெகடிவ்' போன்றது. கவிதையைப் பாடிய கவிஞன் தான் விட்டுச் சென்ற சாயல்களிலிருந்து கவிதைகளைப் படிப்போர், அதை இயற்றியவரின் உணர்ச்சியை உண்டாக்குதல் வேண்டும். பாரதம், இராமாயணம், பெரியபுராணம் போன்ற காவியங்களைத் தலைமுறை தலைமுறையாகப் படித்து ஒரேவகையான உணர்ச்சியைப் பெற்று வருவதை ந.சுப்புரெட்டியார் இதற்குச் சான்றாகக் குறிப்பிடுகின்றார். **"பாட்டை வாய்விட்டு உரக்கப் படிக்கும் பொழுது பாட்டிலுள்ள ஒலிகள் இயங்குகின்றன. அந்த இயக்கத்தில் ஏற்பட்ட**

ஒழுங்கே ஒலிநயம் எனப்படுவது. வண்ணம் என்பதும் சந்தம் என்பதும் அதுதான். 'இழுமென் மொழியால் விழுமியது நுவலல்' என்று தொல்காப்பியர் கூறுவதும் இதுவே. 'இழுமென்' என்பது ஓசையளவில் நின்று பொருளுணர்த்தும் ஓர் ஒலிக்குறிப்புச் சொல் போலாகும். இந்த ஒலிக்குறிப்பு கவிதைக்கு இன்றியமையாது வேண்டப்பெறும் ஓர் உறுப்பாகும். ஒலிகளுக்கு மூன்று தன்மைகள் உண்டு. 1. ஒலியின் கால அளவு: அதனால் அமையும் நீட்டம் குறுக்கம் வேறுபாடு. 2. ஒலியின் தன்மை: வன்மையாகவும் மென்மையாகவும் ஒலிக்கும் வேறுபாடு.3. ஒலிக்கும் முறை: எடுத்தும் படுத்தும் நலிந்தும் ஒலிக்கும் பொழுது உண்டாகும் அழுத்த வேறுபாடு. இந்த மூன்று கூறுகளும் பல்வேறு அளவிலும் வகையிலும் சேர்ந்து உண்டாகும் ஒலிவிகற்பங்களே ஒலிநயமாகும். இசைக்கலையில் இது அமையும் விதம் வேறு: பாட்டுக்கலையில் இது பயன்படும் விதம் வேறு....கவிஞனின் உணர்ச்சி அனுபவத்தைப் பெறுவதற்கு ஒலிநயம் துணைசெய்வதைப் போல யாப்பும் துணைபுரிகின்றது. பாட்டினைப் படிக்கும் போது மனம் அறிவுநிலையில் வேகமாக இயங்குவதில்லை. அது உணர்ச்சி வயப்பட்டுக் கற்பனையில் அறிதுயில் கொள்கின்றது. இதனால்தான் நெடுந்தொலைவுப் பயணத்தில் கவிதை இலக்கியத்தை விரைவாகப் படிக்க முடிவதில்லை"[9] என ஒலிநயத்தையும் யாப்பையும் உறழ்ந்து கூறுகின்றார் ந.சுப்புரெட்டியார்.

2.4 உணர்ச்சிக்கேற்ற யாப்பு

ந.சுப்புரெட்டியார் கவிதைகளில் உணர்ச்சிக்கேற்ற யாப்பு வடிவம் வேண்டும் என்கின்றார். அப்பொழுதுதான் கவிதையின் வடிவம் சிறக்கும் என்கிறார்.

2.5 கவிதைச் சுவைகள்

கவிதைகளைக் கவனித்துப் படிப்போருக்கு இன்பத்தைத் தருவது. அதிலுள்ள உணர்ச்சிக் கூறுகளே முக்கியம். அந்த உணர்ச்சியால் உள்ளம் மகிழ்ந்து பொங்கியெழும் இன்பத்தையே தமிழ் அகஇலக்கண நூலார் **'மெய்ப்பாடு'** என்கின்றனர். வடமொழியாளர் இதனை **'ரஸம்'** என்கின்றனர். தொல்காப்பியர் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியியலில் **'மெய்ப்பாடு'** குறித்த செய்திகளை விளக்கியுள்ளார். வடமொழியில் சுவை இலக்கணமும் தமிழில் அணி இலக்கணமும் சிறந்து வளர்ந்துள்ளன. தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் வடநூலில் காணப்பெறும் **'ரஸம்' 'பாவம்'** என்னும் இருவகையுள் அடங்கும். தமிழில் இவற்றை முறையே **'சுவை' 'பாவம்'** என்பர் எனக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், வடமொழியிலும் தமிழிலும் உள்ள சுவைகளைப் பின்வருமாறு ஒப்புமைப்படுத்திக் கூறுகிறார்.

வடமொழி	**தமிழ்மொழி**
1. சிருங்காரம்	உவகை
2. கருணம்	அழுகை
3. வீரம்	பெருமிதம்
4. ரௌத்திரம்	வெகுளி
5. ஹாஸ்யம்	நகை
6. பயனாகம்	அச்சம்
7. பீபத்ஸம்	இழிவரல்
8. அற்புதம்	மருட்கை
9. சாந்தம்	(நடுவு நிலைமை)

இவற்றுள் **'சாந்தம்'** என்னும் இரசம் உலகியலின் நீங்கியோர்க்கு உரியதாகும். அதனை நீக்கி ஏனைய எட்டினையும் பரதமுனிவர் தமது நாட்டிய நூலில் விளக்கிக் கூறியுள்ளார். தொல்காப்பியரும் இவ்வாறே எண் சுவைகளை விளக்கிக் கூறியுள்ளார்.

2.6 உலகியல் நிகழ்ச்சிகள்

உலகியல் நிகழ்ச்சிகளினால் ஏற்படும் இன்பத்தைச் **'சுவை' (இரசம்)** எனக் கொள் இயலாகு. உலகியல் செயல்களுள் நகை, உவகை ஆகியனவற்றில் இன்பம் கிடைப்பதில்லை. இதனால்தான் சுவையை இலக்கண நூலார் உலகியல் இன்பம் என்று கொள்ளாமல் நாடகம், காப்பியம் ஆகியனவற்றுள் அச்செயல்கள் நிகழும்போது அவற்றைக் கண்டு கேட்டலால் நல்லறிவாளர் உள்ளத்தில் ஏற்படும் சுவையையே **'ரசம்'** என்றனர்.

2.7 பாவினங்கள் - தோற்றம்

வாழ்க்கையை ஓர் இயக்கமாகக் கொண்டால், அந்த வாழ்க்கையிலிருந்து தோன்றும் இலக்கியமும் இயக்கமே. இயற்கையின் அனைத்து இயக்கங்களும் சில நியதிகளுக்குக் கட்டுப்பட்ட இயக்கங்களே ஆகும். இவ்வாறு ஓர் அழுத்தம், ஓர் இடை நிறுத்தம் என்ற முறையில் ஒழுங்காக நடைபெறும் இயக்கமே **'ஒலிநயம்'** என்கிறார் ந.சுப்புரெட்டியார். ஆழ்ந்த உணர்ச்சியை வெளியிடுவதற்கு செய்யுள் வடிவமே ஏற்றது. டி.கே.சி செய்யுளின் ரசனையின் முக்கியத்துவத்தை அடிக்கடி வலியுறுத்திக் கூறியுள்ளார். செய்யுளில் ஒலிநயம் அளவுடன் அமைகின்றது. செவிக்கு இனிமைதரும் இந்த ஒலிநயத்தை, செய்யுள் இலக்கியப் பண்பை வளர்த்து வாய்ப்பாடுகளாக்கி ஒருவகைச் செயற்கை அமைப்பைத் தந்து, இந்த வாய்பாடுகள் அமையும் முறையை **'யாப்பு'** எனப் பெயரிட்டனர். இவ்வாறு வரையறுக்கப்பெற்ற ஒலிநயமே **'யாப்பு'** ஆகும். கவிஞன் சொற்களின் மூச்சை அறிந்து அவற்றைத் தம் கவிதைகளில் கையாளுகின்றான்.

பழைய **'பா'** வடிவங்கங்களாகிய வெண்பா, அகவற்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்பனவற்றும்ள **'கலிப்பா'** மட்டுமே ஓசைநயம் மிக்கதாகும். ஒரு காலத்தில் கலிப்பாவும் பரிபாடலும் செல்வாக்குடன் இருந்ததைத் தொல்காப்பியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர்"[11]

எனத் தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக்காட்டும் ந.சுப்புரெட்டியார், இவை காதல் உணர்ச்சியை விரிவுபடுத்திக் காட்டுவதற்குப் பயன்படும் என்கிறார். கலிப்பாவோடு வழங்கிய மற்றொரு பாட்டு வஞ்சிப்பா. இவ்விரண்டும் முறையே துள்ளல், தூங்கல் ஓசைகளைப் பெறும். இவ்விரண்டும் இசையின்பம் மிக்கவை. ஆயினும் இவை செல்வாக்கை இழந்தன. இன்று வரை வெண்பாவும் ஆசிரியப்பாவும் போற்றப்பட்டு வருகின்றன.

2.7.0 ஆசிரியப் பாவினம்

ந.சுப்புரெட்டியார் ஆசிரியத் தாழிசையை சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையைச் சான்று காட்டி விளக்கியுள்ளார். ஆசிரியத்துறையைத் திருப்பாணாழ்வாரின் அமலானதிப் பிரான் பாடலை (பா.எ.9) சான்றுகாட்டித் தெளிவுப்படுத்தியுள்ளார். அவர் ஆசிரிய விருத்தத்தைப் பெரியாழ்வார் (திருப்பல்லாண்டு), திருமங்கையாழ்வார் பெரிய திருவந்தாதி ஆகிய பாசுரங்களைக் காட்டி விளக்கியுள்ளார். அவர் அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம், எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம், எண்சீர் கழிநெடில் ஆசிரிய விருத்தம் ஆகியனவற்றை எளிமையாகவும் சுருக்கமாகவும் நுணுக்கமாகவும் விளக்கியுள்ளார்.

2.7.1 வெண்பா இனம்

ந.சுப்புரெட்டியார் இரண்டடியாய்த் தம்முள் அளவொத்து வருவதை **'வெண்துறை'** அல்லது **'செந்துறை வெள்ளை'** என்று பெயரிட்டு வழங்குவதைக் குறிப்பிடுகின்றார். அவர் வெண்பாவின் இனமான குறட்டாழிசை, வெளிவிருத்தம் ஆகியனவற்றை தக்க சான்றுகளுடன் எளிமையாகக் கூறியுள்ளார்.

2.7.2 கலிப்பாவினம்

இரண்டடியும் பலவடியுமாக வந்து, ஈற்றடி மிகுந்தும், அல்லாத ஏனைய அடிகள் தம்முன் ஒத்தும் ஒவ்வாதும் வருவது கலித்தாழிசையாகும் என கலிப்பாவின் இலக்கணத்தை விளக்கும் ந.சுப்புரெட்டியார், கலித்துறை, கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பா, கலிவிருத்தம் ஆகியனவற்றதைத் தேவாரம் மற்றும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களைச் சான்றுகாட்டி, எளிமையாக உரை விளக்கம் தந்துள்ளார். யாப்பிலக்கணத்தில் தேர்ந்த புலமை பெற்ற அவர், தமிழ் யாப்பிலக்கணத்தை எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கியிருப்பது குறிப்பிடதக்கதாகும்.

2.7.3 வஞ்சிப்பா இனம்

இருசீரடி நான்காய் மூன்ற செய்யுள் ஒரு பொருள்மேல் அடுக்கி வருவதே வஞ்சிக் தாழிசையாகும். இதனை ந.சுப்புரெட்டியார் திருவாய்மொழிப் பாசுரத்தைக் கொண்டு (திருவாய்.9.4.9) விளக்கியுள்ளார். அவர் வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம் ஆகிய வஞ்சியப்பாவின் இனங்களையும் எளிமையாக திருவாய்மொழிப் பாசுரங்களைக் காட்டி விளக்கியுள்ளார்.

2.8 அடிவரையறை இல்லாச் செய்யுள்வகை

நால்வகைப் பாக்களையும் தாழிசை, துறை, விருத்தம் ஆகியனவற்றையும் தொல்காப்பியர் அடிவரையறை உள்ளனவாகப் பாகுபடுத்தினார். அவர் அடிவரையறை இல்லாதனவாக நூல், உரை, பிசி, அங்கதம், முதுசொல், மந்திரம் என்னும் ஆறினையும்[12] குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் **'நூல்'** என்பது இலக்கணத்தைக் குறிக்கும் சொல்லாகும். தொல்காப்பியர் நூலின் இயல்பினை மரபியலில் இரண்டு நூற்பாக்களில் விளக்கியுள்ளார். (மர.நூற்.100,101). நூலின் அமைப்பைத் தொல்காப்பியர் சூத்திரம் (நூற்பா) ஓத்து, படலம், பிண்டம் என நான்கு வகையாகப் பாகுபடுத்தி விளக்கியுள்ளார்.

தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முன்னரும் தமிழில் உரை (Prose) நூல்கள் இல்லை என்றே கருத வேண்டியுள்ளது. அக்காலத்தில் அனைத்துமே செய்யுள் நடையிலேயே எழுதப்பட்டன. ஆயினும் தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்த உரைவகையினை,

> **"பாட்டிடை வைத்த குறிப்பினாலும்**
> **பாவின் றெழுந்த கிளவி யானும்**
> **பொருள்மர பில்லாப் பொய்மொழியானும்**
> **பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் என்று**
> **உரைவகை நடையே நான்கென மொழிப"**[13]

என்னும் நூற்பாவினால் அறியமுடிகின்றது. இவற்றுள் **‘பாட்டிடை வைத்த குறிப்பு’** என்பது உரையிடைப்பட்ட பாட்டுடைச் செய்யுளாகிய சிலப்பதிகாரத்தில் இடையிடையே வரும் உரைநடையைப் போன்றது. **‘பாவின்றெழுந்து கிளவி’** என்பது உலகவழக்கில் பாட்டின்றித் தனியே வழங்கும் வசனநடையாகும். இதனை **‘வழக்கின்கண் ஒரு பொருளைக் குறித்து வினவுவாரும் செப்புவாரும் கூறும் கூற்று’’** என்பார் இளம்பூரணர். **‘பொருள் மரபில்லாப் பொய்மொழி’** என்பது **‘ஒரு பொருளின்றிப் பொய்மொழி’** என்பது ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து கூறுவதாகும். அதாவது யானையும் குருவியும் தம்முன் நட்பாடி இன்னவிடத்தில் இன்னசெய்தன என்று அவற்றின் இயல்புக்கு ஒவ்வாத வகையில் இயைத்துரைக்கப் பெற்று கதையளவாய் வரும் உரைநடையாகும். **‘பொருளொடு புணர்ந்த நகைமொழி’** என்பது பொய்யெனப்படாது மெய்யெனப்படும் நகைப்பொருளனவாக வருவது. அதாவது முழுதும் பொய்யென்று தள்ளப்படும் நிலையில் அமையாது உலகியலாகிய உண்மை நிலையை ஒருவற்றான் அறிவுறுத்துவனவாய்க் கேட்போர்க்கு நகைச்சுவையை விளைவிக்கும் பஞ்ச தந்திரக் கதை போலுள்ள உரைநடை, பண்டைக் காலத்தில் வழங்கி வந்த சிறுகதை இலக்கியத்தையே தொல்காப்பியர் இவ்வாறு குறிப்பிடுவதாக ந.சுப்புரெட்டியார் கருதுகின்றார். இன்றைய **‘புதிர்’** அல்லது **‘விடுகதை’** போன்றதே **‘பிசி’**யாகும். இது ஒப்புமைத் தன்மையோடு பொருந்திய உவமப்பொருளாகும். ஒன்று சொல்ல மற்றொன்று தோன்றுமத் துணிவுபட வரும் சொல்நிலையும் என இருவகைப்படும். **“யானை செல்லும்”** என்று வெளிப்படையாகச் சொல்லாமல் **‘பிறை கவ்வி மலை நடக்கும்’** என்ற உவமானத்தாலே குறிப்பிற் புலப்பட வைத்தலே **‘ஒப்பொடு புணர்ந்த உவமம்’** என்பது.

அப்பன் சொரியன்
ஆத்தாள் சடைச்சி
அவர்கள் பிள்ளைகள்
சர்க்கரைக்கட்டி

என்று இக்காலத்தில் பலாப்பழத்தைக் குறிக்கும் விடுகதையும் அது. மற்றும்

நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யான் நீராடில்
ஊராடும் நீரிற் காக்கை

என்பது **‘நெருப்பு’** என்னும் பொருள் குறிப்பில் தோன்ற அமைந்த சொற்றொடர் நிலை. இது **‘தோன்றுவது கிளந்த துணிவு’** என்னும் பிசி வகைக்கு எடுத்துக்காட்டு”[14] எனப் **‘பிசி’** வகையை விளக்குகின்றார் ந.சுப்புரெட்டியார். கருத்துப் புலப்பாட்டுக்கும் தெளிவிற்கும் அவர் இதுபோன்ற எளிமையான விளக்கங்களைத் தருவது குறிப்பிடத்தக்கதாகும்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் தோன்றிய மறைமொழியைத் தொல்காப்பியர் **'மந்திரம்'** என்றார். இதனை ந.சுப்புரெட்டியார் தொல்காப்பியர் குறிப்பிடும் ஓர் இலக்கிய வகையாகவே கொள்கின்றார். சொல்லிய சொல்லின் பொருண்மை எங்கும் குறைவில்லாமல் பயன்தரச் சொல்லும் ஆற்றலுடையவரே **'நிறைமொழி மாந்தர்'** ஆவர். **'புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடரே மறைமொழி'** என விளக்கம் தருவார் பேராசிரியர். இதனை விளக்க வந்த ந.சுப்புரெட்டியார், **''திருமறைகள் பூசித்து மூடிச்சென்றிருந்த திருமறைக்காட்டுக் கோயிலின் திருக்கதவுகளைத் திறக்கப்பாடிய 'பண்ணனேர் மொழியாளுமை'(5.10) என்ற அப்பர் தேவாரமும், அத்திருக்கதவுகளை மூடவும் திறக்கவும் பாடிய 'சகரம்மறை'(2.37) என்ற சம்பந்தர் தேவாரமும், சம்பந்தர் மற்றும் அப்பர் அருளிய திருநீற்றுப் பதிகங்களும் நமச்சிவாயப் பதிகங்களும் 'மந்திரம்'என்று மதிக்கத்தக்கவை''**[15] என்கிறார். இதிலிருந்து அவர், தொல்காப்பியர் **'மந்திரம்'** எனக் குறிப்பிட்டதை ஓர் இலக்கிய வகையாகவே கொண்டிருப்பதை அறிய முடிகின்றது.

எழுத்தின் இயல்பினாலும் சொல்லின் தொடர்ச்சியினாலும் புலப்படாது, சொல்லினால் உணரப்படும் பொருட்டுப் புறத்தே பொருளுடையதாய் நிற்பதே குறிப்பு மொழி என்கிறார் ந.சுப்புரெட்டியார். தொல்காப்பியர் இதனை **'கூற்றிடை வைத்த குறிப்பு'** என்கிறார்.

> **''எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிப்**
> **பொருள்புறத் ததுவே குறிப்பு மொழி என்ப''**[16]

இதனைத் தவிரப் **'பண்ணத்தி'** என்ற இலக்கிய வகையையும் தொல்காப்பியர் குறித்துள்ளார். பண்ணத்தி என்பது இசை நூலின் பாவினமாகும். பாட்டில் கலந்த பொருளுடையனவாகிப் பாட்டுக்களின் இயல்புடையனவே **'பண்ணத்தி'** யாகும். சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன பண்ணத்தி என்பார் இளம்பூரணார். இப்பண்ணத்தி பிசியோடு ஒத்த இயல்பினது. பண்ணத்தி என்னும் இவ்விசைப் பாடல்களின் அடியளவின் பேரெல்லை பன்னிரெண்டு அடியாகும். இவ்வாறு ந.சுப்புரெட்டியார் தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கிய வகைகளை வகைப்படுத்தி விளக்கம் தந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2.9 தமிழ் இலக்கிய வகைகள் - வளர்ச்சி வரலாறு

தொல்காப்பியர் தம் காலத்தில் செய்யுள் வடிவங்களில் வழங்கிய இலக்கிய வகைகளைத் தம் இலக்கணநூலில் குறிப்பிட்டுள்ளார். கலிப்பாட்டும் பரிபாடலும் தொல்காப்பியர் காலத்தில் ஒருவகையான நெகிழ்ச்சியான ஒலியமைப்பைக்

கொண்டிருந்தமையால் அவை நாட்டுப்பாடல் வடிவத்தோடு ஒத்திருக்க வேண்டும். அகப்பாடல்களைப் பாடுவதற்கு அவை ஏற்றனவாகத் திகழ்ந்தன. ஆயினும் எப்படியோ இவை தம் செல்வாக்கினை இழந்துவிட்டன. வெண்பாவும் ஆசிரியப்பாவும் வாழ்வு பெற்றன. சங்க இலக்கியத்திற்குப் பிறகே வெண்பா செல்வாக்குப் பெற்றது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவடிகள் நாட்டுப்புறப்பாடல்களின் பல வடிவங்களைத் தம் காப்பியத்தில் பரவலாகக் கையாண்டுள்ளார். மங்கல வாழத்துப் பாடலை மயங்கிசைக் சொச்சகக் கலிப்பா என்பார் அடியார்க்கு நல்லார். கனாத்திறம் உரைத்த காதையை அவர் **'கலிவெண்பாட்டு'** எனக் குறித்தார். ஆய்ச்சியர் குரவையை அடியார்க்கு நல்லார் மயங்கிசைக் கொச்சகம் என இனங்காட்டியுள்ளார். அவர் கூற்றுப்படி 51 அடிகளைக் கொண்ட வஞ்சினமாலை கலிவெண்பாட்டாகும். அடியார்க்கு நல்லார் துன்பமாலையை மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், ஊர்சூழ்வரியை அயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும் வகைப்படுத்தியுள்ளார். அரும்பத உரைகாரர் குன்றக்குரவையை கொச்சகக் கலிப்பா என்றார். வாழ்த்துக்காதையையும் அத்தகையதொரு கொச்சகக் கலிப்பாவாகக் கொள்ளுவதற்கு ஏற்றதே என்பார் அரும்பத உரைகாரர். வழக்குரை காதையும் அத்தகையதே. சிலப்பதிகாரத்தின் 2, 3, 4, 6. 8, 10, 11, 13, 14, 15, 16, 22, 25, 26, 27, 28, 30 எண்களைக் கொண்ட பதினெட்டுக் காதைகளும் நிலைமண்டில ஆசிரியப்பாக்களாகும். ஆதலால் சிலப்பதிகாரம் பாவகையால் ஒவ்வொரு காதையும் தனித்தனிச் செய்யுட்களாக அமைந்துள்ளன. இப்போக்கு பண்டைய புலவர்களிடம் பரவலாகக் காணப்படுகின்றது.

2.10 சிலப்பதிகாரத்தில் நாட்டுப் பாடல் வடிவங்கள்

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் நாட்டுப்பாடல் வடிவங்களையும் பரவலாகக் கையாண்டுள்ளார். **'கானல்வரி'** என்பது நெய்தல் பாட்டு வகையாகும். இங்குள்ள வரிப்பாட்டு மக்களைப் பழிக்கும் வரிப்பாட்டாகும். அரும்பதஉரைகாரர் வரிப்பாடல்கள் ஏழுவகைப்படும் என்கின்றார். அவை ஆற்றுவரி, சார்த்துவரி, திணைநிலைவரி, மயங்கு திணைநிலைவரி, முகமுடைவரி, முகமில்லாவரி, படைப்புவரி என்பனவாகும். கானல்வரியில் **'திங்கள்மாலை வெண்குடையான்'** என்ற பாடல் முதல் தொடர்ந்து வரும் இரண்டு பாடல்களும் காவிரியைப் பாடுவதைப்போல் ஆற்றைப்பாடுவதாகும். கோவலன் இவற்றைப் பாடியுள்ளான். **'பாட்டுடைத் தலைவன் பசியோடும் பேரொடும் சார்த்திப் பாடின் சார்த்தெனப்படுமே'** என்னும் ஒரு நூற்பாவை எடுத்துக்காட்டி அரும்பத உரைகாரர் சார்த்துவரியை விளக்கியுள்ளார். கானல்வரியில் பாட்டுடைத் தலைவனாக வரும் சோழன் என்ற பெயரொடும் அவன் ஊராகிய பூம்புகாரோடும் சார்த்துவரி வருவதை ந.சுப்புரெட்டியார் எடுத்துக்காட்டியுள்ளார். சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரியும் ஊர்சூழ்வரியும் நாட்டுப்புறப்பாடலும் கூத்துமாக அமைந்துள்ளன. குன்றக்குரவையும்

ஆய்ச்சியர் குரவையும் வரிப்பாடல்களாகும். வெண்பா, ஆசிரியப்பா இரண்டிலும் வெண்பா இசை இன்பம் மிக்கது. ஆயினும் அவை ஓசை வேற்றுமைக்கு இடம் தராதவை. கி.பி ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் பக்திப் பாடல்களைப் பாடிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் இளங்கோவடிகளைப் பின்பற்றி நாட்டுப்புறப் பாடல்களின் கூறுகளைப் பயன்படுத்தியுள்ளார். இதிலிருந்து தோன்றியதே **'விருத்தம்'** என்னும் செய்யுள் வடிவம்[17] என்பார் ந.சுப்புரெட்டியார். இந்த விருத்தவகைப் பாடல்களைப் பயன்படுத்தியே ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி இயக்கத்தை வளர்த்தனர். **'விருத்தம்'** தமிழ்ப் பா வகையைச் சார்ந்தது.

2.11 விருத்தக் காப்பியங்கள்

பல்வேறு வடிவங்களைக் கொண்ட விருத்தப் பாவில் காப்பியத்தை இயற்றினால் அது பொதுமக்களின் வரவேற்பைப் பெறும் என்ற சிந்தனை திருத்தக்கத்தேவரின் உள்ளத்தில் தோன்றியது. அவர் இதனை மனத்தில் கொண்டே **"சீவக சிந்தாமணி"** என்னும் பெருங்காப்பியத்தை (சமணம்) இயற்றினார். இதுவே விருத்தப்பாவில் தோன்றிய முதல் தமிழ்க் காப்பியமாகும். இவருக்குப் பின்னர் இராமகாதையைப் படைத்த கம்பர் விருத்தப்பாவின் உச்சத்தைத் தொட்டார். **'விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்'** எனப் போற்றப்பட்டார். கம்பன் நான்கு சீர்களைக் கொண்ட கலிவிருத்தத்தில் அறுபது வகை ஓசையுள்ள கவிதைகளை இயற்றியுள்ளார்.

2.12 தமிழ் இலக்கியம் - வகைமைப்பாடு

ந.சுப்புரெட்டியார் தமிழலக்கியங்களைப் **'பேரிலக்கியங்கள்'** என்றும் **'சிற்றிலக்கியங்கள்'** என்றும் வகைமைப்படுத்திக் காட்டியுள்ளார். அவர் கருத்துப்படி அடிகளால் மிகுந்து பொருள்களால் சிறந்து மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தி இன்பம் அளிக்கத் தோன்றியவையெல்லாம் பேரிலக்கியங்கள் ஆகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், பெரியபுராணம் ஆகியவை பேரிலக்கியங்கள் ஆகும். அடிகளால் குறைந்து கற்பனைவளம் மிகுந்து கடவுள்களையும் வெற்றியால் நாட்டு எல்லையை விரிவுபடுத்திய மன்னர்களையும், கொடை வன்மையாலும் பிறவற்றாலும் புகழ்பெற்ற வள்ளல்கள் மற்றும் வேளிர்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு இயற்றப்பெற்றவை எல்லாம் **'சிற்றிலக்கியங்கள்'** ஆகும். **'பிரபந்தங்கள்'** என்னும் வடசொல்லால் குறிக்கப் பெறுபவை அனைத்தும் சிற்றிலக்கியங்களே.

2.13 சிற்றிலக்கியங்களின் வளர்ச்சி

கி.பி எட்டாம் நூற்றாண்டு முதல் சிற்றிலக்கியங்கள் வளர்ந்து பல்கிப் பெருகின. இவை கோவை, உலா, பரணி, பிள்ளைத்தமிழ், அந்தாதி, கலம்பகம், தூது, குறவஞ்சி,

பள்ளு, மடல், அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை, ஏணி ஏற்றம், நல்லதங்காள் கதை என பல்வேறு வகைமைப்பட்டவையாகும். இச்சிற்றிலக்கியங்களை விளக்கும் ந.சுப்புரெட்டியார், **“இவற்றுள் உலகியல் கடந்த கற்பனை நிகழ்ச்சிகளும் புராணக்கதைகளும் உயர்வுநவிற்சியணிகளும் திரிசொல்லாட்சிகளும் இல்பொருள் உவமைகளும் நிறைந்து கற்பவர் உள்ளங்களைக் கவர்ந்து நிற்கும். இச்சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் என்று கூறும் மரபும் உண்டு. சிற்றிலக்கியங்களின் இலக்கணம் கூறும் நூல்களும் பிற்காலத்தில் எழுந்தவையேயாகும். பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை என்னும் வெண்பாபாட்டியல், நவநீதப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல் போன்ற நூல்களே சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறும் நூல்களாகும். இதில் ஒரு விநோதம் என்னவென்றால், சமுதாயத்தில் சாதிக் கொடுமையை வகுத்து வைத்ததைப்போல் எழுத்து இலக்கணத்திலும் அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் என்ற சாதியாருக்கும் உரியவையாக எழுத்துக்களைப் பாகுபடுத்தி கூறும் மரபும் எழுந்தமை கொடுமையிலும் கொடுமையாகும்”**[18] என்கின்றார். சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்ற வரையறைக்குள் அடங்காத நொண்டி நாடகம், கப்பற்பாட்டு, வில்லுப்பாட்டு, கும்மிப்பாட்டு, கோலாட்டப்பாட்டு, ஆனந்தக் களிப்பு, கிளிக்கண்ணி, விலாசம், புலம்பல், உந்திபறத்தல், காதல், ஏற்றப்பாட்டு முதலான பலவகைச் சிற்றிலக்கியங்களும் காணப்படுகின்றன.

‘பரணி’ என்பது நாளின் நட்சத்திரத்தின் பெயராகும். **‘பரணி’** நாளில் கொண்டாடப் பெறும் போர் வெற்றிவிழா, ‘பரணி’ என்னும் நூலுக்கும் பெயராயிற்று. **‘பரணியில் பிறந்தான் தரணி ஆள்வான்’** என்னும் முதுமொழி தோன்றியது. போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவது ‘பரணி’ இலக்கிய மரபாகும். ஆயினும் தோற்றோனைச் சார்ந்தே தமிழில் பரணி நூல்களுக்குப் பெயரிடப் பெற்றுள்ளன. கலிங்கத்துப்பரணி, இரணியவதைப் பரணி, கஞ்சவதைப் பரணி ஆகிய நூல்களின் பெயர்கள் இதற்குச் சான்றளிக்கின்றன. பரணி நூல்கள் ஈரடிக் கலித்தாழிசையால் பாடப்பெற்றுள்ளன.

கோவை நூல்கள் பெரும்பாலும் கட்டளைக் கலித்துறை யாப்பால் பாடப்பெறும் எனக்கூறும் ந.சுப்புரெட்டியார், **“கலிப்பாவின் இனமான கட்டளைக் கலித்துறை யாப்பு காரைக்கால் அம்மையாரின் ‘திருவிரட்டை மணிமாலை’யில் தான் முதன்முதலாகக் காணப்படுகின்றது. இந்த யாப்பு கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய தேவாரத் திருமுறைகளிலும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களிலும் பயின்று வந்துள்ளன. அகத்திணை ஒழுகலாற்றினை நானூறு துறைகளாக வகுத்தமைத்துப் பொருள்**

தொடர்நிலையாக நானூறு செய்யுட்களால் முதன்முதலாகக் கோவை பாடியவர் மாணிக்கவாசகப் பெருமானே ஆவார். இவ்வாறு அவர் தேர்ந்து கொண்டமைக்கு நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு, நெடுந்தொகை நானூறு என அமைந்த சங்கத் தொகையே அடிப்படையாக அமைத்திருத்தல் வேண்டும். இந்நூல் இயற்கைப்புணர்ச்சி முதல் பரத்தையிற்பிரிவு ஈறாக இருபத்தைந்து கிளவிக் கொத்துக்களாகப் பகுக்கப்பெற்ற இருபத்தைந்து அதிகாரங்களையுடையதாகும்"[19] என மாணிக்கவாசகரின் திருக்கோவையாரின் அமைப்பினைத் தெளிவுப்படுத்துகின்றார்.

2.14 பாண்டிக்கோவை

கி.பி எட்டாம் நூற்றாண்டில் தான் இறையனார் களவியலுரை எழுத்து வடிவம் பெற்றது. களவியலுரையில் விரித்துக் கூறப்பெறும் துறைகளுக்கு இலக்கியமாக அந்நூலில் உரையாசிரியரால் காட்டப்பெறும் மேற்கோள் செய்யுட்களில் கட்டளைக் கலித்துறையில் அமைந்த கோவைச் செய்யுட்கள் 326, பாண்டிக்கோவை என்ற பெயரால் வழங்கப்பெறுகின்றன. இப்பாடல்களின் பாட்டுடைத்தலைவன் மாறவர்மன் அரிகேசரி என்னும் சிறப்புப்பெயரினைக் கொண்ட நெல்வேலிப் போரில் வென்ற நின்றசீர் நெடுமாறன் ஆவான். இவன் திருஞான சம்பந்தர் காலத்துப் பாண்டிய மன்னன் ஆவான். களவியலுரையில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ள பாண்டிக்கோவைப் பாடல்களுள் ஒரு துறைக்கே ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்கள் உள்ளன. பாண்டிக்கோவைச் செய்யுட்களாக 326, களவியலுரையில் காணப்பெறினும் அப்பாடல்களால் 175 அகத்துறைகளே விரித்துக் கூறப்பெற்றுள்ளன. தொல்காப்பியத்திலும் இறையனார் களவியல் உரையிலும் அகத்திணை துறைகள் நானூறு என்னும் வரையறை கூறப்படவில்லை. இவ்வாறு ந.சுப்புரெட்டியார் விருத்தம், தாழிசை, துறை என்னும் யாப்புக்களில் அமைந்து சிற்றிலக்கியங்களை நுணுக்கமாக விளக்கிக் காட்டியுள்ளார்.

2.15 புதிய வகைச் செய்யுட்கள்

ந.சுப்புரெட்டியார் **'புதிய வகைச் செய்யுட்கள்'** என்னும் பகுதியில் கும்மி, சிந்து போன்ற யாப்பு வகைகளை விளக்கியுள்ளார். இந்த யாப்பு வடிவத்தில் இராமலிங்க அடிகளார், பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை போன்றோர் பல அரிய பாடல்களை இயற்றியுள்ளனர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் **'மலரும் மாலையும்'** என்னும் கவிதை நூலில் காணப்பெறும் பிச்சைக்காரர் கொம்மாளம், செல்வமும் சிறுமையும் ஆகியனவற்றிலிருந்து கும்மிப்பாடல்களுக்குச் சான்றுகளைக் காட்டியுள்ளார் ந.சுப்புரெட்டியார். புாரதியாரின் **'பெண்கள் விடுதலைக் கும்மி'** இதற்குத் தக்க சான்று என்கிறார். **'சிந்து'** வகைப்பாடல்களுக்கு ந.சுப்புரெட்டியார் மகாகவி பாரதியாரின் பெண்கள் விடுதலைக் கும்மி, திரிகூடராசப்பக் கவிராயரின் குற்றாலக்

குறவஞ்சி, பாரதியாரின் கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியனவற்றிலிருந்து தக்க சான்றுப் பாடல்களைத் தந்து எளிமையாக விளக்கியுள்ளார். அவர், சிந்துப்பாடல்களைச் சமநிலைச் சிந்து, வியனிலைச் சிந்து, நொண்டிச் சிந்து, காவடிச் சிந்து என வகைப்படுத்திப் பிற்காலத்தில் புதுவகைச் செய்யுட்களின் வளர்ச்சியை விளக்கியுள்ளார்.

2.16 குழந்தை இலக்கியம்

ந.சுப்புரெட்டியார் புதிய வகைப் பாடல்களுக்குப் பின்னர் தோன்றிய இலக்கிய வகைகளாகக் குழந்தை இலக்கியம், புதுக்கவிதை இலக்கியம் ஆகிய இரண்டினையும் குறிப்பிடுகின்றார். புதுக்கவிதைக்குச் சற்று முன்னரோ, பின்னரோ குழந்தைப்பாடல்கள் தோன்றின. தேசியக்கவி பாரதியார்தான் முதன்முதலாக **'பாப்பா பாட்டு'** என்னும் கவிதையின் வாயிலாகக் குழந்தை இலக்கியத்திற்கு வித்திட்டார். அவரது **'புதிய ஆத்திச்சூடி'**யிலும் **'முரசு'**ப் பாட்டிலும் குழந்தை இலக்கியக் கூறுகள் காணப்படினும் இவையிரண்டும் வயது முதிர்ந்தோரின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டவை. பாப்பா பாட்டில் கோழி, காக்கை, பசு, நாய், குதிரை, மாடு, ஆடு இவற்றை ஆதரிக்க வேண்டுமெனவும், பொய்சொல்லல், சோர்வு, சோம்பல், தாய் சொல்லைத் தட்டாதிருத்தல், நாட்டுப்பற்று, தமிழ், இந்தியநாடு, சாதி, நீதி, அன்பு ஆகியன குறித்த கருத்துக்களும் குழந்தை அனுபவங்களை ஒட்டியவை.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் **'மலரும் மாலையும்'** என்னும் கவிதைத் தொகுப்பு நூலினுள் இடம்பெறும் **'மழலை மொழி'**ப் பகுதியில் இடம்பெற்றுள்ள 'முத்தந்தா' என்பது முதல் **'பாண்டியாடுதல்'** வரையுள்ள பதினாறு பாடல்களும் குழந்தைகளின் அனுபவத்தைச் சித்தரிப்பவை. குவிமணியின் கோழி, நாய், கிளி, பசு, பால் ஆகிய பாடல்கள் அற்புதமானவை. குழந்தைகளின் நாவில் எளிமையாகப் புகுந்து இன்பம் தருபவை. பாரதியாரின் குழந்தைப் பாடல்களைவிட கவிமணியின் குழந்தைப் பாடல்கள் வளர்ந்து விரிந்தவை.

கவிமணியைத் தொடர்ந்து பாவேந்தர் பாரதிதாசன் ஒரு தாயின் உள்ளம் மகிழ்கின்றது, இளைஞர் இலக்கியம் ஆகிய இரண்டு தனி நூல்களை இயற்றி சிறுவர் மற்றும் இளைஞர் இலக்கியப் படைப்பை விரிவுப்படுத்தியுள்ளார். இம்மூவர்களையும் தவிரக் குழந்தை இலக்கியப் படைப்பிற்காகவே தோன்றியவர்களுள் முதன்மையர் அழ.வள்ளியப்பா ஆவார். இவர் குழந்தைகளுக்காக **'மலரும் உள்ளம்'** என்னும் கவிதைத் தொகுப்பு நூலினை விட்டுச் சென்றுள்ளார். இவரைத் தொடர்ந்து இவரது வாரிசு போல் செட்டிநாடு தந்த இளங்குழந்தைக்கவிஞர் குழ.கதிரேசன் என்பவரின்

முதல் நூலாகிய **‘எலிகடித்த பூனையும்’** மற்றொரு நூலாகிய **‘பேசும் கிளியும்’** தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்களாகும்.

2.17 பேச்சுப் பயிற்சி

ந.சுப்புரெட்டியார் குழந்தைகளுக்கு மொழி கற்பித்தலில் பேச்சுப்பயிற்சி இன்றியமையாதது என்கிறார். குழந்தைகள் சற்று வளர்ந்த நிலையில் இல்லத்தில் தாயும் பள்ளிகளில் ஆசிரியர்களும் குழந்தைகளுக்குப் பேச்சுப்பயிற்சி தரவேண்டும் என்கிறார். அப்போது தான் குழந்தைகளின் நாக்குத் திருந்தும் என்கின்றார். அவர் குழந்தைகளின் பேச்சுப் பயிற்சிக்கு ஏற்றனவாக பாரதியாரின் பாப்பா பாட்டு, கவிமணியின் மலரும் மாலையும், அழ.வள்ளியப்பாவின் மலரும் உள்ளம், பாரதிதாசனின் இளைஞர் இலக்கியம் ஆகிய நூல்களின் குழந்தைப் பாடல்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

2.18 புதுக்கவிதை இலக்கியம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட புதிய முயற்சியில் பிறந்ததே புதுக்கவிதையாகும். இது தமிழன்னைக்குச் சூட்டப் பெற்ற புதியதோர் அணியாகும். தமிழ் இலக்கியத்தில் இயல்பாக ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியாகப் புதுக்கவிதையைக் கொள்ளலாம். ஆங்கிலத்தில் **‘New Poetry’** எனக் கூறுவதையொட்டியே தமிழில் **‘புதுக்கவிதை’** எனப்பெயரிட்டனர். புதுக்கவிதை வரலாற்றையும் அதன் நோக்கு மற்றும் போக்குகளையும் ந.சுப்புரெட்டியார் **‘புதுக்கவிதை போக்கும் நோக்கும்’, பாட்டுத்திறன் (மூன்றாம் பகுதி)** என்னும் இருநூல்களிலும் தெளிவாக விளக்கி உள்ளார்.

2.19 புதுக்கவிதை இலக்கணம்

புதுக்கவிதையின் இலக்கணத்தை மு.மேத்தா **‘ஊர்வலம்’** என்னும் கவிதை நூலினுள்,

> **“இலக்கணச் செங்கோல்**
> **யாப்பு சிம்மாசனம்**
> **எதுகைப் பல்லக்கு**
> **மோனைத் தேர்கள்**
> **தனிமொழிச் சேனை**
> **பண்டித பவனி**
> **இவை எதுவும் இல்லாத**
> **கருத்துக்கள் தம்மைத் தாமே**

ஆளக் கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி முறையே
புதுக்கவிதை"[20]

என விளக்கிக் கூறியுள்ளார். புதுக்கவிதை தோன்றிய பின்னர் மரபுக்கவிதையை எள்ளி நகையாடும் பாங்கில் பல புதுக்கவிதைகள் படைக்கப் பெற்றுள்ளன. சி.மணி என்னும் புதுக்கவிஞர் புதுக்கவிதையை உடையையும் ஒப்பனையையும் நீக்கிவிட்ட கன்னியாகவே காணுகின்றார்.

"யாப்புடைத்த கவிதை
அணையுடைத்த காவிரி
யாப்பற்ற கவிதை
இயற்கை யெழில் இருக்க
செயற்கையணி எதற்கென்று
உடையுடன் ஒப்பனையையும்
நீக்கிவிட்ட கன்னி"[21]

என்பது அக்கவிதையாகும். யாப்பைத் தவிர்க்கும்போது தான் கவிதை தன் அனைத்து ஆற்றல்களோடும் வெளிப்படுவதாக சி.மணி கூறுகிறார்.

2.20 புதுக்கவிதையின் தோற்றம்

ந.சுப்புரெட்டியார் புதுக்கவிதையின் தோற்றம் குறித்து விளக்கும் போது மகாகவி பாரதியாரையே புதுக்கவிதையின் 'பிதாமகன்' என்கின்றார். பாரதியார் தம் அனைத்துக் கவிதைகளையும் முற்றிலும் மாறுபட்ட படைப்புகளாக அமைத்து அவற்றை நவகவிதை என்றார்.

"சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை"[22]

என்று அவர்தம் கவிதைகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

பாரதியார் தம் கவிதை உணர்வுகளையும் அகத்தெழுச்சிகளையும் கனவுகள், கற்பனைகள், முற்போக்கு எண்ணங்கள், சமுதாயப் பார்வைகள், நாட்டுநிலைகள் ஆகிய அனைத்தையும் மரபுநிலை கெடாமல் எளிய, இனிய, புதிய புதிய யாப்புக்களில் சந்த நயங்களுக்கு உட்படும் பல்வேறு புதிய கவிதை வடிவங்களில் வெளிப்படுத்திய இலக்கண விதிகட்குக் கட்டுப்படாத புதியவடிவத்திலும் படைக்க முயன்றுள்ளார். அவரது வசனகவிதைகள் என்னும் பகுதியிலுள்ள **'காட்சி'** என்ற கவிதை இதற்குத் தக்க சான்றளிக்கின்றன. இதனால் பாரதியாருக்குப்

புதுக்கவிதையில் இருந்த பேரவா புலனாகின்றது. இத்தகைய அவாவினைக் கொண்ட பாரதியாரே புதுக்கவிதையின் தந்தையும் முன்னோடியுமாகின்றார்.

2.21 மரபுக்கவிதையும் புதுக்கவிதையும்

வசனம், செய்யுள் இரண்டிற்கும் அப்பாற்பட்டதே கவிதையாகும். வசனமும் செய்யுளும் கவிதை இயங்கும் தளங்களாகும். இவ்விரண்டும் கவிதையின் புறவடிவங்களாகும். கவிஞன் கையாளும் இவ்விரண்டு சாதனங்களில் மட்டும் கவிதையைக் காண இயலாது. இவற்றைக் கவிஞன் கையாளும் முறையில்தான் கவிதை வெளிப்படும். ஆற்றலும் படைப்புத்திறனும் கொண்ட கவிஞனுக்குச் செய்யுளிலும் கவிதை கிடைக்கும். வசனத்திலும் கவிதை கிடைக்கும். மரபுக் கவிதையாளர்கள் எழுதும் புதுக்கவிதையைக் கொண்டு இதனைத் தெளியலாம்.

“நாடு
உடுத்தியிருந்த
நாலு வர்ணத்துணிகளை
அவன்தான்
தன்
பாட்டுநெருப்பில்
போட்டுப் பொசுக்கினான்”[23]

இக்கவிதை வாலியின் பார்வையில் வருணாசிரம தர்மத்தை வெறுத்த பாரதியாரின் கருத்தைப் பளிச்சிடுவது. வசனம் போன்ற இதில் கவிதை உள்ளது.

2.22 புதுக்கவிதையின் உருவம்

மரபுக்கவிதைக்குரிய இறுக்கமான கட்டுப்பாடுகளும் யாப்புவிதிகளும் புதுக்கவிதைக்கு இல்லை. ஆயினும் புதுக்கவிதைக்கு உருவம் உண்டு என்கிறார். ந.சுப்புரெட்டியார். செய்யுளும் வசனமும் புதுக்கவிதையின் வடிவங்களாகும். **‘இந்த வடிவம் புரணாத்தில் வரும் மன்மதனை ஓவியத்தில் வடித்துக் காட்டுவதற்கு ஒப்பானதாகும். சிவனால் எரிக்கப்பெற்ற மன்மதன் இரதிதேவியின் கண்களுக்கு மட்டுமே தென்படுவதைப்போல, இலக்கணத் தெய்வத்தின் நெற்றிக்கண் நெருப்பிற்கு இடையான புதுக்கவிதையின் உருவமும் உண்மையான இலக்கிய இரதிகட்கே தென்படக்கூடும்”**[24] என்னும் மீராவின் கூற்றை ஏற்கும் ந.சுப்புரெட்டியார், கவிதையின் கருத்து வெளிப்படும் அழகே புதுக்கவிதையின் வடிவச் சிறப்பு என்கின்றார். உணர்த்தும் முறையையே புதுக்கவிதையின் வடிவம் எனக் கொள்கின்றார் ந.சுப்புரெட்டியார். **“உணர்த்தும் முறை கவிஞர்களின் மனவெளிக்குப் புலப்படும் சூக்குமத் தன்மை கொண்டது. எனவே தான் புதுக்கவிதையின் உருவம் திருமலை**

நாயக்கர் மகாலின் தூணைப் போலத் தூலமாகத் தெரிவதில்லை"[25] என்றார் மீரா. ந.சுப்புரெட்டியார் உருவத்தாலேயே சிறக்கும் கவிதைக்கு வாலியின் 'எருமை' குறித்த புதுக்கவிதையைச் சான்று காட்டியுள்ளார்.

"காக்கைகள்
சவாரி செய்யும்
டாக்ஸி
பொறுமைப் பாடத்தை
போதிப்பதற்கென்றே
நடமாடும்
பல்கலைக்கழகம்"[26]

2.23 புதுக்கவிதை உத்திகள்

ந.சுப்புரெட்டியார் படிமம், குறியீடு, துல்லியம் - தெளிவு, சுருக்கம் ஆகியனவற்றைப் புதுக்கவிதையின் உத்திகளாக எடுத்துகாட்டி அவற்றைத் தக்க சான்றுகளுடன் விளக்கியுள்ளார்.

2.24 புதுக்கவிதை உள்ளடக்கம்

புதுக்கவிதையின் 'உள்ளடக்கப் பொருள்கள்' குறித்துக் குறிப்பிடும் ந.சுப்புரெட்டியார், **"இலக்கியம் இலக்கியத்திற்காகவே", "கலை கலைக்காகவே" என்ற கொள்கைக் குரல்கள் ஓய்ந்து போய்விட்டன. 'இன்பம்' என்பது கவிதையின் ஒரு பயனாக இருக்கலாமேயன்றி அதுவே இலக்கியமாகாது என்ற உண்மை ஞானம் தட்டுப்பட்டுவிட்டது. இன்று 'வாழ்க்கையின் திறனாய்வே கவிதை' என்ற அங்கீகாரம் பெற்றுவிட்டது. 'கவிதை சமூகத்திற்காகவே'என்ற முடிவுக்கு வந்து விட்டது இலக்கியத் திறனாய்வு. சமுதாய வாழ்வைச் சித்தரிப்பதும், சமுதாய மேன்மைக்கு வழிகோலுவதும் வழிகாட்டுவதும் இலக்கியத்தின் இயல்புகள் என்பன ஏற்றுக் கொள்ளப் பெற்ற முடிவுகள், கவிதைப் படைப்போர் இவற்றை நன்கு உணர்ந்துள்ளனர். அதனால் புதுக்கவிதையின் உள்ளடக்கம் மரபுக்கவிதையின் உள்ளடக்கத்தினின்றும் முற்றிலும் வேறுபட்டதாக அமைந்துவிட்டது. சுதந்திரம், ஜனநாயகம், ஜனநாயக சோசலிசம், அரசியல், உழைப்பவர் உலகம், வறுமை, கல்வியின் நிலை, சமுதாயத்தில் இழிவான நிலை போன்றவை பாடுபொருளாக அமைந்துவிட்டன. காதலுணர்வும் முருகுணர்வும் முதலிடம் பெற்றன. மார்க்சியக் கொள்கை வழியிலும், தனிமனிதத்தத்துவ நோக்கிலும், நகைச்சுவை எள்ளல் போக்கிலும் புதுக்கவிதைகள் மழைக்காலக் கொசுக்கள் போல உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன"**[27] எனக்குறிப்பிட்டுள்ளார்.

2.25 புதுக்கவிதை - இலக்கியக்கொள்கைகள்

ந.சுப்புரெட்டியார் மேனாட்டில் தோன்றி வளர்ச்சி பெற்ற படிமக் கோட்பாடு, குறியீட்டியல், மீமெய்ம்மையியல், நனவோடை, இருப்பியல் கொள்கை, இருண்மைவாதம் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழில் கிடைக்கப்பெற்றுள்ள புதுக்கவிதைகளை எடுத்துக்காட்டி, புதுக்கவிதை இலக்கியத்திறனாய்விற்குப் புதுவாழ்வு காட்டியுள்ளார்.

2.26 முடிவுரை

"இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும் – நூல் அறிமுகம்" என்ற இவ்வியலில் இருந்து, பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் சொற்பொழிவுத் திறனையும் அவர்தம் கட்டுரைக் கருத்துக்களையும் நாம் ஒருவாறு உணர்ந்து கொள்ள முடிகின்றது. எளிய நடையில் இனிய கட்டுரைகளாகத் தொகுத்துத் தந்திருப்பது சிறப்பிற்குரியதாகும்.

அடிக்குறிப்புகள்

1. ந.சுப்புரெட்டியார், இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், ப.04
2. பேராசிரியர் (உ.ஆ) தொல்.,பொருள்., செய்யுள்., நூ.1
3. மேலது, ப.24
4. மேலது, நூ.07
5. மேலது, நூ.157
6. இளம்பூரணர் (உ.ஆ) தொல்.,பொருள்,.செய்யுள்., நூ.101
7. ந.சுப்புரெட்டியார், இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், ப.16
8. இளம்பூரணர் (உ.ஆ) தொல்.,பொருள்.,செய்யுள்., நூ.114
9. ந.சுப்புரெட்டியார், இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், பக்.38-39
10. மேலது, ப.43
11. மேலது, பக்.47-48
12. இளம்பூரணர் (உ.ஆ) தொல்.,பொருள்.,செய்யுள்.,அகத்., நூ.59
13. இளம்பூரணர் (உ.ஆ) தொல்.பொருள்.செய்யுள், நூ.158
14. மேலது, நூ.166
15. ந.சுப்புரெட்டியார், இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், ப.69
16. மேலது, பக்.70-71
17. இளம்பூரணர் (உ.ஆ) தொல்.,பொருள்.,செய்யுள்., நூ.172
18. ந.சுப்புரெட்டியார், இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், ப.77
19. மேலது, பக்.82-83
20. மு.மேத்தா, ஊர்வலம், ப.70
21. சி.மணி, வரும்போகும், ப.16
22. பாரதியார் கவிதைகள், ப.03
23. வாலி, 'பாரதி ஒரு பிள்ளையார் சுழி', பொய்க்கால் குதிரைகள், ப.18
24. மீரா, புதுக்கவிதையின் உருவம், ப.32
25. மேலது, ப.82
26. வாலி, 'எருமை', பொய்க்கால் குதிரைகள், ப.66
27. ந.சுப்புரெட்டியார், இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், பக்.132-133

இயல் 3

“இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும் - மதிப்பீடு”

3.0 முன்னுரை

ந.சுப்புரெட்டியாரின் நூலான, **“இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும் - நூலறிமுகம்”** என்ற கடந்த இயலில் அதில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்கள் எவை என்பதைக் கண்டோம். இறுதிய இயலான இவ்வியலில் அந்நூலுக்கான மதிப்பீட்டினை காண இருக்கின்றோம்.

3.1 கட்டுரை - உரைநடை

செய்யுள் வடிவத்தில் இருந்த இலக்கியங்கள், மேலைநாட்டினர் தொடர்பால் உரைநடைக்கு மாறியது. காலத்திற்கு ஏற்ற மாற்றம் தான் இது. அந்த உரைநடையைக் கட்டுரை என்று கூறினாலும் பொருந்தும். சரி. கட்டுரை என்றால் என்ன? என்று வினா எழுதல் இயல்பு. கருத்துக்களைக் கட்டியுரைப்பது என்பது கட்டுரை என்பதன் பெயர் விளக்கம். அவ்வளவுதான். நாவல், சிறுகதை, நாடகம் போன்ற இலக்கிய வகைகளுக்குத் தமிழில் விளக்கம் இல்லாததைப் போல், கட்டுரை என்பதற்கும் இலக்கணம் இல்லை. பாதிரிமார்கள் இங்கு வருவதற்கு முன்னர் நமக்குக் கட்டுரை என்பது என்ன என்று தெரியாது. அது ஒரு புரட்சிகரமான இறக்குமதிச் சரக்கு.

கட்டுரை என்பது சில வினாக்களுக்குத் தரப்படுகின்றன விடைகளும் விளக்கங்களும் எனலாம். இதைச் சற்று விளக்கமாகத் காண்போம். கட்டுரை ‘இலக்கிய நயம்’ பற்றி எழுத வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். முதற்கண், இலக்கியமென்றால் என்ன? எது இலக்கியமாகும்? எது இலக்கியமாகாது? இலக்கியம் பற்றித் தமிழறிஞர்கள் என்ன சொல்கிறார்கள்? மேலை நாட்டறிஞர்கள் என்ன சொல்கிறார்கள்? எப்படித் தொடங்கலாம், முடிக்கலாம்? என்பன போன்ற கேள்விகளுக்குச் சொந்தமாகவும், பிறர் கருத்தாகவும் தரும் விடைகள், அவற்றுக்கான விளக்கங்கள் இவற்றின் தொகுப்பே கட்டுரை எனலாம்.

உரைநடை என்பது செய்யுளை அடுத்துத் தோன்றிய செய்யுளுக்கு மாறான, எளிய, தாழ்ந்த, சுவையற்ற, தற்செயலாகத் தோன்றிய ஒரு இலக்கிய வாகனமன்று. முாறாக மனிதனின் நடவடிக்கை, அவன் மேற்கொண்ட பரிசோதனை ஆகியவற்றின் பயனாகப் பெருமைக்குரிய வியத்தகு கலைவடிவாகும். கட்டுரை என்பது உரைநடை

இலக்கியத்தில் ஒருவகை. அதன் வளர்ச்சி உரைநடை வளர்ச்சியைப் பொறுத்து அமைகின்றது.

இன்றைய உலகம் உரைநடை உலகம். ஊரைநடையில் சொல்லமுடியாத பொருளே இல்லை என்று சொல்லுமளவுக்குக் காலம் மாறியுள்ளது. இதற்குத் தூண்டுகோலாய் அமைந்தவர்கள் மேலை நாட்டுப் பாதிரிமார்கள் எனலாம். ஒரு காலத்தில் எல்லாமாக இருந்தது செய்யுள். இன்றைய யந்திர உலகத்தில் மனிதன் கடமைகளை செய்யவே நேரமில்லாத நிலை. இந்த நிலையில் மனிதன் செய்யுளைப் படித்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே உரைநடை உருவாயிற்று. இந்த உண்மையை உணர்ந்து கவிதை வடிவமும் உரைநடையுடன் சமாதானம் செய்து கொண்டு புதுக்கவிதை வடிவத்தில் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. ஆகவே இக்காலத்தில் இலக்கியம் என்றாலே உரைநடையில் அமைந்த கட்டுரை தான்.

தமிழ் மொழியில் உரைநடை என்பது போதுமான வளர்ச்சி அடையாத காரணத்தால் ஆங்கிலத்தில் அடிசன், ராபர்டலிண்டு, செஸ்டர்டன், பெட்ராண்ட் ரசல் போன்றவர்களின் கட்டுரையைப் போல் தரம் வாய்ந்த கட்டுரை நமக்குச் சிலவே உள்ளன. தமிழைப் பொறுத்தவரை, கருத்தைக் காட்டிலும் மொழிக்கே நாம் முதலிடம் கொடுத்துக் கொண்டிருப்பதால் மிக உயர்ந்த கட்டுரைகள் இனித் தோன்ற வேண்டிய நிலையே உள்ளது. எவ்வாறாயினும் கட்டுரையைப் பொதுக்கட்டுரை, ஆராய்ச்சிக் கட்டுரை என இருவகையாகப் பிரிக்கலாம்.

3.2 பொதுக் கட்டுரை

தமிழைப் பொறுத்தவரை கட்டுரை என்பது பாடல்களின் நயம் பாராட்டலாக இருக்கிறது. எடுத்துக் கொண்ட தலைப்பை அலசி ஆராய்ந்து சொல்ல வேண்டிய கருத்துக்களைத் தொகுத்துக் கொண்டு அவற்றை வகுத்து வகைப்படுத்திக் கொண்டு தொடர்போடு சொல்வது சிறந்த கட்டுரையாகும்.

3.3 ஆய்வுக் கட்டுரை

எடுத்துக் கொண்ட தலைப்புக்கான செய்திகளைத் தொகுத்துக்கொண்டு முறைப்படுத்திச் சொல்லுவதோடு வாதங்களுக்குச் சான்றாதாரம் காட்டுவது. அதாவது அடிக்குறிப்போடு அமைவது. இது தனியாகத் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி.

3.4 சிறந்த கட்டுரை

குறிப்பிட்ட பொருளைப் பற்றித் தன் சொந்த எண்ணங்களைச் சொல்லும்போது தன் விளக்க இலக்கியமாகலாம். மற்ற இடங்களில் சிறப்பாக ஆராய்ச்சிக் கட்டுரை தன் விளக்க இலக்கியமாக முடியாது.

கருத்துக்களைக் கூட ஒரு தனி மனிதனின் சொந்தக் கருத்து என்று சொல்வதற்கில்லை. எத்தனையோ பேர் சொன்ன கருத்துக்கள் புதிய புதிய விளக்கங்களோடு தனி மனிதனின் வாயிலாக வெளி வருகின்றன. அவ்வளவுதான். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது கட்டுரையைத் தன் விளக்க இலக்கியம் என்பது பொருந்தாது.

சிறந்த கட்டுரை என்பது எந்தத் தலைப்பைப் பற்றியதாகவும் இருக்கலாம். எடுத்துக்கொண்ட பொருளைத் தக்க சான்றாதாரங்களோடு தருக்க ரீதியில் காரண காரியத் தொடர்புடன் இடைப் பிறவரல் இன்றிச் சொல்வது.

முன்னுரை, செய்தி, முடிவுரை என வகுத்துக் கொண்டு ஒவ்வொரு செய்தியையும் ஒவ்வொரு பத்தியாகப் பிரித்துக் கொண்டு சொல்வது முறை. தக்க சொற்களைப் பயன்படுத்துவது. எளிய சொற்றொடர்களை அமைப்பது கருத்துப் புலப்பாட்டுக்கு உகந்தது. ஆசிரியன் கூறவந்த செய்தியை வாசகனுக:கு எந்த அளவுக்கு உணர்த்த முடிகிறதோ அந்த அளவுக்குக் கட்டுரையை உயர்ந்தது எனலாம்.

சிலர் கட்டுரை எழுதுவது எளிது என்று நினைக்கலாம். அது தவறு. கவிதை எழுதுகிறவர்கள், கட்டுரை எழுதுவதில் பயிற்சியில்லாத காரணத்தால், கவிதை எழுதுவதுதான் கடினம், கட்டுரை எழுதுவது எளிது என்று சொல்லலாம். அதேபோல் கட்டுரையாளர்களும் சொல்லலாம். இரண்டும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் நமக்குத் தோன்றுகின்ற எண்ணங்களை எழுத்து வடிவத்தில் தரும் எல்லா முயற்சியும் கடினமானதே. சில நேரங்களில் சொற்கள் நம்டை ஏமாற்றி விடுகின்றன. மனிதன் நினைத்ததையெல்லாம் அப்படியே சொல்வதற்கு எந்த ஒரு தனி மொழிக்கும் ஆற்றல் இல்லையோ என்று கூட எண்ண வேண்டியுள்ளது.

சுருங்கச் சொன்னால் கருத்தை கலையார்ந்த கட்டுரை ஆக்குவது என்பது பயிற்சியால் கைவரக் கூடிய ஒன்று என்று சொல்லலாம்.

3.5 அடிப்படைக் கட்டுரைகள்

சென்னைப் பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவாற்ற வாய்ப்புக் கிடைக்கும் முன்பே ந.சுப்புரெட்டியார், அச்சில் ஏற்றாத நான்கு கட்டுரைகளைத் தான் வைத்திருந்ததாகக் கூறியுள்ளார். அவை முறையே

1. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை - 1963
2. அகத்திணைக் கொள்கைகள் - 1981
3. புதுக்கவிதையின் நோக்கும் போக்கும் - 1983
4. பாட்டுத்திறன் - 1988

என்பனவாகும்.

ஆகவே, வாய்ப்புக் கிடைத்தவுடன், பல தரவுகளைத் திரட்டி சொற்பொழிவு செய்ததுடன், அதனை அச்சாக்கம் செய்திருக்கிறார்.

3.6 நேர்த்தியான கட்டமைப்பு

இலக்கிய வகை எதுவாயினும் சில அடிப்படை கட்டமைப்பு மாறாமல் அமைந்திருக்கும். பொதுவாக உருவம், உள்ளடக்கம், உத்தி என்ற மூன்றையும் இலக்கிய அறிஞர்கள் வெகுவாக வலியுறுத்துவர். அவ்வகையில் உருவம் என்ற ஒன்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கட்டுரையின் வடிவம் நாம் அறிந்ததே. முன்னுரை, செய்தி, முடிவுரை. இந்த அடிப்படை கட்டுரையில் பூர்த்தியாகியிருக்க வேண்டும். இவ்வகையில் ந.சுப்புரெட்டியாரின் இந்த ஆய்வுக் கட்டுரைகள் அடிப்படைக் கட்டுரைக்கான வடிவத்தை செவ்வனே பெற்றிருக்கிறது.

3.7 உள்ளடக்கம்

ஒவ்வொரு தமிழறிஞர்களும் ஒவ்வொரு துறைசார்ந்த ஆய்வுக்கட்டுரைகளே பெரும்பாலும் எழுதுவார்கள். ஆனால் ந.சுப்புரெட்டியார் அவர்கள் பல்துறை வித்தகராகத் திகழ்கிறார். தொல்காப்பியம் தொடங்கி புதுக்கவிதை வரையிலாக, ஒட்டுமொத்த இலக்கிய வகையையும் ஆய்ந்து தான் கண்டிறிந்த மெய்ம்மைகளைத் தந்திருக்கிறார்.

வரலாற்றுப் பின்னணித் தொடங்கி அதன் தொடர்ச்சியாக வெளிநாட்டார் தொடர்பு, இலக்கிய வளர்ச்சி, தொல்காப்பியக் குறிப்புகள், பா வகைகள், காப்பியங்களில் நாட்டுப்புற மரபு, சிற்றிலக்கியங்களின் தொடர்ச்சி, குழந்தை இலக்கியங்கள், புதுக்கவிதை போன்ற வகைப்பாட்டின் கீழ் தன் ஆய்வுக்கட்டுரைகளைச் சிறப்பாக ந.சுப்புரெட்டியார் தொகுத்துரைத்துள்ளார்.

3.8 மேற்கோள்கள்

வெறுமனே வெற்றுரையாக எழுதிச் செல்வது என்பது மரபாகாது. இடை இடையே கட்டுரைக்குத் தொடர்பான மேற்கோள்கள் அமைவது நலம். அம்மேற்கோள்களும் அறிஞர்களின் கருத்துக்கள் அடங்கியதாக இருக்கலாம். செய்யுள் வரிகளாக இருக்கலாம். அவ்வகையில் ஆசிரியர் தேவையான இடங்களில் உரிய மேற்கோள்களை எளிமைப்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

எடுத்துக்காட்டாக,

நேரிசை ஆசிரியப்பாவிற்கு உதாரணமாகப் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் ஒன்றை தந்துள்ளார்.

"உருகிய நெய்யும் பருப்பும் இட்ட
சோற்றுடன் மிளகுநீர் துளியள வூற்றிச்
சிறிய வள்ளத்தில் சேர்ந்தெ டுத்துக்
குழந்தைக்குக் காக்கை காட்டி
விழுங்க வைப்பாள், மென்னகை முத்தே"[1]

கவிதையில் வரும் ஓசை நயத்தைச் சுட்டிக்காட்ட விழைகிறார் ந.சுப்புரெட்டியார் அப்போது, அவர் தேர்ந்தெடுத்து தந்திருக்கிற பாட்டுக் கீழே,

"பிள்ளைக் கனியமுதே –கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே
அள்ளி அணைத்திடவே – என் முன்னே
ஆடிவருந் தேனே
கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ – கண்ணம்மா
உன்மத்த மாகுதடீ!
சொல்லு மழலையிலே – கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்"[2]

இவ்வாறு பொருத்தமான மேற்கோள்களைத் தருகின்ற பொழுது கட்டுரை தரமான ஆய்வுக்கட்டுரையாக மாறுகிறது. இது ந.சுப்புரெட்டியாரின் அறிவுத் திறத்தை வெளிப்படுத்துகிறது.

பாவினங்களின் தோற்றத்தைப் பற்றி சொல்கின்ற பொழுது, **“இராமன் முதலியோரைக் கானகத்தில் விட்டு வந்த சுமிந்திரனை நோக்கி நம்பி சேயனோ? அணியனோ? ஏன்று தயரதன் வினவியபோது சுமந்திரன்,**

வேயுயர் கானில் தானும்
தம்பியும் மிதிலைப் பொன்னும்
போயினன் என்றான் என்ற
போழ்தத்தே ஆவி போனான்

என்று கூறுகிறான். “போயே போனான்” என்ற தொடரில் இருப்பதைவிடப் பன்மடங்கு வேகத்தை இப்பாடலில் உணரமுடிகிறது. புழகிப் பழகி உருவழிந்து மெருகேறிப் போன சொற்களும் கவிதையில் ஏறும் போது நம்மையே ஏமாற்றிப் புத்தம் புதியனவாகத் தோன்றுகின்றன”[3] என்கிறார் ந.சுப்புரெட்டியார். இதில் மேற்கோள் பாடலையும் சொல்லி, அது எந்த சூழ்நிலையில் எழுந்தது என்பதையும் சொல்லி விளக்கியுள்ள திறம் பாராட்டத்தக்கது.

மேலும், செய்யுள் மட்டுமன்றி, தனக்குத் தேவையான கருத்தை மேற்கோளாகக் காட்டுவதும் உண்டு. அவ்வகையில், **‘கலிப்பாவின் இனம் எனப்படும் கட்டளைக் கலித்துறை யாப்பு காரைக்கால் அம்மையாரின் ‘திருவிரட்டைமணி மாலை’யில்தான் முதன்முதலாகக்காணப்படுகிறது (14. பதினோராந் திருமுறை – காரைக்கால்அம்மையார் அருளிச் செய்த ‘திருவிரட்டைமணிமாலை’ இது கட்டளைக் கலித்துறை, வெண்பா யாப்பில் அமைந்து மாறி மாறி வரும் 20 பாடல்களைக் கொண்ட சிறு பிரபந்தம்)’”**[4]

எனவே, ஓர் ஆய்வுக்கட்டுரைக்கு மேற்கோள்கள் இன்றியமையாதன என்பதை நாம் இதன்வாயிலாக அறிந்து கொள்ளமுடியும். ஆய்வுக்கட்டுரைக்குத் தொடர்பான மேற்கோள்களைத் தான் தரவேண்டுமே தவிர, இடத்தை அல்லது பக்கத்தை நிரப்புவதற்காக ஒரு மேற்கோளைக் கட்டுரையில் தரக்கூடாது. அதே நேரத்தில் கட்டுரைகள் முழுவதுமே மேற்கோள்களால் நிரப்பி வைக்கவும் கூடாது. இல்லையென்றால் தன்னுடைய சொந்தக் கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடக் கூடும். ந.சுப்புரெட்டியார் அவர்கள் தேர்ந்தெடுத்து கட்டுரைகளை எழுதியுள்ளார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

3.9 தக்க சொற்களைப் பயன்படுத்துவது

ந.சுப்புரெட்டியார் இந்த நூலில் தக்க சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். தேவையான இடங்களில் ஆங்கிலச் சொற்கள், வடமொழிச் சொற்கள், பிற மொழிச்சொற்கள் போன்ற அமைக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணங்கள்:

ஆணை (ஆக்ஞா), காவ்யாதர்சம், நவாப்பு, New Poetry

இவ்வாறு ஆய்வுக்கட்டுரை எழுதுகின்ற பொழுது, ஆசிரியர்கள் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். அது தேவையான ஒன்றும் கூட.

3.10 எளிய நடை

கட்டுரை அல்லது ஆய்வுக்கட்டுரை எழுதுகின்றபொழுது எளிய நடையில் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பண்டிதர் முதல் பாமரர் வரை அக்கட்டுரையைப் படிக்க முடியும்.

பாவினங்கள், தொல்காப்பியம் போன்றவற்றை ஆசிரியர் குறிப்பிடுகின்றபொழுது, உதாரணப் பாடல்களை, நவீனப் பாடல்கள் கொண்டு எளிமையாக விளக்கிச் செல்கிறார்.

ஆசிரியவிருத்தம் பற்றிக் குறிப்பிடும்பொழுது, உதாரணப்பாடலாக, பெரியாழ்வாரின், ‘அடியோமோடும் நின்னோடும்….’ என்ற எளிய பாடலைத் தந்துள்ளார். எழுசீர் கழிநெடில் ஆசிரியவிருத்தம் பற்றி பேசுகின்றபொழுது, திருமங்கையாழ்வாரின், ‘குலந்தரும் செல்வம் தந்திடும்: அடியார்…’ என்ற பாடலைத் தந்துள்ளார். இவ்வாறு எளிமையாக இருக்கிற பாடல்களை உதாரணமாகத் தந்திருக்கிறார். கடினநடையில் இல்லாமல் எல்லாருக்கும் புரியும் வகையில் எளிமையாகக் கொடுத்திருக்கிறார்.

3.11 முடிவுரை

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் நாடறிந்த தமிழறிஞர். பல நூறு நூல்களைப் படைத்தவர். அவரின் நூல் என்றும் மாசு ஏறாத வைரம் தான். இது மிகைச் சொல் அன்று. தங்கத்தின் தரத்தை உரைகல்லில் வைத்து உரைத்துப் பார்ப்பது போல, நம்முடைய அளவுகோலால் ஆய்வாளர் கண்டஅளவில் எவ்வித மாசும் மருவும் இல்லை என்பதே உண்மையாகும்.

அடிக்குறிப்புகள்

1. ந.சுப்புரெட்டியார், இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், ப.44

2. மேலது, ப.39

3. மேலது, ப.47

4. மேலது, பக்.85-86

ஆய்வு முடிவுகள்

“அறிமுக நோக்கில் இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்” என்ற இந்த ஆய்வுத்திட்டத்தில் இருந்து கீழ்க் காணும் முடிவுகள் பெறப்படுகின்றன.

- மொழி வரலாற்றில் ஆழ்ந்த புலமையுடைய ந.சுப்புரெட்டியார் தமிழைத் ‘தென்மொழி’ என்றும் ‘வடமொழியைச் ‘சமஸ்கிருதம்ஸ என்றும் குறிப்பிடும் மொழிவரலாற்றுப்பின்புலத்தில் தமிழ் இலக்கியத்தின் வரலாறு மற்றும் தோற்றப்பின்னணியை விளக்கியுள்ளார். வடமொழியாளா் தமிழைத் ‘திராவிடம்’ என்றழைத்த காரணத்தை விளக்கியுள்ளார்.
- தமிழகத்தில் ஆரியமொழி செல்வாக்குப் பெற்ற பின்னா் வடமொழி வெறியா்கள் வடமொழியைத் ‘தேவபாஷை’ என்றும், தமிழை ‘நீசபாஷை’ என்றும் இகழ்ந்தனா். இதனால் தமிழுக்கு நோ்ந்த இழுக்கினைப் போக்குவதற்காகவே தமிழ்ப் பற்றாளா்கள் வடமொழியும் தமிழும் கலந்து மணிப்பிரவாள நடையில் பக்திப் பனுவல்களுக்கு உரைகளை எழுதினா்.
- இசுலாமியப் படையெடுப்பால் பெருங்காப்பிய வளர்ச்சி குன்றி, சிற்றிலக்கியங்கள் தோன்றியதைச் சுட்டியுள்ளாா. ஆங்கிலேயா் ஆட்சியில் தான் தமிழில் புத்திலக்கிய வகைகள் தோன்றின.
- செய்யுட்களின் ஒலிநயத்திற்கும் யாப்பிற்கும் உள்ள தொடா்பை ந.சுப்புரெட்டியாா் நுணுக்கமாக ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளாா். தமிழ்க்கவிஞா்கள் உணா்ச்சிக்கேற்ப யாப்பு வடிவங்களையே ஆண்டுள்ளன்னா்.
- வாழக்கையில் காண்பது ‘சுவை’ அல்ல. காப்பியம், நாடகம், நாட்டியத்தில் காண்பதே சுவை என்கின்றாா் ந.சுப்புரெட்டியாா். அவா் வரையறுக்கப்பெற்ற ஒலிநயமே யாப்பு என்கிறாா்.
- பழைய பாவைகளைக் கொண்டு உணாச்சிக்கேற்றவாறு பாட்டின் ஓசைகளை வேறுபடுத்திக் காட்ட இயலாமையால் அவற்றை ஈடுசெய்வதற்காகப் பிற்காலத்தில் தாழிசை, துறை, விருத்தம் போன்ற பாவினங்கள் தோன்றின என்கிறாா் ந.சுப்புரெட்டியாா். இவற்றுள் ஆசிரியத்தாழிசை சிலப்பதிகாரத்திலும் ஆசிரிய விருத்தம் ஆழ்வாா் பாசுரங்களிலும் முதன்முதலாக இடம்பெற்றன.
- தொல்காப்பியத்தை ஆதாரமாகக் கொண்டு ந.சுப்புரெட்டியாா் முதுசொல், மந்திரம் என்னும் பாவகைகளில் இலக்கியங்கள் தோன்றியதை எடுத்து ஆராய்ந்துள்ளாா்.

- ❖ புலவர்களுக்குப் புதியவகைப் பாக்களில் ஆர்வம் தோன்றியமையால் கும்மி, சிந்து, தாலாட்டு, ஊசல் இலக்கியங்கள் தோன்றின. இவற்றைச் சித்தர்கள், இராமலிங்க அடிகளார், பாரதியார், அண்ணாமலை ரெட்டியார், பாரதிதாசன், கவிமணி போன்ற இக்காலக் கவிஞர்கள் கையாண்டு மிகுபுகழ் பெற்றதைத் தக்க சான்றுகள் காட்டி விளக்கியுள்ளார் ந.சுப்புரெட்டியார்.
- ❖ குழந்தை இலக்கியத்திற்கு முதன்முதலாக வித்திட்ட பாரதியார், அவரைத் தொடர்ந்து கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதிதாசன், குழந்தை இலக்கியத்திற்கென்று தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அழ.வள்ளியப்பா, குழ.கதிரேசன் ஆகியோரின் குழந்தை இலக்கிய பங்களிப்புகளை ந.சுப்புரெட்டியார் ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிவுசெய்துள்ளார்.
- ❖ பேச்சுப் பயிற்சி, குழந்தைக் கல்வியின் முக்கியக் கூறு என வலியுறுத்தியுள்ளார். அவர் புதுக்கவிதையின் இலக்கியச் சாதனைகளையும் தக்க சான்றுகளுடன் மதிப்பீடு செய்துள்ளார்.

மேலாய்வுக் களங்கள்

“அறிமுக நோக்கில் இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்” என்னும் பொருளில் அமைந்துள்ள இவ்வாய்வுத்திட்டவுரை இனிவரும் ஆய்வாளர்களுக்குப் பின்வரும் தலைப்புகளில் மேலாய்வு செய்வதற்கு ஆய்வுக்களன்களை அமைத்துக் கொடுக்கிறது.

1. **ந.சுப்புரெட்டியாரின் தமிழிலக்கிய வகைமை**
2. **ந.சுப்புரெட்டியாரின் மொழியாளுமை**
3. **ந.சுப்புரெட்டியாரின் இலக்கியக் கொள்கைகள்**
4. **ந.சுப்புரெட்டியாரின் மேற்கோள்கள்**

துணை நூற்பட்டியல்

முதன்மை நூல்

1. **சுப்புரெட்டியார், ந.** — **இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்**
   ஐந்திணைப் பதிப்பகம்,
   சென்னை
   1996

துணைமை நூல்கள்

2. **சுப்புரெட்டியார்.ந** — **நினைவுக் குமிழ்கள் - 1,**
   பாரி நிலையம்,
   சென்னை,
   1988
3. **இளம்பூரணர்** — **தொல்காப்பியம் பொருளதிகாரம்**
   சாது அச்சுக் கூடம்,
   சென்னை,
   முதற்பதிப்பு 1935
4. **மணி.சி** — **வரும் போகும்**
   கிரியா வெளியீடு,
   சென்னை
   1974
5. **மேத்தா. மு** — **ஊர்வலம்**
   விஜயா பதிப்பகம்
   கோவை
   1976
6. **வாலி** — **பொய்க்கால் குதிரைகள்**
   தமிழ்ப் புத்தகாலயம்
   சென்னை
   1978

India Book of Records

CERTIFICATE

CENTENARY CELEBRATIONS OF PROF DR. N SUBBU REDDIAR

Prof Dr S Ramalingam (born on 13 Oct 1949) Organizing Secretary, Na Subbu Reddiar 100 Educational Trust, Chennai, Tamil Nadu, has conceived, designed and meticulously executed 108 Centenary Events throughout Tamil Nadu during the Centenary Year (2015-2016) of Prof. Dr. N Subbu Reddiar who served the cause of education for 65 years andwritten 135 books in various fields (100 books after retirement).

Biswaroop Roy Chowdhury
Chief Editor
India Book of Records

Date: March 19, 2018

India Book of Records is registered with the Government of India with RNI no. HARENG/2010/32259.

India Book of Records is affiliated to Asia Book of Records and follows Asian Protocol of Records (APRs) as per the consensus arrived at the meeting of the Chief Editors of National Record Books, Ho Chi Minh City, Vietnam.

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

[A MULTI-FACETED TAMIL SAVANT]

Centenary Celebrations

~~~~******~~~~

CELEBRATING
100 YEARS
1916 - 2016

நூற்றாண்டில் 108

பேராசிரியரின் நூற்றாண்டில்
[2015 – 2016] தமிழகமெங்கும்
நடைபெற்ற
நிகழ்வுகளின்

தொகுப்பு

அனைவருக்கும் நன்றி !
~~~~

நூற்றாண்டில் 108

வ.எண்	நாள்	நிகழ்வுகளின் தொகுப்பு
	27 Aug 2015	**Centenary Inaugural Function** @ Perahambi, Lalgudi Taluq, Trichy Dt. [Professor"s Birthplace] Chief Guest: Shri A Srinivasan, Founder of Dhanalakshmi Group of Institutions, Perambalur
001	27 Aug 2015	**Students" Events:** Five competitions [Essay, Drawing, Kolam, Poetry & Oral] were held for the students of Govt High School, Perahambi and Prizes & 125 Certificates were awarded to the students.
002	28 Aug 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ ACS Mat Hr Sec School, Arni
003	03 Sep 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Diamond Jubilee Hr Sec School, Gobichettipalayam
004	11 Sep 2015	**Teachers" Day** @ Nehru Hr Sec School, Puthanampatti, Trichy Dist., Chief Guest: Dr A Thirunavukkarasu, Dean-Research, Dr MGR University
005	05 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ PLWA Hr Sec School, Vickramasingapuram
006	06 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ PSGR Krishnammal Hr Sec School, Coimbatore
007	07 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Nadar Hr Sec School, Madurai
008	08 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Thiru VI Ka Hr Sec School, Shenoy Nagar, Chennai
009	09 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Govt Hr Sec School, Moovanur, Trichy Dist.
010	12 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Govt Hr Sec School, Maduravoyal, Chennai
011	15 Oct 2015	**Birthday Celebrations of Bharat Ratna Dr APJ Abdul Kalam** @ Government High School, Kottathur, Trichy Dist.
012	15 Oct 2015	**Birthday Celebrations of Bharat Ratna Dr APJ Abdul Kalam** @ Government Boys Hr Sec School, Musiri, Trichy Dist
013	15 Oct 2015	**Birthday Celebrations of Bharat Ratna Dr APJ Abdul Kalam** @ Zamindar High School, Thuraiyur, Trichy Dist.
014	26 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students Govt Syed Murthuza Hr Sec School, Trichy
015	27 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Sri Meenakshi Hr Sec School, Karaikudi
016	27 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Govt Boys Hr Sec School, Musiri
017	28 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Government Higher Secondary School, Lalgudi
018	29 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Cauvery Mat Hr Sec School, Trichy
019	30 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Govt Girls Hr Sec School, Musiri
020	05 Nov 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Govt Boys Hr Sec School, Udumalpet
021	05 Nov 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Bharathiyar Centenary Memorial Govt Girls Hr Sec School, Udumalpet
022	06 Nov 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ SMSV Higher Secondary School, Karaikudi
023	14 Nov 2015	**Children"s Day Celebrations** @ Govt High School, Thalakkudi, Trichy Dist.
024	12 Dec 2015	**On the eve of Tamizh Thatha"s Birthday**, Special Presentation by

		Prof Dr S Ramalingam to the participants of AICTE-sponsored FDP conducted by GRG School of Management Studies, Coimbatore
025	17 Dec 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ SVV Hr Sec School, Vairichettipalayam
026	19 Dec 2015	**On the eve of Tamizh Thatha"s Birthday:** 36 CDs [Research Companion] were distributed to the participants of AICTE-sponsored FDP conducted by GRG School of Management Studies, Coimbatore
027	20 Dec 2015	„நூற்றாண்டு வெளியீடு": நூற்றாண்டு நிகழ்வாக, முனைவர் ந. வேலாயுதம் அவர்கள் எழுதிய கிருதயுகம் எனும் புதினம், சேகர் பதிப்பகத்தினரால் (சென்னை – 600 078) வெளியிடப்பெற்றது. **ISBN: 978-81-932327-0-5.**
028	27 Dec 2015	„சிறப்புத் தமிழரங்கம்" @ Ulaga Thamizh Kalvi Iyakkam, Thamizhoor – 627 808, Alangulam, Tirunelveli Dist. Principal Convenor: Prof Dr SV Subramanian
029	01 Jan 2016	**Release of Daily Calendar**: Trichy KK Nagar Reddy Welfare Sangam had released the Calendar with Professor"s Photo
030	06 Jan 2016	„ஆண்டாள் சிறப்பு" – Tiruppaavai Competition @ MNRD Girls Hr Sec School, Srivilliputhur
031	08 Jan 2016	„ஆண்டாள் மார்கழி" – Tiruppaavai Competition @ SVV Hr Sec School, Vairichettipalayam, Trichy Dist.
032	09 Jan 2016	„ஆண்டாள் மார்கழி" – Tiruppaavai Competition @ Gandhi Nagar Mat Hr Sec School, Tiruvannamalai
033	09 Jan 2016	„மார்கழி சிவமயம்" – Tiruvembaavai & Tiruppalliyezhuchi Competition @ Gandhi Nagar Mat Hr Sec School, Tiruvannamalai
034	18 Jan 2016	„ஆண்டாள் மார்கழி" – Tiruppaavai Competition @ Govt Hr Sec School, Eloorpatti, Trichy Dist.
035	18 Jan 2016	„மார்கழி சிவமயம்" – Tiruvembaavai & Tiruppalliyezhuchi Competition @ Govt Hr Sec School, Eloorpatti, Trichy Dist.
036	28 Jan 2016	„ஆண்டாள் மார்கழி" – Tiruppaavai Competition @ Govt Girls Hr Sec School, Musiri, Trichy Dist.
037	28 Jan 2016	**Special Seminar on** „பக்தி இலக்கியம்" by Dept of Tamil, PKR Arts College for Women, Gobichettipalayam.
038	29 Jan 2016	„மார்கழி சிவமயம்" – Tiruvembaavai & Tiruppalliyezhuchi Competition @ SVV Hr Sec School, Vairichettipalayam, Trichy Dist.
039	29 Jan 2016	**Special Broadcast @ AIR, Tirunelveli Station** – "பேராசிரியர் சுப்புரெட்டியாரின் வாழ்வும் தமிழ்த்தொண்டும்". Speaker: Sri S Mahadevan, Head-Dept of Tamil, Sadakathullah Appa College ,Tirunelveli – 627 011.
040	03 Feb 2016	**100 Years of General Theory of Relativity :** Special Lecture @ Dept of Physics, Lakshmipuram College of Arts and Science, Neyyoor – 629802 Speaker: Dr. K. Iyakutti, Professor – Emeritus, Dept. of Physics & Nanotechnology, SRM University, SRM Nagar, Kattankulathur – 603 203.
041	18 Feb 2016	„நூற்றாண்டு வெளியீடு": நூற்றாண்டு நிகழ்வாக, முனைவர் ந. வேலாயுதம் அவர்கள் எழுதிய ஊமையின் பேச்சு எனும் சிறுகதைத் தொகுப்பு, அருளகம் பதிப்பகத்தினரால் (சென்னை – 600 077) வெளியிடப்பெற்றது. **ISBN: 978-81-932327-1-2.**
042	19 Feb 2016	**Tamizh Thatha"s 162nd Birthday:** 26 CDs [Research Companion] were distributed to the Research Scholars of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
043	19 Feb 2016	**In Commemoration of Tamizh Thatha"s 162nd Birthday**, Special Presentation (covering the intricacies of Academic Research) by Prof Dr S Ramalingam to the Research Scholars of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
044	23 Feb 2016	**In Commemoration of Tamizh Thatha"s 162nd Birthday**, Prof K Bhaskaran, Vice-Chancellor of Tamil University, Tanjore had distributed 100 CDs [Research Companion] to Research Scholars of Tamil

		University, the first copy being received by Prof S Subbaiah, Vice-Chancellor of Alagappa University. The entire program was coordinated by Prof Era Kamarasu, Member, General Body, Sahitya Akademi, New Delhi.
045	29 Feb 2016	**National Science Day** : Special Address by Prof Dr S Ramalingam @ PKR Arts College for Women, Gobichettipalayam
046	29 Feb 2016	**"Motivation" - Special Lecture** by Prof Dr S Ramalingam to the MBA students of Dept of Management, @ PKR Arts College for Women, Gobichettipalayam.
047	01 Mar 2016	**Centenary Publication: ISBN: 978-81-932327-2-9.** **Thirukural Thelivu**, written by Prof Dr N Subbu Reddiar.
048	07 Mar 2016	**Special Lecture on „Total Quality Management**" to the IV year BTech Students of Dept of Bio-technology, Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095. Speaker: Prof Dr S Ramalingam, Head-Management Studies.
049	7 Mar 2016	மஹா சிவராத்திரி : நூற்றாண்டில் நிகழும் மஹா சிவராத்திரி திருவிழா மிகச் சிறப்பாக எதுமலையில் இருக்கும் பேராசிரியரின் குலக் கோயிலில் கொண்டாடப் பெற்றது.
050	08 Mar 2016	**International Women"s Day** : Award of „Best Outgoing Student" @ PKR Arts College for Women, Gobichettipalayam.
051	08 Mar 2016	**International Women"s Day** : Award of „Best Student" of various Departments @ PKR Arts College for Women, Gobichettipalayam.
052	08 Mar 2016	**International Women"s Day:** In order to encourage the participants, Certificates of Participation were issued to all Participants for their enthusiastic participation in the Event, "Cooking without Fire" [நெருப்பில்லா சமையல] conducted by Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
053	11 Mar 2016	**ISO Certification Award** : ISO 2008 : 9001 to Zamindar High School, Thuraiyur, Trichy Dist. [where Professor did his III Form in 1930-31]
054	11 Mar 2016	**Special One-day National Conference:** சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள். @ Shri Krishnasamy College for Women, Anna Nagar West, Chennai – 600 040. Chief Guest: Prof Arivu Nambi, Pondicherry University.
055	11 Mar 2016	**Centenary Publication**: **ISBN: 978-81-932327-3-6.** A Special Volume „சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்.' was released containing 103 research papers of National Conference conducted by Department of Tamil, Shri Krishnasamy College for Women, Anna Nagar West, Chennai with
056	21 Mar 2016	மாணாக்கர்கட்கு பரிசு: கம்பன் அடிப்பொடி சா.கணேசன் அவர்கள் 1939ல் நிறுவிய காரைக்குடி கம்பன் கழகத்தின் 78வது ஆண்டு விழாவில் (21 மார்ச்சு 2016) மூதறிஞர் ந சுப்பு ரெட்டியார் பரிசு.
057	21 Mar 2016	**"Cultural Extravaganza - RAIN16"** : A Special CHAMPIONSHIP Prize is awarded to the Department of Architecture for their wonderful Performance at the Annual Cultural Event conducted by Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095; [A Shield & Rs.10000 to the Department and Certificate of Appreciation to all the participants].
058	27 Mar 2016	**Special Camp:** Participated in the Event organized by NSS Units I & II of Dr MGR Educational and Research Institute University during 23 to 29 of March 2016.
059	29 Mar 2016	அறக்கட்டளை சொற்பொழிவு : பேராசிரியர் நிறுவிய அறக்கட்டளை சார்பாக, சைவ சித்தாந்தத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம் "சைவ மரபு: தமிழ் இலக்கியம் - திராவிடக் கருத்தியல்" எனும் தலைப்பில் சொற்பொழிவு நடத்தியது. சொற்பொழிவாளர்: முனைவர் வீ அரசு.
060	4 Apl 2016	**MS 100 :** Commemorating the Centenary year of Bharat Ratna MS Subbulakshmi, Mr Kumaresh, Violinist was honoured in „**Glittecrazzy – 2016**" , Festival of Music organized by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.

061	4 Apl 2016	**MS 100 :** Commemorating the Centenary year of Bharat Ratna MS Subbulakshmi, Dr Jyoti Nair Belliappa, Ghazal Singer was honoured in „**Glittecrazzy – 2016",** Festival of Music organized by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
062	5 Apl 2016	**„Glittecrazzy – 2016" :** Certificates and Medals were given to student-participants who won first positions in 4 Events conducted by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
063	5 Apl 2016	**MS 100 :** Commemorating the Centenary year of Bharat Ratna MS Subbulakshmi, Dr Rita Bhattacharya, Rabindra Sangeet Musician was honoured in „**Glittecrazzy – 2016",** Festival of Music organized by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
064	5 Apl 2016	**MS 100 :** Commemorating the Centenary year of Bharat Ratna MS Subbulakshmi, Mr Srikanth Gnanasekaran, Freelance Pianist was honoured in „**Glittecrazzy – 2016",** Festival of Music organized by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
065	5 Apl 2016	**Event Management :** Certificate of Appreciation are awarded to all student-volunteers who had excellently managed the show „**Glittecrazzy – 2016",** Festival of Music organized by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
066	7 Apl 2016	**100 Medals:** Winning Athletics in Sports Meet of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095, [32 Gold (17 men & 15 women), 32 Silver (17 men & 15 women), 32 Bronze (17 men & 15 women) and 4 Gold for Overall Champions] were awarded medals.
067	9 Apl 2016	**Annadhanam:** On the eve of 10th Memorial Day of the Professor [1 May 2016], food was served to 100 persons in the Temple @ Thirueengoimalai, Musiri Taluk, Trichy Dist.,TN.
068	14 Apl 2016	சித்திரைத் திருவிழா : ஸ்ரீ கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், சுதர்சன ஹோமம், ஸ்ரீ குபேர பூஜை, ஸ்ரீ வருண ஜெபம் ஆகியவை ஸ்ரீ துர்முகி ஆண்டு சித்திரை முதல் நாள் அன்று மிகச் சிறப்பாக எதுமலையில் அமைந்திருக்கும் பேராசிரியரின் குலக் கோயிலில் கொண்டாடப் பெற்றன.
069	20 Apl 2016	**Project Expo:** Awarded Cash Prizes and Medals to winners of „Project Expo" and „Poster Competition" at NCICT – 2016 organized by the Department of CSE/IT, Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
070	20 Apl 2016	**Career Planning:** A special Session on "A Window for the Corporate World" for the MBA Students of Dept of Management Studies, Dr MGR Eduational and Research Institute University, Chennai – 600 095. Speaker: Ms Sweetlyn Baker, Soft-skills trainer.
071	24 Apl 2016	**Annadhanam:** On the eve of 10th Memorial Day of the Professor [1 May 2016], food was served to 100 persons at his ancestral temple located at Edumalai, Mannachanallur Taluq, Trichy Dist.
072	28 Apl 2016	**Special Lecture: „Problem Identification and Solutions in a Project"** to MTech and BTech students of Dept of Electronics and Communication Engineering, Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095. Speaker: Prof Dr S Ramalingam, Head-Management Studies.
073	1 May 2016	**Annadhanam:** On the eve of 10th Memorial Day of the Professor [1 May 2016], food was served to 120 persons @ Sengunthapuram Mariamman Temple, Sengunthapuram.
074	17 May 2016	**Best Student:** Selvan M Rajavel [Reg. No.469763] of Boys Govt Hr Sec School, Musiri who got First Mark [1070/1200] in XII March 2016 Exams is awarded Rs.1000.oo, Gold Medal and a Certification of Appreciation.
075	23 May 2016	**Best Project:** After evaluating the Projects of Final-year MCA and MPhil students of Department of **Computer Applications,** Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, two sets of TOP three projects

		are selected and Medals and Certificates are given to the winning-students.
076	23 May 2016	**Best Project:** After evaluating the Projects of Final-year BSc and BCA students of Department of **Computer Applications,** Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, two sets of TOP three projects in each, are selected and Medals and Certificates are given to the winning-students.
077	23 May 2016	**Best Project:** After evaluating the Projects of Final-year MTech students of Department of **Computer Science and Engineering & IT,** Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
078	25 May 2016	**Best Student:** Selvi M Sandhiya [Reg. No.**469763**] of Govt High School, Kottathur who got First Mark [475/500] in X March 2016 Exams is awarded Rs.500.oo, Gold Medal and a Certification of Appreciation.
079	25 May 2016	**Best Student:** Selvan S Prasanth [Reg. No.**152194**] of Zamindar High School, Thuraiyur who got First Mark [467/500] in X March 2016 Exams is awarded Rs.500.oo, Gold Medal and a Certification of Appreciation.
080	25 May 2016	**Best Student:** Selvan D Kathikeyan [Reg. No.**1556017**] of Boys Govt Hr Sec School, Musiri who got First Mark [466/500] in X March 2016 Exams is awarded Rs.500.oo, Gold Medal and a Certification of Appreciation.
081	25 May 2016	**Best Project:** Among the Projects of Final-year MTech students of Department of **Bio-Technology**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
082	26 May 2016	**Best Project:** After considering the Projects of Final-year MTech students of Department of **Electronics and Communication Engineering**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
083	27 May 2016	**Best Project:** After adjudging the Projects of Final-year BTech students of Department of **Civil Engineering**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
084	27 May 2016	**Best Project:** After considering the Projects of Final-year MTech students of Department of **Electrical and Electronics Engineering**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
085	28 May 2016	**Best Project:** Of all the Projects of Final-year MTech students of Department of **Mechanical Engineering**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
086	2 June 2016	**Best Project:** Out of 163 Projects of II **MBA** students of Department of **Management Studies**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Cash Prizes, Medals and Certificates are given to the winning-students.
087	7 June 2016	**Workshop on Personality Development:** Conducted for X std students @ Govt Boys" Hr Sec School, Musiri, Trichy Dist.; 204 boys participated. **Principal Trainer: Prof A Ratnasamy**
088	8 June 2016	**Workshop on Personality Development:** Conducted for X std students @ Govt Hr Sec School Moovanur, Trichy Dist.; 71 boys and girls participated. **Principal Trainer: Prof A Ratnasamy**
089	22 June 2016	**Centenary Publication**: **ISBN: 978-81-932327-5-0** A special volume „அன்புப்படையல்கள்" (Collection of selected Dedications in the Books of Prof Dr N Subbu Reddiar)

		Editor: Dr R Manivannan
090	23 June 2016	**Centenary Publication**: **ISBN: 978-81-932327-6-7** A special volume „அணிந்துரைகள்" (Collection of selected Forewords in the Books of Prof Dr N Subbu Reddiar) Editor: N Ravichandran
091	24 June 2016	**Centenary Publication**: **ISBN: 978-81-932327-7-4** A special volume „சிறப்புப் பாயிர பாமாலைகள்" (Collection of Sirappu Paayira Paamaalaikal in the 14 Books of Prof Dr N Subbu Reddiar) Editor: N Bhaskaran
092	30 June 2016	**Special Workshop on „Intricacies of SPSS":** On the eve of Birthday of the President of Dr MGR Educational and Research Institute, Chennai – 600 095, conducted for the Faculty Members of Department of Management Studies, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095. **Resource Person**: Prof Dr R Srivats, School of Management, CMR University, Bangalore
093	30 June 2016	**Quiz – Nobel Women:** A Quiz Program was conducted for the Faculty Members of Department of Management Studies & Department of Commerce, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095 and Teachers of Govt Boys Hr Sec School, Musiri & Govt Girls Hr Sec School, Musiri and Prizes & Certificates are given to the winners.
094	1 July 2016	பன்னாட்டுக் கருத்தரங்கம்: தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் **'ந சுப்பு ரெட்டியாரின் படைப்புகள்: கலையும் கருத்தியலும்'** என்னும் பொருண்மையில் மிகச் சிறப்பாக ஒரு நாள் கருத்தரங்கினை நடத்தியது.
095	1 July 2016	**Centenary Publication**: **ISBN: 978-81-932327-8-1.** A Special Volume **'ந சுப்பு ரெட்டியாரின் படைப்புகள்: கலையும் கருத்தியலும்'** was released containing 80 research papers of International Conference conducted by Department of Tamil, Kongunadu Arts & Science College, Coimbatore – 641 029.
096	10 July 2016	**Digital 100:** Digital version of 100 out of 135 books of the Professor is being prepared and to be distributed to the Departments of Tamil in selected Colleges/Universities across Tamil Nadu.
097	13 July 2016	**Centenary Publication: ISBN 978-81-932327-9-8** A Special Volume ***தலை சிறந்த படைப்புகள்,*** covering the Four Masterpieces of the Professor. [**The Religion & Philosophy of Naalaayiram with special reference to Nammaalwar,** வைணவச் செல்வம், தமிழ் பயிற்றும் முறை மற்றும் கல்வியியல் கோட்பாடுகள்] Editor: Professor R Minor
098	14 July 2016	**Combo Volume: பேராசிரியரின் இலக்கியத்திறன்** ; Single Volume containing 4 Centenary Publications [அன்புப்படையல்கள், அணிந்துரைகள், சிறப்புப் பாயிர பாமாலைகள் மற்றும் தலை சிறந்த படைப்புகள்]
099	15 July 2016	**A Research Study:** „Adolescent Smoking Behaviour" – Focusing on Smoking Habits among 200 Adolescent School Children. The Study is being carried out by Senior Nursing Students of Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095.
100	20 July 2016	**Philately Album:** The **man** [Man of the Millennium = Mahatma Gandhi] was captured most on Stamps, First Day Covers, Postal Stationery, Posters, Cartoons, Photos, Paintings, Currencies, Statues.
101	22 July 2016	**Centenary Symposium:** National-level One-day Event conducted by Sahitya Akademi @ Seethalakshmi Ramasamy College, Tiruchirappalli, Tamil Nadu.
102	26 July 2016	கல்வியியல் களம்**:** ஆசிரியப் பயிற்சி மாணாக்கர்கட்கு, திருக்குறள் கற்பிக்கும் போட்டி நடத்தப்பெற்றது. Students of Faculty of Education,

		Dr MGR Educational and Research Institute, Chennai – 600 095 participated. Winners as well as Participants were awarded Prizes and Certificates.
103	1 Aug 2016	ஆராய்ச்சி கட்டுரைப் போட்டி: சிறந்த இலக்கிய இதழ் **அமுதசுரபி** நடத்திய போட்டியில் பரிசு பெற்றவர்கள் : (1) அய்க்கண், காரைக்குடி - 630 002 (2) முனைவர் நயம்பு அறிவுடைநம்பி, சென்னை - 600 125 (3) தி வெ விஜயலட்சுமி, சென்னை - 600 017.
		சிறுகதைப் போட்டி: சிறந்த இலக்கிய இதழ் **அமுதசுரபி** நடத்திய போட்டியில் பரிசு பெற்றவர்கள்: (1) எம்.ஜி.கன்னியப்பன், சென்னை – 600 092 (2) அவினாசி முருகேசன், காரமடை – 641 104 (3) இராம இளங்கோவன், பெங்களூர் – 560 016
104	8 Aug 2016	**Release of Centenary Publication:** Dr V Balachandran, Registrar, Alagappa University had released the Book, „Aninthuraigal" edited by Mr N Ravichandran, @ SMSV Hr Sec School, Karaikudi. **ISBN: 978-81-932327-6-7**
105	14 Aug 2016	**Special Gold-Prize:** Special Prize (Gold Medal, Certificate & Rs.5000.oo) was given to Selvan A Rahul, Sowdambikaa Boys Matric Hr Sec School, Thuraiyur, Trichy Dist. for having secured top Mark, 1178/1200, in XII standard exams held by Govt of Tamil Nadu in March 2016.
		Special Gold-Prize: Special Prize (Gold Medal, Certificate & Rs.5000.oo) was given to Selvi T Roshini, SVV Hr Sec School, Vairichettipalayam, Trichy Dist. for having secured top Mark, 497/500, in X standard exams held by Govt of Tamil Nadu in March 2016.
106	15 Aug 2016	**Release of Centenary Publication:** Smt Sukanya, Panchayat President & Chairman, Village Education Committee, Kottathur had released the Book, „Sirappu Paayira Paamaalaigal" edited by Mr N Bhaskaran, Head Master, @ Government High School, Kottathur, Trichy Dist. **ISBN: 978-81-932327-7-4**
107	15 Aug 2016	**70th Independence Day Celebrations:** Centenary Committee had celebrated the 70th Independence Day @ Panchayat Union Primary School, Govindapuram – 621 008, Thuraiyur Taluk, Trichy Dist.
108	15 Aug 2016	**Centenary Publication: ISBN 978-81-932327-4-3** **இராமானுஜர் 1000** - CD containing 20 Books on Vaishnavism written by Professor, dedicated to St Ramanujar by conducting the Special Pooja at his Sannadhi, Sriperumpudhur Temple.



பேராசிரியரின் தாயார்

LIFETIME ACHIEVEMENT

First Paper: என்ன ஆச்சரியம்? "Enna Aacharyam !" [1949]

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்

Books Published : 135 + 1
Papers Published : 200 [Tamil 173 + English 27]
Endowments established: 10
Endowment Lectures : 12
Awards received: 8
Prizes won : 14
Titles conferred : 8

Masterpieces:

1) Tamil Payitrum Murai [1957]
2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]
3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]
4) Vainava Selvam [1995]

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)

ISBN 978-81-939835-5-3
9 788193 983553

பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற 100 நூல்கள் (முழுமையாக)
http://tinyurl.com/nsr100collections
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]